
# எழுநா

டிசம்பர் 2022

இதழ் 5






பாக்கியநாதன் அகிலன் · ஜீப்ரி ஹாசன் · என். கே. எஸ். திருச்செல்வம் · கி. சிருபானந்தகுமாரன் · அனுதர்ஷி கபிலன் · விவேகானந்தராஜா துலாஞ்சனன் · பால. சிவகடாட்சம் · தியாகராஜா சுதர்மன் · கந்தையா பகீரதன்

இரா. சடகோபன் · அமரசிங்கம் கேதீஸ்வரன் · பரமு. புஷ்பரட்ணம் · முத்துவடிவு சின்னத்தம்பி · பாலசுப்ரமணியம் துவாரகன் · கந்தையா சண்முகலிங்கம் · பி. ஏ. காதர் · கணபதிப்பிள்ளை ரூபன் · நடேசன் இரவீந்திரன்

# உள்ளே...


04 இலங்கைத் தமிழ் முஸ்லிம்கள் – இன மரபும் பண்பாட்டுச் சமூகவியலும்
**ஜிஃப்ரி ஹாசன்**

07 எண்மிய மரபுரிமை : அவசியமும் அவசரமும்
**பாக்கியநாதன் அகிலன்**

11 கீழைக்கரைக்கான எழுத்துச் சான்றுகள் : பாளி சிங்கள இலக்கியங்கள்
**விவேகானந்தராஜா துலாஞ்சனன்**

15 பக்கவாட்டுச் சிந்தனைகள் மூலம் முக்கிய சிக்கல்களை தீர்த்தல்
**கணபதிப்பிள்ளை ரூபன்**

18 திருகோணமலை திருமங்கலாய் காட்டுப்பகுதியில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவன் ஆலயம்
**பரமு புஷ்பரட்ணம்**

23 வட்டுக்கோட்டைக் கல்விக்கழகம் உருவாக்கிய மருத்துவர் ஐரா கௌல்ட்
**பாலசுப்ரமணியம் துவாரகன்**

26 யாழ்.போதனா மருத்துவமனையின் தோற்றமும் மருத்துவர் கிறீனும்
**பாலசுப்ரமணியம் துவாரகன்**

29 தேயிலைத் தோட்டங்களிலே பெண்களது பின்தங்கிய நிலை
**முத்துவடிவு சின்னத்தம்பி**

32 திணை வாழ்வியலைத் தகர்த்து உருவாகிய அரசு
**நடேசன் இரவீந்திரன்**

35 வடக்கு – கிழக்கு மாகாணங்களின் விவசாயத்துறையும் வாய்ப்புக்களும்
**அமரசிங்கம் கேதீஸ்வரன்**

38 கனடாவில் பன்மைப் பண்பாட்டுவாதம்
**கந்தையா சண்முகலிங்கம்**

44 விவசாயமும் தமிழர் வாழ்வியலும்
**கந்தையா பகீரதன்**

49 தமிழ் வணிகன் பற்றிக் கூறும் பெரிய புளியங்குளம் கல்வெட்டுக்கள்
**என். கே. எஸ். திருச்செல்வம்**

51 தமிழ் குடும்பத் தலைவன் குட்டன் பற்றிய சேருவில கல்வெட்டு
**என். கே. எஸ். திருச்செல்வம்**

53 யாழ்ப்பாண பாரம்பரிய உணவுப்பழக்கத்தில் பருப்பு வகைகள்
**தியாகராஜா சுதர்மன்**

57 வட இலங்கையில் சாதி : பிரித்தானிய காலனிய அரசின் கொள்கையும் நடைமுறைகளும் – 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதி குறித்த நுண்ணாய்வு
**கந்தையா சண்முகலிங்கம்**

61 கோல்புரூக் – கமரூன் அரசியல் சீர்திருத்தம்
**பி. ஏ. காதர்**

66 சில்லறைக்கங்காணி; அடக்குமுறையின் இன்னொரு ஆயுதம்
**இரா. சடகோபன்**

69 மக்களுக்காக குரல் கொடுத்த மணிலாலும், நாடு கடத்திய காலனித்துவ அரசும்
**இரா. சடகோபன்**

72 இலங்கையின் பாலுற்பத்தித் துறை சந்திக்கும் சவால்கள்
**சி. கிருபானந்தகுமரன்**

76 யாழ்ப்பாணக் குயர் விழா: சூழலியலும் குயர் மக்களும்
**அனுதர்சி கபிலன்**

80 இரசவர்க்கம் – மூலிகை மருந்துகள்
**பால. சிவகடாட்சம்**

# எழுநா

டிசம்பர் 2022

இதழ் – 5


பதிப்பாசிரியர்
கணேசானந்தன் சசீவன்


ஆசிரியர் குழு
மாயழகு பவித்ரா
பரமசிவம் பவதாரணி

குரல் வடிவம்
பாலரூபன் கிருஷிகா
இராதாகிருஷ்ணன் தர்ஷினி

ஆலோசகர் குழு
இ. பத்மநாப ஐயர் – வளவாளர்
கதிர் சயந்தன் – நூல் தயாரிப்பு
தபின் – கட்டுரை திருத்தம்
பா. சிவகுமார் – காணொலி எண்ணக்கரு
பரணீதரன் – காணொலி தயாரிப்பு
தி. கோபிநாத் – நூல் வரிசை
கனக சுகுமார் – வளவாளர்

துறை சார் ஆலோசகர் குழு
கந்தையா ரமணிதரன் –
நீரியலும் சூழற்பொறியியலும்
மகேந்திரன் திருவரங்கன் –
மொழியும் இலக்கியமும்

பங்களிப்பாளர்கள்
கணேசலிங்கம் குகரூபன்
கருணானந்தன் சஞ்யே


முந்தைய இதழ்

FOLLOW

எழுநா

https://ezhunaonline.com/
https://youtube.com/user/Ezhuna
https://www.facebook.com/Ezhunax/
https://twitter.com/Ezhuna
https://www.instagram.com/ezhunaa/
https://www.tiktok.com/@ezhuna
https://open.spotify.com/show/4Xn
https://tinyurl.com/ykj8ru3f
https://tinyurl.com/3zfkzxme
https://tinyurl.com/2p83m8zj
https://pca.st/swr6zomk
https://radiopublic.com/6rX3L4
https://tinyurl.com/bdeky92h
https://anchor.fm/ezhuna
https://www.clubhouse.com/club/ezhuna
https://www.magzter.com/


தொடர்பு முகவரி :
எழுநா
63, சேர். பொன். இராமநாதன் வீதி
கலட்டி சந்தி, திருநெல்வேலி.

மின்னஞ்சல்:
contact@ezhunaonline.com
ezhunamedia@gmail.com

# இலங்கைத் தமிழ் முஸ்லிம்கள் இன மரபும் பண்பாட்டுச் சமூகவியலும்



ஜிஃப்ரி ஹாசன்

**இலங்கை முஸ்லிம்களின் இனத் தொடர்ச்சியையும், அவர்களின் பண்பாட்டுச் சமூகவியல் மரபையும், சமகாலத்தில் நிகழ்ந்த மாற்றங்களையும் ஆய்வு நோக்கில் இந்தக் கட்டுரைத் தொடர் ஆராய்கிறது.**

மரபு, சமூகவியல் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. பொதுவாக இலங்கை முஸ்லிம்கள் குறித்து முஸ்லிம் வரலாற்றாய்வாளர்களாலும், அறிஞர்களாலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் சார்பியத்தன்மையும், மதப் புனித நோக்குகளையும் கடக்க முடியாத அகச் சிக்கலுடன் இருப்பவை. இந்த ஆய்வுகளை நோக்கும் போது முஸ்லிம்கள் குறித்து ஓரளவு அறிவியல் தன்மையுடன் கூடிய ஆய்வுகள் இங்கு நிகழவில்லை என்பதே உண்மை. இந்தப் புள்ளியிலிருந்து இலங்கை முஸ்லிம்களின் இனத்துவ (ethnic) மூலத்தையும், வரலாற்றையும், இலங்கை முஸ்லிம்கள் எனும் இன அடையாளத்தினுள் கரைந்திருக்கும் பன்முக இன மரபுகளின் கலவையையும் தேடிய பக்கச்சார்போ, புனித நோக்குகளோ அற்ற ஒரு பரந்த அறிவியல்தன்மையுடன் கூடிய ஆய்வாக இந்தக் கட்டுரைத் தொடரை தொடக்குகிறேன்.

இலங்கை முஸ்லிம்கள் பற்றிய இதுவரைகால வரலாறு பெரும்பாலும் அவர்களின் அரபு மூலத்தையே அதிகம் கவனப்படுத்துகிறது. அதன் பின் அரேபியாவில் நிகழ்ந்த இஸ்லாத்தின் தோற்றத்துடன் இலங்கை முஸ்லிம் வரலாற்றை இணைத்து நோக்குகிறது. உண்மையில் இந்த நோக்குகளுக்கு அப்பாலும் செல்வதன் மூலமே இலங்கையில் முஸ்லிம்களின் இனத்துவ மூலத்தை கண்டறிய முடியும் என நம்புகிறேன். இலங்கைக்கு அரபுகளின் வருகையுடனோ, இஸ்லாத்தின் வருகையுடனோ முஸ்லிம்களின்



20th century Srilankan moors

Image source - wikipedia.org


இனத்தொடர்ச்சியை சுருக்கிக்கொள்வது, அதன் அசல் தன்மையைப் புரிந்துகொள்வதற்கு நமக்கு உதவப் போவதில்லை.

பொதுவாக இலங்கை முஸ்லிம்கள் எனும் இன அடையாளத்துக்குள் பல்வேறு இனங்களின் கலவையைக் காணலாம்.

- **இலங்கைச் சோனகர் (Ceylon Moors).**
- **இந்தியச் சோனகர் (Indian Moors)**
- **மலேயர்கள் (Malays)**
- **ஜாவாக்கள் (Javas)**
- **ஆப்கனியர்கள் (Afghans)**
- **மேமன்கள் (Memons)**
- **பெங்காலிகள் (Bengalis)**
- **போராக்கள் (Bohras)**
- **கோஜாஸ் (Khojas)**

என பல்வேறு இனக்குழுக்களின் கூட்டுத் தொகுதியையே முஸ்லிம் எனும் ஒற்றை அடையாளம் பூண்டுள்ளது. இந்த உப மரபினங்கள் குறித்து எம். எம். எம். மஹ்ரூஃப் குறிப்பிடத்தக்களவு தனது வரலாற்றுப் பார்வையினைச் செலுத்தியுள்ளார். இதுதொடர்பிலான அவரது ஆய்வுகள் இந்த இடத்தில் நினைவு கூரத்தக்கன. பின்னரான அத்தியாயங்களில் அவரது ஆய்வுநோக்குகள் குறித்து விரிவாக நோக்க உள்ளேன். இத்தகைய அனைத்து உப மரபினங்களையும் ஒருங்கிணைக்கும் ஒரே புள்ளி இஸ்லாம் எனும் சமயமாகும். இவ்வாறு மதம் என்ற அடையாளத்தில் இணைந்திருக்கும் முஸ்லிம்களை இனரீதியாக பகுத்துப் பார்த்தால் மேலே சொல்லப்பட்ட இனக் கலவையைக் காணமுடியும். இதனால் இலங்கை முஸ்லிம்களின் இன மரபானது பல்வேறு பண்பாடுகளில் வேர்கொண்டிருப்பதாகக் கருதலாம். எனினும் மதத்தால், பண்பாட்டால் அவர்கள் மத்தியில் ஒரு பண்பாட்டு ஒற்றைத் தன்மையையும் ஒருங்கிணைவையும் ஏற்படுத்த முடியுமே தவிர ஒரே மரபினமாக மாற்ற முடியாது. அது அவர்களுக்கிடையில் நிகழும் கலப்புத் திருமணங்கள் மூலமே நிகழக்கூடிய சாத்தியம் உள்ளது. (இன்று கிட்டத்தட்ட அது நிகழ்ந்துவிட்டது என்றே நினைக்கிறேன்) ஏனென்றால் இனம் (race) என்பது பண்பாடு சார்ந்தது அல்ல. அது உடலியல், உயிரியல் சார்ந்தது. 'அண்மைக்கால எழுத்துக்களில், குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் எழுத்துகளில் இனத்துவம் (ethnic) என்பதும் (உடற்கூற்றியல் அடிப்படையிலான) மரபினம் (race) என்பதும் பெரும்பாலும் ஒரே பொருளிலேயே பயன்படுத்தப்படுகின்றன' என ஆர். எல். எச். குணவர்தன[i] குறிப்பிடுவது இங்கு கவனிக்கத்தக்கது. இன்னும் எளிமையாகப் புரிந்துகொள்வதானால் ஓர் இனம் இன்னொரு இனத்திலிருந்து உயிரியல் ரீதியாக, இயற்கையாக வேறுபடுவதையே மரபினம் குறிக்கிறது. இலங்கை முஸ்லிம்களின் இந்தப் பன்முக கலவை என்பது பல்வேறு மரபினங்களின் தொகுப்பாகவே இருக்கிறது. இதிலுள்ள மரபினங்கள் வெவ்வேறு நாடுகளிலிருந்து, பண்பாடுகளிலிருந்து, வெவ்வேறு காலகட்டங்களில் இலங்கைக்கு வந்தவர்கள்.

ஓர் இனம் இன்னொரு இனத்திலிருந்து உயிரியல் ரீதியாக, இயற்கையாக வேறுபடுவதையே மரபினம் குறிக்கிறது. இலங்கை முஸ்லிம்களின் இந்தப் பன்முக கலவை என்பது பல்வேறு மரபினங்களின் தொகுப்பாகவே இருக்கிறது.



Origin of Srilankan sinhala tamil, moors family

Image source - roar.media

ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கை முஸ்லிம்கள் என முன்பு அறியப்பட்டவர்கள் யார்? இந்த முஸ்லிம் என்கிற இன அடையாளத்துக்குள் பெரும்பான்மையாக இருக்கும் இனக்குழுமம் எது எனப் பார்த்தால் அது இலங்கைச் சோனகர்தான். இலங்கையில் முஸ்லிம் அடையாளத்துக்குள்ளிருக்கும் இனக்குழுமங்களில் இலங்கைத் தன்மையையும், பூர்வீகத்தையும் சோனகரிலேயே காண முடியும். (ஆனால் தற்போது இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் செயற்படும் அரபுத் தூய்மைவாத இயக்கங்களின் செயற்பாடுகளால் முஸ்லிம்கள் தங்களின் பூர்வீக இந்திய - இலங்கைத் தன்மையை பெரும்பாலும் இழந்துவிட்டனர்) இந்தியா எனும் பெருநிலத்திலிருந்து, பண்பாட்டிலிருந்து உருவான இந்து மதம், பௌத்தம் போன்ற மதங்களும், தமிழ், சமஸ்கிருதம், பாளி, சிங்களம் போன்ற மொழிகளும் சங்கமித்த இந்திய இலங்கை மண்ணின் அசல் தன்மையைக் கொண்டவர்களாக இலங்கையில் சிங்களவர், தமிழர்களைக் கருதுவது போன்று சோனகரையும் கருத முடியும்.

இந்த 'சோனகர்', 'முஸ்லிம்' போன்ற இனப்பெயரிடலே பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு அரசியல் நோக்கங்களுக்காக பல மாறுதல்களுக்குட்பட்டு வந்திருப்பதை முஸ்லிம் அறிஞர்கள், வரலாற்றாய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். 'இலங்கை முஸ்லிம் சமூகம் பல இனக்குழும அடையாளங்களைக் கொண்டுள்ளது. ஒரு கலவையான அரபு, பாரசீக, இந்திய, மலாய் அடையாளங்களில் இருந்து முஸ்லிம் அடையாளம் வரை; முஸ்லிம் அடையாளத்திலிருந்து மூர் (சோனகர்) அடையாளம் வரை, மீண்டும்

மூர் அடையாளத்திலிருந்து முஸ்லிம் அடையாளம் வரை இச்சமூகம் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு காரணங்களுக்காகத் தனது அடையாளத்தை மாற்றி வந்திருக்கிறது'.[ii] என பேராசிரியர் அமீர் அலி தன் ஆய்வொன்றில் முன்வைக்கிறார். இத்தகைய ஒரு கலவையான இனங்களை உள்ளடக்கிய ஓர் ஒற்றை அடையாளச் சமூகமாக இலங்கையில் முஸ்லிம்கள் மாத்திரம்தான் உருவானார்களா என்றால் அப்படி அல்ல. சிங்களவர்கள் கூட இத்தகைய ஒரு பல்லின மரபைக்கொண்ட இனமாகவே உள்ளனர். சிங்களவர் எனும் ஒற்றை இன அடையாளத்துக்குள் வரும் பல்வேறு இனக்குழுக்கள் பற்றி வரலாற்றாய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். இலங்கை வரலாற்றியலாளர் பேராசிரியர் கா. இந்திரபாலா சிங்களவர்களின் இனத்துவப் பரிமாணம் பற்றி இப்படி எழுதுகிறார். 'இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் வாழ்ந்த பல்வகைப்பட்ட இனக்குழுக்களின் சேர்க்கையின் விளைவாய் இந்த இனக்குழு உருவாகியது'[iii].

சிங்கள சமூகத்திலிருந்து உருவான நேரிய வரலாற்றியலாளரான ஆர். எல். எச். குணவர்தனவின் கருத்துகளும் கூட இதனை மேலும் உறுதிப்படுத்துகின்றன. 'சிங்களவர் என்ற பதம் மௌரியர், குப்தர், பல்லவர், சோழர் போன்ற பிற தென்னாசிய அரச வம்சத்தைப் போன்று அநுராதபுரத்தை ஆண்ட அரச வம்சத்தைக் குறித்தது. இரண்டாம் கட்டத்தில்தான் இந்த அடையாளம் இந்த இராச்சியத்தின் அரச வம்சத்துடன் அரசியல் ரீதியில் தொடர்புகொண்டிருந்த குடும்பங்களையும் தன்னுள் உள்வாங்கிக் கொண்டது' [iv] என அவர் எழுதுகிறார்.

இத்தகையதொரு இனப்பரிணாமமே முஸ்லிம்கள் மத்தியிலும் நிகழ்ந்துள்ளது. பல்வேறு அரசியல், பொருளாதார, சமூகப் பண்பாட்டுக் காரணிகளுக்காக பல்வேறு மரபினங்களையும் உள்வாங்கி பரிணமித்துள்ள ஓர் இன அடையாளமாகவே இலங்கை முஸ்லிம்கள் எனும் இன அடையாளத்தை நோக்க முடியும்.

இதில் சோனகர்கள், அரபிகளின் வழித்தோன்றல்கள் என முஸ்லிம் வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர். முஸ்லிம் அல்லாத சில வரலாற்று அறிஞர்களும் அதனை ஏற்றுக்கொண்டு அந்தக் கருத்தை தங்களது ஆய்வுகளிலும் வெளிப்படுத்தியுள்ளனர். இலங்கைச் சோனகர் அரபிகளின் வழித் தோன்றல்கள் தான் என்பது மரபணுவியல் ஆய்வின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா எனத் தெரியவில்லை. இது குறித்து இவ்வாய்வில் பின்னர் விவாதிக்கப்படும்.

## இலங்கையில் மரபினக் குழுக்கள்

இன்றைய உலகின் அறிவியல் துறையின் முன்னேற்றம் தொல்லியல் துறையிலும் புதிய ஆய்வுமுறைகளையும், அணுகுமுறைகளையும் தோற்றுவித்துள்ளது. இவை வரலாற்று ஆய்வு முடிவுகள் ஓரளவு அறிவியல் தன்மையுடனும் நம்பகத்தன்மையுடனும் இருப்பதை உறுதிசெய்கின்றன. ஒரு நாட்டிலுள்ள ஓர் இனம் எந்த இனத்தின் தொடர்ச்சி என்பதை அறிவியல் தெளிவோடு புரிந்துகொள்ள இந்தத் துறையில் அறிமுகமாகியுள்ள இந்த மரபணுவியல் ஆய்வு எனும் துறை உதவுகிறது. ஆதிகாலத்தில் நடைபெற்ற மக்கள் இடப்பெயர்ச்சிகளையும், பரம்பலையும் அடையாளங் கண்டுகொள்ள genetics துறையின் வளர்ச்சி உதவுகின்றது. தற்காலத்தில் ஓரிடத்தில் வாழும் மக்களுக்கும் வேறு இடங்களில் வாழும் மக்களுக்கும் இடையில் உள்ள DNA தொடர்புகளை வைத்து முற்காலத்தில் நடைபெற்ற மக்கள் பரம்பலை அறிந்துகொள்ள இடமுண்டு [v] என பேராசிரியர் இந்திரபாலா மரபினங்களைக் கண்டறிவதிலுள்ள இதன் முக்கியத்துவத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

இலங்கையிலுள்ள மரபினங்கள் குறித்தும் இத்தகைய மரபணுவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கையில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மத்தியில் இந்த ஆய்வுமேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கிடையில் இருக்கும் மரபணு நெருக்கம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதனைப் பற்றி மிக ஆழமாக பக்தவத்சல பாரதி தனது இலங்கையில் சிங்களவர் எனும் நூலில் தகுந்த ஆதாரங்களோடு எடுத்துக் காட்டுகிறார். 'இந்த ஆய்வுக்காக கொழும்பிலிருந்தும், சுற்றுப்புறங்களிலிருந்தும் 102 சிங்களவர், 100 தமிழர், 100 முஸ்லிம்கள், 103 பேர்கர்கள் (Burghers), 103 மலாய்க்காரர்கள் ஆகியோரிடம் இரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டன. அவை இங்கிலாந்துக்குக் கொண்டு செல்லப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. குறிப்பாக இரத்த வகைகள், சிவப்பணு என்சைம்கள், சீரம் புரோட்டீன்கள் ஆகிய மூன்று வகையான கூறுகளை ஆய்வுசெய்தனர்'.[vi] என இது பற்றி விரிவாக எழுதிச்செல்லும் பக்தவத்சல பாரதி, மரபணு ரீதியாக சிங்களவருக்கு முதலாவது நெருக்கமாகத் தமிழர்கள் இருப்பதையும், இரண்டாவது நெருக்கமாக முஸ்லிம்கள் இருப்பதையும் இந்த ஆய்வு முடிவு நிரூபித்து இருப்பதை எடுத்துக் காட்டுகிறார். அதாவது மரபணு ரீதியாக சிங்களவர்தமிழர்சோனகர் (Moor)மலாய்க்காரர்பேர்கர் என்ற ஒழுங்கில் அமைந்துள்ளனர்.

இந்த ஆய்வு முடிவின்படி பார்த்தால் இலங்கையில் மரபினரீதியாக தமிழர்களுக்கு முதல் நெருக்கமாக முஸ்லிம்கள் இருப்பது தெளிவாகிறது. அதேநேரம் அரபு மூலத்தோடு தொடர்பில்லாமலும் இல்லை. மரபினரீதியான அரபுக் கலப்பும் சோனகர் மத்தியில் நிகழ்ந்துள்ளது. ஆனால் அதுவே அவர்களின் முதன்மையானதும் மையமானதுமான மரபினத் தொடர்ச்சி அல்ல. அவர்கள் இந்தியஇலங்கைத் தன்மையுள்ள தமிழர்சிங்களவர் இனத்துவ மூலத்திலிருந்து வந்தவர்கள் என்பதே யதார்த்தம். இதனால்தான் அரபிகள் இலங்கை முஸ்லிம்களை தங்களின் ஒரு பகுதியாக அங்கீகரிப்பதில்லை. அரபிகளைப் பொறுத்தவரை இலங்கை முஸ்லிம்கள் அஜமிகள் தான் (அரபி அல்லாத முஸ்லிம்). இதனால் அரபுத் தூய்மைவாதத்துக்குள் இலங்கை முஸ்லிம்கள் எந்தவிதத்திலும் நுழைய முடியாது. எனவே, இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் அரபுத் தூய்மைவாதத்துக்காக இயங்கும் இஸ்லாமிய இயக்கம்/ங்கள் மிகவும் பரிதாபத்துக்குரியவையாகவே தோன்றுகின்றன.

(தொடரும்)

நோர்த்த டாம் தேவாலயம் எண்மியநிலை

Image source - www.artgp.fr






பாக்கியநாதன் அகிலன்

இந்தக்கட்டுரைத் தொடர் வரலாற்றுத் தடயமாகவும், இனத்துவ அடையாளமாகவும் இலங்கையின் சிறுபான்மைச் சமூகங்களிடையே – குறிப்பாக தமிழ் மக்களிடையே – மரபுரிமைகளைப் பாதுகாத்தலின் பல பரிமாணங்களை எடுத்துரைத்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது. அந்த அடிப்படையில் தமிழரின் மரபுரிமை அம்சங்களை வெளிக்கொணர்வ தாகவும், அதே நேரத்தில் அழிந்து கொண்டிருக்கும் மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளையும் அதன் சமகால தேவைகளையும் எடுத்துரைப்பதாகவும் இந்தக்கட்டுரைத் தொடர் அமைகின்றது.

# எண்மிய மரபுரிமை : அவசியமும் அவசரமும்

மரபுரிமை பற்றிய பாரம்பரிய உரையாடல்கள் மரபுரிமைகளை இயற்கை மரபுரிமை, பண்பாட்டு மரபுரிமை என்று பாகம்பிரித்துக் கொள்ளும். ஆனால் அண்மைய பத்தாண்டுகளில் மரபுரிமை பற்றிய கற்கைப்புலம் பெருவிரிவு கண்டுள்ளதுடன் உள்ளடக்க ரீதியாகவும், விமர்சன ரீதியாகவும் அது மேலும் செழுமை பெற்றுள்ளது. புதிய தகவல் தொழில்நுட்ப பெருவெடிப்பு மரபுரிமைப் புலத்தின் சாத்திய எல்லைகளை அகலித்துவிட்டுள்ளது. அவ்வகையில் உருவான புதிய சாத்தியமும், பாகமுமாக எண்மிய மரபுரிமை (*digital heritage*) அமைகிறது. எண்மிய மரபுரிமை என்பது பண்பாட்டு மரபுரிமை மற்றும் இயற்கை மரபுரிமையை புரிந்துகொள்ளல், பாதுகாத்தலில் எண்மியத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தல் மூலமாக உருவாக்கப்படும் மரபுரிமையாகும். சிலபோதிலது எண்மிய பண்பாட்டு மரபுரிமை (*digital cultural heritage*), எண்மிய இயற்கை மரபுரிமை (*digital natural heritage*) எனவும் இரண்டாகப் பிரித்து நோக்கப்படுவதுமுண்டு. “இது பண்பாடு, கல்வி, அறிவியல் மற்றும் நிர்வாக வளங்கள் மற்றும் தொழில்நுட்பம், சட்டம்,

மருத்துவம் மற்றும் பிற வகையான தக வல்களை எண்மிய முறையில் உருவாக் குகிறது அல்லது எண்மிய வடிவத்தில் இருக்கும் தொடர் மின்னணு (*Analogy/ analog*) ஆதாரங்களாக மாற்றுகிறது" என யுனெஸ்கோ எண்மியத் தொழில் நுட்பம் பற்றிப் பேசுகிறது.




எண்மியவாக்கச் செயற்பாட்டுப் பரப்பு

Image source - blog.cartif.es

எண்மியமாக்கல் (*digitations*) மூலமாக பார்த்தல் - தொடுதல் ஆகிய பண்புக ளுடைய பௌதீக மரபுரிமை மற்றும் தொட்டுணரமுடியா மரபுரிமைகள், அவற்றிலிருந்து வேறுபட்ட புதிய யதார்த் தத்தினை நோக்கிப் பெயர்க்கப்படு கின்றன. இதனை 'மெய்நிகர் யதார்த்தம் (*Virtual reali ty*) என்பார்கள். அவ்வகையில் 'மெய்நிகர் யதார்த் தம்' என்பது முற்றிலும் எண்மியம் (*digital*) மற்றும் கணினியால் (*computer*) உருவாக்கப்பட்ட, முப்பரி மாண அனுபவச் சூழலாகும். அது உருவாக்கும் சூழ லின் 'மெய்மைத்தன்மையானது', மெய்மைக்கு எவ் வளவுக்கு நெருக்கமாக இருக்கிறது என்பதைப் பொறுத்து அது மேலும் உட்பிரிவுகளுடையதாகும். மேற்படி 'மெய்நிகர் யதார்த்தப்' பின்னணியில் 'மெய்நிகர் மரபுரிமை' (*virtual heritage*) என்ற பதப் பிரயோகமும் எண்மிய மரபுரிமை என்பதையொட் டிப் பிரயோகிக்கப்படுகிறது. மரபுரிமையை மெய்நி கராக்குவது என்பது மரபுரிமையை எண்மிய முறை யில் உருவகப்படுத்துவது மற்றும் கணினி வரைகலைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வெளிப்படுத்தும் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது. 'மெய்நிகர் யதார்த்த' படிமவாக்கத் (*Virtual reality (VR) imaging*) தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்க ளைப் பயன்படுத்தி பண்பாட்டுச் சான்றுகளைத் தொகுத்தல், பாதுகாத்தல், மீள் உருவாக்குதல், பிரதி நிதித்துவஞ் செய்தல், எண்மிய மறு செயலாக்கம் செய்தல் மற்றும் அவற்றைக் காட்சிப்படுத்துதல் ஆகியவற்றை எளிதாக்குவது மெய்நிகர் மரபுரிமை யின் செயல்பாடுகள் ஆகும் என ரூசோ கூறுகிறார்.

அவ்வகையில் நிலவுருக்கள், அகழ்வாய்வுப் புலங் கள், இடங்கள், நினைவுருக்கள், கலைவெளிப்பாடு கள், சுவடிகள் மற்றும் மூலச்சுவடிகள் முதலிய பல வற்றையும் எண்மியத் தொழில்நுட்பத்தின் மூலம் பாதுகாத்து பிரதிநிதித்துவப்படுத்தி அடுத்துவரும் தலைமுறைகளிடம் கையளிக்கும் செயற்பாட்டை எண்மியச் செயற்பாடுகள் புரிகின்றன. அதுமட்டு மின்றி காலம் - இடம் சார்ந்த அனைத்து வரையறை களைக் கடப்பதன் மூலமாக அவை எல்லை கடந்த அல்லது தேசங்கடந்த பரிமாணத்தை எடுக்கின்றன. அவற்றைக் காண்பதற்கான அல்லது நுகர்வதற்கான எல்லைகளை அவை அகலித்துவிடுகின்றன.

அதேசமயம் எண்மிய மரபுரிமைச் செயற்பாடு கல்வி யூட்டலுக்கான ஒரு வழிமுறையாக பல்வேறு துறை சார் ஒழுக்கங்களால் இன்று பயன்படுத்தப்படுகிறது. நிக்கோனவாவும், புறுகோவாவும் படிமம் (*image*) என்பதைத் தாண்டி எண்மியம் உருவாக்கும் காட்சி யனுபவம் முன்னெப்போதையும் விடப் பல வகை யில் முன்னேற்றகரமானது என்பார்கள். கைபேசி தொடக்கம் அருங்காட்சியகம் வரை எண்மிய மரபு ரிமை பூச்சியவெளி (*cyber space*) அமர்ந்து பயணஞ் செய்கிறது. மெய்நிகர் அரும்பொருளகம் (*Virtual Mu seum*), மெய்நிகர் காட்சிக்கூடங்கள் (*Virtual galleries*) முதலான புதியவகை அருங்காட்சியகங்களை, கலைக்கூடங்களை அவை தாபிக்கின்றன.

விண்வெளி அகழ்வாய்வுத் தொழில்நுட்பம் (*Space ar chaeological technology*), ஆளில்லா வான்வழி வாகனம் (*Unmanned aerial vehicles*) ஊடு கதிர்வீச்சு (*Laser Scan ning*), மெய்நிகர் யதார்த்த மற்றும் அதிகபட்ச யதார்த்தத் தொழில்நுட்பம் (*Virtual and Augmented Re ality*), முப்பரிமாண மாதிரியுரு (*3D Modeling*), புவியி யல் தகவல் முறைமை (*Geographic Information systems*) முதலான பலவேறுபட்ட தொழில்நுட்பங்கள் எண் மியவாக்கப் படிமுறையில் பயன்படுத்தப்படு கின் றன.

தமிழ் மரபுரிமைப் பயில்களமானது தேர்ந்தெடுக் கப்பட்ட ஆய்வு செயற்பாட்டுப் புலங்களில் எண்மிய வாக்க தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் குறிப் பிட்டுச் சொல்லத்தக்க சில இலக்குகளை நோக்கி முன்னேறியுள்ளமை முக்கியமானது. இந்தவகையில் ஈழத் தமிழர்களால் கடந்த பல தசாப்தங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட நூலக நிறுவனத்தின் பங்கு இச் செயற்பாட்டுக் களத்தில் முக்கியமானது. 1981 இல் எரித்தழிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் பின்னணியில் 'எரிக்க முடியாத நூல கத்தை கட்டுதல்' என்ற எண்ணப் பிரகாரம் அது



மெய்நிகர் அரும்பொருளகம்

Image source - www.fabhotels.com

எண்மியப் பரப்பில் விரிந்துள்ள நூல்வெளி இவ்வகையில் முக்கியமானது. குறிப்பாக அது திறந்துவிட்டுள்ள (சன) திரள் மூலங்களுடாக (*crowd sourcing*) சுவடிகளைத் திரட்டல் என்ற கூட்டுச் செயற்பாட்டு தொழிலாற்று மாதிரி முக்கியமானது. இந்த வகையான மாதிரிகளை ஈழத்தமிழர்கள் வளர்த்தெடுக்க வேண்டும். ஆனால் முக்கியமானது அதில் தொழில்முறைத் தன்மை பேணப்படவேண்டும். ஈழத்தமிழர்களிடம் விரவியுள்ள தொழிலின்மைசாரா (*amateurism*) பண்புகளோடு தொழிற்படக்கூடாது. 'தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் தான்' என்ற முரட்டுத்தனமும், தலைக்கனமும் எம்மை எங்கும் கொண்டு சேர்க்காது.

பண்பாட்டுப் படுகொலைகளை (*cultural genocide*) தொடர்ச்சியாக சந்திக்கின்ற, அதிலும் குறிப்பாக சுய பண்பாட்டுப் படுகொலைகளை (*self cultural genocide*) தமக்குத் தாமே நிகழ்த்திக்கொண்டிருக்கும் சிறுபான்மைச் சமூகமான தமிழர்கள், இன்னும் சரியான அர்த்தத்தில் அரசியற் தலைவர்களற்ற, புலமையாளர்கள், சமய பண்பாட்டுத் தலைமைகள் வறுமையுற்ற சமூகத்தில் அவர்கள் இழந்துகொண்டிருக்கும் மிக முக்கியமான வரலாற்றுப் பண்பாட்டு ஆதாரமும், முதலீடுமான மரபுரிமையின் அனைத்துக் களங்கள் மீதும் எண்மியச் செயற்பாடு தேவைப்படுகிறது. வாக்குச் சீட்டு அரசியல்வாதிகள், நோயுற்ற கல்வி - புலமைக் களங்கள், சமய அடிப்படைவாதிகளை வழிபடாத சமூக செயற்பாட்டாளர்களின் தலைமுறை ஒன்று பேரேழுச்சி பெறவேண்டும். அவர்கள் இத்தகைய திரள் மூலவர்களாக (*crowd sources*) செயற்பட்டு மரபுரிமையை எண்மியப்படுத்துஞ் செயற்பாட்டில் தொழில்முறைத் தன்மையுடன் செயற்படவேண்டும். இதனை கலாசார உத்தியோகத்தர்களுடாகச் செய்யலாம் என்ற ஆலோசனை சுமார் இருபது வருடங்களுக்கு முன்பே தரப்பட்டாலும் அரச உத்தியோகத்தில் உயரக்கதிரைகளில் அமர்ந்திருக்கும் எம்மில் பலர் மற்றவர்கள் சொல்வதைச் செவிமடுப்பது என்பது எமது பதவியின் தகுதிக்கு இழுக்கானது எனக் கருதுவதால் நேரடியாக அல்லது தந்திரமாக அத்தகைய ஆலோசனைகளை உதாசீனஞ் செய்தல் ஊடாக மரபுரிமைகளை பாதுகாக்காதுவிடும் பெரும்பணியில் ஈடுபடுகிறோம். தமிழர்கள் மீது நடத்தப்படுகின்ற பண்பாட்டுப் படுகொலைகளுக்கு நிகரான பண்பாட்டுப் படுகொலையை தமிழ் சமூகமே செய்துகொண்டிருக்கிறது என்ற முரணை நாம் அறியாமலா இருக்கின்றோம்?

இந்தவகையில் சமூக பண்பாட்டு முக்கியத்துவமுடைய அனைத்து விடயங்களும் அவசரமாக எண்மியநிலைப்படுத்தப்படவேண்டும். பொதுக் கட்டடங்கள், சமயக்கட்டுமானங்கள், வீடுகள், நிலப்பரப்புக்கள், நீர்முனைகள், தாவரங்கள், பண்டிகைகள், சடங்குகள், பாவனைப் பொருட்கள், சிற்பங்கள், ஓவியங்கள் - வர்ணத் தீட்டல்கள், ஆற்றுகைகள், எழுத்துக்கள், அச்சிடப்பட்டவைகள், ஒளிப்




**காலனியகால ஒளிப்படம்**

Image source - lankapura.com

படங்கள்,வாழ்க்கைமுறை, ஆடைகள் - ஆபர ணங்கள், போக்குவரத்து முறைகள் வாய்மொழி விடயங்கள், நினைவுச் சின்னங்கள், யுத்தச் சுவடுகள் என்பவற்றை ஒன்றும்விடாமல் எண்மியப்படுத்த வேண்டும். நேற்றிலிருந்து இன்றுவரை, இன்றிலிருந்து நாளைக்கும் எனத் தொடர்ந்து இது நிகழவேண்டும்.

எண்மிய ஆக்கமே இறுதி இலக்கு என்பதல்ல. எமது சமூகத்தின் அனைத்து மட்டத்தினரும் கொண்டுள்ள மரபுரிமை சார்ந்த அசிரத்தையின் காரணமாக மீந்திருக்கும் சில மரபுரிமைகளது வாழ்க்கைக் காலமும் கேள்விக்குறியாகியுள்ள நேரத்தில் எண்மிய மரபுரிமைச் செயற்பாடு அவசரமும் அவசியமுமாகியுள்ளது.

உண்மையான சமூக,பண்பாட்டு அக்கறையுள்ள மனிதர்கள் ஓரியக்கம்போல இந்தச் செயற்பாட்டில் ஈடுபடவேண்டும்.

இத்தகைய செயற்பாடுகளை பயன்படுத்தி எந்தவகையான அரசியலைச் செய்யலாம்? எப்படி மதக்கலவரங்களைத் தூண்டலாம் என நினையாத செயற்பாட்டாளர்கள் எமக்கு வேண்டும். குழந்தை ம. சண்முகலிங்கத்தின் இரண்டாவது ‘மண் சுமந்த மேனியர்’ நாடகம் (1985) இயக்கச் சண்டைகளின் முதற் கால கட்ட அதிருப்தியை அடிப்படையாகக் கொண்டது.

அந் நாடகத்தின் கருவிசையாக றிச்சேட் வாக்னரின் ‘மனிதர் எனும் ஓரினம் எழுந்து வந்து அதிகாரத்தைக் கைப்பற்றட்டும்” என்ற கவிதை வரி திரும்பத் திரும்ப இடம்பெறும். இக்கட்டுரையை முடிக்கும் தறுவாயிலும் மனதில் அக்கவிதையே எழுந்து வருகிறது.

(தொடரும்)

**தமிழ் மரபுரிமைப் பயில்களமானது தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வு செயற்பாட்டுப் புலங்களில் எண்மியவாக்க தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சில இலக்குகளை நோக்கி முன்னேறியுள்ளமை முக்கியமானது. இந்தவகையில் ஈழத் தமிழர்களால் கடந்த பல தசாப்தங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட நூலக நிறுவனத்தின் பங்கு இச் செயற்பாட்டுக் களத்தில் முக்கியமானது.**



**நெடுந்தீவு பெருக்கமரம்**


Image source - www.delft.ds.gov.lk

# கீழைக்கரைக்கான எழுத்துச் சான்றுகள் : பாளி சிங்கள இலக்கியங்கள்



● விவேகானந்தராஜா துலாஞ்சனன்

இலங்கையில் பண்பாட்டுத் தனித்துவம் கொண்ட பல்வேறு நிலப்பரப்புகளுள் கிழக்கு மாகாணத்தின் கீழைக்கரை எனும் நிலப்பரப்பும் ஒன்றாகும். இந்நிலப்பரப்பு ஒரு நெடிய பாரம்பரியத்தையும், ஆதிவேரான பழங்குடிகளின் தொல்மரபையும் கொண்டமைந்துள்ளது. அவ் வரலாற்றை சிங்கள வரலாற்றாதாரங்களுடன் ஒப்பிட்டு, நவீன ஆய்வுப் பார்வையில் எழுதும் முயற்சியே இக்கட்டுரைத் தொடர்.



மகாவம்சம்

Image source - namathumalayagam.com


கீழைக்கரை தொடர்பான எழுத்துச் சான்றுகளில் பௌத்த பாளி (பாலி - *pli*) இலக்கியங்கள், சிங்கள இலக்கியங்கள், தமிழக இலக்கியங்கள், ஈழத்துத் தமிழ் இலக்கியங்கள், பிறநாட்டவரின் பயணக்குறிப்புகள், காலனித்துவ காலக் குறிப்புகள் என்பன அடங்கும்.

## பாளிமொழி இலக்கியங்கள்

புத்த சமயத்தின் பரவலோடு, பாளி மொழியில் பல இலக்கிய முயற்சிகள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் “வம்சக்கதை” என்ற வகையறாவைச் சேர்ந்த நூல்கள் முக்கியமானவை ஆகும். குறிப்பிட்ட புத்த சமயப் பேசுபொருளொன்றை அல்லது பலவற்றை எடுத்துக்கொண்டு இந்த நூல்கள், அரசியல் வரலாற்றுக் காலகட்டமொன்றை விவரிக்கின்றன. இவற்றில் மிகப்பழையது தீபவம்சமாகும். இதை அடுத்து எழுந்த மகாவம்சம், அதன் தொடர்ச்சியான சூளவம்சத்துடன் இணைத்து இலங்கையின் மிக முக்கியமான வரலாற்று ஆவணமாக முன்வைக்கப்படுகின்றது. இவற்றைத் தவிர, தாதுவம்சம் (*dhtuvamsa* - ||தாதுவம்`ச), தூபவம்சம் (*thpavamsa* ~தூபவம்`ச), மகாபோதிவம்சம் (*mahbdhivamsa* மஂகா|போ||திவம்`ச), லலாடதாதுவம்சம் (*laltadhtuvamsa* - லலா|ட||தாதுவம்`ச), அத்தவனகல்லவிகாரவம்சம் (*hattava nagallavihravamsa* - ஂகத்தவன|கல்ல விஂகாரவம்`ச)[1] முதலிய பல வம்ச நூல்கள் பாளி மொழியில் எழுந்துள்ளன.

இந்த வம்ச நூல்களில், மகாவம்சம் (5ஆம் நூற்றாண்டு - தற்போதுவரை), லலாடதாதுவம்சம் (10ஆம் நூற்றாண்டு), முதலிய வம்ச நூல்கள் நமது ஆய்வுக்குப் பயனுள்ள பல தகவல்களைத் தருகின்றன. மகாவம்சதீகை அல்லது வம்சத்தப்பகாசினி என்று அழைக்கப்படும் மகாவம்சத்தின் உரைநூலும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பழைய மகாவம்சமானது, மகாவம்சம் - சூளவம்சம் என்று இருபெரும் பாகங்களைக் கொண்டது. முதல் பாகத்தின் உண்மையான பெயர் தான் மகாவம்சம். பின்னாளில் முழு நூலும் அதே பெயரைப் பெற்றுக் கொண்டது. 37 அத்தியாயங்களைக் கொண்ட மகாவம்சத்தின் முதல் பாகம், ஐந்தாம் நூற்றாண்டில் மகாநாம தேரரால் எழுதப்பட்டது. இதில் இன்றைய இறக்காமம் பகுதியில் அமைந்திருந்த உரோகண நாட்டின் தீர்க்கமண்டலமும் அதை ஆண்ட துட்டகாமணி மன்னனின் சகோதரன் சத்தாதீசன் பற்றிய கதைகளும் முக்கியமானவை. மகாசேன மன்னன் சிவாலயங்களை அழித்த இடங்களாகச் சொல்லப்படும் கோகர்ணமும் ஏராவுலுமண்டலமும் இன்றைய திருக்கோணேச்சரமும் ஏறாவூராகவும் கருதப்படுகின்றன.




**மகாவம்சம்**

Image source - www.arayampathy.lk

| மகாவம்சத்தின் பாகம் | பெயர் | எழுதியவர் | எழுதப்பட்ட காலம் | அடக்கும் காலப்பகுதி | அத்தியாயம் |
|---|---|---|---|---|---|
| 1.0 | மகாவம்சம் | மகாநாம தேரர் | பொபி. 5ஆம் நூற். | பொமு. 6 – பொபி. 301 | I – XXXVI |
| 2.1 | சூளவம்சம் | தர்மகீர்த்தி தேரரும் இன்னொருவரும் | 12ஆம் நூற்றாண்டு | பொபி 301 - 1186 | XXXVII – LXXIX |
| 2.2 | ,, | தெரியாது | தெரியாது | 1186 - 1326 | LXXX – XC |
| 2.3 | ,, | திப்பட்டுவாவி சுமங்கல தேரரும் கிக்கடுவை ``சீர் சுமங்கல தேரரும் | 19ஆம் நூற்றாண்டு | 1326 - 1815 | XCI – CI |
| 3.0 | மகாவம்சம் III | ய\|கிரல்ல பன்னானந்த தேரர் | 1935 | 1815 - 1935 | அறியக்கூடவில்லை |
| 4.0 | நவீன மகாவம்சம் | இலங்கை அரசு | அறியக்கூடவில்லை | 1936 - 1956 | அறியக்கூடவில்லை |
| 5.0 | ,, | ,, | அறியக்கூடவில்லை | 1956 - 1978 | அறியக்கூடவில்லை |
| 6.0 | ,, | ,, | அறியக்கூடவில்லை | 1978 - 2010 | அறியக்கூடவில்லை |

சூளவம்சம் (தமிழ்: சிறிய வம்சவரலாறு) என்று பொதுவில் அறியப்படும் மகாவம்சத்தின் இரண்டாம் பாகமானது, சிறிமேகவண்ண மன்னனிலிருந்து கீர்த்திசிறீ ராசசிங்க மன்னன் வரையான அரசர்களைப் பாடுகின்றது. பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்டது இந்நூல். மகாவம்சத்தை யேர்மன் (Germen) மொழிக்கு மொழியாக்கம் செய்த வில்லியம் கைகர், சூளவம்சத்தில் மொழிநடையை வைத்து மூன்று தனித்தனிப் பாகங்களை இனங்கண்டிருக்கிறார் (அட்டவணை 1). அதிலும் முதற்பாகமானது இருவேறு ஆசிரியர்களால் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்பது ஊகிக்கப்பட்டுள்ளது. புத்த தந்ததாதுவின் வருகை முதல் சோழர் வருகை வரை ஒருவரும், அதன் பின்னர் முதலாம் பராக்கிரமபாகு வரை இன்னொருவரும் இந்த சூளவம்சத்தின் முதற்பாகத்தை எழுதியிருக்கவேண்டும். பொதுவாக தர்மகீர்த்தி தேரரை இந்த இருவரில் ஒருவராகக் கருதுவதுண்டு.

சூளவம்சத்தின் முதற்பாகமானது, இலங்கைத்தீவின் கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு பகுதிகளில் பரந்திருந்த உரோகண நாட்டின் எழுச்சியைப் பாடும் பகுதி என்ற வகையில் முக்கியத்துவமடைகின்றது. இலங்கையின் சிங்கள வரலாற்றின் நிகரற்ற வீரர்களாக இன்று சித்திரிக்கப்படும் முதலாம் வி|சயபாகு, மற்றும் முதலாம் பராக்கிரமபாகு ஆகியோர் இந்தப்பிராந்தியத்திலேயே உதிக்கிறார்கள். அந்த இருவரும் கீழைக்கரையில் இருந்த பல குடியிருப்புக்களில் எதிர்ப்புகளையும் கிளர்ச்சிகளையும் சந்தித்ததையும் இப்பாகம் பதிவுசெய்கிறது. இந்தக் கிளர்ச்சிகளின் மையங்களாக இருந்த இடங்களில் கீழைக்கரையின் ஏறாவூர் (ஏறாகுலு) அக்கரைப்பற்றுத் தெற்கிலுள்ள சாகாமம், சம்மாந்துறைப்பற்றின் மல்வத்தை, தீகவாபி என்பன முக்கியமானவை ஆகும் (மவ. 74:8998).

கீழைக்கரையின் வட அந்தமான கொட்டியாரப்பற்று பகுதியும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. கயபாகு மன்னன் கந்தளாயில் இறக்கும்

> **புத்த சமயத்தின் பரவலோடு, பாளி மொழியில் பல இலக்கிய முயற்சி கள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் "வம்சக்கதை" என்ற வகையறாவைச் சேர்ந்த நூல்கள் முக்கியமானவை ஆகும்.**

போது, அவன் உடல் பராக்கிரமபாகுவுக்கு எதிரான, அவன் அமைச்சர்களால் கொட்டியாரத்துக்குக் கொண்டுவரப்படு கிறது. (மவ. 72:06) பராக்கிரமபாகு உரோகணத்துக் கிளர்ச்சிகளை அடக்க கீழைக்கரைக்கும் அதன் தெற்கேயும் படையனுப்பிய வேளையில் அதே கொட்டியாரத்தில் இருந்த சிங்கள வீரர்களும் கேரள வீரர்களும் வேளைக்காரப்படையினருடன் இணைந்து, இராச நாட்டுப் பகுதியைக் கைப்பற்ற முயன்றிருக்கிறார்கள் (மகாவம்சம் 74:4445).

முதலாம் விசயபாகுவிற்கும் முதலாம் பராக்கிரமபாகுவுக்குமிடையே இலங்கை அரசியல் சூழலில் கீழைக்கரை பெற்றுக்கொண்ட முக்கியத்துவத்தையும் இப்பகுதியில் விரிவாகக் கற்கமுடிகின்றது. அனுராதபுரமும் பொலனறுவையும் அமைந்திருந்த இராசநாட்டை விட, தெற்கே இருந்த உரோகண நாடு பலம்பெற்று எழுந்த காலப்பகுதியாக இக்காலத்தை அறிந்துகொள்ளமுடிகின்றது.

பொலனறுவை மணிமுடி யாருக்கு உரியது என்பதில் கலிங்க குலத்துக்கு எதிராகப் போட்டியிட்ட பாண்டிய ஆரிய வம்சம், உரோகணத்தைத் தலைமையிடமாகக் கொண்டே போராடிக்கொண்டிருந்தது என்ற வரலாற்றுச் செய்தியோடு இணைத்தே இந்த மகாவம்சப் பகுதியை வாசிக்கவேண்டும். முதலாம் பராக்கிரமபாகுவுக்கு எவ்விதத்திலும் சளைத்தவனாயிராத முதலாம் கயபாகு (Gajabhu - |க|ச|பாஃகு) மன்னன் பற்றிய குறிப்புகளும் இப்பகுதியில் தான் இடம்பெறுகின்றன. ஆனால், இப்பகுதியை எழுதிய ஆசிரியரின் பக்கச்சார்பால், பராக்கிரமபாகு அதீதமாகப் புகழப்பட, கயபாகு ஓரளவு குறைத்தே மதிப்பிடப்படுகிறான். நடுநிலையான பார்வையுடன் இப்பகுதியை ஆராயும்போது கயபாகு, அவனுக்கு முந்திய விக்கிரமபாகு உள்ளிட்ட பல மன்னர்களின் வீரதீரம் பராக்கிரமபாகுவுக்குச் சமனானது என்றே கொள்ளமுடிகின்றது.

சூளவம்சத்தின் இரண்டாம் பாகம், 80 - 90ஆம் அத்தியாயத்தையும், 12ஆம் நூற். முதல் 14ஆம் நூற். வரையான காலப்பகுதியையும் அடக்குகின்றது. இதை எழுதியோர் யாரென்று தெரியவில்லை. 12ஆம் நூற்றாண்டில் முதலாம் பராக்கிரமபாகுவிற்குப் பின் இலங்கையின் அரசியல் நிலைப்பாட்டைச் சொல்லும் இப்பாகம், தம்பதெனி அரசை ஆண்ட நான்காம் பராக்கிரமபாகு காலம் (1302 - 1326) வரை விவரிக்கின்றது. இந்த நான்காம் பராக்கிரமபாகு காலத்தில் தான் (1310), இன்று கிடைக்கும் இலங்கையின் மிகப்பழைய இலக்கியமான சரசோதிமாலை எழுதப்பட்டது என்பது குறிப்பி டத்தக்கது.


சூளவம்சத்தின் இரண்டாம் பாகத்தில் கலிங்க மாகன் காலத்தில் கோவிந்தசிலை மலையில் அரசுபுரிந்த சிங்கள மன்னன் பற்றிய தகவல் முக்கியமானது. இன்று கோவிந்தகெல என்று அழைக்கப்படும் கோவிந்தசிலை கழிகாமமலை என்ற பெயரில் மட்டக்களப்பின் மேற்கெல்லையாகக் கருதப்பட்டது. மேலும் இந்தோனேசியாவிலிருந்து படையெடுத்து வந்த சாவகன் சந்திரபானுவின் படைகள், கீழைக்கரைக்குத் தெற்கே தான் தரையிறங்கின என்ற தகவலும், உரோகணத்தை வன்னிய அரசர்கள் ஆண்டமை உள்ளிட்ட பல தகவல்களும் இந்த இரண்டாம் பாகத்தில் கிடைக்கின்றன.

சூளவம்சத்தின் மூன்றாம் பாகம், 91 - 101 ஆம் அத்தியாயங்களைக் கொண்டிருக்கிறது. இந்தப் பாகம், 1815 இல் ஆங்கிலேயர் கண்டியைக் கைப்பற்றுவதுடன் நிறைவடைகின்றது. எழுதியோர் திப்பட்டுவாவி சுமங்கல தேரரும் கிக்கடுவை சிறீ சுமங்கல தேரரும். இப்பாகம் எழுதப்படும்போது, உரோகணம் ஒரு தனித்த அரசியல் பிரிவாக விளங்கவில்லை என்பதால் உரோகணம் பற்றியோ கீழைக்கரை பற்றியோ மிகக்குறைவான தகவல்களே கிடைக்கின்றன.

இவ்வாறு பழைய மகாவம்சமும் சூளவம்சமும் ஒட்டுமொத்தமாக மகாவம்சத்தின் முதல் இரு தொகுதிகளாகக் கருதப்பட, 1815 இலிருந்து 2010 வரையான காலப்பகுதியில் புதிய மகாவம்சப் பாகங்கள் எழுதப்பட்டு, இதுவரை ஆறு தொகுதிகளாக 130 அத்தியாயங்களுடன் வெளிவந்துள்ளன (சரவணன், 2021). இலங்கை அரசின் அனுசரணையில் தற்போதும் மகாவம்சம் எழுதப்பட்டுக்கொண்டிருக்கிறது (Cultural Department, 2022). இன்றும் எழுதப்படுகின்ற உலகின் பழைமையான நீளமான தொடர் வரலாற்று இலக்கியம் என்ற பெருமையையும் மகாவம்சம் பெறுகின்றது.

மகாவம்ச உரைநூலான வம்சத்தப்பகாசினி, 10 அல்லது 11ஆம் நூற்றாண்டில் எழுந்ததாகக் கருதப்படுகின்றது (Jegannathan, n.d) மகாவம்சத்தில் குறிப்பிடப்படாத விரிவான வேறு தகவல்கள் இந்நூலில் காணப்படுகின்றன. உதாரணமாக வலகம்பாகு மன்னன் காலத்தில் அவனுக்கு எதிராக, உரோகணப்பகுதியை திய்யன் என்ற பிராமணன் ஆண்ட விபரம் இந்நூலில் கூறப்படுகின்றது. விந்தையாக, மட்டக்களப்புக் குலப்பாடலொன்றில் "வலகம்பாகு மன்னன் திறைகேட்க அதை நாங்கள் கொடாது தவிர்த்தோம்" என்ற குறிப்பு வருகின்றது[2] (கமலநாதன் & கமலநாதன், 2005:69)..

மகாவம்சத்தை அடுத்து கீழைக்கரை பற்றிய வரலாற்றுத்தகவல்களைத் தரும் இரண்டாவது முக்கியமான வம்சநூல், லலாடதாதுவம்சமாகும் (அல்லது நளாட



THE
MAHĀWANSA.
FROM THE
THIRTY-SEVENTH CHAPTER.
TRANSLATED, AND EDITED, UNDER ORDERS OF THE CEYLON GOVERNMENT,
BY
H. SUMANGALA,
HIGH PRIEST OF ADAM'S PEAK,
AND
DON ANDRIS DE SILVA BATUWANTUDAWA,
PANDIT.
COLOMBO:
WILLIAM HENRY HERBERT, GOVERNMENT PRINTER, CEYLON.
1877.

Pali Text Society
THE MAHĀVAṂSA
OR
THE GREAT CHRONICLE
OF CEYLON
TRANSLATED INTO ENGLISH
BY
WILHELM GEIGER, PH.D.
ASSISTED BY MABEL HAYNES BODE, PH.D.
UNDER THE PATRONAGE OF THE GOVERNMENT OF CEYLON
London
PUBLISHED FOR THE PALI TEXT SOCIETY
BY
HENRY FROWDE
OXFORD UNIVERSITY PRESS, AMEN CORNER, E.C.
1912

THE MAHAVANSA
TRANSLATED FROM THE ORIGINAL PALI INTO ENGLISH, FOR THE GOVERNMENT OF CEYLON
MUDALIYAR L.C. WIJESINHA
IN TWO PARTS
THE TRANSLATION OF THE FIRST PART BY GEORGE TURNOUR
WITH NOTES AND EMENDATIONS BY
MUDALIYAR L.C. WIJESINHA
PART-I
CHAPTERS 1 TO 38
ASIAN EDUCATIONAL SERVICES
NEW DELHI ★ MADRAS ★ 2000

**மகாவம்சம்**

**Image source - namathumalayagam.com**

தாதுவம்சம்). தாதுவம்சம் என்று அறியப்படும் சிங்கள நூலும் இதுவும் வேறுவேறு. லலாடதாதுவம்சம் பத்தாம் அல்லது பதினோராம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாக நம்பப்படுகின்றது (Vijithakumara, 2016:33). அதன்படி, புத்தரின் நுதல் என்பானது, உரோகணத்தின் மகாகமத்தை வந்தடைந்தமை, காகவண்ணதீசனின் தந்தை கோதாபயனால் கதிர்காமத்து பத்து உடன்பிறந்த அரசர்கள் கொன்றழிக்கப்பட்டமை, காகவண்ணதீசன் வரையான அரசர்களால் அமைக்கப்பட்ட விகாரங்கள், சேருவில என்ற இடத்தில் காகவண்ணதீசன் அமைத்த மங்கலமகாசேத்தியம் உள்ளிட்ட தகவல்கள் கீழைக்கரை தொடர்பான வரலாற்றைக் கட்டமைப்பதில் மிக முக்கியமானவை ஆகும்.


## சிங்களமொழி இலக்கியங்கள்

கீழைக்கரை பற்றிய சான்றுகளை வரிசைப்படுத்துவதில், பூசாவலிய, ராஜாவலிய, நிகாய சங்கிரகய முதலியன சிங்களத்தில் எழுந்த வரலாற்று இலக்கியங்களில் குறிப்பிடத்தக்கவை. இவற்றில் பூசாவலிய மயூரபாத பிரிவேனாவைச் சேர்ந்த புத்தபுத்திரர் என்பவரால் மூன்றாம் பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் (1287 - 1293) எழுந்ததாகும். நிகாய சங்கிரகம் (சாசனாவதாரம் என்ற பெயரும் இதற்குண்டு) தேவரக்கித ஜயபாகு என்பவரால் நான்காம் புவனேகபாகு மன்னன் (1341 - 1351) காலத்தில் எழுந்த நூல் (Davids, 1875:168 - 171). பதினெட்டாம் நூற்றாண்டில் எழுந்ததாகக் கருதப்படும் ராஜாவலிய சிங்களத்தில் பெருமளவு பூரணமான வரலாற்றுத்தகவல்களை நிரல்படுத்திக் கூறும் நூல். இது, விஜயன் வருகையிலிருந்து இரண்டாம் விமலதர்ம சூரியன் வரையான அரசர்களின் காலத்தைப் பாடுகின்றது. இந்நூலிலும் கீழைக்கரை பற்றிய பல வரலாற்றுத்தகவல்கள் கிடைக்கின்றன. உதாரணமாக கண்டி மன்னன் இரண்டாம் ராஜசிங்கன் பாணமைப் பகுதியை ஆண்டான் என்ற குறிப்பு இந்நூலில் வருகிறது (Gunasekara, 2000:90). இவை அனைத்திலும் மகாவம்சத்தில் குறிப்பிடப்படாத பலவகையான சரித்திரச் சான்றுகளைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

கடையம்பொத் என்று அழைக்கப்படும் பதினான்காம் நூற்றாண்டுக்குப் பிந்திய சிங்கள நூல்களும் முக்கியமானவை.

கடையம்பொத் என்பது "எல்லைகளைக் குறிப்பிடும் நூல்" எனப் பொருள்படும். மாத்தளை கடையம், திரிசிங்கள கடையம், சிறீலங்காதுவீபய கடையம் என பல கடையம்பொத்தகங்கள் உள்ளன. இவை பழைய இலங்கையின் இராசநாடு, உரோகணநாடு, மாயநாடு ஆகிய மூன்று "திரிசிங்கள" நாடுகளிலும் அமைந்திருந்த ஆட்சி நிருவாகப் பிரிவுகள் பற்றிக் குறிப்பிடுகின்றன. கீழைக்கரை அடங்கியிருந்த உரோகண நாட்டிலிருந்த ஆட்சிநிர்வாகப் பிரிவுகளாக மடகலப்புவ, மல்வத்துமண்டலம், தீகவாபிமண்டலம், பலுகம் தானவ, ஏராவுலுமண்டலம் முதலியவற்றைக் குறிப்பிடுகின்றன (Abeyawardana, 1999:100102). இவற்றை இன்றைய சம்மாந்துறை, மல்வத்தை, இறக்காமம், பழுகாமம், ஏறாவூர் ஆகிய ஊர்களை அண்டியிருந்த ஆட்சிநிர்வாக பிரிவுகளாக இனங்காணலாம்.

(தொடரும்)



# பக்கவாட்டுச் சிந்தனைகள் மூலம் முக்கிய சிக்கல்களை தீர்த்தல்



கணபதிப்பிள்ளை ரூபன்

இந்த கட்டுரைத்தொடர் உலகில் மிகப்பிரபலமான தொழில் நுட்பதாரிகளைப்பற்றியும் அவர்களது ஆரம்ப நிலை தொழில் நிறுவனங்களை (Startup Companies) அமைக்கும் போது எதிர் கொண்ட சில முக்கியமான நுணுக்கங்களை (Nuances) அடிப்படையாகக் கொண்டும், கட்டுரையாளரின் வணிகரீதியான சாதிப்பு அனுபவங்களைப் பகிர்வதாக அமையவுள்ளது.

புதிய தொழில் முயற்சிகளை தொடங்குவதென்பது அவ்வளவு இலகுவானதல்ல. அந்த வல்லமை எல்லோருக்கும் வாய்த்தும் விடாது. புதிய தொழில் என்பது தனியே வர்த்தகம் என்பதாக அர்த்தப்படாது. அது அறிவியல் பாதி, செய்கலை பாதி கலந்து செய்த நுட்பத்தினூடாகவே புதிய சிந்தனைகளும், அதன் வழியே புதிய தொழில்களும் பிறப்பெடுக்கின்றன. அப்படியான புதுமைகளுக்கு அடிநாதமாக இருப்பதுதான் பக்கவாட்டுச் சிந்தனை (*Lateral Thinking*). பக்கவாட்டுச் சிந்தனை அல்லது யோசனை என்பது மிக்க சிக்கலான வேலை ஒன்றை செய்து முடிப்பதற்கு குறித்த பிரச்சினையை எல்லோரும் அணுகிய விதத்தை விடுத்து, தனித்துவமான இன்னொரு வழிமுறையூடாக தனது கற்பனாசக்தி, பட்டறிவு என்பவற்றின் துணையுடன் இலகுவாகச் செய்து முடிப்பதைக் குறிக்கும். எமக்கான இலக்கை அடைய எமக்கு முன்னதாக பலர் சென்ற பாதைகள் இருக்கலாம். ஆனால் அவற்றை விடுத்து, அந்த இலக்கைச் சுலபமாகவும், சரியாகவும் அடைவதற்கு புதிய பாதை ஒன்றைக் கண்டடைவதே பக்கவாட்டுச் சிந்தனை.

இந்தப் பக்கவாட்டுச் சிந்தனையால் வென்றவர்கள் வரிசையில் வாழும் உதாரணமாக இருப்பவர், உலகின் முன்னணி கோடீஸ்வரர்களில் ஒருவரான அமேசான் (Amazon.com) நிறுவனத்தின் நிறுவுநர் ஜெஃப் பெசோஸ் (*Jeff Bezos*) தான். அவர் தன் தொழில் முயற்சியை வித்தியாசமாகவும், தனித்துவமாகவும், பட்டறிவையும் கற்பனையையும் கலந்து யோசித்ததால் தான் இன்றைக்கு இந்தளவுக்கு அவரால் உயரமுடிந்தது.






அமேசன் நிறுவனம்

Image source - www.foxbusiness.com




ஜெஃப் பெசோஸ்

Image source - www.ctvnews.ca

இப்படி ஜெஃப் பெசோஸின் வெற்றிக்கு பின்னால் இருக்கும் பக்கவாட்டுச் சிந்தனையை அவருக்கு அறிமுகப்படுத்தியது ஒரு இலங்கையர் என்பது பலருக்கும் தெரியாத ஒரு விடயம்.

ஜெஃப் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் (Princeton University) பயின்றபோது, அவரது அறைத்தோழனாக இருந்தவர் ஒரு இலங்கையர். அவர்தான் மிகச் சிக்கலான கணிதப் புதிர்களுக்கெல்லாம், மாற்றுவழிகளில் தனக்கேயுரித்தான புதுமையான பாணியில் விடைகளை விரைவாகவும் சரியாகவும் கண்டுபிடித்துக்காட்டினார். அதைப் பார்த்த ஜெஃப் பெசோஸ், அதேவழியைக் கையாண்டு தொழில் முயற்சி ஒன்றை ஆரம்பித்தால் என்ன என்று சிந்தித்ததன் விளைவே, இன்று உலகமெங்கும் ஆலமரம் போல இணைய வியாபாரத்தில் அசைக்கமுடியாத சக்தியாக உருவெடுத்திருக்கும் 'அமேசான்' நிறுவனம். ஜெஃப் பெசோஸ் தன் தந்தையிடம் பெற்ற சிறுதொகைப் பணத்தை மூலதனமாகக் கொண்டு, சியாற்றில் (Seattle) நகரில் இணையவழியில் புத்தகங்களை விற்பனை செய்யும் தளமாக ஆரம்பிக்கப்பட்ட அமேசானில் இன்று உலகில் உள்ள அத்தனை பொருள்களையும் ஒரே இடத்தில் வாங்கிக்கொள்ளக்கூடியளவுக்கு, அமேசான் நிறுவனம் உலகெங்கும் வியாபித்து நிற்பதற்கும் பக்கவாட்டுச் சிந்தனையே அடிப்படைக் காரணம். தனக்குப் பக்கவாட்டுச் சிந்தனையை அறிமுகம் செய்ததால், ஒட்டுமொத்த இலங்கையர்களும் தன் நண்பரைப் போன்று, பக்கவாட்டுச் சிந்தனையில் ஊறித்திளைத்தவர்கள் என்ற எண்ணம் ஜெஃப் பெசோஸுக்கு இன்றளவும் உண்டு.

பக்கவாட்டுச் சிந்தனைப் பிரயோகம் தொடர்பில் எனது அனுபவத்தையும் குறிப்பிடுதல் இங்கு பொருத்தமானதாக அமையும். எனது 28 ஆவது வயதிலேயே முதலாவது நிறுவனத்தை நான் தொடங்கிவிட்டேன். துணிகர முதலீட்டாளர்களை (Venture Capitalists) எமது நிறுவனத்தில் பத்துமில்லியன் டொலரையும் முதலிட வைத்தோம். நாங்கள் தொலைபேசியில் பேசும் ஒலிகளை இணையத்தளத்தினூடாக (Voice Over IP - VOIP) அனுப்பும் பொறிமுறையே எமது நிறுவனத்தின் முதலாவது தயாரிப்பு. இதேபோன்ற பொறிமுறையை இன்னொரு சர்வதேச நிறுவனமும் ஒரு நேர்கோட்டு வழிமுறையில் ஏற்கனவே மேற்கொண்டிருந்தது. அப்படிப்பட்ட சூழலில் எமது நிறுவனத்தின் தயாரிப்பு, குறித்த சர்வதேச நிறுவனத்தின் தயாரிப்பை விடவும் மேம்பட்டதாகவும் வினைத்திறனானதாகவும், கையாள இலகுவானதாகவும் இருந்தால் மாத்திரமே நாங்கள் வெற்றிபெறலாம் என்ற சூழல் இருந்தது. இதன்போதுதான் பக்கவாட்டுச் சிந்தனை எமக்கு கைகொடுத்தது. ஏற்கனவே நடைமுறையில் இருந்த சர்வதேச நிறுவனத்தின் தயாரிப்பை விடவும் எட்டுமடங்கு வேகத்தை அதிகமாகக் கொண்டதாக எமது தயாரிப்பை வெற்றிகரமாக முன்வைத்தோம். அதன் பயனாக எனக்கு இதுவரை ஐக்கிய அமெரிக்காவில் கிடைத்துள்ள 34 காப்புரிமைகளில் இரண்டை அந்தத் தயாரிப்பு பெற்றுத்தந்திருந்தது. தொழில்முனைவோருக்கு தோள் கொடுக்கும் இந்தப் பக்கவாட்டுச் சிந்தனையை எல்லோரும் தமக்குள் வளர்த்தெடுக்க முடியும். ஆனால் அதற்கு அவர்கள் சில விடயங்களைக் கைக்கொள்ளவேண்டியிருக்கும். அவற்றை இங்கு பார்க்கலாம்.

**தெளிவான பிரச்சினை (Clear Problem)**

முதலில் பிரச்சினை மற்றும் தேவை என்பவற்றை சரியாக மனதில் விளங்கிக் கொள்ளல். என் அனுபவத்தில் பலர் பிரச்சினையை விளங்கிக் கொள்ள முன்னரே அதற்கான பதிலைத் தேடத் தொடங்கிவிடுவார்கள். அதனால் பிழையான பிரச்சினைக்கு அல்லது தேவையில்லாத பிரச்சினைக்கு விடை தேடி நேரத்தையும் பணத்தையும் செலவழிப்பார்கள். சரியான பிரச்சினையுடன் தேடலைத் தொடங்குவதன் மூலம், கவனமாக அந்த பிரச்சினைக்கான காரணம், அதற்கு மற்றவர்கள் எப்படி தீர்வு கண்டார்கள், அதற்கு பதில் கண்டுபிடித்தால் அதன்

**தொழில்முனைவோருக்கு தோள் கொடுக்கும் இந்தப் பக்கவாட்டுச் சிந்தனையை எல்லோரும் தமக்குள் வளர்த்தெடுக்க முடியும்.**

வணிக நன்மைகள் என்பவற்றைக்கொண்டு அந்த பிரச்சினையில் வளங்களைச் செலவழிப்பதில் பிர யோசனம் உண்டா என்று தொடக்கத்திலேயே உணரலாம்.

### புதுமையான தீர்வுகள் (Innovative Solution)

புதுமையான தீர்வுகள் என்பது ஒரு கேள்விக்கு மற் றவர்கள் யோசிப்பது போன்று இல்லாமல் வித்தி யாசமாக விடை காண்பது. அந்த விடை வித்தியா சம் யோசனையோடு மட்டும் இல்லாமல் செய்யும் பொருளுக்கும் கூடிய மதிப்பு கொடுக்கக்கூடிய தாக இருக்கவேண்டும். எமது நிறுவனத்தில் நான் புதுமையும், நுணுக்கமும் கலந்து செய்த பொறி முறை எமது வாடிக்கையாளர்களுக்கு குறைய பணத்தை (cost) செலவிட வைத்தது மட்டுமன்றி மிகக் குறைந்த இடத்தையும் (realestate) குறைந்த மின்சாரத்தையும் (Power/Electricity) பிடித்தது. இவ் வாறான விடயங்கள் எமது பொருளின் மதிப்பை மிகவும் அதிகரித்தன.

### ஆக்கபூர்வமான தீர்வுகள் (Creative Solution)

சிக்கல்களுக்கு பல விதமான புதுமையான தீர்வு களைக் காணலாம். ஆனால் இயற்கையாகவே பல ராலும் ஆக்கபூர்வமான தீர்வினை வழங்கமுடியாது. இன்னொருவர் அந்த தீர்வைச் சொல்லும்போது மற்றவர்கள் ஏன் தங்களால் அவ்வாறான தீர்வை முன்னரே சிந்திக்க முடியவில்லை என கவலைப்ப டுவதுண்டு. உதாரணமாக நாங்கள் இலங்கையில் பட்டம் ஏற்றி விளையாடுவோம். ஆனால் அதே காற்றின் சக்தியை வைத்தே, காற்றில் சுற்றும் காற் றாடியை வைத்து மின்சாரம் செய்யலாம். அதை இப்போதுதான் இலங்கையில் வணிகரீதியில் மேற்கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள். இதை முன்பே செய்திருந்தால் எரிபொருள் இறக்குமதியை இலங்கை குறைத்திருக்கலாம்.

### வேறு பிரச்சினைக்கு விவரணையாக்குவது (Mapping to simpler or familiar problem)

பக்கவாட்டு முறையில் இது மிக முக்கியமானது. புதிய சிக்கலான பிரச்சினையை, தெரிந்த ஒன் றுக்கு விவரணையாக்குவதன் மூலம் அல்லது பதி லீடாகப் பயன்படுத்துவதன் மூலம் தன் அனுபவத் தையும் மற்றும் படித்தவற்றையும் வைத்து தீர்வு காணலாம். நான் பொறியியலிலிருந்து (Engineer ing), உற்பத்தி குழுவுக்குப்போய் (Manufacturing), பின் சந்தைப்படுத்தலில் ஈடுபட்டு (Marketing) இப்போது விற்பனை செய்யும் குழுவில் (Sales Team) பணியாற்றுகிறேன். இவையெல்லாவற்றிலும் திற மையோடு பணியாற்ற காரணம் இந்த முறை தான்.

### மன வரைபடம் (Mindmap)

சிக்கலான கேள்விகளுக்கு விடை தேடுவது மிகக் கடினமாக இருக்கும். அதற்கு நான் ஒரு மூத்த வரி டமிருந்து கற்றுக்கொண்ட முறை ஒன்று உண்டு. முதலில் எமக்கு தெரிந்தவை (Known), தெரியா தவை (Unknown) என்று காகிதத்தில் அல்லது கரும் பலகையில் எழுதுவ வேண்டும். பின் தெரியா தவை என்ற பகுதிக்குள் இருக்கும் விடயங்களை ஒவ்வொன்றாக அணுகித் தீர்வு காணுதல் அல்லது அதில் அனுபவமுள்ள ஆலோசகர்களைத் தேடிப் பிடித்தல். இவ்வாறு விடயங்களை எழுதிவைத்து, படிப்படியாக அவற்றைத் தீர்ப்பதால் இந்த முறை மனதுக்கு சுமையை ஏற்றாமல் தெளிவான மனத்து டன் முடிவு காண உதவும்.

### அரங்குக்கு வெளியேயான சிந்தனை (Out of Box Thinking)

பக்கவாட்டுச் சிந்தனையை பலர் அரங்குக்கு வெளி யேயான சிந்தனை அல்லது கிணற்றுக்கு வெளியே யான சிந்தனை என்பார்கள் (கிணற்று தவளை என் பது இதிலிருந்துதான் வந்ததோ?!). ஒரு சிக்கலான விடயத்துக்கு நாங்கள் வழக்கமான வழிமுறை யால் பதில் தேடாமல் பலரும் சிந்திக்காத இன்னொரு முறை யில் பதில் காண முயல்வதால் இவ்வாறு அழைக்கி றார்கள். இப்படிச் சிந்திக்கக் கூடிய சிலர் உங்கள் குழு வில் இருப்பது எப்போதுமே நல்லது.

அமேசானின் ஜெஃப் பெசோஸ் கண்டுகொண்ட 'மாதிரி இலங்கையர்' மூலம் பக்கவாட்டுச் சிந்தனையில் இலங்கையர் எல்லோருமே மிகச் சிறந்தவர்கள் என்று எண்ணுகிறார் என முன்னரே கூறியி ருந்தேன். அவ்வா றான பக்கவாட்டுச் சிந்தனை எங்கள் கல்வி முறையாலோ வளர்ப்பு முறையாலோ கூட எமக்குள் வந்திருக்கலாம். இதை நான் "மாதிரிப் பொருத்தம்" (Pattern Matching) என்று நினைத்திருந்தேன். இதை நாங்கள் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரீட்சையிலும் பின் மேல்தர வகுப்பிலும் (A/L) சரியாகக் கற்றோம், பிரயோகித்தோம். எனக்கு இப் போதும் நல்லையா சேர் தூய கணிதத்தையும், சூரியநாதன் சேர் பௌதிகவியலையும் கற்பிக்கும் போது, சிக்கலான கேள்விகளுக்கு எளிமையாக விடைகாணும் முறைகள் கண்முன்னே நிற்கின்றன. அவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது, எங்கள் ஈழத்தவர்களும் பக்கவாட்டுச் சிந்தனை தொடர்பான கற்றிவிலோ, பட்டறிவிலோ எவ்வி தத்திலும் சளைத்தவர்களில்லை. ஆனால் அதனை அவர்கள் பயன்படுத்துவதற்கு சரியான சூழல் தான் இல்லை. அந்தச் சூழமைவை உருவாக்கினால், நிச்சயம் நம்மவர்களும் உலகளவில் நவீன தொழிற் றுறையிலும் கோலோச்சுவார்கள்.

**புதிய தொழில் என்பது தனியே வர்த்தகம் என்பதாக அர்த்தப்படாது. அது அறிவியல் பாதி, செய்கலை பாதி கலந்து செய்த நுட்பத்திறனாகவே பிறப்பெடுக்கின்றன.**

(தொடரும்)

# திருகோணமலை திருமங்கலாய் காட்டுப்பகுதியில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட

# சிவன் ஆலயம்





பரமு புஷ்பரட்ணம்

இந்தக் கட்டுரைத் தொடர், சமகாலத்தில் இலங்கையில் குறிப்பாக வடபகுதிகளில் இடம்பெற்றுவரும் தொடர் அகழாய்வு களில் கண்டறியப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், இலங்கையில் பண்டைய காலத்தில் வாழ்ந்த மக்களின் நிலை, அவர்களின் கலாசார பண்பாட்டு அம்சங்கள், பொருளாதார சமூக நிலவரங்கள், வெளிநாட்டு உறவுகள், உறவுநிலைகள், சமய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை வெளிக்கொணர்வதாக அமைகின்றது.

**திருகோணமலை திருமங்கலாய் காட்டுப்பகுதியில் கல்வெட்டுக்களுடன் அழிவடைந்து கொண்டிருக்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவன் ஆலயம்**

திருமங்கலாய் காட்டுப்பகுதி சிவன் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது எடுக்கப்பட்ட புகைப்படம்

*இலங்கையில் இந்து மதத்துக்கு 2500 ஆண்டுகளுக்கு குறையாத வரலாறு உண்டு. பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்தி எழுந்த பாளி இலக்கியங்கள் கி. மு. 3ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் அறிமுகமாவதற்கு முன்னரே இலங்கையில் இந்து மதமும், அந்த மதம் சார்ந்த ஆலயங்களும் இருந்ததாகக் கூறுகின்றன. அவற்றுள் கிழக்கிலங்கையில் இருந்த இற்றைக்கு 1600 ஆண்டுகளுக்கு முற்பட்ட மூன்று சிவன் ஆலயங்கள் பற்றி மகாவம்சம் கூறுகின்றது.*

*சமகால இலங்கையில் அதிலும் குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஆயிரக்கணக்கான இந்து ஆலயங்கள் புதுப் பொலிவுடன் காணப்படுகின்றன. அவற்றுள் கணிசமான ஆலயங்கள் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் சுதேச மக்களுக்கு மத சுதந்திரம் வழங்கப்பட்டதன் பின்னர் பழைய ஆலயங்கள் இருந்த இடங்களில் அல்லது பழைய ஆலயங்களின் பெயரை நினைவுபடுத்தி புதிய இடங்களில் கட்டப்பட்டவையாக உள்ளன. போர்த்துக்கேயர் ஆட்சிக்கு முன்னர் இம்மாகாணங்களில் இருந்த ஆலயங்கள் பற்றி இலக்கியங்கள், புராணங்கள், கல்வெட்டுகள், ஐரோப்பியர் கால ஆவ*

ணங்கள் என்பவற்றில் பல வரலாற்றுக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

ஆயினும் தற்காலத்தில் அவ்வாலயங்கள் இருந்த ஒரு சில இடங்களில் மட்டும் அவ்வாலயங்களின் அழிபாடுகளை அடையாளம் காணமுடிகின்றது. ஆயினும் அவ்வழிபாடுகளை வைத்து அவ்வாலயங்களின் கட்டட அமைப்பையோ, கலைமரபையோ, வழிபாட்டிலிருந்த தெய்வங்கள் பற்றியோ அறியமுடியவில்லை. இதற்கு இம்மாகாணங்களின் கரையோரங்களில் ஆதிக்கம் செலுத்திய போர்த்துக்கேயரும், பின்வந்த ஒல்லாந்தரும் சுதேச மதங்களுக்கு எதிராகக் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கையால் இவ்வாலயங்கள் அழிக்கப்பட்டதே காரணமாகும். அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களின் கட்டிடப் பாகங்களைக் கொண்டே அவர்களின் ஆட்சிக்காலக் கோட்டைகள், கிறிஸ்தவ ஆலயங்கள், நிர்வாகக் கட்டடங்கள் என்பன கட்டப்பட்டன. இந்த உண்மையை அவர்களின் ஆட்சி ஆவணங்களே உறுதி செய்கின்றன. இதை தற்போது யாழ்ப்பாணக் கோட்டையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் ஆய்வில் கிடைத்து வரும் இந்து ஆலயங்களுக்குரிய கட்டடப் பாகங்கள் மேலும் உறுதிசெய்கின்றன. இருந்த போதிலும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியில், அவர்களின் ஆதிக்கம் பெரும்பாலும் இலங்கையின் கரையோரப் பகுதிகளை அண்டிய மாகாணங்களில் ஏற்பட்டிருந்ததனால் அவர்களின் கலையழிவுக் கொள்கையில் இருந்து மாகாணங்களின் உட்பகுதியில் இருந்த ஆலயங்கள் தப்பித்திருக்க இடமுண்டு. அவற்றில் ஒன்றாகவே திருமங்கலாய்ச் சிவன் ஆலயத்தைப் பார்க்கின்றேன்.

இவ்வாலயம் திருகோணமலை மாவட்டத்தில் கிளிவெட்டி பிரதேசசபைக்குட்பட்ட திருமங்கலாய் என்ற வரலாற்றுப் பழமைவாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. இவ்வாலயம் பற்றி திருகோணமலை தலபுராணங்களில் ஒன்றான திருக்கரைசை புராணத்திலும் கூறப்பட்டுள்ளது. ஆயினும் தற்போது இவ்வாலயம் கிளிவெட்டியின் பிரதான வீதியில் இருந்து ஏறத்தாழ பத்து கிலோ மீற்றர் தொலைவில் மின்சார வேலி போடப்பட்ட அடர்ந்த காட்டின் மத்தியில் காணப்படுகின்றது. இவ்விடத்திற்குச் செல்லும் பாதையில் பிற்பகல் மூன்று மணிக்குப் பின்னர் யானைகளின் நடமாட்டத்தை எதிர்கொள்வது சாதாரண நிகழ்வாகவே இருக்கின்றது. இவற்றின் காரணமாகவே இது வரை தொல்லியல், வரலாற்று ஆய்வாளர்கள் இவ்வாலயத்தை நேரில் சென்று ஆய்வு செய்வதில் தயக்கம் காட்டி வந்துள்ளனர் எனலாம். இந்நிலையில் திருமங்கலாய் பிரதேசத்தில் வாழ்ந்த மூதாதையினரின் வழித்தோன்றல்களாக தற்போது கிளிவெட்டியில் வாழ்ந்து வரும் திரு. வி. முத்துலிங்கம், திரு. கே. குரேந்திரராசா, திரு. கே. மாணிக்கராசா முதலியோர் இவ்வாலயத்தை ஆய்வு செய்வதற்கு எமக்கு வழங்கிய பாதுகாப்பு உத்தரவாதமும் உதவிகளும் அவ்வாலயத்தை நேரில் சென்று ஆய்வு செய்வதற்கு தூண்டுதலாக அமைந்தன. இந்த ஆய்வில் எமது பல்கலைக்கழக தொல்லியல் இறுதிவருட மாணவர்களுடன் மத்திய கலாசார நிதிய யாழ்ப்பாண செயல்திட்ட முகாமையாளர் திரு. லக்மன் சந்தன மைத்திரிபால மற்றும் யாழ்ப்பாண பிராந்திய தொல்லியற் திணைக்கள அதிகாரிகளான திரு. மணிமாறன், திரு. கபிலன் ஆகியோர் பல சிரமங்களுக்கு மத்தியில் எம்முடன் இணைந்து பல நாட்களாக ஆய்வில் பங்கெடுத்தமை மாணவர்களுக்குப் புதிய ஆய்வு அனுபவத்தைக் கொடுத்தது.



**திருகோணமலை திருமங்கலாய் காட்டுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட ஆயிரமாண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டுகள்**

தற்போது இவ்வாலயத்தின் பெரும்பகுதி முற்றாக அழிவடைந்து அதன் அழிபாடுகள் ஆங்காங்கே கற்குவியல்களாகக் காணப்படுகின்றன. ஆயினும் அவ்வாலயத்தின் கட்டட அமைப்பையும், அதன் கலைமரபையும், ஆலயம் தோன்றி வளர்ந்த காலத்தையும்



**திருகோணமலை திருமங்கலாய் காட்டுப்பகுதியில் தொல்லியல் ஆய்வுகளில் ஈடுபட்டபோது.**

கருங்கற்களைக் கொண்டு சற்சதுர வடிவில் ஆழமாகக் கட்டப்பட்ட ஆலயத்தின் தீர்த்தக் கிணறு காணப்படுகிறது. மேலும் இவ்வாலயத்தைச் சுற்றி சுற்று மதில்களும் அவற்றிடையே துணைக் கோவில்களும் (பரிவாரத் தெய்வங்கள்) இருந்திருக்கலாம் என்பதை அவற்றிற்குரிய அத்திபாரங்களும், பரவலாகக் காணப்படும் செங்கற்களும், கருங்கற்களும் உறுதிப்படுத்துகின்றன.

**திருகோணமலை மாவட்டத்தில் கிளிவெட்டி பிரதேசசபைக் குட்பட்ட திருமங் கலாய் என்ற வரலாற்றுப் பழமைவாய்ந்த இடத்தில் அமைந் துள்ளது. இவ்வாலயம் பற்றி திருகோணமலை தலபுராணங் களில் ஒன்றான திருக்கரைசை புராணத்திலும் கூறப்பட்டுள்ளது.**

உறுதிப்படுத்தக் கூடிய நம்பகரமான ஆதாரங்களை அடையாளம் காணக்கூடியதாக இருக்கின்றது. கருங்கற்களையும், செங்கற்களையும் கொண்டு கட்டப்பட்ட இவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகமும் அதன் மேலமைந்த விமானமும் முற்றாக அழிவடைந்து அதன் கட்டடப் பாகங்கள் ஆங்காங்கே சிதறுண்டு காணப்படுகின்றன.

கர்ப்பக்கிரகம் இருந்த இடம் பிற்காலத்தில் புதையல் எடுப்போரால் தோண்டப்பட்டு அவ்விடம் தற்போது ஒரு குழியாகக் காணப்படுகின்றது. கர்ப்பக்கிரகத்திற்கு முன்னால் அழிவடைந்து காணப்படும் அந்தராளத்தில் ஆலய காலப் பொருட்கள் சிலவற்றுடன் பிற்காலத்தில் கொண்டுவந்து வைக்கப்பட்ட சிவலிங்கமும் காணப்படுகின்றது. அந்தராளத்திற்கு முன்னால் மகாமண்டபமும், பலிபீடமும் இருந்தற்கான அத்திவாரங்களும், அதற்குப் பயன்படுத்தப்பட்ட அலங்காரத் தன்மை கொண்ட பல கருங்கற் தூண்களும் காணப்படுகின்றன. இம்மகாமண்டத்திற்கு வலப்பக்கமாக பயன்படுத்தப்படாத நிலையில் கருங்கற்களாலான மாடங்கள், தெய்வச் சிலைகள் வைப்பதற்குப் பயன்படுத்திய பீடங்கள் மற்றும் புடைப்புச் சிற்பங்களும் காணப்படுகின்றன.

மகாமண்டபத்தின் இடப்பக்கமாக ஆலயத்தில் பயன்படுத்தியிருந்த கோமுகிகள், சந்தனம் அரைக்கும் கற்கள், கபோத வடிவிலமைந்த அரைவட்டத் தூண்கள் காணப்படுகின்றன. மகாமண்டபத்திற்கு மிக அருகில்

இந்த ஆய்வின் போது கட்டட அழிபாடுகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட ஐந்து தமிழ்க் கல்வெட்டுக்கள் இவ்வாலய வரலாற்றுடன், கிழக்கிலங்கை வரலாறு பற்றிய ஆய்விலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றன. எமக்குத் தெரிந்தவரை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள வரலாற்றுப் பழமைவாய்ந்த ஆலயங்களுடன் அவ்வாலயங்களின் வரலாறு கூறும் கல்வெட்டுக்களும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அந்த இரண்டு அம்சங்களும் முதன் முறையாகத் திருமங்கலாயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களின் எழுத்தமைதியைக் கொண்டு அவை வேறுபட்ட காலங்களில், வேறுபட்ட நோக்கங்களுக்காக பொறிக்கப்பட்டவை என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது. அவற்றுள் கி. பி. 10ஆம், கி. பி. 11ஆம் நூற்றாண்டுக்குரிய மூன்று கல்வெட்டுக்கள் ஆலய நிர்வாக ஒழுங்குகள் பற்றியும், அவ்வாலயத்திற்கு சிற்றம்பலம் உடையார், திருவெண்ணைக்கூற்றன், திருவரங்கம் முதலான அதிகாரிகள், சமூகப் பெரியவர்கள் வழங்கிய தானங்கள் (காசு) பற்றியும் கூறுகின்றன. கி. பி. 15ஆம், கி. பி. 16ஆம் நூற்றாண்டுக்குரிய ஏனைய இரு கல்வெட்டுக்களும் இவ்வாலயத்திற்கு பசுக்கள் தானமாக வழங்கப்பட்ட செய்திகளைக் கூறுகின்றன.

இந்நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கங்குவேலி என்ற இடத்தில் திருமங்கலாய் ஆலயத்திற்குரிய மணி ஒன்று காணப்படுகின்றது. இது திருமங்கலாய் ஆலயத்தில் இருந்து பிற்காலத்தில் கங்குவேலிக்கு

எடுத்துச் செல்லப்பட்ட மணியாகும். அவ்வாலய மணியில் திருமங்கலாய் கோவிலுக்கு அவ்வூரில் வசித்த (திருமங்கலாயில் வசித்த) "பத்திபெட்டி மகன் பத்தன் யுடைய உபையம்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இச்சாசனத்தின் எழுத்த மைதி கொண்டு இதன் காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டிற்கு உரியதெனக் கூறலாம். ஆகவே மேற்கூறப்பட்ட கல்வெட்டுகள், ஆலய மணிச் சாசனம் என்பவற்றை ஆதாரங்களாகக் கொண்டு இவ்வாலயம் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஏறத்தாழ 17ஆம் நூற்றாண்டுவரை அழிவடையாத நிலையில் இப்பிரதேச மக்களால் வழிபடப்பட்டு வந்துள்ளமை தெரியவருகின்றது.

இவ்வாலயம் இலங்கைத் தமிழர் குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாறு, பண்பாடு பற்றிய ஆய்வில் பின்வரும் அம்சங்களில் முக்கியத்துவம் பெறுகின்றதை அவதானிக்க முடிகின்றது.

ஆயிரமாண்டுகளுக்குமுற்பட்டகல்வெட்டுகள்1

1. இவ்வாலயம் கி. பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து திராவிடக் கட்டடக்கலை மரபில் தோன்றி வளர்ந்ததற்குப் பின்புலமாக திருமங்கலாய்ப் பிரதேசத்தின் தொன்மையான. செறிவானதமிழ்க்குடியிருப்புக்கள் இருந்துள்ளமை தெரிகின்றது. இந்த உண்மையை எமது ஆய்வின் போது இப்பிரதேசத்தில் ஆங்காங்கே பிற தேவைகளுக்காக வெட்டப்பட்டிருந்த ஆழமான குழிகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட 10 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட மட்பாண்ட ஓடுகள், கூரை ஓடுகள், சுடுமண் உருவங்கள் முதலான சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

2. தமிழகத்தில் பல்லவர் ஆட்சியில் தோன்றிய பக்தி இயக்கத்தின் செல்வாக்கால் சமகால இலங்கையிலும் கற்களைப் பயன்படுத்தி திராவிடக் கலை மரபில் ஆலயங்கள் அமைக்கும் மரபு தோன்றி வளர்ந்ததைக் காணமுடிகின்றது. அவற்றுள் சோழ ஆட்சியின் தலைநகராக இருந்த பொலநறுவையில் கட்டப்பட்ட இரண்டாம் சிவதேவாலயமே இலங்கையில் இதுவரை ஓரளவு முழுமையாகக் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தால் முந்திய திராவிடக் கலைமரபில் கட்டப்பட்ட ஆலயம் எனக் கூறப்படுகின்றது. ஆனால் பொலநறுவை இராசதானி கால வரலாற்றில் எந்த இடத்திலும் சொல்லப்படாத திருமங்கலாய் சிவன் ஆலயம் அதன் கட்டட அமைப்பிலும், கலைமரபிலும் சற்று மேலோங்கிக் காணப்படுவதன் முக்கியத்துவம் எதிர்காலத்தில் விரிவாக ஆராயப்பட வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது.

3.சோழர் ஆட்சியிலும் சோழர் ஆட்சிக்குப் பின்னரும் பொலநறுவைக்கு அப்பால் வடக்கு - கிழக்கு இலங்கையிலேயே சோழ ஆட்சியாளர், தமிழ் அதிகாரிகள், தமிழ் வணிக கணங்கள் முதலியோரால் கட்டப்பட்ட ஆலயங்கள் பற்றிப் பல தமிழ் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ஆயினும் அக்கல்வெட்டுக்கள் கூறும் ஆலயங்கள் எந்த இடங்களில் இருந்துள்ளன என்பது பெரும்பாலும் இதுவரை அடையாளம் காணப்படாமலே உள்ளன. ஆனால் திருமங்களாயில் ஆலயம் பற்றிய கல்வெட்டுக்களுடன், ஆலய அமைப்பையும், அதன் கலை மரபையும் அறியக்கூடிய அரிய பல ஆதாரங்கள் முதன் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் கிழக்கிலங்கை இந்துக்களின் வரலாறு, பண்பாடு பற்றிய எதிர்கால ஆய்வுகளில் முக்கியத்து வம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

4.இலங்கையில் அநுராதபுர இராசதானியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சில பௌத்த ஆலயங்களே தற்காலத்திலும் வழிபாட்டிற்குரிய ஆலயங்களாகக் காணப்படுகின்றன. ஆனால் அநுராதபுரத்திலும், இலங்கையின் ஏனைய இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட பெரும்பாலான ஆதிகால, இடைக்கால ஆலயங்கள் இலங்கையின் மரபுரிமைச் சின்னங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பிற்காலத்தில் அவை சுற்றுலாத்துறையின் முக்கிய மரபுரிமை மையங்களாகவே செயல்பட்டு வருகின்றன. ஆனால் திருமங்கலாய் சிவன் ஆலயம் கி.பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து 1964 ஆம் ஆண்டு வரை அங்கு வாழ்ந்த மக்களின் பிரதான வழிபாட்டு ஆலயமாகவே இருந்துள்ளது. இந்த உண்மையை அவ்வாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களும், ஆலய மணியில் பொறிக்கப்பட்டிருக்கும் சாசனமும், அங்கு பரம்பரையாக வாழ்ந்து வந்த மக்களின் நில உரிமைப் பத்திரங்களும் உறுதிப்படுத்துகின்றன.

ஆயிரம்ஆண்டுகளுக்குமுற்பட்டசிவன்ஆலயம்2

இவ்வாலயத்தின் பழமையையும், அதன் வரலாற்றுப் பெறுமதியையும் எமது ஊடகங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டியதைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட சக்தி தொலைக்காட்சி நிறுவனம் இவ்வாலயத்தை ஆவணப்படுத்த முன்வந்தது. இதற்காக அரச திணைக்கள அனுமதியுடன் அன்றைய சக்தி வானொலி அலைவரிசை பிரதானி திருமதி உமாச் சந்திரா பிரகாஷ் தலைமையில் தற்போதைய சக்தி வானொலி அலைவரிசை பிரதானி ஆர். பி. அபர்ணா சுதன், திரு. ஞா. கணாதீபன் முதலியோரைக் கொண்ட குழுவினரை திருமங்கலாய்க்கு அனுப்பி வைத்தது. அவர்கள் ஏழு மைல் தூரம் கால் நடையாகவும், உழவு இயந்திரத்திலும் அச்சத்துடன் காட்டு வழியாகப் பயணம் செய்து திருமங்கலாய் சிவன் ஆலயத்தில் காணப்பட்ட அனைத்து ஆதாரங்களையும் ஆவணப்படுத்தினர். இவ்வரிய பணியால் ஆய்வில் ஈடுபட்ட எமக்கும் அங்கு கூடியிருந்த மக்களுக்கும் தனது காலத்திலேயே இவ்வாலயத்தை மீளுருவாக்கம் செய்திட வேண்டும் என அயராது உழைத்து வரும் திரு. வி. முத்துலிங்கத்திற்கும் பெரும் மகிழ்ச்சியும், நம்பிக்கையும் ஏற்பட்டிருந்தது.



திருகோணமலை திருமங்கலாய் காட்டுப்பகுதியில் கல்வெட்டுக்களுடன் அழிவடைந்து கொண்டிருக்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவன் ஆலயம்

திருமங்கலாய் காட்டுப்பகுதி சிவன் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது எடுக்கப்பட்ட புகைப்படம்



இவ்வாலயத்தை ஆவணப்படுத்திய சக்தி தொலைக் காட்சி நிறுவனம் அது பற்றிய செய்தியை மக்களிடம் கொண்டு சென்ற போது இவ் வாலயம் பற்றி மேலும் அறிய வேண்டும், நேரில் பார்வையிட வேண்டும் என்ற ஆர் வம் ஏற்பட்டது. இதை உணர்ந்து கொண்ட நாம் இவ்வாலயத்தை மீளுரு வாக்கம் செய்து பாதுகாக்கும் நோக்கில் திருமதி உமாச்சந்திரா பிரகாஷ் அவர்களுடன் இணைந்து பல முயற்சிகளில் ஈடுபட்டோம் அதற்காக சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், அமைச்சின் அதிகாரிகள், கௌரவ இராஜங்க கல்வி அமைச்சர் மற்றும் கௌரவ பாராளு மன்ற உறுப்பினர்கள் முதலியோ ரின் உதவி களை நாடினோம். இலங்கைத் தொல்லியற் திணைக்களம் தனது அதிகாரிகளை அனுப்பி இவ்வாலயத்தின் பழமையை உறுதிப்படுத் திக் கொண்டது. மத்திய கலாசார நிதியம் ஆலயத்தை மீள்புனரமைப்புச் செய்வதைப் பரிசீலிப் பதாகப் பதில் அனுப்பியது. ஆனால் ஆட்சி மாற் றத்தின் பின்னர் எமது கோரிக்கைகளைச் சாதகமா கப் பரிசீலிக்க முன்வந்த அதிகாரிகளும் பதவி மாற்றம் செய்யப்பட்டதால் தற்போது, எல்லா முயற்சிகளை யும் நாம் ஆரம்பத்தில் இருந்தே தொடங்கவேண்டிய நிலையில் உள்ளோம். அதற்கு நாட்டின் தற்போதைய நிலையும் சாதகமாகக் காணப்படவில்லை.

இருப்பினும் விலைமதிக்க முடியாத எமது மரபுரி மைச் சின்னம் ஒன்று எம் கண்முன்னே மண்ணுக்குள் மறைந்து போவதை வேடிக்கை பார்க்கும் நிலையும் இல்லை என்றே நம்புகின்றோம். ஏனெனில் கடந்த முப்பது ஆண்டுகால அனர்த்தத்தில் பல தடவைகள் இடம்பெயர்ந்து வாழ்ந்த எமது மக்கள் மீண்டும் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிய போது தமது இருப்பிடங்களைக் காட்டிலும் தமது வழிபாட்டு ஆலயங்களை மீளுரு வாக்கம் செய்வதற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்த பெருமைக்குரியவர்கள். இது மதத்தின் மீது எமது மக்களுக்கு உள்ள அதீத நம்பிக்கை யைக் காட்டுகின்றது. ஆனால் திருமங்கலாய் சிவன் ஆலயத்தை ஒரு வழிபாட்டு ஆலய மாக மட்டும் பார்க்க முடியவில்லை. பலத ரப்பட்ட மக்களின் பார்வையில் இவ்வால யம் இலங்கையில் உள்ள தேசிய மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக நோக்கப்படலாம். ஆனால் இந்து மக்களைப் பொறுத்தவரை இவ்வால



திருகோணமலை திருமங்கலாய் காட்டுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட ஆயிரமாண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டுகள்

யம் அவர்களின் எதிர்காலச் சந்ததியினரிடம் கைய ளிக்கப்பட வேண்டிய நம்பிக்கை நாற்று. அதற்கும் அப்பால் இலங்கையில் இந்து மதத்திற்கு நீண்ட வர லாறு உண்டு என்பதை அடையாளப்படுத்தும் விலை மதிக்க முடியாத மரபுரிமையின் அடையாளம், இம் மரபுரிமைச் சின்னங்களுக்குப் பின்னால் தமிழ் மக்க ளின் வரலாறும் பண்பாடும் பொதிந்து காணப்படு கின்றன.

ஆகவே இவ்வாலயத்தை மீட்டெடுத்து மீளுரு வாக் கம் செய்து, பாதுகாக்க அனைத்து தமிழர்களும் ஒன் றிணைந்து உழைக்க முன்வர வேண்டும். இப்பணி அரசியல், பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பாற்பட் டது. இந்த உண்மையை உரியவர்களிடம் கொண்டு செல்வதற்கு எமது ஊடகங்கள் தமது பணியை தொடர்ந்தும் செய்வார்கள் என்ற நம்பிக்கை எப்போ தும் எமக்குண்டு.

(தொடரும்)

அமெரிக்க மிசனரி மருத்துவர் சாமுவேல் பிஷ்க் கிறீனது மாணவர்களிற் சிலர்




(இ - வ) சாமுவேல் மில்லர் (வேலுப்பிள்ளை), நேத்தன் பார்க்கர் (அருணாசலம்), ஜோசப் எச் ரவுண் (பூபாலசிங்கம்), சார்லஸ் மெட் (கணபதி), ஜோசுவா இடன் போத் (பெரியதம்பி), ஏ.சி.ஹோல் (குமார்)

படத்தில் ஜோசுவா இடன் போத் மாத்திரமே முதல் அணியில் (1848 – 1850) பயின்றவர் ஏனையவர்கள் 2ஆவது அணியில் (1851-1853) இல் பயின்றவர்கள்

# வட்டுக்கோட்டைக் கல்விக்கழகம் உருவாக்கிய மருத்துவர் ஐரா கௌல்ட்




பாலசுப்ரமணியம் துவாரகன்

இந்திய உபகண்டத்துக்கு வருகைதந்த அமெரிக்க மருத்துவ மிஷனரிகள், இலங்கையின் வடபகுதியில் மேலைத்தேய மருத்துவத்தை அறிமுகப்படுத்தி, அதனை பரவலடையவும் செய்தனர். யாழ்ப்பாணத்தில் அத்தகைய அமெரிக்க மருத்துவ மிஷனரிகளின் ஈடிணையற்ற தன்னார்வ மருத்துவத் தொண்டினை இன்றைய தமிழ் உலகுக்கு மீள்நினைவூட்ட கட்டுரையாளர் முனைகின்றார்.

மருத்துவர் ஐரா கௌல்ட் 1850 இல் யாழ்ப்பாணம் ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழகத்தின் மருத்துவமனை (FINS Hospital - தற்போதைய போதனா மருத்துவமனை) ஆரம்பிக்கப்பட்டபோது மருத்துவமனையின் முதலாவது டிஸ்பென்சராகவும் முதலாவது வதிவிட சத்திரசிகிச்சை மருத்துவராகவும் கடமையைப் பொறுப்பேற்றார். (*Ira Gould, Alias Antho Simon of Pandaiteripo, First Dispenser and Resident Surgeon of the Jaffna Friendin Need Society's Hospital*). மருத்துவர் ஐரா கௌல்ட் 1858 வரை யாழ்ப்பாணம் ஆபத்துக்கு உதவி மருத்துவமனையில் கடமையாற்றினார்.

*Dispenser* என்ற ஆங்கிலச் சொல் மருந்து வழங்குபவர், மருந்தாளர் என்ற கருத்தில் இன்று வழக்கில் இருந்தாலும் 19 ஆம் நூற்றாண்டில் மருத்துவர் அல்லது உதவி மருத்துவர் என்ற கருத்தினைத் தரும் வகையிலும் பாவனையில் இருந்தது. அந்தக்காலத்தில் மருத்துவரே நோயாளிக்கு மருந்தை வழங்குபவராகவும் விளங்கினார்.

மருத்துவர் கிறீன், மானிப்பாயில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடமையாற்றியவாறு யாழ். நகரத்தில் 1850 இல் தாபிக்கப்பட்ட ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழக மருத்துவமனையின் முதலாவது வருகை சத்திரசிகிச்சை நிபுணராகவும் பணியாற்றினார் (*First Visiting Surgeon of the Jaffna Teaching Hospital*). மானிப்பாயில் கிறீன் ஆரம்பித்த டிஸ்பென்சரி வெளிநோயாளர் மருத்துவமனையாகவே விளங்கியது.



**வண. பெஞ்சமின் பெய்லி (1791-1853)**
**இலண்டன் மெற்றோ பொலிற்றன் சுவடிகள் காப்பகத்திற் காணப்படும் இவ் ஓவியம் அநாமதேய கலைஞரால் வரையப்பட்டது**

Image source
Poetical Sketches of the Interior of Ceylon (Book)

ஐரோப்பிய பல்கலைக்கழகங்களுக்கு இணையாகத் திகழ்ந்த வட்டுக்கோட்டைக் கல்விக்கழகம்

பிரித்தானிய குடியேற்ற நாட்டுச் செயலாளர் சேர். எமர்சன் ரெனன்ற் 1848 இல் வட்டுக்கோட்டை செமினரியைப் பார்வையிட்டு கல்லூரியை ஐரோப்பிய பல்கலைக்கழகங்களுக்கு இணையாகக் குறிப்பிட்டிருந்தார். தென்னிந்தியச் திருச்சபையின் யாழ். மறைமாவட்டத்தின் முதலாவது பேராயராக விளங்கிய வண. சபாபதி குலேந்திரன், வட்டுக்கோட்டை செமினரி பெற்றிருந்த உயர்நிலையை இலங்கையின் எந்த ஒரு உயர்கல்வி நிறுவனமும் இன்று வரை பெற்றதில்லை என்று 1992 இல் அமரத்துவம் அடையும் முன்னர் கூறிய வாசகங்கள் இன்றும் சிந்தனைக்குரியன.

வட்டுக்கோட்டை செமினரியில் கல்விகற்பதென்றால் முதலில் கிறிஸ்தவராக வேண்டும். பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஐரா கௌல்ட் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவி, கல்வி கற்று, மருத்துவராகி இன்றைய யாழ். போதனா மருத்துவமனையில் கடமையாற்றிய முதல் மருத்துவர்களில் ஒருவராக விளங்கினார். 1855 இல் வட்டுக்கோட்டை செமினரி மூடப்பட்டதைத் தொடர்ந்து 1872 இல் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணக் கல்லூரியின் கல்வித் தரமும் ஒரு காலத்தில் மிக உயர்நிலையில் இருந்தது. இதற்கு வித்திட்டவர்கள் அமெரிக்க மிசனரிகள். இலங்கையின் கல்வி வரலாற்றில் ஆரம்பம் முதலே மாணவர்களுக்குப் பிரம்பினால் தண்டனை வழங்காத கல்லூரி என்ற வரலாற்றுச் சிறப்பை யாழ்ப்பாணக் கல்லூரி கொண்டிருந்தது. (*"From its very inception Jaffna College had no corporal punishment, a proud record in the history of education in the then Ceylon" - Silan Kadirkamar*)

1884 இல் கிறீனது மறைவின் போது மருத்துவர் பெஞ்சமின் ஏ. மில்ஸ், 'மருத்துவர் கிறீனது காலத்தில் யாழ்ப்பாணம் தெற்கு மற்றும் கிழக்கு ஆசியாவில் மேலைத்தேச மருத்துவ விஞ்ஞானத்தின் தலைமை இடமாகத் திகழ்ந்தது' என்று குறிப்பிட்டிருந்தார்.

வட்டுக்கோட்டை செமினரி பாடத்திட்டத்தில் கணிதம், விஞ்ஞானம், தருக்கம் (Logic), மேடைப் பேச்சுக்கலை, ஆங்கில இலக்கியம், ஒழுக்கவியல், உளவியல், மெய்யியல் முதலான பாடங்களுடன் இந்திய, கிரேக்க மற்றும் உரோமானிய வரலாறு என்பனவும் தமிழ், சமஸ்கிருதம், ஹிப்ரு முதலான மொழிக் கற்கைகளும் இடம்பெற்றிருந்தன.

மருத்துவர் நேத்தன் உவோட் செமினரியில் இயற்கை மெய்யியல் கற்பித்து வந்ததுடன் நிருவாகியாகவும் கடமையாற்றினார். தெரிவு செய்யப்பட்ட உள்ளூர் மாணவர்களுக்கு மருத்துவர் உவோட் மருத்துவமும் கற்பித்தார்.

கிறீன் 1847 இல் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த போது பல்வேறு இடங்களிலும் உவோட்டிடம் மருத்துவப் பயிற்சி பெற்ற சுதேச ஆங்கில மருத்துவர்கள் கடமையாற்றி வந்தனர்.

கிறீன் அமெரிக்க இலங்கை மிசனது வேண்டுகோளை ஏற்று 1848 இல் வட்டுக்கோட்டையில் இருந்து மானிப்பாய்க்கு நகர்ந்து மருத்துவமனையை ஆரம்பித்தார். அப்போது வட்டுக்கோட்டை செமினரியில் நேத்தன் உவோட்டிடம் மருத்துவம் பயின்ற கௌல்ட் (Assistant Physician) கிறீனுக்கு உதவியாக மானிப்பாயில் கடமையாற்றினார்.

## வட்டுக்கோட்டை செமினரியில் உவோட் மருத்துவரிடம் பயின்றோர்:

ஐரா கௌல்ட்
எஸ். ஏ. இவாட்ஸ்
டானியல் நிக்கலஸ்
எஸ். ரோப்ஸ்
ரி. ஸ்கொட்
எஸ். மில்லர்
எஸ். குட்செல்
ஜெரேமியா இவாட்ஸ்

இலங்கைத் தீவை ஆட்சிசெய்த பிரித்தானிய குடி

யேற்ற நாட்டு அரசாங்கம் 1851 இல் யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளின் கல்வி நிலையை மதிப்பீடு செய்வதற்காக வண. பெஞ்சமின் பெய்லியை (3rd Archdeacon of Colombo) கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியது. வண. பெய்லி பிரித்தானிய அரசாங்கத்திடம் கையளித்த மதிப்பீட்டு அறிக்கையில் கிறீனின் மருத்துவக் கல்லூரிக்கு வருடாந்தம் 50 ஸ்ரேர்லிங்பவுண் நிதியுதவி அளிக்க வேண்டும் என்று கேட்டிருந்தார். மேலும் இங்கிலாந்திலுள்ள இளம் மருத்துவர்கள் மருத்துவப் பட்டம் பெற்று மக்களிடையே மருத்துவப் பணி செய்ய ஆரம்பிக்கும் போது அவர்களிடம் காணப்படும் மருத்துவ நிபுணத்துவ அறிவை யாழ். நகரத்தில் உள்ள அரச மருத்துவமனையில் (தற்போதைய போதனா மருத்துவமைமனை) பணிபுரியும் ஐரா கௌல்ட் (Ira Gould) கொண்டிருந்ததாகவும் தனது மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் மருத்துவர் கௌல்ட் கண்புரை நோய்க்கு (cataract) வெற்றிகரமாகச் சத்திரசிகிச்சை செய்ததுடன் ஆபத்தான நிலையிலிருந்த ஒருவரது காலையும் சத்திரசிகிச்சை மூலம் வெற்றிகரமாக அகற்றியமையை மருத்துவர் கிறீன் குறிப்பிட்டிருக்கிறார்.

கிறீனின் முதல் அணி மாணவர்களில் ஜோசுவா இடன்போத், ஜோன் டெனின்சன் இருவரும் வட்டுக்கோட்டை செமினரியில் கல்வி பயின்றவர்கள். இளையதம்பி வைத்திலிங்கம் வண. பீற்றர் பேர்சிவல் பாதிரியாரிடம் உவெஸ்லியன் உயர் பாடசாலையில் (யாழ். மத்திய கல்லூரி) கல்வி கற்றவர்.

மானிப்பாயில் கிறீனின் மருத்துவக் கல்லூரியில் முதலாவது அணியிற் பயின்றவர்கள் மருத்துவக் கல்வியை 1850 இல் பூர்த்தி செய்தனர். ஜோசுவா இடன்போத் மானிப்பாயில் கிறீனின் டிஸ்பென்சரியில் கிறீனுக்கு உதவியாகப் பணியாற்றினார். ஜோன் டெனின்சன் அரசசேவையில் இணைந்து பருத்தித்துறையில் மருத்துவராகப் பணியாற்றினார். இதன்மூலம் வருடத்துக்கு 24 ஸ்ரேர்லிங் பவுண் என்ற கவர்ச்சியான வருமானத்தைப் பெற்றார். இளையதம்பி வைத்திலிங்கம் முல்லைத்தீவில் மருத்துவப் பணியை ஆரம்பித்தார்.

இந்தக்காலகட்டத்தில் கிறீன் ஆங்கில மருத்துவத்தில் வழங்கும் சொற்பதங்களுக்கான தமிழ்ச் சொற்கோவை ஒன்றைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டு வந்தார்.



வைத்தியராகிய கல்வின்கற்றர்

செய்த

அங்காதிபாத சுகரணவாத உற்பாலன நூல்.

இது

யாழ்ப்பாணத்து அமெரிக்கன்மிஷனைச்

சேர்ந்த

ச. வி. கிறீன் வைத்தியனால்

ஆராய்ந்து திருத்தி

தமிழ்நாட்டாசாரங்களுக்கிசைவித்து

சில ஆசிரியருடைய உதவியைக்கொண்டு

இங்கிலீசிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

MADRAS:

PRINTED AND PUBLISHED AT THE AMERICAN MISSION PRESS,

FOR THE AMERICAN MISSIONS IN CEYLON AND SOUTH INDIA.

1857.

**அங்காதிபாத சுகரணவாத உற்பாலன நூல்**

**Image source - யாழ்ப்பாண மருத்துவ அருங்காட்சியகம்**


**கிறீனின் 2 ஆவது அணி மருத்துவ மாணவர்கள் (1851- 1852)**

சாமுவேல் மில்லர் (வேலுப்பிள்ளை)
நேத்தன் பார்க்கர் (அருணாசலம்)
ஜோசப் எச் ரவுண் (பூபாலசிங்கம்)
சார்லஸ் மெட் (கணபதி)
ஏ.சி.ஹோல் (குமார்)

இவர்கள் அனைவரும் கிறீனுடைய மருத்துவக் கல்லூரியில் பயில முன்னர் வட்டுக்கோட்டை செமினரியிற் கல்வி கற்றுப் பட்டம் பெற்றவர்கள்.

தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட முதல் ஆங்கில மருத்துவ நூல்: கற்றரின் அங்காதிபாதம், கல்வின் கற்றர் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய மருத்துவ நூலான Anatomy, Physiology and Hygiene எனும் மருத்துவ நூலை 1852 இல் மருத்துவர் சாமுவேல் பிஷ்க் கிறீன் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார். தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட முதல் ஆங்கில மருத்துவ நூல் இதுவேயாகும். இந்நூலின் இரண்டாவது பதிப்பு 1857 இல் 'அங்காதிபாத சுகரண வாத உற்பாலன நூல்' என்னும் பெயரில் வெளிவந்தது.

(தொடரும்)



மருத்துவர் கிறீன்

ஓவியங்கள் காப்புரிமை :
யாழ்ப்பாண மருத்துவ அருங்காட்சியகம்

# யாழ்.போதனா மருத்துவமனையின் தோற்றமும் மருத்துவர் கிறீனும்

**யாழ். போதனா மருத்துவமனையின் தாபகர் சேர். பேர்சிவல் ஒக்லண்ட் டைக் (Sir Percival Acland Dyke)**

சேர் பேர்சிவல் ஒக்லண்ட் டைக் யாழ்ப்பாணத்தின் முதலாவது அரசாங்க அதிபராகக் கடமையாற்றியவர். டைக் 01.10.1829 அன்று யாழ்ப்பாணத்தின் கலெக்டராகப் பதவியேற்றார். கோல்புறுக் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய கலெக்டர் பதவி அரசாங்க அதிபர் பதவி எனப் பெயர் மாற்றப்பட்டது. கலெக்டராகப் பதவி வகித்த டைக் 01.10.1833 அன்று யாழ்ப்பாணத்தின் முதலாவது அரசாங்க அதிபராகப் பதவியேற்றார்.

டைக் அவர்களது மனதில் யாழ்ப்பாணத்திலே ஒரு பொது மருத்துவமனையை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏறத்தாழ 20 ஆண்டுகளாக இருந்ததாக சேர் வில்லியம் துவைனம் குறிப்பிடுகிறார் (Some account of the work done by the American Mission Medical School: By Sir William Twynam). துவைனம், டைக்கின் மறைவையடுத்து யாழ். அரச அதிபராகக் கடமையாற்றியவர்.

அமெரிக்க மிஷனரி மருத்துவர் கிறீன் மானிப்பாயில் ஆற்றிவரும் மருத்துவப் பணியை நன்கு அறிந்துகொண்ட பேர்சிவல் ஒக்லண்ட் டைக் யாழ். நகரிலே மருத்துவமனையை ஆரம்பிக்க விரும்பி கிறீனது உதவியை நாடினார்.

**யாழ்ப்பாண ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழகம்**

யாழ்ப்பாண ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழகம் (*Jaffna FriendInNeedSociety*) 1841 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மக்களுக்கு உதவும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கழகத்தின் முதலாவது பொதுக் கூட்டம் 1841 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி நீதிமன்ற வளாகத்தில் கப்டன் கோச்சேரன் தலைமையில் நடைபெற்றது. வண. பீற்றர் பேர்சிவல் பாதிரியார், கிறீனியர் ஆகியோர் இதன் நோக்கம் செயற்பாடுகள் பற்றி உரையாற்றினர். அங்கத்தவர்களிடம் மாதாந்தம் 8 ஸ்ரேர்லிங் பவுண் அறவிடுவதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அரச அதிபர் டைக், யாழ்ப்பாண ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழகத்தின் உதவியுடன் 700 பவுண் ஸ்ரேர்லிங் நிதியை யாழ். நகரில் பொது மருத்துவமனையை நிறுவுவதற்காகத் திரட்டினார்.

பேர்சிவல் ஒக்லண்ட் டைக் அவர்கள், உவெஸ்லியன் மிஷனரியைச் சேர்ந்த வண. பீற்றர் பேர்சிவல் பாதிரியார், மருத்துவர் கோல்டன் மற்றும் அமெரிக்க மிசனரி மருத்துவர் கிறீன் ஆகியோரது உதவியுடன் 1850 ஆம் ஆண்டு யாழ். நகரத்தில் மருத்துவமனையை நிறுவினார். இன்று 1300 க்கும் அதிகமான படுக்கை வசதிகளுடன் 2000 க்கும் அதிமான அரச உத்தியோத்தர்கள் பணியாற்றும் யாழ். போதனா மருத்துவமனையானது 1850 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழகத்தின் ஆதரவில் இந்த மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டதாலும் இந்தக்கழகமே ஆரம்பத்தில் மருத்துவமனையை நிர்வகித்து வந்ததாலும் இந்த மருத்துவமனையானது ‘ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழகத்தினது மருத்துவ

மனை’ என்று அழைக்கப்பட்டது.

டைக் ஏறத்தாழ 38 வருடங்கள் யாழ்ப்பாணத்தின் (வடமாகாண) நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றியவர். யாழ்ப்பாண ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழக மருத்துவமனைக்கு தனது சம்பளத்தின் பெரும் பகுதியைக் கொடுத்துதவியவர். முற்றவெளியில் உலாவிய தீவட்டிக் கள்வர்களைக் கட்டுப்படுத்தி யாழ்ப்பாணத்தில் சட்டம் ஒழுங்கைப் பேணியவர். டைக்கின் ஆட்சியில் யாழ்ப்பாண மக்கள் அச்சமற்று வாழ்ந்தார்கள்.

## 1852 இல் யாழ்ப்பாணத்தில் ஆங்கில மருத்துவ சேவை

“ஆதுலர்க்குச் சாலை, அறுசமயத்தவர்க்கு உணவு, ஓதுவார்க்கு உண்டி....”

முதலான 32 அறங்களை தமிழ்க் கலைக்களஞ்சியமான அபிதான சிந்தாமணி பட்டியல் இட்டுள்ளது. (ஆதுலர் - நோயுற்றோர்) பேர்சிவல் ஒக்லண்ட் டைக், யாழ். நகரிலே மரங்களை நடுகைசெய்து, வனத்தை உருவாக்கியும் மருத்துவமனையை நிறுவியும் அறம் வளர்த்தார். யாழ்ப்பாணம் ஆபத்துக்குதவி மருத்துவமனை 1850 இல் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து வடபகுதியில் ஏழ்மையில் வாழ்ந்த மக்கள் ஆங்கில மருத்துவத்தின் நன்மையை இலகுவாகப் பெறக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

> அரச அதிபர் டைக், யாழ்ப்பாண ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழகத்தின் உதவியுடன் 700 பவுண் ஸ்ரேர்லிங் நிதியை யாழ். நகரில் பொது மருத்துவ மனையை நிறுவுவதற்காகத் திரட்டினார்.

நோயுற்ற ஒருவர் ஆபத்துக்கு உதவி மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கு ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழக அங்கத்தவரிடம் அல்லது மருத்துவமனைக்குச் சந்தா செலுத்தும் அங்கத்தவர் ஒருவரிடம் விண்ணப்பித்து பற்றுச் சீட்டு ஒன்றைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். காலை 8.00 மணிக்கு மருத்துவமனைக்குச் சமூகமளித்து மருத்துவரிடம் சிட்டையைக் கையளித்து சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளும் நடைமுறையே ஆரம்பத்தில் இருந்தது.

தொலைவிலிருந்து நடந்தும், மாட்டு வண்டியிலும் மானிப்பாய் மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்றவர்கள் யாழ். நகரிலே ஆரம்பிக்கப்பட்ட ஆபத்துக்கு உதவி மருத்துவமனையில் சிகிச்சைபெறத் தொடங்கினர். யாழ்ப்பாணத்திலும் மானிப்பாயிலும் ஐரோப்பிய மருத்துவம் பொதுமக்களிடையே பரவலடைந்து



**யாழ்.போதனா மருத்துவமனையின் ஸ்தாபகர் சேர் பேர்சிவல் ஒக்லண்ட் டைக்**

ஓவியங்கள் காப்புரிமை :
யாழ்ப்பாண மருத்துவ அருங்காட்சியகம்

வளர்வது கிறீனுக்கு மகிழ்ச்சியை அளித்தது.

1852 ஆம் ஆண்டு முழுவதும் யாழ்ப்பாணம் ஆபத்துக்குதவி மருத்துவமனையில் 3000 பேருக்கும் மானிப்பாயிலிருந்த கிறீனது மருத்துவமனையில் 2500 பேருக்கும் சிகிச்சை வழங்கப்பட்டது. இக்காலப்பகுதியில் கிறீனும் அவரது உதவி மருத்துவர்களும் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வரமுடியாத நிலையிலிருந்த 500 பேர்களது வீடுகளுக்குச் சென்றும் சிகிச்சை அளித்தனர். யாழ்ப்பாணத்தில் ஓராண்டு காலத்தில் மொத்தமாக 6000 பேருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. அப்போது யாழ்ப்பாணத்தின்(வடபகுதி) சனத்தொகை 3 இலட்சம் மட்டுமே.

இன்று (2022) வடபகுதியில் வசிக்கும் 1.2 மில்லியனுக்கும் அதிகமானவர்களது பிரதான மருத்துவத் தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரேயொரு மூன்றாம் நிலை மருத்துவமனையாக விளங்கும் (Tertiary Care Hospital) யாழ். போதனா மருத்துவமனையில் மாத்திரம் நாளாந்தம் 5000 க்கும் அதிகமானவர்களுக்குச் சிகிச்சை வழங்கப்படுகிறது. இவர்களில் 1200 க்கும் அதிகமானவர்கள் உள்ளக விடுதிகளில் சிகிச்சை பெறுகின்றனர். 2000 இக்கும் அதிகமானவர்கள் தினசரி கிளினிக்குகளில் சிகிச்சை பெறுகின்றனர். அதே வேளை 1000 க்கும் மேற்பட்டவர்கள் நாளாந்தம் வெளிநோயாளர் பிரிவுக்கு வந்து சிகிச்சை பெற்றுச்

டைக் ஏறத்தாழ 38 வருடங்கள் யாழ்ப்பாணத்தின் (வடமாகாண) நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றியவர்.

யாழ்ப்பாண ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழக மருத்துவமனைக்கு தனது சம்பளத்தின் பெரும்பகுதியைக் கொடுத்துதவியவர்.

யாழ்ப்பாணத்தில் சட்டம் ஒழுங்கைப் பேணியவர். டைக்கின் ஆட்சியில் யாழ்ப்பாண மக்கள் அச்சமற்று வாழ்ந்தார்கள்.

*செல்கின்றனர். (தகவல்: மருத்துவர் த. சத்தியமூர்த்தி, பணிப்பாளர், போதனா மருத்துவமனை யாழ்ப்பா ணம்)*

### மருத்துவர் கிறீன் யாழ்.போதனா மருத்துவம னைக்கு வழங்கிய தலைமைத்துவம்

*அரச அதிபர் டைக் மருத்துவர் கிறீனை ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழக மருத்துவமனையின் நிர் வாகத்தைப் பொறுப்பேற்குமாறு கேட்டுக்கொண் டார். கிறீன் அமெரிக்க மிஷனரிகளுடன் ஆலோ சித்த பின்னர் 1863 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 3 மாதங்கள் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்குச் சம் மதித்தார். பின்னர் தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழக மருத்துவம னையின் நிர்வாகியாகப் பொறுப்பேற்று மருத்துவ மனையின் தலைமை மருத்துவ அதிகாரியாகச் செயற்பட்டார். கிறீன் 1873 இல் அமெரிக்காவுக்கு நிரந்தரமாகத் திரும்பும் வரை இம் மருத்துவமனை யின் வருகை சத்திர சிகிச்சை நிபுணராக ஆரம்பம் முதல் பணியாற்றினார்.*

### பேர்சிவல் ஒக்லண்ட் டைக்கின் மறைவும் யாழ். போதனா மருத்துவமனை தாபகர் தினமும்

*கோப்பாயில் வசித்துவந்த ஒக்லண்ட் டைக் 1867 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 09 ஆம் திகதி அன்று இயற்கை எய்தியபோது யாழ்ப்பாணத்தில் 5 நாள் கள் அரச அலுவலகங்கள் பூட்டப்பட்டு பொதுமக் கள் துக்கம் அனுட்டித்தனர். 19 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம் சமூகப் பெரியார் ஒருவரது மறை வின் போதுகூட இதுபோன்று நீண்டநாள் துக்கம் அனுட்டித்ததில்லை. 1985 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி பாரதப் பிரதமர் இந்திரா காந்தி, மெய்ப்பாதுகாவலர்களால் சுடப்பட்டு உயிர்நீத்த போது இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் பெருந்துயருற்று துக்கம் அனுட்டித்தனர்.*



**வண. பீற்றர் பேர்சிவல் பாதிரியார்**

ஓவியங்கள் காப்புரிமை :
யாழ்ப்பாண மருத்துவ அருங்காட்சியகம்

*Some account of the work done by the American Mission Med ical School By Sir William Twynam*

*சேர் பேர்சிவல் ஒக்லண்ட் டைக் மறைந்த ஒக்ரோ பர் 9ஆம் திகதி யாழ். போதனா மருத்துவமனை யின் தாபகர் தினமாக நினைவு கூரப்பட்டது.*

### மருத்துவக் கல்வியைத் தொடராது இடைவிலகிய கிறீனது மாணவர்கள்

*கிறீனது மருத்துவக் கல்லூரியில் 2 ஆவது அணியில் (1851 1853) பயின்ற மாணவர்களில் ஜோசப் எச் ரவுண் (பூபாலசிங்கம்) யாழ்ப்பாணம் ஆபத்துக்கு உதவி மருத்துவமனையில் அரச சேவையில் (நிர் வாக, எழுதுவினைஞர்) இணைந்து கொள்வற்காக வும் சாமுவேல் மில்லர் (வேலுப்பிள்ளை) அரச நிர் வாக நடைமுறைகளைக் கற்பதற்காகவும் மருத்துக்கல் வியை இடையிலே கைவிட்டுச் சென்றனர். யாழ்ப் பாணத்தில் வட்டுக்கோட்டை செமினரியில் பயின்று பட்டம் பெற்றவர்களுக்கு அரச சேவை யில் உயர் பதவியும் அதிக சம்பளமும் கிடைத்தது. கிறீனது 2 ஆவது வகுப்பில் பயின்ற 5 மாணவர்க ளில் மேற்குறிப்பிட்ட இருவரும் அதிக வருமான மும் அந்தஸ்தும் மிக்க அரசசேவையில் இணைவ தற்காக மருத்துவக்கல்வியைக் கைவிட்டு விலகி இருக்கலாம்.*

(தொடரும்)



# தேயிலைத் தோட்டங்களிலே பெண்களது பின்தங்கிய நிலை



முத்துவடிவு
சின்னத்தம்பி

மலையகச் சமூகத்தினர் காலம் காலமாகக் அனுபவித்த துயரங்களையும், உரிமை மறுப்புக்களையும், பல்வேறு பரிமாணங்களையும், வளர்ச்சித் தட யங்களையும் ஒருமித்து வெளிக்கொண்டு வருவதாக இத்தொடர் அமைந்துள்ளது.

பெண்களது கடந்தகால - நிகழ்கால சாதனை களைக் கொண்டாடும் சர்வதேச மகளிர் தினம் (International Women's Day) முதன்முதலாக 1911 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி கொண்டாடப் பட்டது. ஒரு நூற்றாண்டு காலமுடிவில் 2011 ஆம் ஆண்டு அது நினைவுகூரப்பட்டதோடு, ஒவ்வொரு வருடமும் அதேதினத்தில் பூகோளரீதியாகத் தொடர்ந்து அது கொண்டாடப்பட்டும் வருகிறது. அவ்வாறு கொண்டாடப்படும்போது ஏதாவதொரு முக்கிய விடயத்தைக் கருப்பொருளாக வைத்தே அத்தினம் கொண்டாடப்படும்.

அண்மைக்காலங்களில் பெண்களது சமூக - பொரு ளாதார - அரசியல் அந்தஸ்தில் நேர்மறையான வளர்ச்சி ஏற்பட்டு வந்துள்ளபோதும், பெண்களைப் பொறுத்தவரை, உலகம் இன்றும் சமமற்ற ஒன்றா கவே இருந்து வருகின்றது. எனவே, பெண்களின் கடந்த கால - நிகழ்கால சாதனைகளைக் கொண்டா டும் அதேவேளையில், இந்த சமமற்ற நிலையினைப் போக்குவதற்கு எதிர்காலத்தில் என்ன முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதிலும் கவனம் செலுத்துவது இன்றியமையாததாகும். பூகோள மட் டத்தில் சர்வதேச மகளிர்தினம் கொண்டாடப்படும் இச்சந்தர்ப்பத்தில் சில பொருளாதாரத்துறைகளில் பெருந்தொகையான பெண்கள் பணிபுரியும் எமது நாட்டினது பெருந்தோட்டத்துறையில் பெண்தொ ழிலாளரது நிலை எவ்வாறு உள்ளது என்பதை இச் சிறு கட்டுரை ஆராய்கின்றது.

அபிவிருத்தியின் அனைத்து அம்சங்கள் தொடர்பி லும், சமூக - பொருளாதாரநிலை தொடர்பான விட யங்களிலும் இன்று பால்நிலைச்சமத்துவம் ஒரு முக் கிய குறியீடாக கையாளப்படுகின்றது. வளரும் நாடுகள் பலவற்றில் காணப்படும் பெண்களின் நிலையுடன் ஒப்பீட்டுரீதியில் இலங்கையில் பெண்



**தோட்டத் தொழிலாளர்கள் தேயிலைக் கொழுந்துகளை தொழிற்சாலைக்கு கொண்டு செல்கின்றனர்.**

Image source - www.wsws.org

கள் மேலான ஒரு அந்தஸ்தை வகிக்கின்றனர் என்பது எம் அனைவரையும் பெருமிதம் கொள்ளவைக்கும் ஒரு விடயமாகும். கடந்த பல தசாப்தங்களாக அரசாங்கம் செயற்படுத்திவரும் இலவசக்கல்வி, இலவச மருத்துவ - சுகாதார வசதிகள், ஏனைய சமூ கநலன் சேவைகள் என்பன காரணமாகவே எம் நாட்டுப்பெண்கள் கல்வி, சுகாதாரம், தொழில்வாய்ப் புக்கள் போன்றவற்றில் கணி சமான முன்னேற்றத்தை அடைந்துள்ளனர். அவர்களது வாழ்க்கைத்தரமும் சமூகஅந் தஸ்தும் உயர்ந்துள்ளன. பால்நிலை சமத்து வம் இலங்கையின் அரசியல் யாப்பிலும் உள்வாங்கப்பட்டுள்ளமை (12 - 2 ஆம் சரத்து) இங்கு குறிப்பிடத்தக்கது. இருப்பி னுங்கூட, நாட்டின் சில உற்பத்தித்துறைக ளில் பெண்களின்நிலை பின்தங்கி யுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். இந்தவ கையில் பெருந்தோட்டத்துறை யில் அதிலுங் குறிப்பாக, தேயிலைக் கைத்தொழிலில் பெண்களின் பின்தங்கியநிலையை இங்கு விசேடமாகக் குறிப்பிடலாம். தேயிலைத் தோட்டங்க ளின் ஊழியப்படையில் 60.0 வீதமானோர் பெண்க ளேயாவர். ஆனால், தீர்மானங்கள் மேற்கொள்ளும் மட்டங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவா னதாகும். அதிகாரத்துவம் கொண்டதும் படிமுறையா னதுமான பெருந்தோட்ட ஊழிய அமைப்பில் பெண் தொழிலாளர்களே ஊழியப்படையின் மையமாக உள் ளனர். அத்துடன், தேயிலைத்தோட்டங்களில் ஆண் களை விட பெண்களே கூடுதலான நேரம் உழைக்கின் றனர்.

இத்தொழிலாளர்கள் பெருமளவிற்கு தோட்டங்களில் நிரந்தரமாகவே வசித்துவருவதால் அங்கு விசேட ஊழியக் கட்டுப்பாட்டுமுறையொன்று நடைமுறையி லுள்ளது. நாட்டின் ஏனைய துறைகளைச் சேர்ந்த பெண்களோடு ஒப்பீட்டுரீதியில் தோட்டத்துறைப் பெண்களது நிலை முற்றிலும் வேறுபட்ட ஒன்றாக உள்ளது. பெருந்தோட்டத்துறையின் படிமுறையான சமூக அமைப்பில் பெண்களுக்கு குறைந்த அந்தஸ்தே வழங்கப்படுகின்றது. வேலைத்தளத்தில் ஆண்களி லும் பார்க்க பெண்கள் நீண்ட நேரம் வேலைசெய்வ தோடு அங்கு நிலவும் குளிரானதும் ஈரமானதுமான காலநிலையிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற் குரிய பொருத்தமான ஆடைகளைக் கூட அவர்கள் அணிவதில்லை. அத்துடன், வெறுங்கால்களோடும் வெறுங்கைகளோடுமே தமது வேலைகளில் ஈடுபடுவ தால் அவர்கள் பல்வேறு உடல் உபாதைகளுக்கும் உள்ளாகின்றனர்.

தேயிலைத் தோட்டங்களின் மொத்த ஊழியப்படை யில் அறுபது வீதத்திற்கும் மேலானோர் பெண்களாக இருந்தபோதும் ஆண்களாலேயே அவர்கள் மேற் பார்வை செய்யப்படுகின்றனர். இந்த ஆண் மேற்பார் வையாளர்களால் அவர்கள் பல்வேறு அசௌகரியங்க ளுக்கு உட்படுத்தப்பட்டபோதும் அவை பொதுவாக கவனத்தில் எடுக்கப்படுவதில்லை. அதேபோன்று, இரவு வேளைகளில் தேயிலைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் தொழிலாளரும் பல பிரச்சினை களை எதிர்கொள்வதாக கூறப்படுகின்றது. அண்மைக் காலத்தில்தான் அவர்களுக்கென பிரத்தியேகமான ஓய்வறைகளையும் மலசலகூடங்களையும் அமைத்துக் கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. தேயிலைத்தோட்டங்களில் ஆண்களிலும் பார்க்கப் பெண்களே கூடுதலானநேரம் வேலை செய் கின்றனர். கொழுந்துபறிக்கும் வேலையில் ஈடுபடும் அவர்களது வேலைநாள் சூரிய உதயத்திற்கு முன்னரே ஆரம்பித்து சூரியஅஸ்தமனத்தின் பின்னரே முடிவ டைகின்றது. தோட்டவேலைக்கு அப்பாலும் அவர் கள் தமது வீடுகளில் உணவு தயாரித்தல், உணவுபரிமா றல், பாத்திரங்களைத் துப்பரவுசெய்தல், அன்றாடத் தேவைகளுக்காக நீர், விறகு போன்றவற்றை சேகரித் தல், பிள்ளைகளைப் பராமரித்தல் உட்பட பல்வேறு வேலைகளைச் செய்யவேண்டியுள்ளது. அடிப்படை வசதிகளில் காணப்படும் பல்வேறு குறைபாடுகள் கார ணமாக வீட்டுவேலைகளை செய்வதில் அவர்கள் பல பிரச்சினைகளை (உம்: நீர் விநியோகம், மலசலகூடவ சதிகள், மின்சாரம் என்பன இல்லாமை, சமைக்கும் இடத்தில் காற்றோட்டமின்மை, வீட்டுவசதி போதாமை போன்றன) எதிர்நோக்குகின்றனர். தோட்டவேலை, வீட்டுவேலை என்பவற்றோடு நின்றுவிடாது குடும்ப வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட பல கிரியைகளையும் சமய சம்பந்தமான சில கிரியைகளையும் அவர்கள் செய்ய வேண்டியுள்ளது. எனவே, ஆண்களைப் போலன்றி வேலைதொடர்பில் அவர்கள் முப்பரி மா ணப்பளுவை (Triple burden) சுமக்கவேண்டி இருப்பதா கக் கூறப்படுகின்றது. தொடர்ச்சியான வேலை காரண மாக அவர்களுக்கு ஓய்வுநேரம் கிடைப்பதில்லை.

இதனால் தோட்டங்களுக்கு வெளியே சென்று முறைசாராக்கல்வி, தொழிற்பயிற்சி, கருத்தரங்குகள் போன்றவற்றில் பங்குபற்றுவதன் மூலம் தமது அறிவையும் அனுபவத்தையும் வினைத்திறன்களையும் வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பினை அவர்கள் இழக்கின்றனர்.

தோட்டங்களுக்கும் வெளிஇடங்களுக்குமிடையிலான தூரம், போக்குவரத்து வசதியின்மை என்பன இதற்குப் பங்களிக்கும் ஏனைய காரணிகளாகும். தோட்டங்களின் மூடியதன்மை, அதில் அவர்களது இரண்டாந்தரநிலை, குறைந்த கல்வியறிவு, குறைந்த வினைத்திறன்கள், குடும்பத்திலும் சமூகத்திலும் பெண்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பாரம்பரியக் கட்டுப்பாடுகள் என்பன காரணமாக வெளியுலகில் புதிய அறிவையும் அனுபவங்களையும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்கு இருப்பதில்லை. பல குடும்பங்களில் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்வதிலுங்கூட, அவர்களோடு கலந்தாலோசிக்கப்படுவதில்லை.

பெருந்தோட்டச் சமூகம் ஆண்களின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட ஒரு சமூகமாகும். பெண்களுக்கெதிரான பால்ரீதியான துன்புறுத்தல்களும் வன்முறைகளும் தோட்டங்களில் பரவலாக இடம்பெறுகின்றன. இத்துறையைச் சேர்ந்த ஆண் தொழிலாளரிடையே காணப்படும் அதீத மதுப்பழக்கம் பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தூண்டுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மாலைவேளைகளில் மதுபோதையில் வீட்டிற்குவரும் கணவன்மார்கள் தமது மனைவிமாரை அடித்துத்துன்புறுத்துவது சகஜமாக உள்ளது. இதனால் வீட்டிலிருக்கும் பெண்களும் பிள்ளைகளுமே உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். சில குடும்பங்களில் மதுஅருந்துவதற்கு ஆண்கள் குடும்பவருமானத்தின் பெரும் பகுதியை செலவிடுவதால் குடும்பத்தலைவி கள் குடும்பத்தைக் கொண்டு நடத்துவதில் பாரதூரமான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். போஷாக்குள்ள உணவிற்கும் குடும்ப அங்கத்தவர்களின் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் குறைந்தளவு பணமே எஞ்சுவதால் பெண்களும் பிள்ளைகளும் முதியோரும் பாதிக்கப்படுகின்றனர். குடும்பங்களில் பொதுவாக பெண்களே கடைசியாக உணவருந்தும் பழக்கம் காணப்படுவதால் அவர்கள் குறைந்தளவானதும், ஊட்டச்சத்து குறைந்ததுமான உணவை உண்பதால் அவர்களிடையே மந்தபோஷணம் அல்லது ஊட்டச்சத்துக்குறைவு, குறைவான உடல் எடை போன்றன முக்கிய பிரச்சினைகளாக உள்ளமை பல ஆய்வுகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



கொழுந்து நிறை பார்க்கும் தேயிலை தோட்டப் பெண் தொழிலாளர்கள்

Image source - nytimes.com

இறுதியாக, பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களில் பெண்கள் வகிக்கும் பங்கினைப்பற்றி ஆராய்வது பொருத்தமானதாகும். தேயிலை உற்பத்தி ஊழியச் செறிவு கொண்ட ஒரு உற்பத்தி நடவடிக்கையாகும். தேயிலைத் தளிரைப்பறிப்பதற்கே பெருமளவு ஊழியம் கையாளப்படுவதாலும் இப்பணியில் முற்று முழுதாக பெண்களே ஈடுபடுவதாலும் தேயிலைத் தொழிலின் ஊழியப்படையில் பெண்களே பெரும்பான்மையினராக உள்ளனர். எனவே, இத்தொழிலோடு சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களிலும் பெண்களே பெரும்பான்மை வகிக்கின்றனர். ஆனால் ஆண் தலைவர்களின் ஆதிக்கத்தினால் பெண்களுக்கு அங்கு உரிய இடம் அளிக்கப்படுவதில்லை. தோட்டப்பெண்களின் கூட்டுச்செயற்பாட்டிற்கு காணப்படும் ஒரேயொரு தாபன அமைப்பும் தொழிற்சங்கங்களே. ஆனால் தொழிற்சங்கங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் காணப்படும் ஆணாதிக்கம் காரணமாக தமது பிரச்சினைகள் தொடர்பாக அவர்கள் எவ்வித கூட்டுநடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாத நிலையிலுள்ளனர்.

ஆண்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட தோட்டத் தொழிற்சங்க கலாச்சாரத்தில் பெண்களது குரல் பெரிதாக ஒலிப்பதில்லை. தீர்மானங்களை மேற்கொள்ளும் மட்டத்திலும் அவர்களது பிரதிநிதித்துவம் குறைவாகவே உள்ளது. தோட்டங்களின் மேற்பார்வை மட்டத்திலும், நிர்வாக அமைப்பிலும், முகாமைமட்டத்திலும் ஒரு சில பெண்களே உள்ளனர். அதேபோன்று, தொழிற்சங்கங்களின் தேசிய மட்டத்திலும் பெண்களின் தலைமைத்துவம் அரிதாகவே காணப்படுகின்றது.

மேலும் வகுப்பு, பால்நிலை, இனம், சாதி போன்ற பல்வேறு காரணங்களினால் பெண்கள் பணிந்து போகவேண்டிய நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இந்தநிலையிலிருந்து விடுபடுவது சுலபமான ஒரு காரியமன்று. இதற்கு தோட்டங்களின் இன்றைய படிமுறை அமைப்பிலும், தொழிற்சங்கங்களின் செயற்பாட்டிலும், அதில் பெண்களது அந்தஸ்திலும் மாற்றங்கள் ஏற்படவேண்டும். குறுகிய காலத்தில் இவற்றைச் சாதித்துவிடமுடியாது. இதற்கு எல்லா மட்டங்களிலும் திடசங்கற்பமும் அயராத முயற்சியும் தேவைப்படும்.

தொடரும்.

# திணை வாழ்வியலை தகர்த்து உருவாகிய அரசு



நடேசன் இரவீந்திரன்

திணை வாழ்வியலும், அதனைத் தகர்த்து மேலெழுந்த சாதிய மோதல்களும் தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றைத் தனித்துவமான பாதையில் இயங்கி வர வழிவகுத்தன. அத்தகைய வரலாற்று அனுபவங்களைத் தொகுத்துப்பெறும் திணை அரசியல் பார்வை இன்றைய நெருக்கடிக்களுக்கான தீர்வினை எட்டுவதற்கு ஆற்றுப்படுத்தவல்லதாக அமையும் என்பதை இக்கட்டுரைத் தொடர் எடுத்துக்காட்டும்.

மகத்தான ஒக்ரோபர் புரட்சி (1917) ருஷ்யாவை "சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம்" என மாற்றிப் புனைந்து முழு உலக நாடுகளது மக்களுக்கும் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தது. எழுபதாம் ஆண்டுகள் வரை விடுதலை நாடும் மக்களுக்குச் 'சோசலிசம்' என்ற கருத்தியல் உத்வேகமூட்டும் நிவாரணியாக இருந்தது. அநேகமான நாடுகள் 'ஜனநாய சோசலிச', 'சோசலிச ஜனநாயக' என்பதான அடைமொழிகளை ஒட்டி தம்மை அழகுபடுத்த வேண்டிய நிர்ப்பந்தத் துக்கு ஆட்பட்டிருந்தன.

சோவியத் யூனியன் 1991 இல் தகர்ந்து ருஷ்யாவும் பதினைந்து நாடுகளுமென ஆகின: முதலாளித்துவ ஜனநாயக மீட்டெடுப்புக்கு அந்த நாடுகள் முற்பட்டதில் இருந்து சோசலிசக் கனவு "பொய்யாய் பழங் கதையாய்", போயொழிந்ததாகப் பரப்புரைகள் மேலெழுந்தன.


மிகப் பின்தங்கிய பொருளாதார விருத்தியுடன் இருந்த மக்கள் சீனக் குடியரசு எண்பதாம் ஆண்டுகளின் பின்னர் வேகமாக வளர்ந்து வந்து முதல் நிலை வல்லரசான ஐக்கிய அமெரிக்கா இராச்சியத்தையும் தாண்டி முன்னேறும் நிலைக்கு இன்று வளர்ந்துள்ளது. இத்தகைய வளர்ச்சியை எட்டுவதற்கு சோசலிசப் பொருளுற்பத்தி முறையுடன் முதலாளித்துவத்தை உள்வாங்கி ஏற்படுத்தி இருந்த 'சந்தை - சோசலிச' உற்பத்தி முறை வழிவகுத்திருந்தது.

சந்தையின் தேவையை நிறைவு செய்யும் வகையில் உற்பத்தியை முன்னெடுக்கும் முதலாளித்துவம் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்யவில்லை என்ற வகையில் திட்டமிட்ட பொருளுற்பத்தி முறையை மேற்கொள்ளும் சோசலிச கட்டமைப்பை முன்னெடுத்தவாறு சோவியத் யூனியன் அமெரிக்காவுக்கு நிகரான வளர்ச்சியை எட்டியிருந்தது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் முதலாளித்துவம் முற்றாகத் துடைத்தழிக்கப்பட்டு அத்தகைய வளர்ச்சியை சோவியத் யூனியனால் முன்னெடுக்க இயலுமாக இருந்ததாயின் மக்கள் சீனத்தால் ஏன் சாத்தியமற்றதாகிறது?

## விடுதலைத் தேசியச் சோசலிசம்

மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் நீடிப்பாக ருஷ்யப் புரட்சி அமைந்திருந்தது. வளர்ச்சி பெற்று முதலாளித்துவத்தின் முதிர் நிலைக்கு உரிய மேற்குலகம் போன்று ருஷ்யப் புரட்சி அமைந்திருந்தது. வளர்ச்சி பெற்று முதலாளித்துவத்தின் முதிர்நிலைக்கு உரிய மேற்குலகம் போன்று ருஷ்ய

நிலவரம் இல்லை என்ற போதிலும் சோவியத் யூனியனால் கட்டியெழுப்பப்பட்ட அந்தப் பாட்டாளி வர்க்கச் சோசலிசம் ஏறத்தாழ முக்கால் நூற்றாண்டுக்கு விருத்தி பெற்று முன்னேற இயலுமாக இருந்தது. புரட்சிக்கு முந்திய ருஷ்யா முதலாளித்துவ விருத்தியை மேற்கு ஐரோப்பா போல எட்டியிருக்காத போதிலும் ஏகாதிபத்தியமாகச் செயற்பட்டு ஒடுக்கப்பட்ட தேசங்களைச் சுரண்டியது மட்டுமன்றி அந்தத் தேசங்களைத் தன்னுடன் வலுக்கட்டாயமாக இணைத்தும் இருந்தது. அவ்வாறு இணைக்கப்பட்டிருந்த தேசங்கள் ஒக்டோபர் புரட்சியுடன் கைகோர்த்துச் செயற்பட்டதன் வாயிலாகக் குடியரசுகளாக வடிவம் பெற்று சோவியத் ஒன்றியத்தில் விருப்புறுதியுடன் இணைந்திருந்தன; சோவியத் தகர்வு 1991 இல் ஏற்பட்ட போது 15 நாடுகள் தனியாகப் பிரிந்து சென்றன. (அவற்றில் ஒன்றான உக்ரேன் இன்று ருஷ்யாவுடன் மோதலில் இறங்கியுள்ளது)



மா ஓ சேதுங்

Image source - www.britannica.com

சீன நிலை இதற்கு எதிர்மாறானது ஏகாதிபத்திய நாடுகளால் துண்டப்பட்டுச் சுரண்டப்படும் தேசமாக அது இருந்தது. ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கப் புரட்சி போல அன்றி, விவசாயிகளின் தேசிய விடுதலைப் புரட்சி ஊடாக சோசலிசத்தை நோக்கிச் செல்ல ஏற்றதாக மார்க்சிஸ - லெனினிசத்தை விருத்தி செய்து பிரயோகிக்க வேண்டிய வரலாற்றுக் கட்டம் சீனாவுக்கு உரியது. அத்தகைய மாறுபட்ட வரலாற்றுச் சூழலுக்கு ஏற்றதாக மா - ஓ சேதுங் சிந்தனை அமைந்திருந்தது.

முதலாளித்துவ மாற்றியமைத்தலை விடுதலை பெற்ற சீனா நிறைவு செய்து விட்ட பின்னர் சோசலிச நிர்மாணத்தை முன்னெடுக்க வேண்டியிருந்த நிலையில் மார்க்சிஸ - லெனினிசக் பிரயோகமே அதற்கு உரியதென்ற கருத்துநிலவியது; மார்க்சிஸம் - லெனினிசம் முன்னுணர்ந்து வெளிப்படுத்திய பாட்டாளி வர்க்க சோசலிசத்தில் இருந்து விடுதலை பெற்ற தேசியம் கட்டமைக்க வேண்டிய சமத்துவப் பொருளுற்பத்தி முறை வேறுபட்டது மட்டுமல்ல விடுதலைத் தேசியச் சோசலிசக் கட்டுமானமும் பாட்டாளி வர்க்கம் வென்றெடுக்க முனைந்த சமத்துவத்துவத்துக்கான பாதையினின்றும் வேறுபட்டது; தேசிய விடுதலைக்கான மார்க்சிச - லெனினிசமாகக் கருதப்பட்ட மா - ஓ சேதுங் சிந்தனையை விடுதலைத் தேசியச் சோசலிஸ நிர்மாணத்துக்குமானதாக விருத்தி செய்ய முற்பட்டபோதே சந்தை சோசலிசக் கருத்தியல் முகிழ்த்து எழுந்தது .

## முழுச் சமூக சக்தியின் தனித்துவமான வரலாற்று இயங்கு முறை

சோவியத் யூனியன் கட்டியெழுப்பிய பாட்டாளி வர்க்க சோசலிசம் உலகுக்கு கலங்கரை விளக்காக ஒளி பாய்ச்சியதைப் போல மக்கள் சீனத்தின் இன்றைய 'சந்தை சோசலிச முறைமை' உத்வேகம் ஊட்டுவதாக இல்லை. தமக்குரிய வரலாற்று நிர்ப்பந்தம் காரணமாகச் சோசலிசத்தைப் பாதுகாத்து முன்நோக்கி எழுத்துச் செல்வதற்கு முதலாளித்துவத்தை உள்வாங்க வேண்டியிருப்பதாகச் சீனா சொல்கிறது; இதன்வாயிலாக சோசலிசத்தைக் கைவிட்டு முதலாளித்துவ நாடாகச் சீனா மாறிவிட்டதாகவே பலரும் கருதுகிற நிலை உள்ளது.

எதிர்காலத்தில் சீனா தொடர்ந்தும் சோசலிச முறைமையைப் பாதுகாத்துப் புதிய தளத்துக்கான வளர்ச்சியை எட்டும் பட்சத்தில் ஐக்கியப்படுத்தப்பட்ட முதலாளித்துவத்தால் அதனை வீழ்த்தி அழிக்க இயலவில்லை எனும் உண்மை நிரூபணம் ஆகலாம். இன்றைய நிலையில் சோசலிச மாற்றியமைத்தல் உறுதிப்பட்ட பின்னர் ஒரு தசாப்தத்துக்கு மேலாகக் காணாமலாக்கப்பட்ட முதலாளித்துவத்தை மீள உள்வாங்க நேர்ந்தமைக்கான காரணத்தை சீனக் கொம்யூனிஸ்ட் கட்சியால் தெளியுறுத்த இயலாமலே உள்ளது. சீனப் பிரத்தியேக நிலைக்கு உரிய மார்க்சியப் பிரயோகம்' எனச் சொல்லப்படுகிற போது பாட்டாளி வர்க்கச் சிந்தனை முறைமை சீன நிலவரத்துக்கு ஏன் பொருத்தி வரவில்லை என்ற

கேள்வி எழுகிறது. வர்க்கச் சமூக இயங்கு முறையில் பாட்டாளி வர்க்கமே சோசலிசத்தைக் கட்டியெழுப்ப வல்லமை உடையது என மார்க்சியம் கண்டறிந்து வெளிப்படுத்தி இருந்தது; பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறில் இருந்து இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதி வரையில் பாட்டாளி வர்க்கப் புரட்சி களின் சகாப்தம் நிலவியது. பின்னர் தேசிய விடுதலைப் புரட்சிகளின் சகாப்தம் - மக்கள் சீனம், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், வியட்னாம், வடகொரியா, கியூபா போன்றன விடுதலைத் தேசிய சக்தியே சோசலிசத்தை வென்றெடுக்கும் வகையிலான வரலாற்றுச் செல்நெறி மாற்றத்தின் புதிய சக்தி என எடுத்துக் காட்டி இருந்தன.




இந்த மாற்றப் போக்கு உரிய வகையில் கணிப்பிடப்படவில்லை. வெறும் 'சீனப் பிரத்தியேக நிலையினால்' அல்ல, முதலாளித்துவத்துடன் ஐக்கியப்பட்டுச் சோசலிசத்தைக் கட்டியெழுப்ப வேண்டி இருப்பது: விடுதலைத் தேசியம் எனும் முழுச் சமூக சக்தியின் வரலாற்று இயங்குமுறை வர்க்கச் சமூகத்துக்கு உரியதினின்றும் வேறுபட்டது என்ற காரணமே இந்த மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

வர்க்கங்கள் இடையேயான மோதலாக அன்றி முழுச் சமூக சக்திகளது போராட்டங்கள் வாயிலாக வரலாற்று இயக்கம் நடந்தேறுவதை இந்தியாவின் சாதியக் கட்டமைப்பில் காண இயலும். "வர்க்கப் பிளவு ஏற்படவில்லை என்ற வகையில் இந்தியாவுக்கு என வரலாறு கிடையாது" என்ற கண்ணோட்டத்தை மறுத்தவர்கள் கூட சாதிகளின் இயங்காற்றல் பற்றிய தேடல்களில் முனையாமல் எமது சமூகங்களில் இடம்பெற்ற வர்க்கப் போராட்டங்களைத் தேடிக் கண்டறியவே முற்பட்டனர். அவ்வகையிலான வரலாற்று இயங்கு முறையை வட இந்தியா வெளிப்படுத்தவில்லை என்ற காரணத்தால், அதனை மையப்படுத்தி இந்திய வரலாற்றைத் தேடுவோருக்கு சாதிகள் இடையேயான மோதல்கள் ஊடாக வரலாற்று மாற்றப் போக்குகள் நடந்தேறியமையைக் கண்டு காட்டவியலவில்லை .

முழுச் சமூக சக்தியாக (திணை) மேலாதிக்கம் ஏற்பட்டு வரலாற்றுத் தொடக்கத்தை ஏற்படுத்தி இருந்த தமிழகமே சமூக மாற்றத்தில் முழுச் சமூக சக்தி (சாதி) எத்தகைய பங்குப் பாத்திரத்தை வகித்தது என்பதையும் தெளிவுற எடுத்துக் காட்டியிருந்தது. அவ்வகையிலான பிரத்தியேக வரலாற்றுத் தொடக்கம் தமிழகத்தில் ஏற்பட இயலுமாக இருந்ததற்கான அடிப்படைகளைத் 'திணை வாழ்வியலைத் தகர்த்து உருவாகிய அரசு' எனும் இந்த முதல்பகுதி பேசுபொருளாகக் கொண்டுள்ளது. முழுச் சமூக சக்தியான திணை வாழ்வியல், அதற்கான கோட்பாட்டு உருவாக்கம் ஏற்பட அடித்தளமிட்ட சமூக - பொருளியல் கட்டமைப்பு என்பன குறித்த தெளிவை எட்டும்போது தமிழ்ப் பண்பாட்டின் தனித்துவக் குணாம்சம் குறித்த புரிதலை எட்ட இயலும். திணை வாழ்வியலைத் தகர்த்து

> **சந்தையின் தேவையை நிறைவு செய்யும் வகையில் உற்பத்தியை முன் னெடுக்கும் முதலாளித்துவம் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்ய வில்லை என்ற வகையில் திட்டமிட்ட பொருளுற்பத்தி முறையை மேற்கொள்ளும் சோசலிச கட்டமைப்பை முன்னெடுத்த வாறு சோவியத் யூனியன் அமெரிக்கா வுக்கு நிகரான வளர்ச்சியை எட்டியிருந்தது.**

அரசு உருவாக்கம் பெற்ற பின்னர் ஏற்பட்ட சாதிய வாழ்வியல் குறித்து பகுதி இரண்டில் பேசுவோம். இந்த முதல் பகுதி பின்வரும் நான்கு தலைப்புக்களைக் கொண்டிருக்கும்.

1. வணிக எழுச்சி தொடக்கி வைத்த சமூக முறைமை
2. கிழார்களின் வம்ப வேந்தர்.
3. மத சார்பில்லாக் கருத்தியல்
4. மையத் தகர்ப்புடன் வணிக மீளெழுச்சி

தொடரும்.



● அமரசிங்கம்
கேதீஸ்வரன்

திணை வாழ்வியலும், அதனைத் தகர்த்து மேலெழுந்த சாதிய மோதல்களும் தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றைத் தனித்துவமான பாதையில் இயங்கி வர வழிவகுத்தன. அத்தகைய வரலாற்று அனுபவங்களைத் தொகுத்துப்பெறும் திணை அரசியல் பார்வை இன்றைய நெருக்கடிக்களுக்கான தீர்வினை எட்டுவதற்கு ஆற்றுப்ப டுத்தவல்லதாக அமையும் என்பதை இக்கட்டுரைத் தொடர் எடுத்துக்காட்டும்.



கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்பயிர்ச்செய்கை

Image source - www.japantimes.co.jp

# வடக்கு கிழக்கு மாகாணங்களின் விவசாயத்துறையும் வாய்ப்புக்களும்

## நெல் உற்பத்தியும் முதன்மைத்தன்மையும்

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தன்னாதிக்கமுள்ள உற்பத்தித் துறையாக விவசாயத்துறை விளங்குகின்றது. இவ்விரு மாகா ணங்களினதும் பொருளாதாரத்தில் 15 சதவீதமான பங்களிப்பை விவ சாயத்துறை வழங்கிவருவதுடன் 65 சதவீதமானோர் வாழ்வாதாரத்திற்கு தங்கியிருக்கும் துறையாகவும் இது செயற்பட்டு வருகின்றது. நிலப்பா வனை என்ற வகையில் விவசாயச் செய்கைக்காக கிழக்கு மாகாணத் தின் 42 சதவீதமான நிலப்பரப்பும், வடமாகாணத்தின் 33 சதவீதமான நிலப்பரப் பும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்விரு மாகாணங்க ளின் பிரதான விவசாயப் பயிராக நெல்லே காணப்படுகின்றது. வட மாகாணத்தில் 115,049 ஹெக்டெ யர் நிலப்பரப்பிலும், கிழக்கு மாகா ணத்தில் 324,455 ஹெக்டெயர் நிலப்பரப்பி லும் மொத்தமாக கால போகம், சிறு போகம் ஆகிய இரு போகங்களிலும் பயிர்ச்செய்கை இடம் பெறுகிறது.

2019 / 2020 காலபோகத்தில் கிழக்கு மாகாணத்தில் 1,045,159.5 மெற்றிக்தொன் நெல்லும் வடமா காணத்தில் 271,722 மெற்றிக்தொன் நெல்லுமாக 1,316,931 மெற்றிக் தொன் விளைச்சல் பெறப்பட்டது



# முல்லைத்தீவில் பெரும்போக நெல் அறுவடை

Image source - eelanadu.lk

டன் 2020 சிறுபோகத்தில் கிழக்கு மாகாணத்தில் 578,500.6 மெற்றிக்தொன் நெல்லும், வடமாகாணத்தில் 66,067 மெற்றிக்தொன் நெல்லும் விளைச்சலாக பெறப்பட்டன. இவ்வகையில் நெல் உற்பத்தியின் முதன்மை மாகாணமாக கிழக்கு மாகாணம் இருந்து வருவதுடன் இரு பருவங்களிலும் செய்கை பண்ணக் கூடிய நிலம், நீர் மற்றும் காலநிலை சூழல் காணப்படும் பிரதேசமாகவே இவ்விரு மாகாணங்களும் காணப் படுகின்றன.

நெல் விவசாயத்தின் முதன்மைத் தன்மை காரணமாக இவ்விரு மாகாணங்களின் பிரதான செயற்பாட்டு வளங்களான நன்கு பயன் தரும் நிலங்களும் இரு போக பயிர்ச் செய்கையில் ஈடுபடும் மனிதவளம், நீர் என்பனவும் முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் ஏனைய துறை வளங்களான இயந்திரங்கள், நிதி ஆகிய வாழ்வாதார வளங்களும் பயன்படுத்தக் கூடியனவாக அமைகின்றன. இந்த நிலையில் இருபோக பருவத்திலும் இயற்கையாக மழை மூலம் கிடைக்கும் நீர் மற்றும் குளங்களில் சேகரிக்கப்பட்ட நீர் வாய்ப்பான உற்பத்தி துறை மீது பயன்படுத்தப்படுகிறதா என்ற வினாவை எழுப்ப முடியும். மாறாக இந்த வரண்ட வலயத்தில் சேகரிக்கப்படும் நீரினை மாற்றுப் பயிர்ச்செய்கையான மேட்டு நிலப் பயிர்களிலோ, அவரையினப் பயிர்களிலோ முதலிட்டால் அதன் மூலம் கிடைக்கும் லாபம் அதிகமானதே என்ற உண்மையையும் மறுப்பதற்கில்லை.

நெற்செய்கை என்பது இவ்விரு மாகாணங்களிலும் விவசாயிகளினால் விருப்பத்துடன் பயிரிடப்பட்டாலும் அது ஒரு சோம்பேறித்தன்மையான தொழிலாகவே இருந்து வருகின்றது. அதனை விட ஓரினப்பயிர் செய்கை (Mono Culture) என்பதில் அதிக நிலமும் நீரும் பயன்படுத்தப்பட்டாலும் பெரிய பரப்பான நிலத்திலும் சேர்க்கப்படும் நீரினதும் பயன்பாடு திருப்தியாக இல்லை எனக் குறிப்பிடலாம். உதாரணமாக ஏக்கர் ஒன்றுக்கான சராசரி விளைச்சல் 90 புசல்களாக காணப்படுமாயின் இவ்விரு மாகாணத்திலும் மொத்தமாக செய்கை பண்ணப்படும் 439,504 ஹெக்டெயர்களிலிருந்தும் 2,673,942 நிலப்பரப்பான மெற்றிக் தொன் நெல் விளைச்சலாக ஒரு போகத்தில் பெறப்பட வேண்டும். ஆனால் 2019 அம் ஆண்டின் உண்மைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பெறப்பட்ட நெல் விளைச்சலானது 13,169,931 மெற்றிக்தொன்னாக காணப்படுகின்றது. இவ்வகையில் 50 சதவீதமான விளைச்சலே நெற்செய்கைக்காக பயன்படுத்தப்படும் நிலங்களிலிருந்து பெறப்பட்டுள்ளது. இவ்வகையில் இதே நீரையும் நிலத்தையும் குறிப்பிட்ட வீதத்தில் மாற்றுப் பயிர் மீது பயன்படுத்துவதனால் இவ்வினைத்திறனை அதிகரிப்பதுடன் நெல் மீதான உற்பத்தியாளரும் மேலும் நன்மை பெற முடியும்.

பயிர் பல்லினப்படுத்தல் (Crops Diversity) என்பது நவீன தொழில்நுட்பமுறையாகவும் காலநிலைக்கு சீரமைவான (Climate Change) பொறிமுறையாகவும் பிரே ரிக்

கப் பட்டுள்ளது. எனினும் அதனை விவசாயிகள் மத்தியில் கொண்டு செல்வது என்பது பாரிய சவாலாகவே இருந்து வருகின்றது. சமகாலச் சூழலில் பல்வேறு காலநிலை சவால்கள் தோன்றி சமனிலை சீரற்ற நிலையில் பன்மை வாழ்வாதாரப் பொறிமுறை (Multi Livelihood Strategy) பற்றி பொருளியியலாளர்கள் அதிக அக்கறை கொண்டுள்ளனர். சீரற்ற இயற்கை சவால்களை வெற்றிக்கொள்வதற்கு ஒருவர் தனியே ஒரு துறையில் மட்டும் தன் மூலதனத்தை இடுவதோ அதனை நம்பி தன் வருமானத்துக்கு காத்திருப்பதோ அவரை பலவீனப்படுத்திவிடும் என்பதால் அவர் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வேறுபட்ட துறைகளில் தன் முதலீடு வேண்டும் என்பதே பன்மைவாழ் கோட்பாடாகும். இதனைக் கடைப்பிடிப்பதனால் மட்டுமே காலநிலைக்கு எதிரான சவால்களை வெற்றிகொள்ளவும் முடியும் என்பதனால் ஓரினப்பயிர்ச்செய்கை மீது இவ்விரு மாகாணங்களும் கொண்டுள்ள அதீத ஈடுபாட்டை விடுத்து நடைமுறைக்குச் சாத்தியமான சில வளமாற்றல்களை செய்தே ஆக வேண்டியுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பருவகாலத்தில் பெற்றுக்கொள்ளப்படும் நீரை நம்பியே விவசாயச் செய்கை இடம்பெறுகிறது. இவ்வகையில் பாரிய, நடுத்தர, சிறிய குளங்களினை அபிவிருத்தி செய்து பருவகாலத்தில் பெறப்படும் நீரை பத்திரப்படுத்தி அதனை அடிப்படையாகக் கொண்டே சிறுபோக பயிர்ச்செய்கை இடம்பெறுகிறது. இது ஏலவே ஒழுங்கமைக்கப்பட்ட நீர்க்கட்டுமானங்களை அடிப்படையாக கொண்டுள்ளது. குளங்களில் நீர் சேகரிக்கப்பட்டவுடனேயே அது அதன் விளைச்சல் பரப்பிலுள்ள விவசாயிகளினது உரிமம் ஆகிவிடுகின்றது. இதனை அடிப்படையாக கொண்டு கமநல அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் பயிர்ச்செய்கை போகத்திட்டங்கள் முன்மொழியப்பட்டாலும் நெல்காணிச்சட்டத்தின் கீழ் நீர் உரிமை பெற்ற விவசாயிகளுக்கு மட்டுமே நீர் பங்கிடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது என்பதால் நெல்விவசாயத்தின் மீது விவசாயிகள் கொண்டுள்ள அதீத விருப்பை இலகுவில் மாற்றிக் கொள்ள முடிவதில்லை. இதனை ஓரளவேனும் கட்டுப்படுத்தி மாற்றுப் பயிர்ச்செய்கை முறையை அறிமுகப்படுத்துவதற்கு நீர் உரிமையற்ற, விளை நிலங்களுமற்ற மேட்டு நிலக் குடியிருப்பாளர்களுக்கு ஏற்றவாறான நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களை ஏற்படுத்தி ஒவ்வொரு பாரிய, நடுத்தர குளங்களிலுமுள்ள நீரில் ஒரு பகுதியை பயன்திறன் வாய்ந்ததாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வருகிறது. அத்துடன் அதிக வறுமைக்குட்பட்டுள்ள குடும்பங்களின் பகுதியில் பயிர்ச்செய்கை நிலங்களற்ற மேட்டுக்குடியிருப்பாளர்களே அதிகமாகக் காணப்படுவதினால்




கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்பயிர்ச்செய்கை

Image source - jaffnazone.com

இந்த மாற்றுச் சிந்தனை கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.
உற்பத்தி தொழில்துறை என்ற பகுதியின் கீழ் எமது பிரதான உணவான அரிசியின் உற்பத்தியை நாம் தன்னிறைவு மட்டத்தில் பேணி வருகின்றோம். ஆனாலும் இதற்காக இடப்பட்ட முதலீட்டின் அளவுடன் ஒப்பிடும் போது இது பயன்விளைவு மிக்கதா என்ற கேள்விக்கு நாம் விடையளிக்க வேண்டியுள்ளோம். நவீனமயப்படுத்தப்பட்ட விவசாயச் செய்முறைகளை பயன்படுத்தி எமது பாரம்பரிய விவசாய முறை வலுப்படுத்தப்பட்டுள்ளது. இதனுடன் அது பேண்தகு தொழில் முறையாகவும் இருந்து வருகிறது என்பதால் விவசாயத்துறை சார்ந்து எமது முதலீடுகளும் அபிவிருத்தியும் சென்று சேருவது பொருத்தமானதாகும். இதில் ஓரினச் செய்கையாக நெல் முதன்மை பெறுவது தான் இன்று எம் முன் உள்ள பிரதான சவாலாகும். இதனைத் தவிர்ப்பதற்கான சிந்திப்பு இப்போதும் அவசியமாக்கப்பட்டுள்ளது.

நெல் விவசாயம் தொடர்பில மாகாண மட்டத்தில் நோக்கும் போது கிழக்கு மாகாணத்திலே அதிக நெல் விளைச்சல் இடம்பெறுகிறது. 2020 ஆம் வருடத்தின் பெரும்போகத்தில் 199,855 ஹெக்டேயர்களில் நெல்விளைச்சல் திட்டமிடப்பட்டு 190,584 ஏக்கர்களில் நெல்விளைவு செய்யப்பட்டதுடன் 1,045,159 மெற்றிக்தொன் விளைவும் இதே ஆண்டின் சிறு போகத்தில் 124,600 ஹெக்டயர்களில் திட்டமிடப்பட்டு 118,134 ஹெக்டயர்களில் பயிரிடப்பட்டு 578,500 மெற்றிக்தொன் விளைச்சல் பெறப்பட்டுள்ளது. இவ்வகையில் இம்மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்திலேயே அதிகளவு நெல் விளைச்சல் இடம்பெறுகிறது. இம்மாவட்டத்தில் 149,398 ஹெக்டயர்களில் நெல் விதைக்கப்படுவதுடன் மாகாணமட்டம், மாகாணங்களுக்கு இடையிலானது, மகாவலி ஆகிய மூன்று பிரதான வகைப்பாட்டின் கீழ் உள்ளடங்கும் நிலங்களில் முகாமைத்துவத்தின் கீழ் இப்பயிர்ச்செய்கை இடம்பெற்று வருகின்றது.

(தொடரும்)




1995 Referendum results by constituency

Image source - wikipedia.org




கந்தையா சண்முகலிங்கம்


கனடா, பெல்ஜியம், சோவியத் ஒன்றியம், சுவிற்சர்லாந்து, இந்தியா, ஸ்பானியா (Spain) ஆகிய ஆறு நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமைகளைப் பற்றி ஆழமான ஆய்வுகளாக இக்கட்டுரைத்தொடர் அமைகிறது. மேற்குறித்த நாடுகளின் அரசியல் வரலாறும், அரசியல் யாப்பு வரலாறும், போருக்கு பிந்திய இலங்கையின் அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு வழிகாட்டியாக அமையும், அரசியல் பாடங்களை (political lessons) கற்றுக்கொள்வதற்கு உதவுவனவாக அமைகின்றன.

# கனடாவில் பன்மைப் பண்பாட்டுவாதம்

*கனடாவின் சமஷ்டியின் வரலாறு ‘பிரிந்து வேறாதல்’ ‘ஒன்றாக இணைதல்’ என்ற இருவேறு செயல்முறைகளும் சமாந்தரமாகச் செயற்பட்டதொன்றாகவே இருந்துள்ளது. சமஷ்டிச் சட்டம், 1867 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இச்சட்டத்தில் பின்வரும் மூன்று விடயங்கள் கூறப்பட்டுள்ளன.*

1. பெரிய பிரித்தானியாவின் முடிக்குரிய டொமினியன் நாடாக கனடா விளங்குகிறது.

2. கனடா மாகாணம், நோவாஸ்கொட்டியா மாகாணம், நியுபிறன்ஸ்விக் மாகா ணம் என்பன கனடா சமஷ்டியில் இணைவதை விரும்பியுள்ளன.

3. ஐக்கிய இராச்சியத்தை (U.K) ஒத்த அரசியல் யாப்பினைக் கொண்டதாக கனடா இருத்தல் வேண்டும் எனவும் இவை விரும்புகின்றன.

*ஐக்கிய அமெரிக்காவைப் போலன்றிக் கனடா பாராளுமன்ற முறையுடைய சமஷ்டியாகும் என்பது கவனிக்கத் தக்கது.*

*1867 ஆம் ஆண்டின் சட்டம் கனடாவின் மக்கள் பிரிவினரின் இணக்கப் பாட்டால் உருவானதாகும். சேர். யோன் ஏ. மக்டொனால்ட் என்ற கனடா தேசத்து ஆங்கிலேயர் கனடா ஒரு ‘கொன்பெடரேசன்’ ஆக வேண்டும் என உழைத்தவர். ஆனால் கனடா காலப்போக்கில் ஒற்றையாட்சி நாடாக மலரும் என்பது அவரது நம்பிக்கையாக இருந்தது. கனடாவின் ‘கொன்பெடரேசனில்’ மத்திய அரசுக்கு அதிகளவு அதிகாரங்கள் இருந்தன. ஆதலால் அது ‘கொன்பெடரேசன்’ அல்ல உண்மையில் அது அரைகுறைச் சமஷ்டி (quasifederal system) ஆகும் என்ற கருத்தை சமஷ்டி பற்றிய ஆய்வாளர் கே. சி. வெயர் (KC Wheare) கூறியுள்ளார். 1867 இன் சட்டம் இயற்றப்பட்ட காலத்தில் சேர். யோன் மக்டொனால்ட் உடன் பேரம்பேசலிலும் உரையாடலிலும் ஈடுபட்ட கியூபெக் பிரதிநிதிகள் கியூபெக்கின் சுயாட்சியை உறுதி செய்வதற்கு சமஷ்டி அவசியமானது என்று கருதினர். (இப்பிரதிநிதிகளில் Georges Etienne Cartier ஒருவர்) கியூபெக் பிரதி*

நிதிகள் 1867 இன் இணக்கப்பாடு கனடாவின் இரு தேசியக் குழுக்களிற்கிடையில் ஏற்படுத்தப்பட்ட இரு தரப்பு உடன்பாடு (Dualist Compact) என்ற கருத்தைக் கொண்டவர்களாக இருந்தனர்.

கொன்பெடரேசன் அமைக்கப்பட்ட பின்னர் உள்ள காலத்தில் ஒன்டாரியோவிலும், புதிதாக உருவாக்கப்பட்ட மாநிலங்களான மனிடோபா, சஸ்கற்சுவன், அல்பேர்ட்டா , வடமேற்குப் பிரதேசம் (North - west Territories) ஆகியவற்றிலும் வாழும் பிரஞ்சு மொழிபேசும் மக்களின் மொழி உரிமைகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் இயற்றப்பட்டன. இவ்வாறான நடவடிக்கை பிரஞ்சுமொழி பேசும் மக்களிடையே கியூபெக் தவிர்ந்த பிற இடங்களில் தங்கள் தேசிய அடையாள உணர்வுக்கு மதிப்பு இல்லை என்ற உணர்வை ஏற்படுத்தியது. அவர்களின் தேசிய அடையாள உணர்வு கியூபெக் சார்ந்ததாக வளரலாயிற்று. இது முக்கிய வரலாற்றுத் திருப்பம். கியூபெக் தவிர்ந்த பிற மாநிலங்களில் பிரஞ்சுமொழி பேசுவோர் சனத்தொகை காற்பங்காகவோ அல்லது மூன்றில் ஒரு பங்காகவோ உயர்ந்திருக்குமானால் கனடாவின் மொழி உறவுகள் வித்தியாசமானதாய் இருந்திருக்கும். இதற்கு மாறாக பிரஞ்சு மொழி பேசுவோர் கியூபெக்கிலும் அதன் எல்லைப் பகுதிகளிலும் செறிந்து வாழ்ந்து வந்தனர். பிற மாநிலங்களிலும் பிரஞ்சு மொழியினர் பரவி வாழ்ந்திருந்தாலும் கனடாவின் அரசியலிலும், வாழ்க்கையிலும் மொழி முக்கிய ஒரு விடயமாகவே இருந்திருக்கும். எனினும் மொழிப் பிரச்சினை தனிநாடாகப் பிரிந்து போதல் என்ற கோரிக்கையாக மாறியிருக்காது.

ட்றூடே (Trudeau) ஆட்சியில் கனடா மக்கள் யாவரும் சமத்துவமானவர்கள் என்ற கொள்கை பின்பற்றப்பட்டது. கனடாவின் மத்திய அரசு நிறுவனங்களில் பிரஞ்சு மொழியினருக்கு கூடியளவு பிரதிநிதித்துவம் உள்ள வகையில் பதவிகள் வழங்கப்பட்டன. நாடு முழுமையிலும் பரவியுள்ள மொழிச் சிறுபான்மையினருக்கு அரசியல் யாப்பு வழங்கும் பாதுகாப்புக்களை உறுதிப்படுத்தும் வகையில் சேவைகள் வழங்கப்பட்டன. இவ்விதமாக மொழி உரிமைகளை பாதுகாக்கும் கொள்கைகள் 1969 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட உத்தியோக மொழிச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டது. இக்கொள்கைகள் பின்னர் 1982 ஆம் ஆண்டின் அரசியல் யாப்புச் சட்டத்திலும் குறிப்பிடப்பட்டு அரசியல் யாப்பு அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளது. காலனித்துவ ஆட்சியின் எச்சங்களாக இருந்தவற்றை கனடாவின் அரசியல் சமூக வாழ்வில் இருந்து நீக்குவதற்கு இச்சட்டவாக்க, அரசியல் யாப்புத் திருத்த செயல் முறைகள் உதவின. அரசியல் யாப்பினால் அங்கீகரிக்கப்பட்டதும், சமஷ்டி உயர்நீதிமன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டதுமான மக்களின் உரிமைகளும் சுதந்திரங்களும் பற்றிய சாசனம் (Charter of Rights and Freedom) உருவானது. 'கனடாவின் உற்பத்தி' (Made in Canada) என்று சொல்லக்கூடிய அரசியல் யாப்பு திருத்தச் செயல் முறை ஒன்று உருவானது. ஆனால் கியூபெக் "மக்களின் சுயாட்சிக் கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படவில்லை. கியூபெக்கின் அரசியல் தலைவர்களும் அரசியல் யாப்புத் திருத்தத்திற்குத் தமது ஒப்புதலை வழங்கவில்லை. இறைமையுள்ள தனிநாட்டை கோரியவர்கள், சமஷ்டிக்கு ஆதரவானவர்கள் என்ற வேறுபாடு இன்றி கியுபெக்கின் எல்லா அரசியல் தலைவர்களும் தமது ஒப்புதலை வழங்குவதை மறுத்தே வந்துள்ளனர்.




A poster used to advocate for Quebec's sovereignty during the 1995 referendum

Image source - wikipedia.org

1960 கள் காலத்தில் கியூபெக்கின் எதிர்காலம் பற்றிய சிந்தனையில் மூன்று போக்குகள் வெளிப்பட்டன. முதலாவது போக்கு இறைமையுள்ள தனி நாட்டை உருவாக்கும் இலட்சியம் கொண்டது. இத் தனிநாடு கனடாவின் சமஷ்டியுடன் ஓரளவுக்கு பிணைக்கப்பட்டதாகவும் இருக்கும் என்று இறைமை இலட்சிய நோக்கினர் கருதினர். இரண்டாவது போக்கு சமஷ்டி இலட்சியம் (Federalist Vision) ஆகும். சமஷ்டி இலட்சியத்தைக் கொண்டோர் அதிகாரம் முழுமையாகப் பரவலாக்கம் செய்யப்படவேண்டும் கியுபெக் தனித்துவமான அங்கீகாரம் பெறுதல், கியூபெக் மக்களது தாயகமாக அது மலர்ச்சி பெறுதல், முதன்நிலை அரசாக கியூபெக் விளங்கவேண்டும், சமச்சீரற்ற சமஷ்டி (Asymmetric Federation) தேவை என்பன போன்ற கருத்துக்களை உடையவர்களாக இவ்விரண்டாம் பிரிவினர் விளங்கினர். இதனை புதுப்பிக்கப்பட்ட சமஷ்டிவாதம் (Renewed Federalism) என்று கூறலாம். மூன்றாவது போக்கு (முன்னாள் பிரதமர்) ட்றூடேயின் இலட்சியம் என்று அழைக்கப்படக்கூடிய கனடா தேசம் முழுமையையும் தழுவியதான மொழிச் சம உரிமைக் (Pan - Canadian Linguistic Equality) கொள்கையாகும். முதலாவது இலட்சியம்

இன்னும் அடையப்படவில்லை. இரண்டாவது இலட்சியம் இன்னும் அரசியல் யாப்பு அங்கீகாரத்தைப் பெற வில்லை . மூன்றாவது இலட்சியம் அரசியல் யாப்பில் உட்படுத்தப்பட்டுள்ளது. உத்தியோக மொழிச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இருந்துபோதும் கியூபெக்கிற்கு வெளியே பிரஞ்சு மொழியின் உபயோகம் பற்றிய பிரச்சினைகள் தொடர்வதை இச்சட்டத்தினால் தடுக்கமுடியவில்லை.

கியூபெக்கிற்கு வெளியே தேசிய இனப் பிரச்சினை தொடர்பான அரசியலில் வெவ்வேறு போக்குகள் உள்ளன.

1. கனடாவின் ஆங்கில மொழி பேசுவோரில் சிலர் பிரிவினைக் கோரிக்கை பற்றிப் பரிசிலிப்பதற்கும், ஆலோசிப்பதற்கும் தயாராக உள்ளனர். இருப்பினும் கியூபெக் தனித்துவமான அந்தஸ்தைக் கொண்டதாக இருக்க வேண்டுமா என்பதில் கருத்தொற்றுமை அவர்களிடம் இல்லை.
2. முறைசாரா வகையிலான சமச்சீரின்மையை (*Informal, de facto asymmetry*) சகித்துக் கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் பலர் தயாராக உள்ளனர். ஆனால் அதனை யாப்புத் திருத்தம் மூலம் முறைசார் சமச்சீரின்மையாக (*Formal Constitutional Asymmetry*) மாற்றுவதற்குப் பரவலான எதிர்ப்பு உள்ளது.
3. கனடா தேசம் முழுமைக்குமாக உத்தியோக மொழிகளாக இருமொழிகள் இருத்தல் வேண்டும் என்ற கருத்துக்கு (*Official Bilingualism*) எதிர்ப்பு உள்ளது.

கியூபெக் மாநிலத்தவர்களின் அதிகாரப்பரவலாக்கல் கோரிக்கைகளைப் பின்பற்றி பிற மாநிலங்களிலும் தமக்கும் அதிகாரங்களை மேலும் பிரித்துக் கொடுக்க வேண்டும், அரசியல் யாப்புத் திருத்தம் வேண்டும் போன்ற கோரிக்கைகள் எழுந்துள்ளன. இரண்டாம் உலக யுத்த முடிவில் பெருமந்தம் (1930கள்) ஏற்பட்ட போது அனுபவித்த கஷ்டங்கள் மக்களின் நினைவில் இருந்தன. அக்காலத்தில் மாநில அரசுகள் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தோல்வி கண்டன. யுத்தத்தின் பின்னரான காலத்தில் சர்வதேச ரீதியாக பொருளாதார வளர்ச்சியில் காட்டப்பட்ட கரிசனையும், தம்நாட்டை சமூகநல அரசாக (*Welfare State*) மாற்றும் எண்ணமும் ஆங்கிலம் பேசும் கனடா மக்களிடம் தோன்றியபோது அவர்கள் பலம் பொருந்திய மத்திய அரசாங்கம் தேவை எனக் கருதலாயினர். கியூபெக் தவிர்ந்த பிற மாநிலங்களின் மக்களும் சமஷ்டி அரசின் தலைமைத்துவத்தை ஏற்க முன்வந்தனர். சமஷ்டி அரசும், மாநில அரசுகளும் கூட்டாகச் சேர்ந்து அபிவிருத்தித் திட்டச் செலவுகளைத் தம்மிடையே பகிர்ந்து கொள்ளும் முறையிலான செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. தலைநகர் ஒட்டாவாவில் உள்ள சமஷ்டி அரசு இவ்வாறு நிதிமுதலீடு என்ற சலுகையைக் காட்டி மாநிலங்களின் அலுவல்களில் தலையிடத்தொடங்கியது. 1970 களில் நிலைமை மாறியது. மாநில அரசுகள் தம் அலுவல்களில் சமஷ்டி அரசு தலையிடுவதை விரும்பவில்லை. மாநிலங்களின் செலவுகள் அதிகரித்தன. கனடா ஒரு சமூகநல அரசாக மாறும்செயல் திட்டம் நிறைவேறியது. இக்கட்டத்தில் சமஷ்டி மாநில உறவுகளில் சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் மேற்கிளம்பின. உதாரணமாக எரிசக்தி (*Energy*) பற்றிய பிரச்சினையைக் குறிப்பிடலாம். மாநிலங்களின் அரசு - சமஷ்டி அரசு என்ற இரு நிலைகளில் சமத்துவம் உள்ளதே அல்லாமல், சமஷ்டி அரசு ' எசமான்' நிலையில் உள்ளது. அதற்குப் பணிந்து போகும் நிலையில் மாநிலங்கள் உள்ளன என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள மாநிலங்கள் விருப்பம் கொள்ளவில்லை. 1970 களில் பொது சன அபிப்பிராயம் அதிகாரப் பரவலாக்கலுக்குச் சார்பாகத் திரும்பியது. கியுபெக் மாகாணத்தில் சுயாட்சிக் கோரிக்கை வலுவடைந்தது, பிற மாநிலங்களை விட தமக்கு கூடிய அதிகாரங்களுடைய அரசு - அதாவது சமச்சீரற்ற சமஷ்டி வேண்டும் எனவும் அவர்கள் கோரினர். ஆனால் பிறமாநிலங்களில் வேறுபட்ட கோரிக்கைகள் எழுந்தன. சில மாநிலங்கள் கூடிய அதிகாரங்களைக் கேட்டன. மாநில அதிகாரம் கூட்டப்பட வேண்டும் என்றும் 'நாம் வெளியே நிற்பதையே விரும்புகிறோம்' (*We Want Out*) என்றும் கோரிக்கையை முன்வைத்தன. சில மாநிலங்கள் எமக்கு, மத்தியில் உள்ள பிரதிநிதித்துவம் போதாது, 'எம்மை உள்ளே விடுங்கள்' (*We Want in*) என்று கேட்டன. கியுபெக்கில் எழுந்த சுயாட்சிக் கோரிக்கைக்குச் சமாந்தரமான போக்குகள் பிற மாநிலங்களிலும் வளர்ச்சியுற்றதைக் காணலாம். சமஷ்டி அரசு என்ற பலமிக்க கோலியாத் (*Goliath*) இராட்சதனுக்கு எதிராக மாநிலங்கள் என்ற குள்ளர்கள் தமது சுயாட்சி, தனித்துவம் என்ற கோரிக்கைகளை முன்வைக்கலாயினர்.

கியூபெக்கிற்கு தனியாட்சி உரிமையைக் கோரும் *Parti Quebecois* 1968 இல் ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்சி 1976 இல் முதன்முதலாக தேர்தலில் வெற்றிபெற்றது. இதன் பின்னர் கியூபெக் கட்சியும், தாராண்மைக் கட்சியும் (*Liberal Party*) மாறி மாறி ஆட்சியைப் பிடித்தன. தாராண்மைக் கட்சியினர் சமஷ்டிவாதிகளாக இருந்தனர். கியூபெக் கட்சி தமது ஆட்சிக்காலத்தில் 1930 இல் ஒரு தடவையும், பின்னர் 1995 இலும் சர்வசன வாக்கெடுப்பை கியூபெக்கில் நடத்தியது. சுதந்திர கியூபெக் அரசை நிறுவுவதற்கு வாக்களிக்கும்படி மக்கள் வேண்டப்பட்டனர். 1995 ஆம் ஆண்டில் சுதந்திர கியூபெக்கிற்கான 'ஆம்' வாக்குகள், 'இல்லை' வாக்குகளைவிட 50,000 குறைவாக கிடைத்ததால் 1 வீதத்திலும் குறைந்த வாக்கு வித்தியாசத்தால் சுதந்திர கியூபெக் கோரிக்கை தோல்வியுற்றது.

கனடாவில் அரசியல் யாப்பு திருத்தம் பற்றிய பேரம் பேசல்கள் 1960 களில் ஆரம்பித்தன. 1971 ஆம் ஆண்டில் விக்டோரியா சாசனம் (*Victoria Charter*) நிறைவேற்றப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருந்தன. இருப்பினும் கியூபெக் மாநிலத்தின் அபிலாசைகளைப் பூர்த்தி

**கியூபெக் மாநிலத்திற்கும் ஒட்டாவா நகரில் உள்ள சமஷ்டி அரசுக்கும் இடையில் நெருக்கடியும் முறுகல் நிலையும் தொடர்ந்தது. ஒட்டாவாவில் கன்சவேட்டிக் கட்சி ஆட்சி அமைந்தபோது 'கியூபெக் மாநிலத்தை எமது குடும்பத்துக்குள் கொண்டுவருவோம் '** ( Bring Quebec back into Contutio-nial Family ) **என்று புதிய அரசாங்கம் முன்வந்தது. இதன் பயனாக மீச்லேக் ஒப்பந்தம்** (Meech lake Accord, 1987) **நிறைவேறியது.**

---

செய்யக்கூடியனவாய் சாசனம் அமையவில்லையா தலால் அது நிறைவேற்றப்படவில்லை. 1979 இல் மீண்டும் பேச்சுவார்த்தைகள் தொடங்கின. கனடா வின் யாப்பு எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்ற வேறுபட்ட நோக்குகள் இப்பேச்சுவார்த்தை கள் ஊடாக வெளிப்பட்டன. அவ்வாண்டு செப் டம்பர் மாதத்தில் சமஷ்டி - மாநில மாநாடு நடை பெற்றபோது ஒன்றோடு ஒன்று முரண்படும் கருத்துக்கள் அரங்கேற்றப்பட்டன. இதன் பின்னர் சமஷ்டி அரசு, அரசியல் யாப்பு ஒன்றை நிறைவேற் றத் தீர்மானித்தது. மாநிலங்களின் சம்மதம் இதற்கு கிடைக்காத காரணத்தால் உயர்நீதிமன்றம் இதன் நிறைவேற்றத்தைத் தடைப்படுத்தியது. இறுதியில் சமஷ்டி அரசும் ஒன்பது மாநிலங்களும் ஒப்புதல் அளித்த சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1982 ஆம் ஆண்டின் அரசியல் யாப்புச் சட்டம் (Constitution Act, 1982) என்று அழைக்கப்படும் இச்சட்டத்திற்கு கியூபெக் மாநிலத்தின் சம்மதம் கிடைக்கவில்லை.

கியூபெக் மாநிலத்திற்கும் ஒட்டாவா நகரில் உள்ள சமஷ்டி அரசுக்கும் இடையில் நெருக்கடியும் முறு கல் நிலையும் தொடர்ந்தது. ஒட்டாவாவில் கன்ச வேட்டிக் கட்சி ஆட்சி அமைந்தபோது 'கியூபெக் மாநிலத்தை எமது குடும்பத்துக்குள் கொண்டுவரு வோம் ' ( *Bring Quebec back into Contutionial Family* ) என்று புதிய அரசாங்கம் முன்வந்தது. இதன் பய னாக மீச்லேக் ஒப்பந்தம் (Meech lake Accord, 1987) நிறைவேறியது.

கியூபெக்கினை தனித்துவம் மிக்க சமூகமாக ஏற்றல் சமஷ்டி அரசின் நிதிச்செலவுகள் அதிகாரம் பற்றிய பிரச்சினைகள், அரசியல் யாப்புச் சீர்திருத்தம் தொடர்பான வீட்டோ அதிகாரம், குடிவரவு, உயர் நீதிமன்றத்திற்கு நீதிபதிகளை நியமித்தல் ஆகிய விடயங்கள் என்பன மீச்லேக் ஒப்பந்தத்தில் உள்ள டக்கப்பட்டிருந்தன. சமஷ்டி அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் ஆரம்பத்தில் ஒப்பந்தத்தை ஏற் றன. அதன் பின்னர் ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு கீழ் மட்டங்களில் இருந்து உருவானது. உரிமைகளும் சுதந்திரங்களும் பற்றிய சாசனம், சமஷ்டி அரசாங் கம் ஆகியவற்றை ஒப்பந்தம் பலவீனப்படுத்தும் என்ற கருத்து வலுப்பெற்றதால் மாநில அரசுகளிட மிருந்து இணக்கத்தை பெற்றுக் கொள்ள முடியவில்லை. இதன் பின்னரும் 1993 ஆம் ஆண் டில் சார்லொட்ரவுண் ஒப்பந்தம் (Charlotte Town Ac cord) ஏற்படுத்தப்பட்டு தீர்வு முயற்சி மேற்கொள் ளப்பட்டது. இத்தடவை பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரல் விரிவாக்கப்பட்டது. கியூபெக் மட்டுமல்லா மல் பிற மாகாணங்களின் பிரச்சினைகளும் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டன. பழங்குடி மக்களின் தலைவர்களும் பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்து பங்கேற்றனர். பரவலான பொதுமக்கள் பங்கேற்பும் இச்செயல்முறையில் இருந்தது. நாட ளாவிய ரீதியில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட் டபோது ஒப்பந்தம் ஏற்கப்படாமையால் தோல்வி யடைந்தது. கனடாவின் மக்கள் தமது வேற்றுமைகளுக்கான தீர்வைக் காணக்கூடிய அரசி யல் யாப்பை உருவாக்குவதில் மீண்டும் ஒரு தடவை தோல்வியைத் தழுவினர். 1992 இன் பின்னர் கியு பெக் மக்களும், கியுபெக் மாநிலத்திற்கு வெளியே உள்ளோரும் அரசியல் யாப்புத் திருத்தம் அல்லாத வேறு தீர்வு முயற்சிகளையும் பற்றிச் சிந்தித்தனர். முக்கியமான பிரச்சினைகள் பற்றிக் கருத்தொற்று மையை பெறுதல் இலகுவாக இருந்தபோதும், தாம் ஏற்றுக் கொண்ட விடயங்களைப் பொருத்தமான வகையில் எழுத்தில் வரைவது குறித்து ஒற்றுமை ஏற் படவில்லை அடிப்படையான பொதுவிழுமியங் கள் இருபகுதியினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட போதும் அவர்கள் அரசியல் யாப்பின் மொழி, அதன் வாசகங்கள் எப்படி இருத்தல் வேண்டும் என்பதில் ஒற்றுமையை எட்டவில்லை. கனடாவின் ஐக்கியத்தை பாதுகாப்பதற்கு உரிய வழிவகைகள் எவை? கியூபெக்கை தனித்த சமூகமாக அல்லது தேசியமாக (Nation) ஏற்றுக்கொள்வதா? அல்லது கியூபெக்கிற்கு வெளியே பிற மாநிலங்களில் வாழும் பிரஞ்சுக்காரர்களை அந்தந்த மாநிலங்களின் வாழ்க் கையுடன் ஒன்றிணைய வைத்து, அவர்களுக்கும் கியூபெக்கிற்கும் இடையிலான உறவைப் பலவீனப் படுத்துவதா சமஷ்டி நிறுவனங்களில் அவர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது நல்லதா? என்பன போன்ற விடயங்கள் கனடாவில் விவாதிக்கப்பட்டன. இந்த விவாதங்கள் ஐக்கிய இராச்சியத்தில் அதிகாரப் பரவலாக்கல் பற்றியும், ஸ்பெயின் நாட்டில் சுயாட்சி பற்றியும் எழுந்த

விவாதங்களை ஒத்தவையாக இருந்தன. பிரிவினை பற்றிக் கனடாவின் உயர் நீதிமன்றம் 1998 ஆம் ஆண்டில் கூறிய விளக்கம் அரசியல் யாப்பு நோக்கில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. 1995 ஆம் ஆண்டில் சர்வசன வாக்கெடுப்பில் கியூபெக் பிரிவினை தோல்வி கண்டபின்னர் சமஷ்டி அரசாங்கம் கனடாவின் உயர் நீதிமன்றத்திற்கு விளக்கம் கேட்டு மனுவொன்றைச் சமர்ப்பித்தது. கனடாவில் இருந்து தன்னிச்சையாகவே பிரிந்து செல்லும் உரிமையை கனடாவின் சட்டமோ அல்லது சர்வதேச சட்டமோ அனுமதிக்குமா என்பதே நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட வினாவாகும். நீதிமன்றம் மிகுந்த கவனத்தோடும் நடுநிலையோடும் விளக்கம் கொடுத்தது அவ்விளக்கம் பின்வருமாறு :

(1) கனடாவின் எழுதப்பட்ட யாப்பில் பிரிந்து போவதற்கான கியூபெக்கின் உரிமை சொல்லப்படவில்லை.

(2) சர்வதேச சட்டத்தின்படி பிரிந்து போகும் உரிமையைக் கோருவதற்கு கியூபெக்கியருக்கு உரிமை இல்லை. ஏனெனில் அவர்களைச் சுரண்டப்பட்ட மக்கள் (Exploited People) என்று கூற முடியாது.

(3) மேற்குறித்த இரு காரணங்களினாலும் தன்னிச்சையாக அல்லது ஒரு தலைபட்சமாக பிரிந்து போவதற்கு கியூபெக்கிற்கு உரிமை இல்லை. வெளிப்படையாக அவ்வுரிமை பற்றிய குறிப்பு அரசியல் யாப்பில் இல்லை.

(4) மேற்கண்டவாறு குறிப்பிட்ட பின்னர் கனடாவின் அரசியல் யாப்பின் அடிப்படைகளை ஆராயும் போது கியூபெக் மக்கள் பிரிவினையை ஐயம் திரிபற்ற தெளிவான ஒரு கேள்வியின்படி (A clear question) தெளிவான பெரும்பான்மை (Clear Majority) வாக்குகளால் ஆதரித்து முன் வைப்பார்க ளானால் நிச்சயமாக கனடா சமஷ்டியின் பங்காளர்களுக்கு ஒரு கடப்பாடு (Obligation) எழும். அதாவது ஒரு புதிய ஒப்பந்தத்திற்கு வருவதற்கான கடப்பாடு தோன்றும்.

(5) ஆதலால் கனடா தேசம் பிரிபடக் கூடியது.

உயர்நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு மிக முக்கியமானது.

இத்தீர்ப்பின்படி உலக நாடுகளுக்குள்ளே பிரிந்துபோவதற்கான உரிமையை அங்கீகரிக்கும் ஒரே ஒரு நாடு என்ற கணிப்பை கனடா பெற்றுள்ளது. ஆனால் இது முக்கியமான சில நிபந்தனைகளின் அடிப்படையில் உள்ள உரிமை என்பதையும் கவனித்தல் வேண்டும். சமஷ்டிவாதம் (Federalism) ஜனநாயகம், அரசியல் யாப்புவாதம் (Constitutionalism), சட்டத்தின் ஆட்சி (Rale of Law) சிறுபான்மையினர் உரிமைகளை மதித்தல் என்பன அந்நிபந்தனைகள் ஆகும்.

மேலே குறிப்பிட்ட 'ஐயம்திரிபற்ற தெளிவான ஒரு கேள்வி' (As clear question) தெளிவான பெரும்பான்மை (Clear Majority) என்ற இரண்டு சொற்தொடர்களிலும் வரும் 'clear' என்ற சொல் எதனைக் குறிப்பிடுகின்றது என்பதை நீதிமன்றம் 'தெளிவாக' வரையறை செய்யவில்லை.

நீதிமன்றின் மேற்குறித்த தீர்ப்பு இரு பகுதியினரும் எதிர் காலத்தில் எவ்வகையில் செயற்பட வேண்டும் என்பது பற்றிய உரையாடலை ஆரம்பிப்பதற்கான தூண்டுதலை வழங்கியது என்றே கொள்ள முடியும். ஆனால் அது நிகழவில்லை. மாறாக சமஷ்டி அரசாங்கம் 'தெளிவுபடுத்தல் சட்டம் 2000' (Clarity Act 2000) என்னும் சட்டத்தைக் கொண்டு வந்தது. இச் சட்டம் சர்வசன வாக்கெடுப்புக்கான கேள்வியை சமஷ்டிப் பாராளுமன்றம் மட்டுமே தீர்மானிக்கும் அதிகாரம் உடையது என்றும் சர்வசன வாக்கெடுப்பின் முடிவு தெளிவானதா என்பதையும் அதுவே தீர்மானிக்கும் என்றும் குறிப்பிட்டது. கியூபெக் அரசாங்கம் வேறு ஒரு சட்டத்தை இயற்றியது. அச்சட்டம் கியூபெக்கின் தேசிய சட்டசபை எக்கேள்வியையும் பரிசீலித்துத் தீர்மானிக்கும் உரிமை உடையது என்றும், சர்வசன வாக்கெடுப்பின்படி 50 வீதம் ஒரு வாக்கு என்ற பெரும்பான்மை முடிவு எடுக்கப்போதுமானது என்று குறிப்பிட்டது.

இன்று கனடாவில் வாழ்க்கை சுமுகமாகச் சென்று கொண்டிருக்கிறது. 1960 கள் முதல் 1990 கள் வரை நிலவிய பிரச்சினைகள் 21 ஆம் நூற்றாண்டின் முதற் பத்தாண்டில் தணிந்துள்ளன. எந்தவொரு குழுவினதும் அரசியல் நிகழ்ச்சி நிரலிலும் அரசியல் யாப்புச் சீர்த்திருத்தம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும் 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கனடா அரசாங்கம் பாராளுமன்றத்தில் (பொது மக்கள் அவை) ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது, இதன்படி கியுபெக் ஒரு தனித்துவமான சமூகம் என்பது அங்கீகரிக்கப்பட்டது. அத்தோடு எந்தவொரு யாப்புத் திருத்தமும் கியுபெக்கினதும், வேறு மூன்று மாநிலங்களதும் சம்மதம் இன்றி நிறைவேற்றப்படமாட்டாது எனவும் தீர்மானிக்கப்பட்டது. கனடாவிற்குள் சமூகவியல் அர்த்தத்தில் கியூபெக் ஒரு தேசியம் (A nation) ஆகும் என்றும் தீர்மானம் உறுதி செய்தது.

பன்மைப் பண்பாடுகளை முகாமை செய்தல் என்னும் விடயத்தில் வெற்றி பெற்ற தேசமாகக் கனடாவைக் கருதமுடியுமா? என்ற கேள்வி எழுகிறது. ஒருவர் என்ன நோக்குமுறையில் பார்க்கிறார் என்பதைப் பொறுத்து விடை வேறுபடும் . கியூபெக் தேசியவாதிகளின் பார்வையில் கனடா இவ்விடயத்தில் தோல்வி கண்டுள்ளது. பெரும்பான்மைவாத இலக்குகள் கியூபெக் மீது திணிக்கப்பட்டன. சமஷ்டி அர

சின் செலவுகள் பற்றிய அதிகாரம் பிரயோகிக்கப்பட்ட விதம் இதற்குச் சிறந்த உதாரணமாகும். சமஷ்டி முறை விதித்த கட்டுப்பாடுகள் கியூபெக்கின் தேசிய அடையாளத்தை வரையறை செய்யவும், அதன் முன்னுரிமைகளை வகுத்துக் கொள்ளவும், விழுமியங்களை வளர்க்கவும் தடையாக இருந்தன என்று கியூபெக்கியர் நம்புகின்றனர்.

கனடாவின் அரசியல் யாப்பிலும் அந்நாட்டின் குறியீட்டு நிலை வெளிப்பாடுகளிலும், கியூபெக் ஒரு தேசிய இனம் என்ற அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதும், அத்தகைய கணிப்பை வழங்குவதற்குக் கனடா தவறிவிட்டதென்பதும் மிக முக்கியமானது. இக்கட்டுரையில் ஆராயப்பட்ட விடயங்களைக் கொண்டு கனடாவில் சமஷ்டி வெற்றி பெற்றதா என்ற கேள்விக்கான விடையைக் கூறுவோம்.

**கனடாவின் அரசியல் யாப்பிலும் அந்நாட்டின் குறியீட்டு நிலை வெளிப்பாடுகளிலும், கியூபெக் ஒரு தேசிய இனம் என்ற அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதும், அத்தகைய கணிப்பை வழங்குவதற்குக் கனடா தவறிவிட்டதென்பதும் மிக முக்கியமானது**

**கனடாவின் கியூபெக் சமூகம் தமது தேசியத்தைக் கட்டி வளர்க்கும் திட்டத்தில் வெற்றிகண்டுள்ளது. கனடாவின் சமஷ்டியினால் இதனைத் தடுக்க முடியவில்லை என்பது மிக முக்கியமான விடயம்.**

1. முதலாவதாக உலகில் மிக அதிக அளவு அதிகாரப் பரவலாக்கலைக் கொண்ட பெல்ஜியம், சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளோடு கனடாவையும் சேர்க்கலாம். கியூபெக் மாநிலத்தினரின் அழுத்தங்கள் தான் இவ்வளர்ச்சிக்குக் காரணம்.

2. இரண்டாவதாக கியுபெக்கியர்களிடம் பல மனக் குறைகள் நீண்ட காலமாக இருந்து வந்தன. இவை வரலாற்று முக்கியத்துவம் உடையன. இருப்பினும் இக்குறைகள் பெருமளவுக்கு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. கியூபெக்கியர்கள் சமஷ்டி அரசின் நிறுவனங்களில் 'ஓரங்கட்டப்பட்ட விளிம்பு நிலையினராக' இருந்த நிலை இன்று பெருமளவிற்குக் குறைந்துள்ளது. கியூபெக் மாநிலத்திற்குள்ளேயே பிரஞ்சு மொழிபேசுவோர் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர் என்பதை 1960 க்களில் இரு மொழியும், இருமைப் பண்பாடும் பற்றிய ஆணைக்குழு (Royal Commission on Bilingualism and Biculturalism) ஆவணப்படுத்தியிருந்தது. இப்பிரச்சினை இன்று தீர்க்கப்பட்டுவிட்டது.

3. மூன்றாவதாக நிதிச் சமஷ்டி (Fiscal Federalism), செலவுக்கான அதிகாரம் என்ற விடயங்களில் மாநிலங்களில் நிதிச் சுயாட்சி அதிகாரம் இன்று உள்ளதைக் காணலாம். மாநில அரசுகள் சமஷ்டி அரசுடன் ஒப்பிடுகையில் கூடியளவு சுயாட்சி அதிகாரத்தைச் செலுத்துகின்றன. சமஷ்டி அரசில் இருந்து பெறப்படும் நிதி மாற்றல்களைவிட மாநிலங்களில் வருவாய் அதிகமாக உள்ளது. ஏனைய சமஷ்டிகளோடு ஒப்பிடு போதும் கனடாவில் மாநிலங்களின் வருவாயின் குறைந்த ஒரு விகிதமாகவே நிதி மாற்றங்கள் உள்ளன. நிதிமாற்றகளுடன் நிபந்தனைகளை விதிப்பதும் கனடாவில் குறைவு. மாநிலங்களுக்கு என ஒதுக்கப்பட்ட நியாயாதிக்க விடயங்களில் சமஷ்டி அரசாங்கம் தலையிட்டுத் தானாகவே புதிய செயல் திட்டங்களை உருவாக்கும் சமஷ்டி அதிகாரத்தை கட்டுப்படுத்துவதில் கியூபெக் தலைமையில் செயற்பட்ட மாநிலங்கள் வெற்றிகண்டுள்ளன.

4. கனடாவின் கியூபெக் சமூகம் தமது தேசியத்தைக் கட்டி வளர்க்கும் திட்டத்தில் வெற்றிகண்டுள்ளது. கனடாவின் சமஷ்டியினால் இதனைத் தடுக்க முடியவில்லை என்பது மிக முக்கியமான விடயம். கனடாவிற்குள் கியூபெக் மாநிலம் செயல்துடிப்புள்ளதும் சுயாதீனமானதுமான சிவில் சமூகம் ஒன்றை உருவாக்கியுள்ளது. கியூபெக்கில் தனித்துவம் மிக்க சமூகக்கொள்கைகள் செயல்படுத்தப்படுகின்றன. கியூபெக்கிற்குள் குடியேறும் குடியேறிகளை ஒருங்கிணைக்கும் சுயாதீனமான கொள்கைகளை அம்மாநிலம் செயற்படுத்துகிறது. அங்கு செயல்வலுமிக்க வர்த்தக சமூகம் ஒன்று உள்ளது. கியூபெக்கின் பிரதிநிதிகள் சமஷ்டி அரச நிறுவனங்களில் செல்வாக்குமிக்கவர்களாகச் செயற்பட்டு வருகின்றார்கள் 1968 க்குப் பிந்திய காலத்தின் பெரும்பகுதியில் கியூபெக்கின் தலைவர்களே கனடாவின் பிரதமர்களாகவும் பதவி வகித்திருக்கிறார்கள்.

தொடரும்.

# விவசாயமும் தமிழர் வாழ்வியலும்



கந்தையா பகீரதன்

இலங்கையின் பாரம்பரிய வேளாண்மை முறைமையில் உள்ள சாதக – பாதகங்கள், அதிலுள்ள போதாமைகளை நிவர்த்திக்கும் வகையில் நவீன நுட்பங்களைப் புகுத்துதல், நவீன நுட்பங்களால் உண்டாகக்கூடிய விளைவுகள், இலங்கையில் பசுமைப்புரட்சிக்காக முன்வைக்கப்பட வேண்டிய விவசாயக் கொள்கைகள் என்பன பற்றி விரிவாகவும், ஆய்வுத்தளத்திலும் விபரிக்கின்றது இந்தக்கட்டுரைத்தொடர்.

### அறிமுகம்

கந்த உலகில் வாழ்கின்ற மனித இனம் தனக்கென்று ஒரு தனித்துவமான நாகரீகத்தையும், சமூக அடையாளங்களையும் மற்றும் நீண்ட வரலாற்றுப் பின்னணியையும் கொண்டது. இதில் மூத்த இனமாக தமிழினம் வரலாற்றில் இடம் பிடித்துள்ளது. இதனால்தான் நாமக்கல் கவிஞர், தமிழர் என்றோர் இனமுண்டு தனியே அவற்கொரு குணமுண்டு' என்று தமிழரை அடையாளப்படுத்தினார். மனித இனம் எப்படி வாழ வேண்டும் என்பதனை விட எப்படி வாழக் கூடாது என்ற வாழ்வியலையும் மற்றும் அனுபவ அறிவியலையும் கற்றுக் கொடுத்த தமிழரின் சிந்தனைகளையும் உயர்வான எண்ணங்களையும் பல்வேறு சமூகங்கள் அடியொற்றி வருகின்றன. பண்பட்ட மண்ணில்தான் செடிகளும் கொடிகளும் துளிர்விடும். அதுபோல இந்தச் சமூகம் பண்பட வேண்டும் என்றால் நல்ல வாழ்வியலும் பண்பாடும் இருக்க வேண்டும் என்பதனை தமிழினம் இத்தரணிக்குக் கற்று கொடுத்திருக்கிறது. வேளாண் தொழிலின் முக்கியத்துவத்தையும் அதன் மகத்துவத்தையும் தமிழர்கள் எவ்வாறு கருதினர் என்பதை திருக்குறளில் வள்ளுவர் அழகாக “உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்” என்கிறார். ஒவ்வொருவரும்



சிறுதானியங்கள்

Image source - tamil.krishijagran.com

ஒவ்வொரு கைப்பிடி உணவை உண்ணுவதற்கு அதில் ஒவ்வொரு விவசாயிகளினுடைய உழைப்பு தங்கியிருக்கும். ஆதலால் தான் உலகத்தில் பல தொழில்கள் இருந்தாலும் உழவுத் தொழில் தலைசிறந்த தொழிலாக கருதப்படுகிறது. இதுவரைக்கும் விளம்பரம் செய்யப்படாத ஒரே தொழில் விவசாயம் தான். ஏனென்றால் விவசாயம் தொழில் அல்ல எமது உயிர் நாடி. உலகத்தின் ஒவ்வொரு உயிருக்கும் பசி என்ற உணர்வு இருக்கும் வரை விவசாயம் அழியாது.

இப்படிப்பட்ட தமிழர்களின் வாழ்வியலில் இயற்கையும் விவசாயமும் இரண்டறப் பின்னிப் பிணைந்திருந்தன. குறிப்பாக 'தமிழரின் திணையியல் கோட்பாடும், வேளாண் மரபுகளும்' தனிச்சிறப்பு வாய்ந்தவை. அறிவியல் அறிஞர்கள் வகுத்த சுற்றுச்சூழலியல் மண்டலங்கள் என்ற கோட்பாடுக்கு அது இணையானது. இது உயிரியல் பன்மயம், உயிர்ம நேயம் என்பன



பனையின் பலன்கள் ஒரு பார்வை

Image source - www.dinamalar.com

வற்றை அடிப்படையாகக் கொண்டது. பண்டைய தமிழர்கள், மலை சார்ந்த இடங்களில் உழாமலே விவசாயம் செய்துள்ளனர். காடுகளில் ஓரளவு, நிலத்தைச் செப்பனிட்டு விவசாயத்துக்கேற்ப அவற்றை மாற்றினர். நதிகளைச் சார்ந்த இடங்களில், பெருகி வரும் வெள்ளத்தை கட்டுப்படுத்தி, அணைகளைக் கட்டி, விவசாயத்துக்குப் பயன்படுத்தினர். தமிழரின் நீர்ப்பாசனக் கட்டுமானத்துக்கு எடுத்துக்காட்டாக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கரிகால சோழன் கட்டிய கல்லணை இன்றுவரை எந்தவித சேதமும் இன்றி பயன்பாட்டில் உள்ளது ஆனால் இதே காலத்தில் கட்டப்பட்ட எகிப்து நாட்டின் சங்கிலித் தொடர் கல்லணை முழுவதும் அழிவடைந்து விட்டது.

## தமிழர்களின் உணவுமுறையும் விவசாயமும்

தமிழர்களின் பூர்வீக வாழிடங்கள் பெரும்பாலும் வெப்பநிலை சற்று கூடிய உலர்வலயப் பிரதேசங்களாகவே இருந்தன. குறிப்பாக தென்னிந்தியாவும் வடகிழக்கு இலங்கையும் இதில் உள்ளடங்கும். தமிழர்களின் உணவுப் பழக்கத்திற்கும் அவர்கள் விவசாயம் செய்த பயிர்களுக்கும் இடையே ஒரு தொடர்பு இருந்தது.

## சிவப்பு நெல்லரிசிச் சோறும் உடல் உஷ்ணமும்

தமிழர் வாழும் பகுதிகளின் தட்ப வெட்ப நிலைக்கு ஏற்ப அதிகம் சாப்பிடும் உணவுத் தானியமாக சிவப்பு அரிசி இருந்தது. சிவப்பு அரிசியில் புரதம், நார்ச்சத்து, போன்ற வேதி கலவைகள் அதிகம் இருப்பதால் உடலில் சிவப்பு இரத்த அணுக்கள் பிராண வாயுவை கிரகிக்கும் தன்மையை அதிகப்படுத்துகிறது. இதனால் உடலுக்கு அதிக உற்சாகமும், எளிதில் உடல் சோர்வு அடையாத நிலையை தருகிறது. எனவே உடலை அதிகமாக வருத்திக்கொள்ளும் விளையாட்டு வீரர்கள் - வீராங்கனை களுக்கு சிறந்த ஊட்ட உணவாக சிவப்பு அரிசி இருக்கிறது. மனிதர்களின் உடல் எப்போதும் சராசரியான உடல் வெப்பத்தை கொண்டிருக்க வேண்டும். கோடை காலங்களில் எல்லா மனிதர்களுக்கும் உடல் சூடு அதிகரித்து, அதிகம் வியர்த்து உடலின் சில அத்தியாவசிய சத்துக்கள் வியர்வை வழியாக வெளியேறிவிடுகிறது. இந்த சமயங்களில் சிவப்பு அரிசியுடன் நாட்டு சர்க்கரை சேர்த்து சாப்பிடுவதால் உடல்உஷ்ணம் அதிகரிப்பதைத் தடுத்து உடலை குளிரச்செய்யும். நோய்க் கிருமிகளின் தாக்கத்தால் காய்ச்சல் ஏற்படும் போது விட்டமின் B நிறைந்த கஞ்சி உஷ்ணத்தைப் போக்கும் மிகச் சிறந்த ஆகாரமாகப் பார்க்கப்பட்டது. மற்றும் இதில் மூலிகைகள் கலந்து இலைக் கஞ்சியாகக் கொடுக்கப்பட்டது. இவற்றை அனுபவ ரீதியாக அறிந்து கொண்டே இன்றும் பல இயற்கை விவசாயிகள் மருத்துவக் குணம் நிறைந்த நாட்டு நெல் இனங்களைப் பயிரிடுகின்றனர்.

## சிறுதானியங்களும் நீர்ச் சேமிப்பும்

நெல் அறுவடை முடிந்த பின்னர் மண்ணில் காணப்படும் எஞ்சிய ஈரப்பதனை வினைத்திறனாக பயன்படுத்துவதற்காக குறைந்த காலத்தில் உற்பத்தி செய்யக் கூடிய சிறுதானியங்களைத் தமிழர்கள் பயிரிட்டனர். வலுத்தவனுக்கு வாழை, இளைச்சவனுக்கு எள்ளு என்ற பழமொழிக்கு அமைவாக நீர் மிகக் குறைந்த தேவையுடைய இடங்களில் எள்ளு, பயறு, உளுந்து, குரக்கன் மற்றும் இறுங்கு பயிரிட்டனர். உண்மையில் இவை சிறுதானியங்களன்று, பெருமைக்குரிய தானியங்கள். ஏனெனில் இவற்றில் இருக்கும் ஊட்டங்கள் மிகச் சிறப்பானவை. மிகக் குறைந்த நீர், மிக எளிய தொழில்நுட்பம், மிகக் குறைந்த இடுபொருள் செலவு, மிக அதிக ஊட்டம் என்று எல்லா வகையான சிறப்புக் கூறுகளைக் கொண்டிருக்கும் இந்தத் தானியங்கள் நமது விவசாயத் துறைசார் அறிவியலாளர்களாலும், அரசுத் துறை

களாலும் இன்று புறக்கணிக்கப்பட்டுள்ளன.
குறிப்பாக ஒரு கிலோ நெல் விளைவிக்கத் தேவைப்படும் நீர் 1,550 லீட்டர், அதேபோல ஒரு கிலோ கோதுமை விளைவிக்க தேவைப்படும் நீர் 750 லீட்டர். ஆனால், புஞ்சைத் தானியங்களுக்கு இதில் 10இல் ஒரு பங்கு நீர்கூடத் தேவையில்லை. பெரிய அணைகள் தேவையில்லை. காடுகளும் பழங்குடிகளும் அழிய வேண்டியதில்லை. ஆழ்துளைக் கிணறு மட்டுமல்ல திறந்த கிணறும் கூடத் தேவையில்லை. ஒரு கிலோ தினை சாகுபடி செய்ய, எவ்வளவு நீர் தேவைப்படும் என்ற ஆய்வுகூட நடத்தப்படவில்லை என்பதுதான் வேடிக்கை. இந்தத் தானியங்கள் மழை நீரை நம்பியே விளைகின்றன. இவற்றையே தமிழர்கள் ஆதியிலிருந்து காலை மற்றும் மாலை தனது அன்றாட ஆகாரமாக உட்கொண்டனர். அதனாலேயே அவர்களது பரம்பரை நூறு வயது கடந்தும் மூப்படையாமல் தமது அன்றாட செயல்களை தாமே செய்து வலுவாக வாழ்ந்தது.

### அருந்தானியங்களும் (millets) உடல் ஆரோக்கியமும்

குறிப்பாக எமது முன்னோரின் உடல் ஆரோக்கியத்தினை மேம்படுத்தும் அருமருந்தான குரக்கன், தினை, சாமை, கம்பு, எள்ளு, வரகு, குதிரைவாலி, கேழ்வரகு போன்ற 12 வகையான அருந்தானியங்கள் உணவுப் புரட்சி ஏற்படுவதற்கு முன்னர் (1960 இற்கு முன்னர்) பிரதான காலை மற்றும் இரவு உணவாக இருந்தன. காரணம், அவை அரியவையாகவும், அருமையானவையாகவும் இருப்பதுதான். இதை அறிந்த எமது தமிழர்கள் 'கருங்கால் வரகே இருங்கதிர்த்தினையே சிறுகொடிக்கொள்ளே பொறிகிளர் அவரையொடு இந்நான்கல்லது உணவும் இல்லை'- என்று புறநானூற்றிலேயே எழுதிவைத்தனர். உயர்த்திக் கூறப்படும் வரகு, தினை போன்ற தவசங்கள் (தானியங்கள்), தமிழகத்தின் வானவாரி (மானம்பாரி) நிலத்தில் விளைந்து மிகுந்த பயனைத் தந்தவை.

இன்றைய காலகட்டத்தில் வெறுத்து ஒதுக்கப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ள இவை, பல பன்னாட்டு நிறுவனங்களால் ஊட்ட மாவுக்காகவும், ஊட்டக் குடிநீராகவும் (Health Drinks) விரும்பி வாங்கப்படுகின்றன.
கடவுள் தானியங்கள் என்று வணங்கப்படுகிற புஞ்சைத்தவசங்கள் என்று அழைக்கப்படும் சிறுதானியங்கள் என்று போற்றப்படும் இந்த அருந்தா னிய உணவுகளைச் சாப்பிட்டதால் முன்னைய காலத்து மக்கள் நீரிழிவு, உடல் பருமன், ரத்தக் கொதிப்பு போன்ற நோய்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டார்கள். அரிசி, கோதுமை போன்ற மற்ற தானியங்களுடன் ஒப்பிடும்போது இவை புரதச்சத்து, நார்ச்சத்து மிகுந்தவையாகவும், அதிகளவான இரும்பு, கல்சியம் மற்றும் விட்ட மின்களை கொண்டவையாகவும் உள்ளன.

வயலில் வேலை செய்யும் அனைத்துத் தரப்பினருக்கும் நீண்ட நேரத்திற்கு சக்தியை வழங்குகின்ற சத்தான ஆகாரமாக கேப்பாங் கஞ்சி, குரக்கன் கலப்பை (ரொட்டி), கம்மங் கழி போன்றன காணப்பட்டன. தினையில் கண்ணுக்கு ஒளியை அதிகரிக்கும் பீட்டா கரோட்டின் அதிகம் உள்ளது. தினைமாவுடன் தேனைக் கலந்து சாப்பிடும் போது கபம் நீங்கும், விரைவில் செரிமானமாகும். குருதிச்சோகை உள்ளவர்களுக்கு சாமை சிறந்த தீர்வை தருகிறது. இதில் அதிகளவு மினரல்ஸ் உள்ளதால் நம் உடலில் உள்ள உயிரணுக்களின் எண்ணிக்கையை மிகவும் எளிதாக அதிகரிக்கிறது. குதிரைவாலி சுவைமிகுந்தது. காய்ச்சல் நேரத்தில் கஞ்சி வைத்து குடித்தால் காய்ச்சலை குணப்படுத்தும். மேலும் வாய்வுப் பிரச்சினைகளை குணப்படுத்தும். குதிரைவாலி, உளுந்து சேர்த்து களியோ அல்லது கஞ்சியோ செய்து சாப்பிட, இடுப்பு வலி மற்றும் வயிற்று கடுப்புப் பிரச்சனை சரியாகும். அல்சர் மற்றும் சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும் அடிப்படை உணவாக வரகரிசி திகழ்கிறது. மேலும் உடலின் சக்தியை அதிகரிக்க உதவுகிறது. காய்ச்சல் நேரத்தில் வரகுக் கஞ்சி உகந்த பானமாகக் கொடுக்கப்படுகிறது.

தமிழர்களின் வாழ்வியலை சற்றும் மதிக்காது உணவுப் புரட்சியின் பின்னர் திணிக்கப்பட்ட மேற்கத்தேய உணவுகளான கோதுமை, ஓட்ஸ், பார்லி போன்ற உணவுகளுக்கு அடிமையான எமது இன்றைய சமுதாயத்தினர் "கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வத்தைப் போல்" நோய் நாடிய பின்னர் இவ் அருந்தானிய உணவுகளைத் தேடி அலைகின்றனர்.

### சமயச் சடங்குகளும் பழமரங்களும்

தமிழருடைய சடங்குகளும் சம்பிரதாயங்களும் ஒவ்வொரு தாவரத்தினுடைய பயன்களையும் ஒவ்வொரு காலத்தின் தேவைக்குத் தகுந்தாற் போல் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை என்பதால் அந்தந்த சமயச் சடங்குகளுடன் தொடர்புபடுத்தி அவர்கள் தமது வாழ்வியலை அமைத்துக் கொண்டனர். அல்லது தமது சந்ததிக்குச் சொல்லிக் கொடுத்தனர் என்றே கூறலாம். குறிப்பாக வாழைப் பழத்தின் அரும் பலன்களை அறிந்தவர்கள் அனைத்துச் சடங்குகளிலும் வாழைப் பழத்தைச் சேர்த்தான். அது வரவேற்கும் நிறைகுடமாக இருக்கட்டும் அல்லது சாப்பிட்ட பின்னர் பந்தியில் வழங்கப்படும் பழமாக இருக்கட்டும், கோயில்களில் வழங்கப்படும் பஞ்சாமிர்தமாக இருக்கட்டும் அனைத்திலும் வாழைப் பழம் இருக்கும். இதற்கு பிரதான காரணம் நாம் வாழும் பிரதேசம் உஷ்ணம் நிறைந்தது, வாழைப் பழம் உஷ்ணத்தை நீக்கி உடலை குளிர்மைப்படுத்தி ஜீரண மண்டலத்தின் செயற்பாட்டைத் தூண்டி மலச்சிக்கல், இரத்த அழுத்தம், சிறுநீரகக் கற்கள், முழங்கால் வலி மற்றும் இதய நோய்கள் வராமல்



அருந்தானியங்கள் (millets)

Image source - www.deccanherald.com

தடுக்கும்.

பஞ்சாமிர்தத்தில் முக்கனிகளான மா, பலா மற்றும் வாழை போன்றவற்றுடன் தேன், நெய், மற்றும் கற்கண்டு என்பன கலக்கப்படுகின்றது. உடலின் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் உணவாக பஞ்சாமிர்தம் இருக்கிறது. இவற்றிற்கு மேலும் ஊட்டம் அதிகரிக்க விளாம்பழம், மற்றும் மாதுளம் பழம் என்பனவும் கலக்கப்படுகின்றன. அதுமட்டுமன்றி, திருமணமான தம்பதிகளை முதலிரவுக்கு அனுப்பும் சடங்கி லும் அவர்களுக்கான உணவாக பாலும் பழங்களுமே கொடுக்கப்படுகின்றன. இவை அவர்களிடத்தில் புத்துணர்ச்சியை அதிகரிக்கின்றன. இவ்வாறான சடங்குகளும் சம்பிரதாயங்களும் வருடம் முழுவதும் நடைபெற்றதால், பழங்களுக்கு அதிக கிராக்கி நிலவியது. இதனால் இப்பயிர்களை எமது மக்கள் தொடர்ச்சியாக பயிரிட்டனர். இவ்வாறாக தமிழர்களின் வாழ்வியலில் விவசாயம் பின்னிப் பிணைக்கப்பட்டிருந்தது.

## விரதங்களும் உணவுச் சேமிப்பும்

தமிழர்களின் பூர்வீக மதமான இந்துமதத்தில், பல்வேறு வகையான விரதங்கள் வருடத்தின் பல்வேறு காலங்களில் அனுஷ்டிக்கப்படுகின்றன. இவ்விரதங்களில் பெரும்பாலானவை, புரட்டாதி மாதத்தில் இருந்தே ஆரம்பிக்கும் குறிப்பாக நவராத்திரிவிரதம்: புரட்டாதி மாதத்தின் வளர்ப்பிறைப் பிரதமை முதல் நவமி வரை ஒன்பது நாளும்; கேதார கௌரி விரதம்: புரட்டாதி மாதம் சுக்லபக்ஷ அஷ்டமி நாள் தொடங்கி ஐப்பசி மாத அமாவாசை முடிய மொத்தம் இருபத்தொரு நாட்களும்; கந்த சஷ்டி விரதம்: ஐப்பசி மாதம் சுக்கிலபட்ச பிரதமை முதல் சஷ்டி ஈறாக உள்ள ஆறு நாட்களும்; விநாயகர் சஷ்டி விரதம்: கார்த்திகை மாத தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறைச் சட்டித் திதி வரையுள்ள இருபத்தொரு நாட்களும், திருவெம்பாவை விரதம்: மார்கழி மாத திருவாதிரை (நட்சத்திரம்) நட்சத்திரத்துக்கு ஒன்பது நாட்களுக்கு முன் தொடங்கி அனுட்டிக்கப்படும். இவ்விரதங்கள் அனைத்துமே ஏன் வருடத்தின் இறுதி நான்கு மாதங்களும் கடைப்பிடிக்கப்படுகின்றன என அறிவியல் ரீதியில் நோக்கினால் எம் பண்டைத் தமிழர்களின் வேளாண் அறிவியல் வாழ்வியலில் எப்படிப் புகுத்தப்பட்டுள்ளது என்பது புலப்படும்.

பண்டைய காலத்தில் உணவு உற்பத்தி அபரிமிதமாக இருந்ததில்லை என்பதோடு, நீண்டகாலத்திற்கு பெருமளவு நெல்லைச் சேமித்து வைக்கின்ற கட்டமைப்பும் இருக்கவில்லை. எனவே ஒரு வருடத்தின் நெல் அறுவடையின் சேமிப்பின் பெரும்பகுதி அடுத்த வருட நெல் விதைப்பு மாதமான ஆவணி மாதத்தின் நடுப்பகுதியுடன் பெருமளவு முடிவடைந்து விடும். இதனால் அரிசிக்கான தட்டுப்பாடு நிலவ ஆரம்பிக்கும். இந்த உணவுத் தட்டுப்பாட்டை நீக்க மிகவும் உயர்ந்த உத்தியாக உணவுத் தவிர்ப்பு இருக்

கும் என்பதை நன்கறிந்த தமிழர்கள், மக்களுக்கு எவ்வாறு சுலபமான விழிப்புணர்வை ஏற்படுத்தி பிணக்குகள் ஏற்படாமல் பசியைத் தீர்க்கலாம் என்பதை சிந்தித்து பசித்திரு, விழித்திரு, பக்தியுடன் இரு என்ற கோட்பாட்டுடன் ஒவ்வொரு இறைவனுக்கும் ஒவ்வொரு மாதத்தில் விரதத்தைத் தொடங்கினர்.
ஒவ்வொரு விரத காலத்திலும் மக்களை ஆன்மீக நீரோட்டத்தில் கலக்கச் செய்ய ஒவ்வொரு விரதத்தின் மகிமையையும் மக்கள் மனதில் ஆழமாகப் பதித்தனர். விரத காலத்தில் இரவுச் சாப்பாட்டிற்காக இறைவனுக்கு பூசித்த சிறுதானியங்களான பயறு, கடலை, கௌபி, மற்றும் அவல் போன்றன வழங்கப்பட்டன. இவ்வுத்தியின் மூலம் உணவுத் தேவை பெருமளவு குறைக்கப்பட்டதுடன் ஆன்மீகமும் வளர்க்கப்பட்டது.

## பனைமரம் தமிழர்களின் விவசாயத்தினதும் வாழ்வியலினதும் அடையாளம்

இயற்கையை நேசித்தவர்கள் தமிழர்கள் மற்றும் உழவினை மிகச் சிறந்த தொழிலாகக் கருதி வாழ்வியல் ஆக்கியவர்கள் தமிழர்கள். மரங்களையும் அவற்றின் பலன்களையும் நன்கறிந்து அவற்றை ஒவ்வொரு மனிதனுடைய பண்புகளுடன் இணைத்தவர்கள் அவர்கள். உதாரணமாக நண்பர்களை மற்றும் நமக்கு உதவுபவர்களை பனை, தென்னை மற்றும் வாழையாக குறிகாட்டினார்கள். எந்த உதவியும் செய்யாமல் எமக்கு எப்போது பேருதவிகளை வாரி வழங்கிக் கொண்டிருக்கும் நண்பர்களை பனை என வருணித்தார்கள் ஏனெனில் எதுவும் செய்யாமல் நமக்கு அனைத்தையும் தருவது கற்பகதரு பனை. தென்னை மரத்திற்கு எவ்வளவு நீரைக் கொடுக்கிறோமோ அவ்வளவு நீரையும் பிரதிஉபகாரமாக மீளவும் இளநீராகத் தரும், இது இரண்டாவது வகை நட்பு. மூன்றாவது வகை நட்பு வாழையைப் போன்றது, அதாவது எவ்வளவு பசளை இட்டு நீர் ஊற்றினாலும் ஒரு குலையை மாத்திரமே வாழை விளைவாகத் தரும்.

இதனாலேயே திருவள்ளுவர் தினைத்துணை நன்றி செய்தாலும் அதனைப் பனைத்துணையாகக் கொள்வர் பலன் தெரிவார் என்று பனையைத் தமிழின அடையாளமாகவும், தமிழர்கள் வாழும் இடமெங்கும் பனை இருக்கும் என்ற தமிழின வாழ்வியல் அடையாளமாகவும் குறிப்பிட்டார். உலகெங்கும் இருக்கும் பனை மரங்களின் 75% இற்கு மேற்பட்ட பணிகள் தமிழர்களின் பூர்வீக இடங்களிலேயே இருக்கின்றது. இப்பனைமரங்கள் விவசா யத்திற்கும் வாழ்க்கைக்கும் தேவையான அனைத்தையுமே தருகின்றன. குறிப்பாக மண்ணரிப்பைத் தடுத்தல், நிலத்தடி நீரைப் பாதுகாத்தல், கால்நடைகளுக்குத் தேவையான புரதம் நிறைந்த உணவாக பனை ஓலை என பல வழிகளில் விவசாயத் தேவைகளைப் பனை பூர்த்தி செய்கிறது. அதுமட்டுமன்றி, பனை ஓலையில் இருந்து பின்னப்படும் விதைப் பெட்டி, கடகம்; பனை ஈர்க்கில் இருந்து செய்யப்படும் சுளகு (முறம்), களப்பாய்; பனை மரத்தின் தண்டில் இருந்து செய்யப்படும் பட்டை, துலா, கோர்க்காலி, பனம்தீராந்தி, பனம் சலாகை மற்றும் கலப்பை நுகம் போன்றன தமிழர்களின் பண்டைய விவசாயத்தில் பயன்படுத்தப்பட்ட பெறுமதி மிக்க பொருட்கள். இதை அறிந்தே தமிழர்கள் பனையைப் போற்றிப் பாதுகாத்துவந்தனர்.

இதனை விட பனையை, கேட்டதைக் கொடுக்கும் தேவலோகத்து மரம் எனத் தொன்மங்கள் கூறும் கற்பகத்தருவுக்கு ஒப்பிடுவர். காரணம் இதன் தலையில் இருந்து கிடைக்கும் நுங்கு: நுங்கு நீரை தொடர்ந்து சாப்பிட்டு வர கோடை காலத்தில் ஏற்படும் வேர்குரு நீங்கும்.

தோலுடன் நுங்கை சாப்பிட்டு வர சீதக்கழிச்சல் நீங்கும். பனங்கற்கண்டை ஏதாவது ஒரு வகையில் அடிக்கடி பயன்படுத்தி வர அம்மை நோயால் ஏற்பட்ட உடல் வெப்பம், தாகம் போன்றவை நீங்கும். பனங்கிழங்கிற்கு உடல் குளிர்ச்சியை தரும் தன்மை உண்டு. இந்தக் கிழங்கை சாப்பிட்டு வந்தால் உடல் அழகு பெறும். உடல் பலமும் அதிகரிக்கும். பதநீர் புளிக்காத வரை மிகுந்த ஊட்டச்சத்து நிறைந்த பானம்; பனம் பழத்தில் செய்யப்படும் பனங்காய்ப் பணியாரம் சிறுவர் முதல் பெரியவர் வரை விரும்பி உண்ணும் உணவாகவுள்ளது. இது மலச்சிக்கலைப் போக்கும். பனாட்டு வெயில் காலங்களில் உடல்சூட்டைத் தணிக்கும் உணவாகவும் குடற்புண்ணை ஆற்றும் மற் றும் மலச்சிக்கலைப் போக்கும் அருமருந்தாகவும் உள்ளது.

(தொடரும்)



# தமிழ் வணிகன் பற்றிக் கூறும் பெரிய புளியங்குளம் கல்வெட்டுக்கள்




என். கே. எஸ். திருச்செல்வம்

இலங்கைத் தமிழர்களுக்கு 2500 ஆண்டுகளுக்குக் குறையாத வரலாறு மற்றும் வழிபாட்டு பாரம்பரியம் உள்ளது. பண்டைய இலங்கைத் தமிழர் பற்றி இதுவரை பலரும் அறிந்திராத, இதுவரை வெளிச்சத்துக்கு வராத, அரிய உண்மைகளை வெளிக்கொணர வேண்டும் எனும் நோக்கத்தை அடிப்படையாக கொண்டதாக இவ்வாய்வு அமையவுள்ளது. ஆய்வு செய்யப்பட்டு கண்டறிந்த உண்மைகளை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் எனும் நோக்கத்தில் அவை பற்றிய விபரங்கள் அடங்கிய ஒரு படைப்பாக "இலங்கையில் பிராமி மற்றும் சிங்கள கல்வெட்டுக்களில் தமிழர் எனும் இந்த கட்டுரை தொடர்ச்சியாக வெளி வருகிறது.

வவுனியா நகரின் வடகிழக்கில் 13 கி.மீ தொலைவில் உள்ள பெரிய புளியங்குளம் எனும் இடத்தில் உள்ள குளத்தின் அருகில் ஒரு உயரமான கற்பாறைத் தொகுதி காணப்படுகிறது. சுமார் 100 அடி உயரமான ஒரு நீண்ட பாறையின் மீது மூன்று பெரிய கற்பாறைகளும், ஐந்துக்கும் மேற்பட்ட சிறிய கற்பாறைகளும் தூக்கி வைத்தாற் போல் இயற்கையாகவே அமைந்துள்ளன.

இவற்றிலே பெரிய பாறை ஒன்று முதலையின் வடிவில் காணப்படுகிறது. இதனால் இது முதலைப் பாறை (சிங்கள மொழியில் கிம்புலாகல) என அழைக்கப்படுகிறது. இப்பாறைத் தொகுதியில் இயற்கையான பல கற்குகைகள் காணப்படுகின்றன. இவற்றின் மேற்பகுதியில் கற்புருவங்கள் வெட்டப்பட்டு அதன் கீழே கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இங்கு மொத்தமாக 38 பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

மேற்குறிப்பிட்டுள்ள 38 கல்வெட்டுக்களில் 2 கல்வெட்டுக்கள் தமிழர் பற்றிக் கூறுகின்றன.
இதில் தமிழர் எனும் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. ஒரு கல்வெட்டில் "தமெத வனிஜ கபதி விசகஹ லேன" எனப் பொறிக்கப்பட்டுள்ளது.
இதை பேராசிரியர் பரணவிதான "The cave of the householder Visakha, the Tamil Merchant" என மொழிபெயர்த்துள்ளார். இது தமிழ் வணிகனான குடும்பத் தலைவன் விசாகனின் குகை எனப் பொருள்படும். இக்கல்வெட்டு Inscriptions of Ceylon Volum 1 எனும் நூலில் 356 ஆவது கல்வெட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது.



பெரிய புளியங்குளம் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ள பாறைத் தொகுதி

**சுமார் 100 அடி உயரமான ஒரு நீண்ட பாறையின் மீது மூன்று பெரிய கற்பாறை களும், ஐந்துக்கும் மேற்பட்ட சிறிய கற்பாறைகளும் தூக்கி வைத்தாற்போல் இயற்கையா கவே அமைந்துள்ளன.**



தமிழ் வணிகனான குடும்பத் தலைவன் விசாகன் பற்றி கூறும் பெரிய புளியங்குளம் கல்வெட்டு - 1 - பெரிய புளியங்குளம் கல்வெட்டுக்கள்



தமிழ் வணிகனான குடும்பத் தலைவன் விசாகன் பற்றி கூறும் பெரிய புளியங்குளம் கல்வெட்டு - 2 - பெரிய புளியங்குளம் கல்வெட்டுக்கள்

## குடும்பத் தலைவன் விசாகன் பற்றிய இரண்டாவது கல்வெட்டு

குடும்பத் தலைவன் விசாகன் பற்றிய இரண்டாவது கல்வெட்டு பெரிய புளியங்குளத்தில் காணப்படும் இரண்டாவது கல்வெட்டில் "தமெத வனிஜ கபதி விசகஹ செனி கெமே" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இதை "The work of the flight of steps is of the householder Visakha, the Tamil Merchant" என பேராசிரியர் பரணவிதான மொழி பெயர்த்துள்ளார்.

இது "தமிழ் வணிகனான குடும்பத் தலைவன் விசாகனால் படிகளில் செய்யப்பட்ட வேலை" எனப் பொருள்படுகிறது. இக்கல் வெட்டு Inscriptions of Cey lonVolum 1 எனும் நூலில் 357 ஆவது கல்வெட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இக்கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ள செய்திகள் மூலம் வவுனியா பகுதியில் 2000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதுடன் வணிகர்களாகவும் விளங்கியுள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.**

இக்கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ள செய்திகள் மூலம் வவுனியா பகுதியில் 2000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதுடன் வணிகர்களாகவும் விளங்கியுள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இங்குள்ள கல்வெட்டுக்களில் பெரும்பாலானவற்றில் கூறப்பட்டுள்ள செய்தியானது இங்கிருந்த பிரமுகர்கள் தமது கற்குகைகளை பௌத்த சங்கத்திற்கு தானமாக வழங்கியுள்ளனர் என்பதுதான். ஆனால் இந்த இரண்டு கல்வெட்டுக்களிலும் கூறப்பட்டுள்ள தமிழ் வணிகன் விசாகன் தனது குகை களை பௌத்த சங்கத்திற்கு தானம் வழங்கவில்லை என் பதும் தெரிகிறது.

(தொடரும்)



முதலையின் வடிவில் அமைந்துள்ள கிம்புலாகல எனும் முதலைப் பாறை - பெரிய புளியங்குளம் கல்வெட்டுக்கள்



காட்டில் காணப்படும் கற்குகைகளில் ஒன்று - சேருவில கல்வெட்டு

# தமிழ் குடும்பத் தலைவன் குட்டன் பற்றிய சேருவில கல்வெட்டு

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் நகரின் தெற்கில் 16 கி. மீ. தொலைவில் அமைந்துள்ள சேருவில என்னுமிடத்தில் இக் கல்வெட்டு காணப்படுகிறது. சேறுவில்லு எனும் பெயரே சேருவில என திரிபடைந்ததாக ஆய்வுகள் கூறு கின்றன. இவ்விடத்தைச் சுற்றி சேறு நிறைந்த பல வில்லுக் குளங்கள் இருந்ததாகவும், இதன் காரணமாக இப்பெயர் உருவானதாகவும் தெரிகிறது.

பண்டைய காலத்தில் இது “சேறுநகரம்” எனப் பெயர் பெற்று விளங்கியது. சிங்கள மொழியில் இது “சேருநுவர ராஜதானிய” என அழைக்கப்பட்டது. இது ஒரு நாக இராச்சியமாகும். தேவநம்பியதீசன் இலங்கையை ஆட்சி செய்த பொது ஆண்டுக்கு முன் (பொ. ஆ. மு) 307 - 267 வரையான காலப்பகுதியில் அவனது தம்பியான மகாநாகன் தெற்கில் இருந்த மாகமை இராச்சியத்தை ஆட்சி செய்து வந்தான். நாகவழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவன் சேருநகர இராச்சியத்திலும் நாகவழிபாட்டை நிலை நாட்டினான்.

பொ. ஆ. மு. 205 - 161 வரை இலங்கையை ஆண்ட தமிழ் மன்னனான எல்லாளன் காலத்தில் இப்பகுதி ஒரு சிற்றரசாக விளங்கியது. அப்போது தெற்கில் இருந்த மாகமை எனும் இராச்சியத்தை காக்கவண்ண தீசனும், மேற்கில் இருந்த களனி இராச்சியத்தை களனி தீசனும் சிற்றரசர்களாக ஆட்சி செய்தனர். இதேகாலத்தில் கிழக்கில் இருந்த சேறுநகர இராச்சியத்தை சிவன் எனும் சிற்றரசன் ஆட்சி செய்து வந்தான் என தாதுவம்சம் கூறுகிறது.

எல்லாளன் காலத்தில் சேருவில பகுதியை ஆட்சி செய்த தமிழ் சிற்றரசனான சிவன் மாகமையை ஆண்ட காக்கவண்ண தீசனின் மைத்துனனான அபயன் என்பவனின் நண்பனாவான். இக்காலப்பகுதியில் இவ்விடத்தில் “மணிநாக ஈஸ்வரம்” எனும் சிவாலயம் இங்கு அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. இது “மணிபுர ஈஸ்வரம்” எனவும் அழைக்கப்பட்டது. இச்சிவாலயம் பொ.ஆ 276-303 வரை அனுராதபுரத்தை ஆட்சி செய்த மகாசேனனால் திருக்கோணேஸ்வரம் அழிக்கப்பட்ட காலத்தில் மணிபுர ஈஸ்வரமும் அழிக்கப்



காட்டில் காணப்படும் நாகக் கற்கள் - சேருவில கல்வெட்டு

**எல்லாளன் காலத்தில் சேருவில பகுதியை ஆட்சிசெய்த தமிழ் சிற்றர சனான சிவன் மாக மையை ஆண்ட காக்க வண்ண தீசனின் மைத்துனனான அபயன் என்பவனின் நண்பனா வான். இக்காலப்பகுதி யில் இவ்விடத்தில் "மணி நாக ஈஸ்வரம்" எனும் சிவாலயம் இங்கு அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. இது "மணிபுர ஈஸ்வரம்" என வும் அழைக்கப்பட்டது.**

பட்டதாகவும் தெரிய வருகிறது.

அந்த வகையில் பொ. ஆ. மு 2300 ஆண்டுகளுக்கு முன் பிருந்தே தமிழர் மற்றும் நாக, சிவ வழிபாடு ஆகியவை சேருவிலவுடன் தொடர்புபட்டுக் காணப்பட்டிருந்தன. இந்தப் பின்னணியில் சேருவில வில் தமிழர் பற்றிய பிரா மிக் கல்வெட்டு ஒன்றும் ஆங்கிலேயர் காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இங்கு கற்புருவம் வெட்டப்பட்ட இரண்டு கற்குகைக ளில் இரண்டு பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்பட்ட தாகவும், இவை இரண்டும் 1973ஆம் ஆண்டு தொல்லி யல் திணைக்களத்தினால் பிரதி செய்யப்பட்டதாகவும் இக்கல்வெட்டைப் பதிவு செய்துள்ள கல்வெட்டாய்வா ளர் மாலினி டயஸ் குறிப்பிட்டுள்ளார். எனினும் இக்கல் வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ள மலைப்பாறைக் குகைகள் சேருவிலவில் எந்த இடத்தில் உள்ளன என் பதை இவர் தனது நூலில் குறிப்பிடவில்லை.

சேருவிலவில் உள்ள மேலும் இரண்டு பிராமிக் கல்வெட் டுக்களை பேராசிரியர் பரணவிதான தனது நூலில் பதிவு செய்துள்ளார். அக்கல்வெட்டுக்கள் திருகோணமலை - மட்டக்களப்பு வீதியில் உள்ள 59 ஆம் மைல் கல்லின் கிழக்குப் பக்கமாக இரண்டு மைல் தூரத்தில் உள்ளதா கக் குறிப்பிட்டுள்ளார். இவற்றில் ஒன்று பாலன் எனும் சுவாமியைப் பற்றிய கல்வெட்டாகும். அடுத்தது யாக தத்தன் என்பவனின் மகனான வசபன் பற்றிய கல்வெட் டாகும்.

சேருவில ரஜமகா விகாரையின் தெற்குப்பகுதியில் சுமார் 10 சதுர கி. மீ பரப்பளவில் ஆங்காங்கே மலைப் பாறை கள் நிறைந்த ஒரு காடு காணப்படுகிறது. இக்காட்டின் கிழக்குப்பக்கம் உள்ளக்கழி களப்பு அமைந்துள்ளது.

காட்டின் கிழக்குப் பக்கத்தில் உள்ள ஒரு மலைப்பகுதி குளங் கல்லு மலை என அழைக்கப்படுகிறது. இம்ம லைப்பகுதியிலும் இரண்டு பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் தாதன், புஸ்ஸ குத்தன், தீசன், அசோகன் ஆகிய பெயர்கள் பொறிக்கப்பட் டுள்ளன.

மாலனி டயஸ் பதிவு செய்த தமிழர் பற்றிய கல்வெட் டும் இக் காட்டுப் பகுதியில் உள்ள மலைப்பாறை ஒன் றில் உள்ள கற்குகைகளில் பொறிக்கப்பட்டிருக்க வேண் டும்.

இக்கல்வெட்டில் "பத மகாதிசஹ கபதி தமெத குடஹக லேன" என பொறிக்கப்பட்டுள்ளது. இதை "The cave of Lord Mahatisa and the Tamil house holder Cuda" என கல்வெட் டாய்வாளர் மாலினி டயஸ் மொழி பெயர்த்துள்ளார். இது "சுவாமி மஹதிசவினதும் தமிழ் குடும்பத் தலைவன் குட்டவினதும் குகை" எனப் பொருள்படுகிறது. இக்கல் வெட்டு Epigraphical Notes 118. எனும் நூலில் 2886ஆவது கல்வெட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் இக் கல்வெட்டின் படியெடுக்கப்பட்ட படம் நூலில் காணப்படவில்லை.

சேருவில காட்டுப்பகுதியில் பல இடங்களில் கற்குகைக ளும், கற்பாறைகளும், கற்சுனைகளும், கற்தூண்களுடன் சிதைந்த நிலையில் வழிபாட்டிடங்களும், நாகக்கற்க ளும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தொடரும்.

(தொடரும்)




# யாழ்ப்பாண பாரம்பரிய உணவுப்பழக்கத்தில் பருப்பு வகைகள்



● தியாகராஜா சுதர்மன்

மனிதனின் ஆரோக்கிய வாழ்தலுக்கான அடிப்படையே உணவுப்பழக்கவழக்கம் தான். நோய்கள் மலிந்துவிட்ட இந்தக்காலத்தில், ஈழத்தமிழர்களின் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நிலவிய பாரம்பரிய உணவுப்பழக்க வழக்கங்களை மீட்டெடுப்பதன் மூலம், மீண்டும் ஆரோக்கியமான சமுதாய மொன்றைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை சித்த மருத்துவக் கண்ணோட்டத்தில் இந்தக்கட்டுரைத்தொடர் முன்வைக்கின்றது.

உளுந்து, சிறுபயறு, பயறு, கடலை, காராமணி (கௌபி), துவரை, கொள்ளு, எள் என்பன பொதுவாக எமது பாரம்பரிய உணவுகளில் பாவிக்கப்படும் பருப்பு வகைகளாகும். இவற்றைவிட மொச்சை, பட்டாணி, பொட்டுக்கடலை போன்று வேறுவகை பருப்புவகைகளும் பாவனையில் இருந்துவருகின்றன.

மேற்படி பருப்பு வகைகள் புரதச்சத்து நிறைந்தனவாகவும், பெரும்பாலும் அனைத்து வகையான ஊட்டச்சத்துக்களையும் கொண்டவையாகக் காணப்படுகின்றன. காலை, இரவு உணவுகளாக, சிற்றுண்டி வகைகளில், மதிய உணவுடன் கறிகளாக அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

புரதச்சத்து அதிகம் கொண்டிருக்கின்றமையால் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் ஆகியோரின் உணவுப்பழக்கத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. முக்கியமாக உளுந்து யாழ்ப்பாண தமிழர்களின் பாரம்பரியத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

பருப்பு வகைகளில் எவ்வாறு உடலை வளர்க்கின்றனவோ அந்தளவுக்கு வாயுவையும் அதிகரிக்கின்றன. இதனால் பருப்புவகை உணவுகளில் உள்ளி, மிளகு போன்ற பதார்த்தங்களும் வாசனைத் திரவியங்களும் அதிகம் சேர்க்கப்படுகின்றன. இவ்வாறு சேர்க்கப்படும் வாசனைத் திரவியங்கள் “திரி தோச சம திரவியங்களாக” செயற்படுகின்றன.

தமிழர்களின் வாழ்வியலுடன் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பெண்களின் உணவுப் பாரம்பரியத்துடன் உளுந்து சார் உணவுகள் இரண்டறக் கலந்த தொன்றாகவே காணப்படுகின்றது.

## உளுந்து

மிகுந்த போசணைப் பெறுமானங்களைக் கொண்டு உடலைப்போசிக்கக் கூடியதும் பலத்தினைக் கொடுக்கக்கூடியதும் ஆகும். குறிப்பாக உடல் இடுப்புப் பகுதிக்கு அதில் உள்ள அங்கங்களான கருப்பை போன்ற பகுதிகளுக்கு பலத்தைக் கொடுக்கக் கூடியது. இதனாலேயே பருவடைந்த பெண்க

ளுக்கு, திருமணமான ஆண்கள், பெண்களுக்கு, கர்ப்பமடைந்த பெண்களுக்கு என பெண்களின் உணவில் உளுந்து முக்கிய இடம்பெறுகின்றது.

இது வாயுவை அதிகரிக்கக் கூடியது. உடலுக்கு சக்தியைத் தரக்கூடியது எனினும் உண்பவர்களுக்கு சோம்பலையும் ஏற்படுத்தும். அத்துடன் உடற்சூடு குறையும், சமிபாட்டில் மந்தம் ஏற்படும். இதனையே கீழ்வரும் பதார்த்தகுண சிந்தாமணி நூல் பாடலும், யாழ்ப்பாண சித்தமருத்துவ நூல் பாடலும் கூறுகின்றன.

"செய்யவுளுந் திற்குச் சிலேத்தும வனிலம் பிறக்கும்
வெய்யபித்தம் போம்மந்தம் வீறுங்காண் – மெய்யதனி
லென்புருக்கி தீரு மிடுக் கதிபலமாம்
முன்பு விருத்தியுண்டா முன்"

– பக். 253, பதார்த்தகுண சிந்தாமணி.

"சிறுபய றதன்ப ருப்பாற் பயித்தியம் பித்தந் தீரும்
மறுவறு மதுர முண்டா மந்தமாம் பெலனு மாகும்
கறையிலா வுளுந்து வாதம் மந்தமாங் காது நோய்க்காம்
அறைதட்டைப் பயறு வாத மதனோடுட் டணமுண் டாமே"

– பக்.63, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி.

## எமது பாரம்பரிய உணவுகளில் உளுத்தங்களி

**தேவையான பொருட்கள்**

உளுந்து மா – 100 கிராம்
அரிசி மா – 100 கிராம்
பனங்கட்டி – 100 கிராம் அல்லது தேவையான அளவு.
நல்லெண்ணெய் – 4 மேசைக்கரண்டி

இவற்றில் உளுந்து மாவுக்கும் அரிசி மாவுக்கும் இடையிலான விகிதம் இடத்துக்கிடம் மாறுபடுகின்றது. அதே போல்சில இடங்களில்தேவையான அளவு தேங்காய்ப்பூ, வெந்தயம் என்பனவும் சேர்க்கப்படுகின்றன.

அரிசிமாவையும், உளுத்தம்மாவையும் கலந்து தேவையான அளவு நீர்விட்டு அடுப்பிலேற்றி கொதிக்கவிடவும். பின்னர் மிதமான தீயினில் கொதிக்கவிட்டபடி நல்லெண்ணெய்யை சேர்த்து கலக்கவும். கொதித்து வரும்போது பனங்கட்டியினைக் கரைத்து விடவும். ஐந்து நிமிடம் நன்றாகக் கொதித்து பனங்கட்டி இறுகி வரும்போது இறக்கிக் கொள்ளவும்.

பீனிச நோயுள்ளவர்கள் (தும்மல், மூக்கால் நீர்வடிதல்) பனங்கட்டிக் கரைசலுடன் சிறிதளவு சுக்குத்தூளை (வேர்க்கொம்பு) சேர்த்துக் கொள்ளலாம்.



உளுந்தங்களி
Image source - www.tamiltwin.com

பருவமடைந்த பெண்களுக்கு உளுந்தங்களி கொடுப்பது பாரம்பரியமாக கொள்ளப்படுகின்றது. ஆனால் இச்செயற்பாடானது ஏனையவருக்கு ஒரு விழிப்புணர்வு செயற்பாடாகவே மேற்கொள்ளப்படும் சம்பிரதாய செயன்முறை ஆகும். உண்மையில் பருவமடையும் வயதை அண்மித்தவர்களுக்கு (8 வயது 13 வயதுவரை) மேற்படி களியானது அன்றாட உணவுப் பழக்கங்களுடன் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

திருமணம் முடித்த தம்பதிகளுக்கும் உளுத்தங்களியானது அன்றாட உணவில், திருமண விருந்துபசாரங்களில் உணவில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் ஆரோக்கியமான சந்தானவிருத்தி ஏற்பட ஏதுவாகின்றது.

மகப்பேற்றின் பின்னர் உழுந்து சேர்ந்த உணவானது 14 நாட்களுக்குப் பின்னரே தாய்க்கு கொடுக்கப்படுகின்றது. இதற்கான காரணம் உளுந்து சமிபாட்டில் மந்தத்தை ஏற்படுத்துவதே ஆகும். இதனால் குழந்தைக்கு அஜீரணம், சத்தி, வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி என்பன ஏற்படுகின்றன. குழந்தை பிறந்து வெளியுலக தட்ப வெப்பநிலைகளுக்கு பழக்கப்பட்ட பின்னர் சமிபாட்டுத்தொகுதி சீரடைந்த பின்னர் உளுத்தங்களி தாய்க்கு கொடுக்கப்படுகின்றது.

புரதச்சத்தில் உள்ள பலவகையான அமினோ அமிலங்களையும் தேவையான ஊட்டச்சத்துக்களையும் கொண்டுள்ள உளுந்தானது களி, தோசை, இட்டலி, பாற்பிட்டு, வடை, பயற்றம்உருண்டை, பொடி என பல்வேறு பாரம்பரிய உணவுகளிலும் இடம்பிடித்துள்ளது.

### உளுந்துக் கஞ்சி

"சிறுபருப்புக் கஞ்சிபித்தந் தீர்க்கு முளுந்தி
னுருபருப்புக் கஞ்சிவளிக் கூக்க – முறியகபம்
பச்சரிசிக் கஞ்சி பவனகபத்தைப் போக்குங்
கச்சிறுக்குங் கொங்கைமின்னே காண்"

– பக்.395, பதார்த்தகுண சிந்தாமணி



பச்சைப்பயறு

Image source - maalaimalar.com

சிறுபயறு - பச்சரிசி சேர்த்துக் காய்ச்சிய கஞ்சி பித்த தோசத்தின் அதிகரிப்பை, பித்ததோச அதிகரிப்பி னால் ஏற்பட்ட நோய்களைக் குறைக்கும்.
அதேபோல் உளுந்து - பச்சரிசி சேர்த்துக் காய்ச்சிய கஞ்சி வாத தோசத்துக்கு பலமாகவும், உடலையும் வளர்க்கும். எனவே வாதநோய்களில் உளுந்துப்பா வனை அபத்தியமாக (சேர்க்கக்கூடாதது) உள்ளது டன் பொதுவாக நோய்நிலைகளில் வாததோசம் பாதிக்கப்பட்டுள்ளதால் உளுந்து பொதுப் பத்தியத் தில் அபத்தியமாகவும் உள்ளது.

மந்தகுணத்தை தோற்றுவிக்கும் உளுந்தானது நோய் நிலைகளில் அஜீரணத்தை ஏற்படுத்தக்கூடியது. எனவே உளுந்து உணவுகளை நோய்கள் வந்து மாறிய பின்பு உடலைத் தேற்றுவதற்காக உண்ணுதல் வேண் டும்.
பச்சரிசிக் கஞ்சி கபதோசத்தை போக்கக் கூடியது.

## பயறு

பயறு வகைகள் பல்வேறு வகையாக, சிறுபயறு, பச் சைப் பயறு, பெரும்பயறு, தட்டைப்பயறு, கொடிப் பயறு என்பன காணப்படுகின்றன. சிறுபயறு, பச்சைப்ப யறு, தட்டைப்பயறு என்பன அதிகம் புழக்கத்தில் உள்ளவை. இவற்றின் குணங்கள், ஊட்டச்சத்துக்கள் பெரும்பாலும் ஒன்றுக்கொன்று அண்மித்தனவா கவே காணப்படுகின்றன.

## பச்சைப்பயறு

**"பச்சைப் பயறதுதான் பாரிற பயித்தியத்தை**
**யச்சமற நாளு மகற்றுங்காண் – கச்சுலவு**
**கொங்கைமட மாதே குளிர்ச்சியெனபா ரெப்போதுந்**
**தங்கு வாதத்தைத் தரும்"**

**– பக். 254, பதார்த்தகுண சிந்தாமணி**

பச்சைப் பயறானது பித்ததோசத்தை சமநிலையில் வைத்திருக்கும். வாயு வைத்தரும். உடலுக்கு குளிர்ச்சி யைத் தரும்.

பொதுவாக பருப்பு வகைகளை முளைவிட்டபின் பயன்படுத்து வது ஊட்டச்சத்துக்கள் கூடுதலா கக் கிடைக்க வழிவகுக்கின்றது. இவ்வாறு முளைவிட்ட பருப்புவ கைகளை கொண்ட உணவுகள் "SUPERFOODS" என அழைக்கப்படு கின்றன. இலைக்கஞ்சி வகைகளுக் கும் முளைவிட்ட பயறு பயன்ப டுத்தப்படுவது நன்று.
பருப்பு வகைகள் மட்டுமன்று தானி யங்கள், ஏனைய விதைவகைகளும் முளைக்க விட்டு பயன்படுத்துவது நன்று.

## முளைவிட்ட பயறு அல்லது பருப்பு வகைகள் பயன்படுத்துவதால் கிடைக்கும் நன்மைகள்

குறைந்த செலவில் அதிக ஊட்டச்சத்துக்களைக் கொண்ட முழுமையான உணவாக அமையும்.
நீண்டகால ஆரோக்கியத்துக்கு சிறந்தது. அத்துடன் நோய்களில் இருந்து பாதுகாக்கும். எனவே இவற் றைத் தேவையான அளவு உற்பத்தி செய்வதன் மூலம் ஊட்டச்சத்துக் குறைபாடுகளை தவிர்த்துக்கொள் ளலாம்.
பருப்புவகைகள் முளைவிடும்போது அங்கு பல இர சாயன நிகழ்வுகள் நிகழ்ந்துவிடுகின்றன. சிக்கலான நிலைகளில் இருந்து ஊட்டச்சத்துக்கள் இலகுவாக சமிபாடு அடைந்து அகத்துறிஞ்சக்கூடிய நிலைக்கு மாறிவிடுகின்றன. அதேவேளை மேற்படி பருப்பு வகைகளில் இருந்து ஊட்டச்சத்துக்களை பெறுவ தற்கு விரோதமாக உள்ள காரணிகளும் அழிக்கப்படு கின்றன. முளைவிட்ட பருப்புவகைகளில் புரதம், நார்ச்சத்து, B வகை உயிர்ச்சத்துக்கள் பெரிய அளவில் அதிகரித்துக் கொள்கின்றன. மாப்பொருள் குறைவ டைவதால் கலோரிகளும் குறைவடைந்து கிடைக் கின்றது.
அண்ணளவாக 8 வீதம் நீரின் அளவு அதிகரிக்கின் றது. நார்ச்சத்தும், நீரின் அளவும் அதிகரிப்பதால் உணவின் சமிபாட்டுச் செயற்பாடுகள் சீராக நடக்க உதவுகின்றன.
முளைவிடும் செயற்பாட்டின்போது புரதங்கள் அமினோ அமிலங்களாகவும், மாப்பொருட்கள் ஒலி கோசக்கரைட்டுக்களாகவும் (குளுக்கோஸ், சுக் ரோஸ்), கொழுப்புக்கள் கொழுப்பமிலங்களாகவும் மாற்றப்படுகின்றன.

இங்கு பருப்புவகைகளில் உள்ள மாப்பொருட்க ளில் இருந்து ஒலிகோசக்கரைட்டுகளாக மாற்றப்ப டும்போது வாயுக்கள் தோன்றும். முளைவிட்ட பருப்புவகைகளில் இவை 90% குறைக்கப்படு கின் றன. எனவே முளைவிட்ட பருப்புவகைகளை உள் ளெடுக்கும்போது வாயுத்தொல்லை ஏற்படாது போகும்.

உணவு உண்ட திருப்தி தன்மையை (*High Satiety index*) அதிகம் ஏற்படுத்துவதாலும் குறைந்த கிளைசீமிக் சுட்டியை (*Glycemic Index*) கொண்டிருப்பதாலும் நீரிழிவு, அதி உடற்பருமன் போன்றவற்றைக் குறைக்கின்றது.

தானியங்களை முளைக்கவிடும்போது மிகவும் சுத்தமான நீரில் சுத்தமான பாத்திரத்தில் முளைக்கவிட வேண்டும். அல்லது கிருமித்தொற்றுக்கள் (*Salmonella, E coli*) ஏற்பட சாத்தியக் கூறுகள் உண்டு.

முளைவிட்ட தானியங்களை நீண்ட நாள் பயன்படுத்த அல்லது மேலும் செறிவாகப் பயன்படுத்துவதற்கு காலை வெயிலில் காயவைத்து அல்லது குறைந்த வெப்பநிலையில் வறுத்து அதனைத் தூளாக்கி சுத்தமான போத்தலில் பாதுகாப்பாக வைத்திருந்து தினமும் நாம் உட்கொள்ளும் உணவுடன் ஒரு தேக்கரண்டி வீதம் சேர்த்துக்கொள்ளல் வேண்டும்.

## பயற்றம் உருண்டை

இது மிகவும் சத்தான ஆகாரம். இடைப்பட்ட நொறுக் குத்தீனியாகவும் பயன்படுத்தலாம்.

### தேவையான பொருட்கள்

பயறு – கிலோ
சீனி – கிலோ
தேங்காய் – 1 பெரியது
ஏலக்காய் – 10
சீரகம் – 1 தேக்கரண்டி
மிளகு – தேக்கரண்டி
உப்பு – தேவையான அளவு
தேங்காய் எண்ணெய் – 1 லீற்றர்
பயற்றம் உருண்டை தோய்ப்பதற்கான கலவை
வறுத்த வெள்ளை அரிசிமா – 2 சுண்டு
உப்பு – தேவையான அளவு
மஞ்சள் – தேவையான அளவு

தேங்காயைத் துருவி பொன்னிறமாக வறுத்து எடுத்துக் கொள்க. சூடாக்கிய ஏலத்தை அரைத்து, வறுத்து அரைத்த பயற்றம்மாவுடன் சேர்க்கவும்.

மேற்படி பயற்றம் மாவுடன், அரைத்த தேங்காய்ப்பூ, சீனி, சீரகம், மிளகுத்தூள் என்பன கலந்து நன்கு கொதித்த தண்ணீரைவிட்டு கையில் ஒட்டாதவாறு குழைத்து அளவான உருண்டைகளாக உருட்டி 24 மணிநேரம் உலர வைக்கவும்.

அரிசி மாவினுள் அளவாக உப்புத்தூள், மஞ்சள் தூள் என்பவற்றை சேர்த்து தண்ணீர்விட்டு கூழ்ப்பதமாகக் கரைத்து ஒவ்வொரு உருண்டைகளாக எடுத்து இந்த மாக் கரைசலில் தோய்த்து கொதிக்கும் எண்ணெயில் இட்டு பொன்னிறமாகப் பொரித்தெடுக்கவும்.

## காராமணி
## தட்டைப்பயறு / கௌபி (Cowpea)

பொதுவாக "கௌபி - *Cowpea*" என அழைக்கப்படும் காராமணியானது தட்டைப்பயறு எனவும் அழைக்கப்படும். இது வெள்ளை, கருமை, செந்நிறத்தில் காணப்படுகின்றது. இது பயறு இனத்தைச் சார்ந்தது.




**"தட்டைப் பயறுமந்தஞ் சன்னிதரும் வெண்பயறு
முட்டியே மெய்யின் முதிர்வதாக் – கட்டருக்குங்
காணாய் கரும்பயறு கம்முறுநீர் வாதமுடன்
கோணு வாதத்தையும் போக்கும்"**

**– பக். 254, பதார்த்தகுண சிந்தாமணி.**

தட்டைப்பயறு மந்தத்தை தந்து திரிதோசத்தையும் அதிகரித்து சன்னியை ஏற்படுத்தும். எனவே நீண்ட நாட்கள் தொடர்ச்சியாக பயன்படுத்திக் கொள்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

(தொடரும்)



18 நூற்றாண்டில் யாழ்ப்பாண வீடு
வெளிநாட்டு யாத்திரீகன் பார்வையில்ஓவியமாக

Image source - www.aasd.com.au

# வட இலங்கையில் சாதி : பிரித்தானிய காலனிய அரசின் கொள்கையும் நடைமுறைகளும் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதி குறித்த நுண்ணாய்வு




கந்தையா சண்முகலிங்கம்


இத்தொடர் யாழ்ப்பாணத்தில் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்தில் சாதியக் கட்டமைப்பின் இருப்பியலையும், சாதிமுறையின் இறுக்கமான பின்பற்றுகைகளையும் பற்றிய ஆங்கில ஆய்வுக்கட்டுரைகளை மொழி பெயர்த்து வழங்குவதாக அமைகின்றது.

சாதி வழமைகளை மீறக்கூடாது என்ற கடும்போக்கிற்கு உதாரணமாக திகழும் இன்னொரு பிணக்கு 1830 ஆம் ஆண்டில் எழுந்ததை சுட்டிக்காட்டலாம். மீன்பிடித்தொழில் செய்வோரில் ஒரு பிரிவினரான திமிலர் என்ற சமூகப்பிரிவினரிடம் மணியகாரரர் என்னும் உயர்நிலை அதிகாரி ஒருவர் பொது வேலையை இலவச ஊழியமாக வழங்கும்படி கட்டளையிட்டார். யானைகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கான இறங்குதுறை அமைப்பதற்கு பனங்குற்றிகள் தேவைப் பட்டன, இப்பனங்குற்றிகளை இலவசமாக ஏற்றிக்கொண்டு வரும்படி இம்மணியகாரர் உத்தரவிட்டார். ஆனால் திமிலர் சமூகப்பிரிவினர் இவ்வுத்தரவுக்கு பணிய மறுத்து எதிர்ப்புத்தெரிவித்தனர். மணியகாரர் இதனை ஏற்றுக்கொள்ள மறுத்து பழைய வழமையின்படி இச்சேவையை குறித்த சமூகப்பிரிவினர் வழங்க வேண்டும் என வாதாடினார். அதேவேளை தாம் பிரித்தானிய நிர்வாகத்தின் கட்டளையை மீறியதையும் மணியகாரர் ஒத்துக்கொண்டார். அப்போது யாழ்ப்பா ணத்தின் கலெக்டராக இருந்த பீ. ஏ. டைக் திமிலர்களுக்குக் கொடுக்க வேண்டிய கூலியை மணியகாரர் தனது சம்பளத்தில் இருந்தே கொடுக்க வேண்டும் எனக்கட்டளையிட்டார், இவ்விதம் மணியகாரரின் முறையற்ற செயலுக்கு பீ. ஏ. டைக் நிவாரணம் வழங்கினார்.

இந்தக் காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்குநாட்டின் சமத்துவக் கருத்துக்கள் உட்புகுந்திருந்தன. இருந்தபோதும் சாதிப் பிரிவினைகளும் சாதி நடை முறைகளும் நீடித்தன.

{காதணிகளை அணியத்தடை, இலவச பொது ஊழியம் ஆகிய இரு விடயங்களிற்கு சான்றாதாரம் முறையே SLNA (SRI LANKA NATIONAL ARCHIVES) 20/11/ 54 கலெக்டரின் டையரிக்குறிப்புகள் 10 ஏப்ரல் 1830, SLNA 20/11 54 - 30 செப்டம்பர் 1830 என்பவற்றில் பதிவாகியுள்ளன.}

அன்றைய காலத்தில் பிரித்தானிய அரச இயந்திரத்தை இயக்குபவர்களாக கிராமமட்டத்தில் கீழ்நிலையில் பல தலைமைக் காரர்கள் இருந்தனர். இவர்களோடு பல கிராமங்கள் உள்ளடக்கிய பெரும்பகுதிகளுக்கு பொறுப்பான உயர் அதிகாரி களாக தலை மைக்காரர்கள் சில ரும் இருந்தனர்.

## கோல்புரூக் ஆணைக்குழு

இலங்கையில் நிர்வாக சீர்திருத்தங்களை பற்றி ஆராய்ந்து அறிக்கையிட நியமிக்கப்பட்ட கோல்புரூக் கமரன் ஆணைக்குழு இராஜகாரியம் என்ற இலவச பொது ஊழியத்தை முற்றாக ஒழிப்பதற்கு முடிவு செய்தது. இலவச பொது ஊழியம் பற்றிய தகவல்களை அரசாங்கம் திரட்டியது. பயிர்செய்கை நிலத்திற்கு பயிரிடும் உரிமைக்கு பதிலீடாக இலவச பொது ஊழியம் பெறப்படுகின்றதா? என்ற விபரம் கலெக்டரிடம் இருந்து பெறப்பட்டது. பயிரிடும் உரிமைக்கு பதிலீடாக உடல் உழைப்பை வழங்கவேண்டும் என விதிப்பதை அனுமதிக்கக்கூடாது என அரசாங்கம் முடிவுசெய்தது. இந்த முடிவினை நடைமுறைப்படுத்துவதன் முதற்படியாக யாழ்ப்பாண மாவட்ட கலெக்டர் தமக்கும், தமக்கு கீழ் பணியாற்றும் அதிகாரிகளுக்கும் உத்தியோக நிமித்தம் சுற்றுப்பயணம் செய்யும் போது சுற்றுலா கொட்டகைகள் இலவசமாக அமைத்துக்கொடுக்கும் வழக்கத்தை நிறுத்தினார். முன்னைய வழமைகளின்படி குறிப்பிட்ட சாதியை சேர்ந்தோர் இலவச ஊழியம் செய்து கலெக்டரும், அதிகாரிகளும் தங்குவதற்கான கொட்டகைகளை அமைத்துக்கொடுப்பதுண்டு. இது கலெக்டரின் கட்டளைப்படி நிறுத்தப்பட்டது.

மேற்குறித்த சீர்திருத்தப் பணிகள் இடம்பெற்ற போதும் தமிழ்ச்சமூகத்தின் உள்ளார்ந்த கூறாக சாதி நீடித்து வந்தது. 1830ஆம் ஆண்டில் வட இலங்கையின் உயர்சாதி தலைமைக்காரர் ஒருவர், சமூகத்தில் தாழ்நிலையில் இருக்கும் சாதியினர் தம்மைப் போன்றவர்களுக்கு வழமைகளின்படி கொடுக்கவேண்டிய மரியாதையை இப்போது கொடுப்பதில்லை என அரசாங்க அதிபருக்கு முறையிட்டார். அடுக்கமைவுடைய சாதிக்கட்டமைப்பில் உயர்சாதியினருக்கு தாழ்நிலையில் உள்ள சாதியினர் பலவகையான நடத்தைகள் மூலம் உயர்வு தாழ்வை குறியீட்டு வடிவில் வெளிப்படுத்துவதுண்டு. இதனையே இந்த உயர்சாதி தலைமைக்காரர் குறிப்பிட்டார். ஆயினும் சாதி அந்தஸ்து அடிப்படையிலான நடத்தை முறைகளுக்கு பிரித்தானிய அரசாங்கம் அங்கீகாரம் கொடுக்க முடியாதென்பதால் அந்தக் காலகட்டத்தில் கலெக்டராக இருந்த பீ. ஏ. டைக் தலைமைக்காரரின் முறையீட்டை ஏற்கவில்லை. ஆனால் நிர்வாக வேலைகளைச் செய்விப்பதற்கு தலைமைக்காரர்கள் அவசியமானவர்களாக இருந்ததால் அவர்களை திருப்திப்படுத்த வேண்டியவராகவும் டைக் இருந்தமையால், 'நீங்கள் விரும்பினால் ஆளுநருக்கு முறையீடு செய்யலாம்' என்று தலைமைக்காரரிடம் கூறினார்.

அன்றைய காலத்தில் பிரித்தானிய அரச இயந்திரத்தை இயக்குபவர்களாக கிராமமட்டத்தில் கீழ்நிலையில் பல தலைமைக்காரர்கள் இருந்தனர். இவர்களோடு பல கிராமங்கள் உள்ளடக்கிய பெரும்பகுதிகளுக்கு பொறுப்பான உயர் அதிகாரிகளாக தலைமைக்காரர்கள் சிலரும் இருந்தனர். இவ்விரு வகை தலைமைகாரர்களையும் திருப்திப்படுத்தாமல் பிரித்தானியர் நிர்வாகத்தை இயக்க முடியாத நிலை இருந்தது.

நிர்வாகத்தின் இன்றியமையாத பகுதியினராகவும், அரசின் முகவர்களாகவும் விளங்கிய தலைமைக்காரர்களை புறந்தள்ளி மாகாண நிர்வாகத்தை இயக்க முடியாது என்பதைப் பிரித்தானியர் உணர்ந்தனர். இந்தக் காரணத்தால் தலைமைக்காரர்களுக்கு உரிய மரியாதையை வழங்குதல் வேண்டும் என பிரித்தானிய நிர்வாகம் விரும்பியது. 'கடந்த சில ஆண்டுகளில் உயர்நிலைத் தலைமைக்காரர்களின் நடத்தையில் மாற்றத்தை அவதானிக்கமுடிகிறது. அவர்கள் தமக்கு மரியாதை தரப்பட வேண்டும் என முறையிடுகின்றனர்' என்று அரசாங்க அதிபர் 1844இல் குடியேற்ற நாட்டு செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டார்.

## கச்சேரி வளவில் கட்டப்பட்ட கிணறு

உயர்நிலை தலைமைக்காரர்கள் கச்சேரிக்கு வரும்பொழுது தண்ணீர் குடிப்பதற்கு எல்லோருக்கும் பொதுவான கிணற்றைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. இதன்போது தாம் அவமதிப்புக்கு உட்படுவதாக கருதினர். தீட்டுப்பட்ட நீரை குடிக்கவேண்டியிருப்பதாக அவர்கள் முறையிட்டனர். அரசாங்க அதிபர் அவர்களுக்கு தனியான கிணறு ஒன்றை வெட்டுவித்து கொடுத்தார். தலைமைக்காரர்களின் சுயமரியாதை பேணப்படவேண்டும், அவர்களுக்குரிய மதிப்பும் மரியாதையும் வழங்கப்பட வேண்டும் என அரசாங்க அதிபர் கருதினார். (SLNA - 8/133 - NO 355 குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு எழுதிய கடிதம்) பழமையான வழமைகளும் சாதிப்பாகுபாடும் தொடரக்கூடாது என அரசாங்கம் அறிவித்தது. இந்த அறிவித்தல் கிடைத்ததும், அரசாங்கக் கொள்கைகளைச் சிறிதும் வழுவாது நடைமுறைப்படுத்துவதில் கண்ணும்



**சலவைத் தொழிலுடன் தொடர்புடைய சாதியினர் (மாதிரிப்படம்)**

**Image source - www.flickr.com/internetarchivebookimages**

கருத்துமாகவிருந்த அரசாங்க அதிபர், அம்மை நோய் தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களின் விபரங்க ளைப் பதிவுசெய்யும்போது நபர்களின் சாதிப்பற்றிக் குறிப்பிடுதல் ஆகாது என அறிவித்தார். அரசாங்க அதிபர் வடமாகாணத்தின் வருவாய் அதிகாரியுமாவார். அவர் வருவாய் அதிகாரி என்ற முறையில் உயர்நீதிமன்றத்திற்கு, மாகாணத்தின் மஜிஸ்திறேட் நீதிமன்றங்களின் வழக்கு விபரங்கள் பற்றிக் குறிப்பிட்ட படிவங்களில் தகவல்களை அனுப்பவேண்டியிருந்தது. அவற்றில் மனுதாரர், எதிராளி ஆகிய தரப்பினரின் விபரங்களை பதியும்போது சாதி பற்றியும் குறிப்பிடவேண்டியிருந்தது. இது 1845ஆம் ஆண்டு மார்ச் மாதம் அனுப்பப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு முரணாக இருப்பதையும், வேறு எந்தப் பதிவேடுகளிலும் தாம் சாதிப்பெயர்களைக் குறிப்பிடுவதில்லை எனவும், அரசாங்க அதிபர் சுட்டி காட்டினார். (SLNA - 6/1917B - NO 213 அரசாங்க அதிபர் குடியேற்றநாட்டு செயலாளருக்கு யூலை 20, 1847இல் எழுதிய கடிதம்)

### பருத்தித்துறைச் சம்பவங்கள்

1849ஆம் ஆண்டு மார்ச் மாதம் பருத்தித்துறையிலுள்ள புலோலி என்ற கிராமத்தின் இரும்பு வேலை செய்யும் கொல்லர் சாதியினரால் அரசாங்க அதிபருக்கு முறைப்பாடு ஒன்று அனுப்பப்பட்டது. அந்த முறைப்பாட்டில் கிராமத்தில் தமக்கு எதிராக நிலவும் சாதி ஒடுக்குமுறை நடவடிக்கைகள் தொடர்பில் அவர்கள் விபரித்திருந்தனர். அரசாங்க அதிபர் இது தொடர்பில் விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டது. தலைமைக்காரராக அப்பகுதியில் கடமையாற்றுபவர் தம் சாதியில்லாத உயர்சாதியினராக இருப்பதால் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளை ஏற்றுக்கொள்வதில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. சாதிப் பிரச்சினை பற்றிய இந்த விடயத்தை தாம் விசாரிக்கலாமா அல்லது தலையிடாமல் விலகியிருப்பது மேலானதா என்று தம் இக்கட்டான நிலை பற்றி அரசாங்க அதிபர் குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு தெரிவித்தார். சாதி ஒரு நாற்றமெடுக்கும் விடயம் அதில் இருந்து தூரநிற்பதே மேல் என அரசாங்க அதிபர் கருதினார் என்றே இதிலிருந்து தோன்றுகிறது.

மேற்குறிப்பிட்ட சம்பவம் உயர்சாதி வேளாளர்களுக்கும், அவர்களுக்கு அடுத்த படிநிலையில் இருப்போர் எனக்கூறத்தக்கவருக்கும் இடையிலானது. பருத்தித்துறைப் பகுதியில் சலவைத் தொழிலாளர், முடித்திருத்துவோர் ஆகியோருக்கும் வேளாளருக்கும் இடையிலான பிணக்கு ஒன்றும் அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுச்செல்லப்பட்டது. தமது தொழில்களைச்செய்வதற்கு உயர்சாதியினர் தடைவிதிப்ப

தாக இவர்கள் முறையிட்டனர். இவ்வாறான அநீதிகள் இழைக்கப்படுகின்றன என்பதை கண்டறிந்த அரசாங்க அதிபர் அப்பகுதி தலைமைக்காரர்கள் நீதியாக நடப்பதற்கு தவறியுள்ளனர் என்பதை சுட்டிக்காட்டினார். இரும்பு வேலை செய்யும் சாதியினர் அனுப்பிய முறைப்பாட்டு கடிதத்திலும், தம்சாதியைச் சேர்ந்த ஒருவர் தலைமைக்காரராக இருந்திருந்தால் தாம் அவருக்கு முறையிட்டிருப்போம். அவர் தம்முறைப்பாடுகளை அனுதாபத்தோடு கேட்டிருப்பார் என்றும் குறிப்பிடப்பட்டது. இந்த சம்பவங்களின் அடிப்படையில், 1850ஆம் ஆண்டைத் தாண்டும் வேளையிலும் இத்தகைய நடைமுறைகள் நீடித்தன என்பதை அவதானிக்க முடிகிறது. (SLNA - 6 2097 - NO 250 அக்டோபர் 1ஆம் திகதி 1851 கடிதம் இன்னும் சில)

## நீதிமன்ற வழக்குகள்

இந்தக் காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கு நாட்டின் சமத்துவக் கருத்துக்கள் உட்புகுந்திருந்தன. இருந்த போதும் சாதிப்பிரிவினைகளும் சாதி நடைமுறைகளும் நீடித்தன. வெவ்வேறு சாதிக்குழுக்களுக்கிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. அத்தகைய பிணக்குகள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத்தொடரப்பட்டாலும் அவை இயல்பான நிகழ்வுகளாக இருந்தன. 1862ஆம் ஆண்டு வெவ்வேறு சாதிக்குழுக்களிடையே சாவகச்சேரியில் மோதல்கள் இடம்பெற்றன. அவ்வேளை நிர்வாகத் துறையினர் அம்மோதல்களில் தலையிடாது விலகிநின்று கொண்டு, நீதிமன்றத்தையே அப்பிணக்குகளை விசாரித்து தீர்ப்பளிக்கும்படி விட்டனர். ஊர்காவற்துறையில் றோமன் கத்தோலிக்கத்தைச் சேர்ந்த இருபிரிவினருக்கிடையே இறந்தவர்களின் உடலை புதைத்தல் தொடர்பான பிணக்கு ஒன்று எழுந்தது. “சுதேச வழமைகள் தொடர்பான இந்த விடயத்தில் தலையிடும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை” எனக் குறிப்பிட்ட அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்ட தரப்பினர் நீதிமன்றத்தில் நிவாரணத்தை பெற வேண்டும் எனத் தெரிவித்தார்.

அரசாங்க அதிபரின் 1862ஆம் ஆண்டு கடிதத்தில் சாதிய பிணக்குகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. (SLNA - 10/ 1454 - 421 NO 293) இவை போன்ற பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் வர்க்க முரண்பாடுகள் எழுந்தன என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். 1863ஆம் மே மாதத்தில் மட்டும் இதுபோன்ற மூன்று சச்சரவுகள் எழுந்தன.

தச்சுத் தொழில் செய்பவர் சாதியைச் சேர்ந்த ஒருவர் மகளின் திருமணத்திற்கு பந்தல் ஒன்று அமைத்து, அதற்கு வெள்ளைச் சீலை கட்டிக்கொண்டாடினார். உயர்சாதியினரான ஊரவர்கள் சிலர் இவ்வாறு அவர் கொண்டாடுவதை எதிர்த்ததோடு பலாத்காரத்தை உபயோகித்து குறிப்பிட்ட நபரை தடுத்து திருமணவிழாவைக் குழப்புவதற்கு முனைந்தனர். இதில் தலையிட்டு அமைதியை பேணுவதற்கு தலைமைக்காரரால் இயலாமல் போயிற்று. இந்நிலையில் உதவி அரசாங்க அதிபர் அவ்விடத்திற்கு நேரில் வந்து சமூகம் கொடுத்ததனால் அந்த விழா உயர்சாதியினரால் குழப்பப்படாமல் நடைபெற்றது.

பிரித்தானியர் உத்தியோக முறையில் சாதியை ஒருபோதும் அங்கீகரிக்காதபோதும், யாரும் சட்டத்தின் முன் சமம் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்துவது இலகுவாக இருக்கவில்லை, பல சந்தர்ப்பங்களில் விட்டுகொடுப்புகள் இடம்பெற்றன. அமைதியாக ஆட்சியை நடத்துவதற்காக சாதிபேதம் காட்டும் நடைமுறைகளை பொறுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. பந்தல் ஒன்றை ஒருவர் அமைத்த பின்னர், அதற்கு வெள்ளை கட்டுவதாயின் முதன்மைத் தலைமைக்காரரிடம் விண்ணப்பம்செய்து அனுமதி பெற்ற பின்னர்தான் சலவைத் தொழிலாளி வெள்ளை சேலைகளை கட்டிப் பந்தலை அலங்கரிக்க முடியும் என்ற விதிமுறையை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது. குறித்த தரமும், அந்தஸ்தும் உடைய வேளாளர் உயர்சாதியினருக்கு மட்டுமே எவ்வித அனுமதியும் பெறாமல் சுதந்திரமாகப் பந்தல் அமைத்து வெள்ளை சேலை கட்டும் உரிமை இருந்தது.

மஜிஸ்திரேற்றுக்கள் சாதிப் பிணக்குகள் விடயத்தில் கடுமையாக நடந்து கொள்ளவில்லை. அவர்கள் நெகிழ்வுப்போக்கையே கடைப்பிடித்தனர் என அரசாங்க அதிபர் டைக் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். ‘சட்டத்தை மதிக்காமல் நடப்பவர்களை கட்டுப்படுத்துவதற்கு முன்னுதாரணமாக அமையக்கூடிய கடும்தண்டனைகள் விதிக்கப்பட வேண்டும் என நான் கருதுகின்றேன். தாழ்ந்த சாதியினர் எனக் குறிப்பிடப்படுபவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். இப்பொழுது எல்லோரையும் சமத்துவமாக நடத்தும் நிலை உள்ளது. சட்டம் வழங்கும் இச்சுதந்திரத்தை தனிநபர் தடையின்றி அனுபவிக்க வழிசெய்யவேண்டும்’ என டைக் குறிப்பிட்டார். நீதிமன்றுகள் சட்டத்தை மீறுபவர்களுக்கு கடும் தண்டனைகளை விதிப்பதன் மூலம் இத்தகைய சட்டமீறல்களைத் தடுக்கலாம் எனவும் அவர் கருதினார்.

டைக் அரசாங்க அதிபராக பதவி ஏற்பதற்கு முற்பட்ட காலமான 1820களில் நீதிமன்றங்கள் உயர்சாதி வேளாளர்களிற்கு சாதகமான சில தீர்ப்புக்களை வழங்கின. உயர்சாதியினரின் சாதிவழமைகளுக்கு ஏற்புடைமையும் அங்கீகாரமும் வழங்குவதாக இத்தீர்ப்புகள் அமைந்தன. டைக் அரசாங்க அதிபராகப் பதவியேற்றபின்னர் சாதிப் பாகுபாடு காட்டப்படுவதை அரசாங்கம் அலட்சியம் செய்யமுடியாது என்பதை வலியுறுத்தினார். இதனால் அவர் காலத்தில் நிர்வாக மட்டத்தில் மனப்பாங்குகளில் மாற்றம் ஏற்படலாயிற்று. (அருமைநாயகம் 1976)

தொடரும்.

# கோல்புரூக் - கமரூன் அரசியல் சீர்திருத்தம்



பி. ஏ. காதர்

1915 க்கு முன்னர் இருந்து இன்றுவரை சிறுபான்மைத் தேசியங்கள் மீது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இன வன்முறை தாக்குதல்களையும், அவற்றின் பின்னணியையும் வரலாற்று பொருள்முதல்வாத கண்ணோட்டத்தில் நேரடி அனுபவங்கள் ஊடாகவும், நூல்கள், செய்திகள் உள்ளிட்ட ஏனைய ஆதாரங்கள் வழியாகவும் இந்தக் கட்டுரைத் தொடர் ஆராய்ந்து விளக்குகின்றது.

பிரித்தானியர் இலங்கையின் மன்னராட்சி முறைமையினை ஒழித்து, முழு நாட்டையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவந்ததுடன், அவர்களின் ஏகபோக நலனுக்காக பல்வேறு மாற்றங்களை செய்திருந்தமையினை முன்னைய கட்டுரையில் அவதானித்திருந்தோம். அதன்தொடர்ச்சியினை இனி பார்க்கலாம். 1830களின் முற்பகுதியில், பிரித்தானியர்கள் இலங்கையில் தங்கள் நிலையை உறுதிப்படுத்துவதை கிட்டத்தட்ட பூர்த்திசெய்துவிட்டனர். ஐரோப்பாவிலும் உலக அரங்கிலும் அவர்களுக்கு பெரிய சவால்கள் இருக்கவில்லை. எனவே தீவின் அரசியல் ஸ்திரத்தன்மையிலும் பொருளாதார இலாபத்தைப் பாதுகாப்பதிலும் அவர்கள் அதிக ஆர்வம் காட்டத் தொடங்கினர்.

ஜெர்மி பெந்தம் (Jeremy Bentham) மற்றும் ஜேம்ஸ் மில் (James Mill) ஆகியோரால் அப்போது முன்வைக்கப்பட்ட சீர்திருத்தவாத அரசியல் சித்தாந்தத்தின் தாக்கத்தால் ஒரு புதிய சிந்தனை அலை உருவாகியிருந்தது. இது பயன்பாட்டுவாதம் (utilitarianism) என்று அறியப்பட்டது. இது ஜனநாயகம் மற்றும் தனிநபர் சுதந்திரம் பற்றிய கருத்தை ஊக்குவிப்பதாக அமைந்தாலும் அடிப்படையில் கைப்பற்றப்பட்ட காலனிகளின் வளங்கள் முழுமையாக பயன்படுத்தப்பட்டு இலாபம் ஈட்டுதல் வேண்டும், அவற்றின் நிர்வாகத்துக்கும் பாதுகாப்புக்குமான செலவீனங்களை அந்தந்த காலனிகளே பொறுப்பேற்கவேண்டும். பிரித்தானியாவிலும் அதன் ஏனைய காலனிகளிலும் உற்பத்தியாகும் பொருட்களை வாங்கி நுகரும் சந்தையாகவும், அவற்றுக்கு தேவையான மூலவளங்களை நல்கும் நாடுகளாகவும் காலனிகள் மாற்றப்படவேண்டும் என்பதே அதன் சாராம்சமாகும்.

அப்போது காலனிகளை லண்டனில் இருந்து நேரடியாக நிர்வகிக்கக்கூடிய அளவுக்கு தொழில்நுட்பம் வளர்ந்து தொலைத் தொடர்பு போக்குவரத்து வசதிகள் அதிகரித்திருந்தன. அவற்றின் அன்றைய வளர்ச்சிக்கேற்ப காலனிகளில் தமக்கு சார்பான ஒரு படித்த அணியையும் அரசியல் வர்க்கத்தையும் உருவாக்கி நிர்வாகத்திலும் அரசாங்கத்திலும் இணைத்துக்கொண்டு, அமைதியான முறையில் காலனிகளை ஆட்சி செய்துகொண்டு வர்த்தகத்தின் மூலம் இலாபமீட்டுவதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

இலங்கைக்கு வந்த சேர். வில்லியம் கோல்புரூக் மற்றும் சார்ல்ஸ் கமரூன் (Sir William Colebrook and Charles



Female labourers peeling coffee using traditional methods

Image source - lankapura.com



Robert Boyd Tytler
"The Father of Ceylon planting"

Image source - cafebistro.lk

*Cameron)* தலைமையிலான குழுவினர் தமது ஆய்வின் பின்னர் 1832இல் ஓர் அறிக்கையை வெளியிட்டனர். அது இலங்கைக் காலனியை ஆளுவதற்கு ஒரு புதிய வடிவத்தை உருவாக்கியது. கோல்புரூக் சீர்திருத்தம், கட்டாய உழைப்பு (இராஜகாரிய) மற்றும் அரசாங்க ஏகபோகங்களுக்கு முடிவுகட்டவேண்டுமெனவும், சிவில் சேவையானது இனம் அல்லது சாதி வேறுபாடின்றி அனைவருக்கும் திறந்திருக்க வேண்டும் என்றும், அனைவருக்கும் கல்வி வழங்கப்படவேண்டும் எனவும், நீதித்துறை ஆளுநரின் கட்டுப்பாட்டில் இருந்து நீக்கப்பட்டு சுதந்திர மாக இயங்க வேண்டும் என்றும், நீதிமன்றங்களில் சட்டம் ஐரோப்பியர்களுக்கும் உள்ளூர்வாசிகளுக்கும் சமனாக இருக்கவேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

அனைத்துக்கும் மேலாக இலங்கையில் ஆளுநர்கள் பொருளாதாரத் துறையிலும் பாதுகாப்புத் துறையிலும் பாதைகள் அமைப்பதிலும் அடைந்த வெற்றி குறித்து லண்டன் காலனியல் அலுவலகம் திருப்தி கண்ட போதிலும், ஆளுநர் நிர்வாகம் நடத்தும் விதம் குறித்து திருப்தி காணவில்லை. சட்டமன்றம் மற்றும் நிர்வாக அதிகாரம் அனைத்தும் ஆளுநரிடம் குவிந்திருந்தன. அவர் ஒரு ஆலோசனைக் குழுவை வைத்திருந்தார் - அக்குழு அவரால் நியமிக்கப்பட்ட ஒன்று - ஆனால் அதன் ஆலோசனையைப் பெறவோ அதற்கு கட்டுப்படவோ அவர் கடமைப் பட்டிருக்கவில்லை. அத்துடன் கண்டி இராச்சியம் ஆக்கிரமிக் கப்பட்ட பின்னர் முழு நாட்டுக்குமான நிர்வாக முறை ஒன்று தேவைப்பட்டது. அத் தேவையை இவ் ஆணைக் குழு நிறைவேற்றியது. முதற் தடவையாக அதுவரை தனி மாகாணமாக நிர்வகிக்கப் பட்ட பழைய யாழ்ப்பாண இராச்சிய பிரதேசம் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. ஆளுநரால் வீட்டோ அதிகாரம் பயன்படுத்தப் பட்டு, நேரடியாக லண்டனில் உள்ள வெளியுறவுத்துறை செயலருக்கு அனுப்பக்கூடிய சட்டமியற்றும் குழுவை அவர் பரிந்துரைத்தார், வரலாற்றாசிரியர் ஜி.சி. மென்டிஸ் கோல்புரூக் - கமரூன் சீர்திருத்தங்களை இலங்கையின் கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையிலான பிளவுக் கோடு *(dividing line)* என்று குறிப்பிடுகிறார்.

**கோப்பிப்பயிர்ச் செய்கையிலே முதலில் அரசாங்க ஊழியர்களும் பின்னர் தொழில்முனைவோரும் ஈடுபட்டனர். கோப்பிப்பயிர்ச் செய்கைக்கு தேவையான நிலம் மலிவாகவும் தாராளமாகவும் கிடைத்தபோது அதற்கு அதிக மூலதனம் தேவைப்படவில்லை.**

அதுவரை கீழ்நாட்டு சிங்களப் பகுதிகள், கண்டிய சிங்களப் பகுதிகள், தமிழ்ப் பகுதிகள் என இன மற்றும் கலாசார அடிப்படையில் நாட்டின் மூன்று நிர்வாகப் பிரிவுகள் காணப்பட்டன. இந்த நிலை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு முழுத் தீவும் ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு ஒரே நிர்வாக முறையின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்று கோல்புரூக் - கமரூன் ஆணைக்குழு முன்மொழிந்தது.

இலங்கை சிவில் சேவையை இலங்கையர்களுக்காக திறப்பதற்கு ஆங்கிலக் கல்விக்கு புதிய முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டிய நிலைமையை இந்த ஆணைக்குழு கட்டாயப்படுத்தியது. அதுவரை போர்த்துகேய மொழியே இலங்கையில் பிரபலமான ஐரோப்பிய மொழியாக இருந்தது. காலப்போக்கில், ஆங்கிலக்கல்வி மேற்கத்தேய மயமாக்கப்பட்ட ஓர் உயரடுக்கின் உருவாக்கத்திற்கு பங்களித்தது. கோல்புரூக்கமரூன் கமிஷன் கல்வி பாடத்திட்டத்தின் தரப்படுத்தலை வலியுறுத்தியது. உள்ளூர் மொழிகளுக்கு பதிலாக ஆங்கிலத்தை மாற்றுவதை ஆதரித்தது. அதனைத்தொடர்ந்து உள்ளூர் ஆங்கிலப் பள்ளிகள் நிறுவப்பட்டன. முன்பு சுதேச மொழியில் கற்பித்த மிஷனரிப் பள்ளிகளும் ஆங்கிலத்தை ஏற்றுக்கொண்டன. ஆயினும் பிரிவெனா பாடசாலைகளும் சுதேச மொழிப் பாடசாலைகளும் தம் நிலை மாறாமல் தொடர்ந்தன.

காலனிகளைக் கொண்டிருப்பது பிரிட்டனுக்கு சாதகமாக இருந்தது. ஆனால் காலனிகளில் இருந்து நன்மைகளைப் பெறுவதற்கு, காலனிகள் பொருளாதார ரீதியில் வளர்ச்சி அடைய வேண்டியது அவசியமாக இருந்தது. அதே நேரத்தில் இங்கிலாந்தில் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வரும் விதத்தில் காலனிகளின் வளர்ச்சி அதற்குத் துணையாகவும் பிரித்தானியாவில் தங்கியிருப்பதாகவும் இருக்க வேண்டும், அதற்குப் போட்டியாக வளர்ந்து விடக்

கூடாது. இதைத்தான் இவர்கள் அறிமுகப்படுத்திய அரசியல்யாப்பும் செய்தது.

பெருந்தோட்டதுறைக்கு சார்பான கோல்புரூக் - கமரூன் ஆணைக்குழுவின் அரசியல், நிருவாக, நீதித்துறை சீர்திருத்தங்கள் பெருந்தோட்டத்துறையின் அபிவிருத்திக்கான கட்டுமானத்தை உருவாக்கிக் கொடுத்ததுடன் இத்துறையின் வளர்ச்சிக்கான பல சலுகைகளையும் வழங்கியது. உதாரணமாக சிவில் சேவை ஊழியர்களின் அதீத சம்பளமும் ஓய்வூதியமும் குறைக்கப்பட்டு அதனை ஈடுசெய்யும் விதத்தில் வர்த்தகப் பயிர்ச்செய்கையில் அவர்கள் ஈடுபடுவதற்கு ஏதுவாக அதுவரை இருந்த பொருளார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தடை நீக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் சிவில்சேவையில் உயர்பதவிகளை வகித்தோர் பிரித்தானியரே. அவர்கள் பெருந்தோட்டங்களை நிறுவுவதில் முண்டியடித்தனர். இதனால் சிவில் சேவையில் அவர்களது கவனம் குறைவதாக காலனியல் செயலகம் கவலை கொண்ட சந்தர்ப்பமும் உண்டு.

## "கோப்பி மேனியா" (Robert Boyd Tytler)

முன்னர் கலிபோர்னியா மற்றும் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற தங்கம் தேடி அலையும் வேட்கை (Gold Rushes) போன்று ஒரு "கோப்பி மேனியா" (Coffee Mania) சிறிது காலத்திற்குள் இலங்கையில் தொடங்கியது.
கே. எம். டி சில்வாவின் கூற்றுப்படி, பிரித்தானிய பவுண்ட் 5 மில்லியன் முதலீட்டிளவிலான கோப்பி இலங்கையில் கொட்டப்பட்டது. 1848களில், சுமார் 600 தோட்டங்களில் 50,000 ஏக்கர் (20,000 ஹெக்டேயர்) நிலம் கோப்பிப்பயிர்செய்கைக்குட்பட்டிருந்தது. கோப்பிச் செய்கைக்கான பரப்பு தொடர்ந்தும் அதிகரித்து வந்தது.

கோப்பிப்பயிர்ச்செய்கையிலே முதலில் அரசாங்க ஊழியர்களும் பின்னர் தொழில்முனைவோரும் (entrepreneurs) ஈடுபட்டனர். கோப்பிப்பயிர்ச் செய்கைக்கு தேவையான நிலம் மலிவாகவும் தாராளமாகவும் கிடைத்தபோது அதற்கு அதிக மூலதனம் தேவைப்படவில்லை. ஆதலால் உள்ளூர்வாசிகளும் அதில் ஈடுபடமுடிந்தது. கோப்பிக்காலம் முழுவதும் உள்ளூர்வாசிகளின் சிறியதும் பெரியதுமான கோப்பித்தோட்டங்கள் மொத்த பெருந்தோட்டத்தின் மூன்றில் ஒரு பங்கினை வகித்தன.

ஆக்லாண்ட், பாய்ட் & கம்பெனி (Ackland, Boyd & Company) கோப்பித் தோட்டங்களை உருவாக்கத் தொடங்கியது. எனினும் சரியான விஞ்ஞான முறை பயன்படுத்தப்படாத காரணத்தால் கோப்பி பெருந்தோட்டம் இரண்டு தசாப்தங்கள் எதிர்பார்த்த பயனைத் தரவில்லை. இந்த நிலைமையை மாற்றிய பெருமை ராபர்ட் பாய்ட் டைட்லர் (Robert Boyd Tytler) என்ற ஸ்காட்லாந்துகாரரையே சாரும். ஜமேக்கா கோப்பி பெருந்தோட்டங்களில் பணிபுரிந்த அனுபவமுள்ள இவரை ஆக்லாண்ட், பாய்ட் & கம்பெனி 1937இல் சேவையில் அமர்த்தியது. இவர் இலங்கையில் மேற்கிந்திய உற்பத்தி முறையை அறிமுகப்படுத்தியதன் மூலம், "இலங்கை தோட்டத்துரைமார்களின் தந்தை" என்று கருதப்பட்டார். இவர் வரும்போது தன்னுடன் பீரி ஜோசப் லபோறி (Pierre - Joseph Laborie) எழுதிய 'சென் டொமிங்கோவிலுள்ள கோப்பித் துரை' (The Coffee Planter of Saint Domingo) என்ற நூலின் பிரதி ஒன்றைக் கொண்டு வந்தார். இதில் ஹைட்டி நாட்டில் இருந்த கோப்பி பெருந்தோட்டங்களில் அடிமை - தொழிலாளரை பயன்படுத்தப்படும் முறை பற்றிய ஆசிரியரின் அனுபவம் விளக்கப்பட்டிருந்தது. அடிப்படையில், இந்தப் புத்தகம் இலங்கையின் பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களை நவீன அடிமைகளாக எவ்வாறு பயன்படுத்துவது என்பதை தோட்டத் துரைமாருக்கு போதிக்கும் பைபிளாக மாறியது. அதே சமயம் அப்போதைய வளர்ச்சிபெற்ற தொழில்நுட்பங்களான உரியமுறையில் பயிர் நடுதல், உரமிடுதல், கத்தரித்தல், அறுவடை ஆகியவற்றை கற்றுத்தந்து முறைப்படுத்தியது.

### 1848 இல் கோப்பி சந்தித்த முதலாவது நெருக்கடி

1846 தொடக்கம் 1948 வரை நிலவிய பொருளாதார நெருக்கடி கோப்பிப்பெருந்தோட்டத்தின் இருப்பையே கேள்விக்குறியாக்கி பீதியை ஏற்படுத்தியது. சுமார் பத்தில் ஒரு கோப்பித்தோட்டங்கள் நட்டத்தால் கைவிடப்பட்டன. 1843இல் பத்தாயிரம் பவுணுக்கு விற்கப்பட்ட தோட்டங்களின் விலை 1847இல் வெறுமனே 440 பவுண்களாகக் குறைந்தன. போக்குவரத்துப்பாதைகள் போடப்படுவது நிறுத்தப்பட்டது. தாம் ஒருமித்து செயற்படுவதற்காகவும் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காகவும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த சட்டநிருபணசபைக்கு தமது பிரதிநிதிகளை அனுப்புவதற்கும் 1842 இல் ஏற்கனவே அமைந்திருந்த முதலாவது தோட்டத்துரைமார் அமைப்பான இலங்கை விவசாய சமூகம் (Ceylon Agricultural Society) செயலிழந்து போனது. அது மீண்டும் 17 பெப்ரவரி 1854 ஆம் ஆண்டு இலங்கை தோட்டத் துரைமார் சம்மேளனமாக மறு அவதாரம் எடுத்தது. பீதியடைந்த தோட்ட உரிமையாளர் மாற்றுப்பயிர்களைத்தேடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர்.
இருப்பினும், கோப்பி பயிர்ச்செய்கை பற்றிய விஞ்ஞானபூர்வமான அறிவு சிலருக்கே இருந்தது. ஒரு ஆதாரத்தின்படி, 95% தோட்டத்துரைமார் ஸ்கொட்லாந்துக்காரர்கள், அவர்களில் பாதி பேர் அபெர்டீனைச் (Aberdeen) சேர்ந்தவர்கள். அவர்களில் பெரும்

பாலும் தொழில்சார் தகைமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படாமல் தனிப்பட்ட அறிமுகத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள். அதனால் 1837இற்கு முன் அமைக்கப்பட்ட அனைத்து கோப்பித் தோட்டங்களும், அதன்பின் சிலவும் தோல்வி யடைந்தன.

ஆயினும் எதிர்பார்த்ததைவிட துரிதமாகவும் புதுவீரியத்தோடும் கோப்பிப்பெருந்தோட்டம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டது. உண்மையில் 1848 வரை கோப்பிப்பெருந்தோட்டம் இலாபகரமான துறையாக இயங்கவில்லை. அது ஆரம்ப பரீட்சார்த்த காலமாக குழப்ப நிலையிலே இருந்தது. 1848இன் பின்னரே அதன் தன்மை மாற்றம் பெற்றது. விரைவாக இலாபமீட்ட விரும்பிய கத்துக்குட்டிகளுக்கு பதிலாக அனுபவமும் துறைசார் நிபுணத்துவமும் உடையவர்களால் தோட்டங்கள் நிர்வகிக்கப்படும் போக்கு அதன் பின்னரே உருவானது. பெரும் முகவர் நிறுவனமான ஆக்லண்ட் போய்ட் அன் கொம்பெனியின் உதவியுடன் முகாமைத்துவம் முறைப்படுத்தப்பட்டது.



THE
COFFEE PLANTER
OF
SAINT DOMINGO;
WITH
AN APPENDIX,
By P. J. LABORIE, LL.D.
LONDON.

The Coffee Planter of Saint Domingo
Image source - openlibrary.org

ஏறக்குறைய 1850கள் வரை, அரசின் அனைத்து ஐரோப்பிய அதிகாரிகளும் கோப்பி தோட்ட உரிமையாளர்களாகவே இருந்தனர். அதேபோல ஒரேயொரு கரையோரச் சிங்களவரைத்தவிர அனைத்து கோப்பி பெருந்தோட்ட உரிமையாளர்களும் ஆங்கிலேயர்களாகவே இருந்தனர். 1848 வரை அனைத்து கோப்பித்தோட்டங்களும் பெரதெனியவைச் சுற்றி 30 மைல்களுக்குள் சிங்கள கிராமங்களுக்கும் சேனைகளுக்கும் அண்மையில் அமைந்திருந்தன. 1700 அடிக்கு மேற்பட்ட பிரதேசங்களில் கோப்பி செழிப்பாக வளர்வது கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் கோப்பித் தோட்டங்கள் 1850களில் உயர்மலைப்பிரதேசத்தின் சிவனொளிபாதமலை அடிவாரத்தின் டிம்புள்ள பகுதிக்கும், ஊவா பிரதேசத்திலுள்ள அப்புத்தளை பகுதிகளுக்கும் சப்பரகமுவ பகுதிகளுக்கும் நகர்ந்தன. 1860களில் தென்பகுதியின் மொறவக்க பகுதிக்கும் கோப்பி பரவியது. இதற்கு ரயில்வேயின் வளர்ச்சி பெரிதும் காரணமாயிருந்தது.

## ரயில்வே அபிவிருத்தி

இராணுவத் தேவைக்காக அவசரமாகப் போடப்பட்ட கண்டியை கொழும்போடு இணைக்கும் குதிரை வண்டிப் பாதை, இங்கு உற்பத்தியான கோப்பியை கொழும்பு துறைமுகத்திற்கு மாட்டுவண்டியில் கொண்டு செல்லக் கூடியவிதத்தில் மத்திய மலைநாட்டின் பல பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது. மோட்டார் வாகனம் கண்டுபிடிக்கப்பட்டு அது இலங்கையில் அறிமுகமான பின்னர் இப்பாதைகள் தார் இடப்பட்டு செப்பனிடப்பட்டன.




ரயில்வே பாதைகளை அமைக்கும் பணிக்கு முன்

Image source - roar.media

மாட்டுவண்டிச் சொந்தக்காரர்கள் அறவிட்ட கட்டணம் அதிகமாக இருந்தது. கண்டியிலிருந்து கொழும்புக்கு மாட்டுவண்டி மூலம் கோப்பியை கொண்டு செல்வதற்காகும் செலவு கொழும்பிலிருந்து இங்கிலாந்துக்கு கப்பல் மூலம் அதனை அனுப்பி வைப்பதற்காகும் செலவைவிட அதிகமாக இருந்தது. ஆள்பதி சேர். ஹென்றி வார்ட்டின் கூற்றின்படி அவரின் காலத்தில் (185560) வருடாந்தம் 30,000 மாட்டுவண்டிகள் கண்டிக்கும் கொழும்புக்குமிடையே பிரயாணம் செய்தன. அவற்றின் இரும்புச் சக்கரங்களால் பாதைகள் விரைவில் பழுதடைந்தன. மழை காலங்களில் நிலைமை மேலும் மோசமடைந்தது. இந்நிலையை மாற்றுவதற்காக ரயில்வே பாதைகளை அமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டன. இதற்கான நிதிக்கு அரசு தடுமாறியபோது தம்மிடம் வரிவிதிக்குமாறு தோட்டதுரைமார்

1856 இல் ஆள்பதி சேர். ஹென்றி வார்ட்டிடம் தாமாகவே வேண்டுகோள் விடுத்தமை ரயில்வேயின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. இவ்வாறு தோட்டத்துரைமார் 2 வீத வரியை சுயமாக செலுத்தியதன் மூலமாக அடுத்த 11 வருடங்களில் பாதையமைப்பதற்கான செலவில் சுமார் நான்கில் ஒருபங்கான 450,000 ஸ்டேர்லிங் பவுணை செலுத்தினர்.

ஆனால் பாதையமைப்பதற்காக பொதுமக்களின் உழைப்பு இலவசமாகவே கவரப்பட்டது. 1848 இல் நிறைவேற்றப்பட்ட பாதைகள் சட்டம் (Road Ordinance of 1848) தோட்டத் தொழிலாளர் அல்லாத 18 - 55 வயதுக்கு உட்பட்ட அனைத்து ஆண்களும் வருடத்திற்கு தலா ஆறுநாள் இலவச உழைப்பை அல்லது அதற்கு ஈடாக 3 சிலிங் காசை கொடுக்க வேண்டும் என விதித்தது. 1867 ஆம் ஆண்டு கண்டியில் இருந்து கொழும்புக்கு கோப்பி கொண்டு செல்வதற்காக ரயில் பாதை அமைக்கப்பட்டது. இது இயந்திரக் கைத்தொழில் புரட்சிக்கு முன்னர் சாத்தியமற்ற விடயமாகும்.




Hemileia vastatrix coffee leaf rust

Image source - www.researchgate.net

## உச்சம் தொட்ட கோப்பிக்கு நேர்ந்த அனர்த்தம்

1870களில் கோப்பிப் பெருந்தோட்டம் தனது சுபீட்சத்தின் உச்சத்தைத் தொட்டது. 1871 1872இல் 196,000 ஏக்கராக இருந்த கோப்பிப் பெருந்தோட்டம் 1878இல் 273,000 ஏக்கராக உயர்ந்தது. முதற் தடவையாக 1868 இல் கோப்பி ஏற்றுமதி 10 லட்சம் குவாட்டை தாண்டியது. அதற்கேற்ப விலையும் அதிகரித்து பெருத்த இலாபம் கிடைத்தது. ஆனால் அந்த சுபீட்சம் நீடிக்கவில்லை. அதன் அழிவு ஏற்கனவே தொடங்கிவிட்டது. ஹெமிலியா வெஸ்ட்ராட்ரிக்ஸ் [Hemileia Vastatrix] என்ற இலைச்சுருட்டி நோய் கோப்பிச்செடிகளைத் தாக்கத் தொடங்கிவிட்டது. முதலில் இந்நோய் மடுல்சீமையிலுள்ள கல்லூல தோட்டத்தில் 1869இல் இனங்காணப்பட்டது. 1880களில் அதன் வேகம் தீவிரமடைந்தது. பேராதனை தாவரவியல் பூங்காவின் ஆராய்ச்சிகள் பயன்தரவில்லை. 1890களில் அதன் மரணம் நிச்சயமாகிவிட்டது. ஏக்கமும் அவலமும் பீதியும் அலைமோதிய இக்காலத்தில் தொழிலாளர்கள் மாத்திரமல்ல தோட்டத்துரைமாரும் வேலையிழந்து தவித்தனர். முதற்தடவையாக தோட்டத் துரைமார் சம்மேளனம் அப்போது தொழிலாளர்களுக்கு சேவைசெய்து கொண்டிருந்த 'கண்டி ஆபத்தில் உதவும் நண்பர்கள் அமைப்பிடம்' (Friends in need) உதவிகேட்டு கையேந்தியது.

**1870களில் கோப்பிப் பெருந்தோட்டம் தனது சுபீட்சத்தின் உச்சத்தைத் தொட்டது. 1871-1872 இல் 196,000 ஏக்கராக இருந்த கோப்பிப் பெருந்தோட்டம் 1878இல் 273,000 ஏக்கராக உயர்ந்தது. முதற் தடவையாக 1868 இல் கோப்பி ஏற்றுமதி 10 லட்சம் குவாட்டை தாண்டியது. அதற்கேற்ப விலையும் அதிகரித்து பெருத்த இலாபம் கிடைத்தது. ஆனால் அந்த சுபீட்சம் நீடிக்கவில்லை.**

தொடரும்.

# சில்லறைக்கங்காணி; அடக்குமுறையின் இன்னொரு ஆயுதம்



இரா. சடகோபன்

இக்கட்டுரைத்தொடர் இலங்கையில் கோப்பிப்பயிர்செய்கை முடிவுற்று தேயிலை பயிர்செய்கைக்கான ஆரம்பத்தினை எடுத்துக்கூறுகின்றது. இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்திய வம்சாவழித் தமிழர்கள் தேயிலை தோட்டங்களில் பட்ட இன்னல்களைகளையும் எடுத்துரைப்பதாக அமைகின்றது.





Sri Lanka: The worn hands of a tea picker hold fresh tea leaves

Image source - .bridgemanimages.com

கசக்கிப் பிழிந்து, அடக்கி ஆண்டு, வன்முறையின் பிடியில் வைத்திருந்து, தொழிலாளரிடமிருந்து உழைப்பை உச்ச அளவில் பெற்றுக் கொள்கின்ற பாங்கு பெருந்தோட்ட வரலாற்றின் முழுப்பக்கங்களிலும் ஒரு கறைபடிந்த காரணியாக இருந்தது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இதற்கென பல்வேறு வழிமுறைகளை துரைமார்கள் தேர்ந்தெடுத்து கடைப்பிடித்துள்ளனர் என்பதற்கு பலமான ஆதாரங்கள் உள்ளன. அதிகம் படிக்காத முரட்டு சுபாவமும் சண்டித்தனமும் மிக்கவர்களை துரையாகத் தேர்ந்தெடுத்தல், (எனது கண்டிச் சீமையிலே என்ற நூலில் “உலகெங்கும் இருந்து கழிசடைகளே துரைகளாக வந்தனர்” என்ற அத்தியாயத்தை பார்க்கவும்) சாதி அடிப்படையில் உயர் சாதியை வைத்து கீழ் சாதிக்காரனை அடக்கி வைக்கின்றமை, கடும் போக்குள்ள கங்காணி ஒருவனின் கீழ் தொழிலாளர்களை கூலிப் பட்டாளங்களாக (Gangs) பிரித்து அடக்கி வைப்பது, பங்களாவுக்கு வேலைக்கு வரச் சொல்லி அடித்து உதைப்பது போன்றன இவர்கள் அடக்குமுறைக்கு பயன்படுத்திய வழிமுறைகளில் சிலவாகும்.

இத்தகைய கடுமையான அடக்குமுறைகள் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை தொடர்ந்தன. பிற்காலத்தில் இடதுசாரி கட்சிகளின் தலைமையில் உருவான தொழிற்சங்க போராட்டங்களை ஒடுக்க, குண்டர்களை ஏவி தொழிற்சங்க போராளிகள் மீது தாக்குதல் நடத்தும் வழிமுறைகளும் பின்பற்றப்பட்டுள்ளன. 1930 களில் மற்றும் 1940 களில் இலங்கை சமசமாஜக் கட்சியின் தலைமையிலான ‘அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் யூனியன்’ தோட்டத்துரைமாரின் அடக்குமுறைக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகளையும் போராட்டங்களையும் முன்னெடுத்தது. இவற்றை அடக்குவதற்கு துரைமார்கள் பொலிசாரையும்

குண்டர்களையும் ஏவிவிட்டு வேடிக்கை பார்த்தனர்.

இவர்கள் தொழிலாளர் போராட்டங்கள் மீது குண்டர்களை ஏவி விடுவதை வழக்கமாக கொண்டிருந்தார்கள். தொழிலாளர் போராட்டங்களுக்கு இப்படித்தான் பதிலளிக்க வேண்டும் என்பதனை அவர்கள் கொள்கையாகக் கொண்டிருந்தார்கள். குறித்த போராட்டங்களின் போது அந்த நடவடிக்கைகளில் யார் தலைமை தாங்கி நடத்திச் சென்றார்கள் என்று அறிந்து கொண்டு அவர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தினார்கள். 1940 ஆம் ஆண்டு ஊவா பிரதேசத்தில் இருந்த வெல்லஸ்ஸ தோட்டத்தில் இடம்பெற்ற வேலை நிறுத்தம் தொடர்பில் கருத்து தெரிவித்த தோட்டத்துரை ஒருவர் “இவர்கள் எந்தப் பாஷையில் பேசினாலும் விளங்கிக் கொள்ள மாட்டார்கள். இவர்களை இழுத்துச் சென்று நையப்புடைப்பதன் மூலம் தான் இவர்கள் பாடம் கற்றுக் கொள்வார்கள்” என்று குறிப்பிட்டுள்ளார்.

1930 களிலும் 1940 களிலும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட பல போராட்டங்கள் தொழிலாளர்களின் பல உரிமைகளை வென்றெடுக்க கூடியதாகவும், அதிகார வர்க்கத்தின் ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் எதிரான வெற்றிகரமான நடவடிக்கைகளாகவும் அமைந்தன. தோட்டங்களுக்குள் தொழிற்சங்கச் செயற்பாட்டாளர்கள் செல்வது அத்துமீறிய பிரவேசம் (Trespass) என்று குற்றவியல் தண்டனைக் கோவையில் குற்றமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த நிலையில், இந்தத் தோட்டத்தில் அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கத்தின் தோட்டக் கமிட்டியை அவர்கள் வெற்றிகரமாக அமைக்கக்கூடியதாக இருந்தது.

இந்தப் போராட்டத்தின்போது தோட்ட நிர்வாகத்தினர் பொலிசாரை அழைத்து வன்முறையைத் தூண்டினார்கள். பொலிசாருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் நேரடிச் சண்டை நிகழ்ந்தது. இதன் விளைவாக தொழிலாளர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் பெரிய கங்காணியைத் தாக்கி காயப்படுத்தினார்கள் என்ற குற்றம் சுமத்தப்பட்டு, கைது செய்யப்பட்டனர்.

எனினும் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்ட போது இருதரப்பினருக்கிடையிலும் நீதிமன்றம் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தியது. அதன் பிரகாரம் நிர்வாகத்துக்கு உரிய முறையாக அறிவித்தல் கொடுத்ததின் பேரில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தோட்டத்துக்குள் பிரவேசிக்க முடியும் என அனுமதி வழங்கப்பட்டது.



The Ceylon Tea Industry,
Tamul Girl plucking a Tea Bush (engraving)

Image source - .bridgemanimages.com

பெரிய கங்காணி 30 நாட்களுக்கு வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டார். கணக்குப்பிள்ளை பதவி நீக்கம் செய்யப்பட்டார். தோட்டத்தின் கோயில் நிர்வாகம் தொழிலாளர் கமிட்டிக்கு ஒப்படைக்கப்பட்டது. அத்துடன் பெரிய கங்காணியால் நடத்தப்பட்டு வந்த ரேஷன் கடை மூடப்பட்டு, ரேஷன் பொருட்களும் அரிசி விநியோகமும் யூனியன் கமிட்டி நிர்வாகத்தின் மேற்பார்வையின் கீழ் கொண்டுவரப்பட்டது. இது தொழிற்சங்களுக்கு கிடைத்த பாரிய வெற்றியாக கருதப்பட்டது.

இதே காலப்பகுதியில் பதுளை அட்டாம்பிட்டி தோட்டத்திலும் தோட்ட நிர்வாகம், கணக்குப் பிள்ளை, கங்காணிமார் ஆகியோரின் கெடுபிடிகள், சுரண்டல், ஏமாற்று என்பவற்றுக்கு எதிராக வேலை நிறுத்தம் ஒன்று இலங்கை தோட்டத்தொழிலாளர் யூனியனால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இதன்போது தோட்ட நிர்வாகத்துக்கும் யூனியன்

தலைவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது தொழிலாளர்களுக்கு சாதகமான இணக்கப்பாடு எட்டப்பப்பட்டது. இந்தப் பேச்சுவார்த்தை யில் சங்கத்தின் பொதுச் செயலாளர் கலா நிதி என். எம். பெரேரா, தோழர் பி. வேலுச்சாமி ஆகியோர் உட்பட பல பிரதிநிதிகள் பங்குபற்றினர். இந்தப்பேச்சுவார்த்தையில் தோட்டத்தில் தொழிற் சங்கம் இயங்குவது அங்கீகரிக்கப்பட்டது. நிர்வாகத்தின் கீழ் இருந்த தோட்ட கோயில் நிர்வாகம் தொழிலாளர்களின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டுவரப் பட்டது. ரேசன் அரிசி விநியோகம் கணக்குப் பிள்ளையின் கட்டுப்பாட்டில் இருந்து பறிக்கப்பட்டு சின்னத்துரையின் மேற்பார்வையின் கீழ் தொழிலாளரின் கமிட்டிக்கு வழங்கப்பட்டது.



தேயிலை தோட்டங்களில் கவாத்து பணியில் ஈடுபடும் ஆண்கள்

Image source - www.dailythanthi.com

மலையக தொழிற்சங்க வரலாற்றில் இத்தகைய பல எழுச்சிப் போராட்டங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்ற போதும் மேற்படி இரண்டு சந்தர்ப்பங்களிலும் தொழிலாளர் மீதான சுரண்டல், அடக்குமுறை மற்றும் வன்முறைக்கு எதிராக கிடைத்த மேலான வெற்றியாக இவை பதியப்பட்டுள்ளன. எனினும் நிர்வாகத்துக்கு எதிராக எப்போதெல்லாம் குரல் எழுந்ததோ அப்போதெல்லாம் அவ்விதம் குரல் கொடுத்தவரின் குரல்வளை நசுக்கப்பட்டுள்ளது என்பதனை வரலாற்றைக் கூர்ந்து அவதானித்தால் புரிந்து கொள்ள முடியும்.

எவ்வாறு கங்காணிகளுக்கூடாக தொழிலாளர்களை காலம் பூராவும் கட்டுப்படுத்தி வைத்திருந்தார்கள் என்பது மிக நுணுக்கமான ஓர் உபாய முறையாக இருந்து வந்துள்ளது. அதன் பொருட்டு ஒரு பெரிய கங்காணியின் தலைமையின் கீழ் பல சிறிய கங்காணிகள் அல்லது சில்லறைக் கங்காணிகளை நியமித்தார்கள். இந்த சில்லறைக் கங்காணிகளின் நிர்வாகத்தின் கீழ் கூலித் தொழிலாளர்களை கூலிப்பட்டாளங்களாக (Coolly Gangs) பிரித்தார்கள். ஒவ்வொரு கூட்டமும் ஒழுங்காகவும், விடுமுறை எடுக்காமலும் அதிக உழைப்பை பெற்றுக் கொள்வதற்கும் சில்லறைக் கங்காணி பொறுப்பாக இருந்தார். அதன் பொருட்டு அதிகாரத்தைப் பயன்படுத்தியும், பயமுறுத்தியும், வன்முறையைப் பயன்படுத்தியும் சில்லறைக் கங்காணி அவர்களிடம் அதிக உழைப்பை உறிஞ்சக்கூடியதாக இருந்தது. சில்லறைக் கங்காணி தொழிலாளர்களுடன் தானும் வேலை செய்ததுடன் அதற்கான சம்பளமும், அதற்கு மேலதிகமாக அவனுடைய கூலிப் பட்டாளத்தில் எத்தனைபேர் இருந்தார்களோ அவர்களின் ஒவ்வொரு தலைக்கும் பெறக்கூடிய "தலைக்குரிய கொடுப்பனவு" என்ற "பென்ஸ்மணி" (Pence Money) யும் பெற்றுக் கொண்டார்.

அதேபோல், தனக்கும் கீழ் எத்தனை கூலிப் பட்டாளங்கள் வேலை செய்கிறார்கள் என்ற கணக்கு பெரிய கங்காணிக்கு காட்டப்பட்டு, அவருக்கான தலைக்குரிய பணமும் செலுத்தப்பட்டது. மேற்படி கங்காணிகள் உயர் சாதிக்காரர்களாக இருந்தபடியால் தொழிலாளர்கள் இயல்பாகவே அவர்களுக்கு கட்டுப்பட்டு கீழ்ப்படிந்து நடந்து கொண்டனர். தமது பென்ஸ்மணி குறைந்து போய் விடக்கூடாது என்பதற்காக எல்லா தொழிலாளரும் எல்லா நாளும் வேலைக்கு வர வேண்டியதை சில்லறைக் கங்காணி கவனமுடன் உறுதி செய்தார். அதனையே தோட்டத்துரை மாரும் அவரிடம் எதிர்பார்த்தனர். இதற்காகவே தனக்குப் பென்ஸ்மணி வழங்கப்படுகின்றது என்பதை மிகத் தெளிவாக புரிந்துகொண்ட கங்காணி அதனை நிறைவேற்றும் பொருட்டு துரைக்கு மிக விசுவாசம் உள்ளவராகச் செயற்பட்டார்.

தோட்டங்களில் தொழிலாளர்கள் மீது உச்ச உழைப்பை சுரண்டி பெற்றுக்கொள்வதற்காக தொழிலாளர்களின் ஆண் / பெண் பால் வேறுபாட்டையும் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. "பெண்களின் விரல்கள் ஜீவனுள்ள சுறுசுறுப்பான விரல்கள் என்பதனை" அவர்கள் ஏற்கனவே தெரிந்து வைத்திருந்தார்கள். எனவே அவர்கள் தேயிலைக் கொழுந்து கிள்ளுவதற்கு பெண்களின் தளிர்க் கரங்களை தேர்ந்தெடுத்து முழுநாளும் கொழுந்து பறிக்க வைத்தார்கள்.

இதற்கு பெண்களின் இயல்பான பொறுமை காக்கும் குணமும் சாதகமாகப் பயன் தந்தது என்று கூறலாம். ஆண்களுக்கு இலக்கு வைத்து வேலை செய்யும் வேலைகளை கொடுத்தார்கள். அவர்கள் தமது இலக்கு முடிந்ததும் மலையிலிருந்து போய்விடுவார்கள். உதாரணமாக கவ்வாத்து வெட்டும் போது இத்தனை தேயிலைச் செடிகளை வெட்ட வேண்டும் என்று இலக்கு வைக்கப்பட்டது. இந்த இலக்கு முடிந்தவுடன் அவர்களின் வேலையும் முடிந்து விடும்.

(தொடரும்)



**தேயிலைத் தோட்டத்தொழிலாளிகள்**

Image source - www.thambapannitea.com

# மக்களுக்காக குரல் கொடுத்த மணிலாலும், நாடு கடத்திய காலனித்துவ அரசும்

இந்திய வம்சாவழி பெருந்தோட்ட தொழிலாளர்கள் தொழிற்சங்க ரீதியாகவும், வர்த்தகரீதியாகவும் ஸ்தாபனப்படுவதற்கு முன்னரே அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் கொழும்பிலும், சர்வதேச ரீதியாகவும் பலமாக குரல் எழுப்பப்பட்டது என்பதை அவர்கள் அறிந்திருக்க நியாயமில்லை. இலங்கையில் மாத்திரம் அன்றி பல்வேறு உலக நாடுகளிலும் இந்தியாவில் இருந்து புலம் பெயர்ந்து சென்று வாழ்ந்த இந்தியத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் பற்றி பல்வேறு அமைப்புகள் குரல் கொடுத்தன. அவற்றுள் அடிமைத்தனத்துக்கு எதிரான சங்கம் (antislaverysociety), பிரித்தானியாவில் இயங்கிய வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களுக்கான சங்கம், சென்னையில் இயங்கிய இந்தியர் காலனித்துவ நாடுகளுக்கான சங்கம், தனிப்பட்ட இந்திய அரசியல்வாதிகள், கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள், சமூக சீர்திருத்தவியலாளர்கள் ஆகியோர் வெளிநாடுகளில் சுரண்டப்படும் இந்தியத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக உரத்துக் குரல் கொடுத்தனர். இத்தகையவர்களில் இலங்கையிலிருந்து குரல் கொடுத்த இந்தியரான டாக்டர். டி. எம். மணிலால் (1881-1956) மிக முக்கியமானவராவார். இவ்விதம் கடுமையாக செயற்பட்டமைக்காக 1922 ஆம் ஆண்டு இவர் இலங்கையில் இருந்து நாடு கடத்தப்பட்டார். அவர் இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் இந்தியத் தமிழர், இலங்கைத் தமிழர், சிங்களவர்கள் ஆகியோரை தன் இயக்கத்தில் இணைத்துக் கொண்டு செயற்பட்




**மலையக தொழிற்சங்கவாதியாக பிரபலமடைந்த கோதண்டராமையர் நடேசய்யர்**

Image source - www.vaaramanjari.lk

டார். இந்தியாவில் பரோடா என்ற இடத்தில் பிறந்த இவர் பம்பாயில் (இப்போதைய மும்பை) சட்டக்கல்வி பயின்று சட்டத்தரணி ஆனார். லண்டனில் மிடில் டெம்பிள் என்ற நகரத்தில் சட்டத்தரணியாக கடமையாற்ற 1907ஆம் ஆண்டு அழைக்கப்பட்டார்.

அவர் இக்காலத்தில் மகாத்மா காந்தியின் நடவடிக்கைகளில் இணைந்து செயற்பட்டார். இதன் காரணமாக இவர் மகாத்மா காந்தியால் மொரிசியஸ் நாட்டில் புலம்பெயர்ந்து வாழ்ந்த இந்தியத் தொழிலாளர்களின் நீதிமன்ற வழக்குகளில் அவர்களுக்கு உதவ அந்நாட்டுக்கு அனுப்பப்பட்டார். 1907ஆம் ஆண்டு முதல் 1920ஆம் ஆண்டு வரை அவர் அங்கே இருந்து செயற்பட்டு, அந்த நாட்டு ஆட்சியாளர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கினார். அவர் நீதிமன்றத்துக்கு டர்பான் அணிந்து சென்றதால் நீதிபதிகளுடன் முரண்பட்டார். அங்கு அவர் இனவாதத்துக்கு எதிராகவும் செயற்பட்டார். அங்கே இருந்த நாளில் லேபர்டொன்நைஸ் என்ற தோட்டத்தின் சில தொழிலாளர்கள் ஒரு தோட்டத்துரையை கொலை செய்த ஒரு புகழ் பெற்ற வழக்கிலும் வாதாடி வெற்றி பெற்றார்.

அவர் அங்கிருந்த காலத்தில் பல்வேறு அரசியல் செயற்பாடுகளிலும் ஈடுபட்டார். கொத்தடிமை முறைக்கு எதிராக துணிந்து செயற்பட்டார். இந்துஸ்தானி என்ற பத்திரிகையை வெளியிட்டு அந்தப் பத்திரிகை வாயிலாக இந்தியத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைப் பற்றியும் இனவெறி தொடர்பாகவும் விரிவாக குரல் எழுப்பினார். இந்து இளைஞர் சங்கம் ஒன்றை ஏற்படுத்தி அதன் வாயிலாகவும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அவர் அங்கு இருந்து கொண்டே இந்திய தேசிய காங்கிரஸின் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார். அதன் பின்னர் தென்னாபிரிக்காவிலும், பிஜித் தீவுகளிலும் இதே விதமான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார்.



**டாக்டர். டி. எம். மணிலால்**

Image source - wikipedia.org

டாக்டர் மணிலால் தனது மனைவியுடன் ஒக்டோபர் 1921ஆம் ஆண்டு இலங்கை வந்தார். அப்போது இலங்கையில் தொழிற்சங்க மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடும்போக்காளர்களுடன் இணைந்து கொண்டார். அவர்களில் நடேசய்யர், லோரி முத்துக்கிருஷ்ணா, சி .எச். பெர்னாண்டோ ஆகியோர் முக்கியமானவர்கள். இக்காலத்தில் வேல்ஸ் இளவரசர் இலங்கைக்கு வருவதாக இருந்தது. வருடம் 1922, வேல்ஸ் இளவரசனின் வருகையில் மணிலால் தலையிடக்கூடும் என்று பொலிஸார் சந்தேகப்பட்டனர். இதனால் போர்க் கால கட்டளைச் சட்டத்தின்படி மணிலாலை நாடு கடத்த ஆளுநர் கட்டளை பிறப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து இந்த ஆபத்தான கட்டளையை திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு கூறி கொழும்பு நகரசபை முன்றலில் மாபெரும் கூட்டம் ஒன்று 1922 ஜனவரியில் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் கோ. நடேசய்யர், லோரி முத்துகிருஷ்ணா, எம். யு .மூரே,

டி. பி. ஜயதிலக்க, டாக்டர் சி. எப். ஹேவா விதாரண, டி. எஸ். சேனாநாயக்க, சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா, பி. டி. சில்வா குணரட்ன, திருமதி. லீலாமணி முத்து கிருஷ்ணா, திருமதி டாக்டர் நல்லம்மா சத்தியவாகீஸ்வர ஐயர் ஆகியோர் செயற்பாட்டாளர்களாக பங்குபற்றினர்.

இக்கூட்டத்தில் தொழிற்சங்கத் தலைவர் ஏ. ஈ. குணசிங்க மற்றும் சி. எச். இஸட். பெர்னாண்டோ ஆகியோர் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் காரசாரமாக உரையாற்றினார்கள். அங்கே இரண்டு பிரேரணைகள் நிறை வேற்றப் பட்டன. முதல் பிரேரணையில் டாக்டர் மணிலால் அவர்களை இலங்கையில் இருந்து வெளியேற்றுவதற்கு எதிராக இலங்கை வாழ் இந்தியர்கள் மற்றும் தொழிலாளர் சமூகம் தமது கடுமையான ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்கிறது என்று கூறப்பட்டது. அத்துடன் உலகம் முழுவதிலுமான பிரிட்டிஷ் பிரஜைகளின் உரிமைகளுக்கு குந்தகம் ஏற்பட்டுள்ளது என்றும் பதிவு செய்யப்பட்டது.

சமாதானமான ஒரு காலம் நிலவுகின்ற நேரத்தில் நெருக்கடி நிலைமை மற்றும் யுத்த நிலைமை காணப்படுவதுபோல் யூகித்துக்கொண்டு இத்தகைய ஒரு பிரகடனம் செய்யப்பட்டுள்ளமை ஒரு காட்டுமிராண்டித் தனமான செயல் என்றும் இது ஏனைய பிரிட்டிஷ் காலனித்துவ நாடுகளுக்கு மத்தியில் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் உண்டு பண்ணுவதாக அமையும் என்றும் அப் பிரகடனத்தில் மேலும் குறிப்பிடப்பட்டது. இறுதியாக இந்த கூட்டத்தில் இந்த நாட்டின் தமிழ் - சிங்கள மக்கள் ஒற்றுமையாக இணைந்து இந்த நாட்டு ஆளுநரிடம் டாக்டர் மணிலால் மீதான நாட்டைவிட்டு வெளியேற்றும் உத்தரவை மீளப் பெற்றுக் கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது. இது தொடர்பான பத்திரிகை செய்தி ஒன்று 1922 ஜனவரி 9ஆம் திகதி சிலோன் டெய்லி நியூஸ் பத்திரிகையில் விரிவாக வெளிவந்திருந்தது.

இதற்கு மேலதிகமாக கொழும்பு மாநகரசபையில் மேற்படி ஆளுநரின் பிரகடனமானது கொழும்பு மாநகரம் நெருக்கடி நிலைமையில் காணப்படுகின்றது என்றும் இங்கே அவசரகால நிலைமை நிலவுகிறது என்றும் போலியான பிரமையை ஏற்படுத்தும் என்றும் சி. எச். இசட். பர்ணாந்து அவர்களால் கண்டனப் பிரேரணை ஒன்றும் கொண்டுவரப்பட்டது. எனினும் இந்தப் பிரேரணைக்கு சார்பாக மாநகரசபை அங்கத்தவர்களான ஏ. இ. டி. சில்வா மற்றும் டாக்டர் ஈ. வி. ரட்ணம் ஆகியோர் மட்டுமே வாக்களித்தனர். இப் பிரேரணைக்கு எதிராக அனைத்து ஐரோப்பிய அங்கத்தவர்களும் மற்றும் அப்போது கொழும்பு மாநகரசபையின் அங்கத்தவர்களாக இருந்த சி. பி. டயஸ், ஆத்தர் அல்விஸ். டாக்டர் டபிள்யூ. பி. ரோட்ரிகோ மற்றும் அப்துல் காதர் ஆகியோர் வாக்களித்தனர். சில உள்நாட்டு பத்திரிகைகளும் மேற்படி டாக்டர் மணிலாலை நாட்டைவிட்டு வெளியேற்றும் பிரகடனத்துக்கு எதிராக செய்திகளை பிரசுரித்திருந்தன. சிலோன் டெய்லி நியூஸ் பத்திரிக்கை இலங்கையில் இருக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து டாக்டர் மணிலால் உலகத்துக்கு அம்பலப்படுத்திவிடுவார் என்ற அச்சத்தினாலேயே அவரை நாட்டைவிட்டு வெளியேற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது என செய்தி வெளியிட்டிருந்தது. (சிலோன் டெய்லி நியூஸ் 9 ஜனவரி 1922) எனினும் இந்த எதிர்ப்பை எல்லாம் பொருட்படுத்தாது டாக்டர் மணிலால் இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டார். இருந்தாலும் இலங்கையில் அவருடன் சேர்ந்து பணியாற்றிய கோ. நடேசய்யர் தொடர்ந்தும் மணிலாலுடனான தனது உறவைப் பேணிவந்தார்.

(தொடரும்)




**பெண்கள் கொழுந்து நிறை பார்க்கும் இடம்**

Image source - www.thambapannitea.com



சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன்

பொருளாதார நெருக்கடியால் இலங்கை தள்ளாடும் சூழ்நிலையில், கால்நடை வளர்ப்பினூடாக கிராமிய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் போசணை மட்டத்தை உயர்த்துவதோடு, இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பான வழிமுறைகளை அனுபவரீதியாகவும், ஆய்வியல் ரீதியாகவும் முன்வைக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்.



இலங்கையில் மாடு வளர்ப்பு

Image source - www.sundayobserver.lk

# இலங்கையின் பாலுற்பத்தித் துறை சந்திக்கும் சவால்கள்

இலங்கையிலுள்ள பசு மாடுகளும் எருமை மாடுகளும் அதிகளவு உள்ளூர் வகையை சேர்ந்தவை. அவற்றின் சாராசரி உற்பத்தி ஒரு லீட்டருக்கும் குறைவாகும். இந்த மாடுகளைக் கொண்டு எதிர்பார்த்த பாலுற்பத்தியை பெற்று தன்னிறைவு காண முடியாது. [இலங்கையைப் பொறுத்த வரையில் வருடாந்தம் 1250 மில்லியன் லீட்டர் பால் தேவைப்படுகின்ற போதும் உள்ளூரில் 500 மில்லியன் லீட்டர் அளவிலேயே பால் உற்பத்தி செய்யப் படுகிறது.

மிகுதி 750 மில்லியன் லீட்டர் பால் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. அதில் அதிகளவு பால் மா வடிவில் தான் இறக்குமதியாகிறது.]

அதிக பாலுற்பத்தியைக் கொண்ட மாடுகளை பெற இரண்டு வழிமுறைகள்தான் உள்ளன. ஒன்று நல்லின மாடுகளை இறக்குமதி செய்ய வேண்டும். இந்த முறையில் பல தடவைகள் மாடுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. மற்றைய வழி இருக்கும் மாடுகளை தரமுயர்த்துவது[upgrading]. இந்த வழியில் இரண்டு முறைகளை கையாளலாம். ஒன்று நல்லின காளைகளை இறக்குமதி செய்து பண்ணையாளருக்கு வழங்கி அவற்றைக் கொண்டு இனப் பெருக்கம் செய்து பண்ணைகளை தரமுயர்த்துவது. மற்றையது தரமான காளைகளின் உறைவிந்தணுக்களை [frozen semen] இறக்குமதி செய்தோ அல்லது தரமான காளைகளை இறக்குமதி செய்து அவற்றின் விந்துகளை



**மேம்படுத்தப்பட்ட பால் கறப்பு முறைகள்**

Image source - bizcom.lk

உறையச்செய்து அவற்றைக்கொண்டு செயற்கை சினைப்படுதல் மூலம் மாடுகளை தரமுயர்த்துவது. மாடுகளை நேரடியாக இறக்குமதி செய்வதை விட சினைப்படுத்துவதற்கு அதிக காலம் எடுக்கும். எனினும் சிக்கனமானது.

இலங்கையில் ஆரம்ப காலங்களில் பல இடங்களில் காளை நிலையங்கள் [stud center] உருவாக்கப்பட்டு மாடுகள் சினைப்படுத்தப்பட்டி ருந்தன. செயற்கை சினைப்படுத்தலின் அதிகரிப்பின் பலனாக அந்த காளை நிலையங்கள் இல்லாமல் செய்யப்பட்டன. பல காளை நிலையங்கள்தான் இன்றைய அரச கால்நடை வைத்திய அலுவலகங்களாக இன்று உள்ளன. குண்டசாலை, யாழ்ப்பாணம், பொலநறுவை போன்ற இடங்களில் குளிரூட்டிய விந்து [chilled semen] உற்பத்தி செய்யப்பட்டு இடைப்பட்ட காலத்தில் மாடுகள் சினைப்படுத்தப்பட்டிருந்தன. உறை விந்தணு குச்சிகளின் உருவாக்கத்தின் பின் ஏனைய இடங்கள் நிறுத்தப்பட்டு குண்டசாலையில் இருந்து மாத்திரமே நாடு முழுதும் அவை விநியோகிக்கப்படுகின்றன. சில வகை உறை விந்துகள் பொலநறுவையில் உற்பத்தி செய்யப்பட்டாலும் அவையும் குண்டசாலை யூடாகவே விநியோகிக்கப்படு கின்றன. [அண்மைய பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக உறை விந்துகள் வழங்கல் மற்றும் திரவ நைதரசன் வழங்கல் என்பன சகல கால்நடை வைத்திய அலுவலகங்களுக்கும் நிகழ்வதில்லை. பெரிய அதாவது மாவட்டங்களின் முக்கிய அலுவலகங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் செயற்கைச் சினைப்படுத்தல் கணிசமாகக் குறைந்துள்ளது.]

வெளிநாட்டு மாடுகளை இறக்குமதி செய்வதன் மூலம் சடுதியாக பாலுற்பத்தியை கூட்ட முடியும் என்ற போதும் அண்மைக் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மாடுகளில் இருந்து சாதகமான பயனை பெற முடியவில்லை. கொண்டு வரப்படும் மாடுகளின் இனம், காலநிலை, வளர்ப்பு முறை, உணவு முறை வேறுபாடு, நோய்கள் காரணமாக கடும் பாதிப்புகளை சந்தித்திருந்தன. இந்த மாடுகள் மீது முதலிட்டவர்கள் பாரிய நட்டத்தை சந்தித்திருந்தனர். இலங்கையின் கால்நடை துறை அதிகாரிகளின் சரியான ஆலோசனைகள் இன்றியும் இலங்கை கால்நடை இனப்பெருக்க கொள்கைக்கு முரணாகவும் [Breeding policy] மேற்படி மாடுகள் கொண்டு வரப்பட்டதும் இதற்குரிய முக்கிய காரணமாகும். ஒரு சில அரச ஆதரவு மற்றும் தனியார் பண்ணைகளை தவிர இறக்குமதி செய்யப்பட்ட மாடுகளை கொண்ட பண்ணைகள் தோல்வியிலேயே முடிந்துள்ளன. மாடுகளும் பல காரணங்களால் இறந்துள்ளன. [வடக்கு மாகாணத்தில் வவுனியா ஓமந்தை பகுதியில் 250 வரையான மாடுகளை கொண்டு தொடங்கப்பட்ட பண்ணை முழு மாடுகளும் இறந்த நிலையில் தற்போது மூடப்படுள்ளது. பொருத்தமற்ற

மாடுகள் பொருத்தமற்ற இடத்துக்கு வந்த தன் விளைவு இது.] செயற்கை சினைப்ப டுத்தல் முறை பயனை தர சில வருடங்கள் பிடிக்கும் ஆனால் நிலைத்த பயனை தரக் கூடியது. எனினும் செயற்கை சினைப்ப டுத்தல் தொடர்பான மக்களின் மனநிலை, அதனை செய்யும் வினைத்திறனான உத்தி யோகத்தர்களின் பற்றாக்குறை மிகப் பெரிய சவாலாக உள்ளது.

ஒரு லீட்டர் வரை பாலை தரும் மாடுக ளின் உற்பத்தி திறனை மேலும் ஒரு லீட் டர் வரை உயர்தினாலேயே கணிசமான அளவில் பாலுற்பத்தியை அடையலாம்

### இலங்கையில் உற்பத்தியற்ற மாடுகளின் அதிகரிப்பும் அவற்றை அகற்ற முறையான திட்டம் இன்மையும்

முன்னைய கட்டுரைகளில் நான் குறிப்பிட் டது போல இலங்கையில் உள்ள மாடுக ளில் கணிசமானவை பாலுற்பத்தி செய்யா தவை. அவற்றில் தற்போது பாலுற்பத்தி யில் இருப்பவை [milch animals] அண்ண ளவாக 23% ஆகும். உற்பத்தியில் பங்க ளிக்காத பசு மாடுகளையும் ஆண் மாடுக ளையும் குறைக்கும் அல்லது கழிக்கும் முறையான முறை இலங்கையில் இல்லை. மாடுகளைக் கொல்வது மதத்துடன் பிணைக்கப்பட்டு அரசியலாகப்பட்டுள் ளது. தரமான கொல் களங்களும் [slaughter houses] கிடையாது. ஒரு வெற்றிகரமான பண்ணை இயங்க தேவையற்ற மற்றும் உற்பத்திக் குறைவான மாடுகள் கழிக்கப் பட வேண்டியது அவசியமானது. உலகின் நடைமுறையும் அதுதான். உற்பத்திக் குறைவான மற்றும் மலட்டு [infertile], ஆண் மாடுகள் [Bulls] பண்ணைகளில் தொடர்ந்து காணப்படும் பட்சத்தில் பண் ணையின் செலவு கூடுவதோடு உணவு பற் றாக்குறையும் ஏற்படும். ஒவ்வொரு பண் ணைகளிலும் மேற்படி உற்பத்தியற்ற மாடு கள் அதிகரிக்கும் பட்சத்தில் நாட்டின் மொத்த பால் உற்பத்தி செலவும் கால் நடை உணவு பஞ்சமும் அதிகரித்து எதிர் மறையாக மாடுகளின் எண்ணிக்கையும், பாலின் அளவும் வீழ்ச்சி ஏற்படும். அண் மைய நாட்களில் இலங்கையில் நடை முறைப்படுத்தப்படுவதாக கருதப்படும் மா டறுப்புத் தடை சட்டம் நடை முறைப் படுத்தப்பட்டால் இந்த நிலை மேலும் தீவிரமடையலாம். ஆட்சி மாறியதால் என்னவோ அந்த திட்டம் தற்போதைக்கு கிடப்பில் போடப் பட்டுள்ளது.

### இலங்கையின் கால்நடை பண்ணைகளின் கட்டமைப்பு

இலங்கையின் பெரும்பாலான பண்ணையாளர்கள் சிறு பாலுற் பத்தியாளர்கள் [small scale]. ஓரி ரண்டு மாடுகளை வைத்து மிகக் குறைந்தளவு பாலை பெறுபவர் கள். பாலுற்பத்தியில் தன்னி றைவு கண்ட பல நாடுகளில் [இந்தியா பாகிஸ்தானை தவிர] பண்ணைகளின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு என்பதுடன் ஒவ்வொரு பண்ணையிலுள்ள மாடுகளின் எண்ணிக்கை மிக அதிகம். ஒப்பிட்டளவில் இலங் கையில் உற்பத்தித் திறனுடன் ஒப்பிடும் போது பண்ணைக ளின் எண்ணிக்கை மிக அதிகம். [350000 ற்கு அதிகமான பதிவு செய்யப்பட்ட பண்ணைகள் உள்ளன.] மத்திய medium] மற்றும் பெரும் பண்ணைகள் [Mega farms] அதிகரிக்கும் போதுதான் கணிசமான பாலுற்பத்தியை எதிர்பார்க்க முடியும்.

**வெளிநாட்டு மாடுகளை இறக்கு மதி செய்வதன் மூலம் சடுதியாக பாலுற்பத்தியை கூட்ட முடியும் என்ற போதும் அண்மைக் காலத் தில் இறக்குமதி செய்யப்பட்ட வெளி நாட்டு மாடுகளில் இருந்து சாதக மான பயனை பெற முடியவில்லை.**

### மலடு நீக்க சிகிச்சையும் அதன் நிலையும்

பாலுற்பத்தி செய்ய முடியாத கணிசமான மாடுகளை மலடு நீக்க சிகிச்சை [infertility treatment] செய்வது மூலம் ஓரளவுக்கு நிலையை சரிப்படுத்த முடியும். எனினும் அதற்குரிய வசதிகள் சகல இடங்களிலும் இருப்பதில்லை. அதிகளவு அரச துறையா கவுள்ள கால்நடை உற்பத்தித் துறை இந்த விடயத்தை கையாள சரியான பௌதீக, மனித வளத்தை கொண்டிருக்கவில்லை என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குறிப்பாக கிராமப் புறங்களில் தேவை யான மருந்துகளும் கால்நடை வசதிகளும் இல்லை என்பதுடன் சிகிச்சைக்குரிய செலவும் அதிகம் என்பதால் பண்ணையா ளரும் மலடு நீக்க சிகிச்சையை விரும்பு வதும் மினக்கடுவதும் இல்லை. உடனடி யாக, சிகிச்சை செய்யக் கூடிய விலங்கு களை இறைச்சிக்காக விற்று விடுகின்றனர். பெண் மாடுகளை மலடு நீக்க சிகிச்சை செய்யும் அதேவேளை பாலுற்பத்திக் குறைவான இனத்து ஆண் மாடுகளை மல டாக்கம் [castration] செய்யவும் வேண்டும் அல்லது பண்ணையில் இருந்து அகற்ற வேண்டும். இரண்டையும் செய்யக் கூடிய



**இலங்கை பால் பண்ணைகள்**

Image source - bizcom.lk

மன நிலையில் எமது பண்ணையாளர்கள் இருப்பது மிக மிகக் குறைவு.

### செயற்கை முறைச் சினைப்படுத்துனர்களின் குறைவு

ஐம்பதுகளில் இருந்து செய்யப்படும் மாடுகளை மேம்படுத்தக் கூடிய செயற்கை சினைப்படுத்தல் முறை அண்மைய நாட்களில் குறைவடைவதை காண முடிகிறது. [நகரங்கள் மற்றும் மிகக் குறைந்தளவு நல்லின மாடுகளை வைத்திருப்பவர்கள் இந்த முறையை நாடுகின்ற போதும் கிராமப்புறங்களில் குறிப்பாக அதிகளவு மாடுகளை வைத்திருப்பவர்கள் மிக குறைவு]. வழமையாக கால்நடை அலுவலகங்களில் செயற்கை முறை சினைப்படுத்தலை செய்யும் அரச கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் [LDO *Livestock Development officers*] அண்மைக் காலத்தில் செயற்கை முறை சினைப்படுதலை செய்வது குறைந்து தனியார் செயற்கை முறை சினைப்படுத்துனர்கள் [*Private AI technicians*] அதிகரித்துள்ளதை காண முடிகிறது. உயர்தர விஞ்ஞான பிரிவிலிருந்தே கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதால் அரச கால்நடை போதனாசிரியரின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதுடன் அதிகளவு பெண் கால்நடை போதனாசிரியர்கள் உள்வாங்கப்படுகின்றனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பண்ணையாளரின் வீடுகளுக்கு சென்று செயற்கை சினைப்படுதலை செய்ய விரும்புவதில்லை. அவர்கள் களப் பணிகளை விட அலுவலகங்களிலுள்ள வேலைகளை செய்வதிலேயே அதிக ஆர்வத்தை காட்டுகின்றனர். தனியார் செயற்கை சினைப்படுத்துனர்கள் தமது சினைப்படுதல் பணிகளை விட குறுக்கு வழியில் பணம் பார்க்கும் சிகிச்சையளிக்கும் வேலைகளில் ஈடுபட்டு பணம் சம்பாதிப்பதில் ஈடுபடுவதை காண முடிகிறது. பெரும்பாலான தனியார் சினைப் படுத்துனர்கள் குறித்த காலத்தில் இந்த தொழிலில் இருந்து விலகி முழு நேர சட்ட விரோத கால்நடை வைத்தியராகவும்[*illegal*] பண்ணைக்கடை முதலாளிகளாகவும் மாறியிருப்பதை பல பகுதிகளில் காண முடிகிறது.

### எருமைகளின் பற்றாக்குறை

உலகின் அதிக பாலுற்பத்தி செய்யும் இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் அதிகளவில் எருமை மாடுகள் காணப்படுவதோடு கணிசமான அளவில் பாலுற்பத்தியையும் செய்கின்றன. எருமைகளின் பால் அதிக கொழுப்பை கொண்டதுடன் பல பால் உற்பத்திப் பொருட்களை செய்யக் கூடியது. அத்துடன் அதிக நோய் எதிர்ப்பு சக்தி வாய்ந்தது. இலங்கையை பொறுத்த வரை கடந்த சில தசாப்தங்களாக எருமைகளின் அளவு குறைந்து வருகின்றது. எருமைகளில் வேட்கை அறிகுறிகளை காண்பது கடினம் என்பதால் செயற்கைச் சினைப்படுத்தல் செய்வது மிகக் கடினம் பல செயற்கை முறை சினைப்படுத்துனர்கள் எருமை மாடுகளில் அதனை செய்வதில் குறைந்த தேர்ச்சியையே கொண்டுள்ளனர். இங்கும் நல்லின மூரா, நிலி ரவி போன்ற அதிக பால் உற்பத்தியை உடைய எருமைகள் மிக குறைவு என்பதுடன் அதிகளவில் உள்ள உள்ளூர் எருமைகள் மிக உறைந்த பாலையே தருகின்றன. மேற்கூறிய மாடுகளின் இனம் தொடர்பான பிரச்சனையான விடயங்கள் சரிவரக் கையாளாமல் பாலுற்பத்தியை அதிகரிக்க முடியாது.

(தொடரும்)

# யாழ்ப்பாணக் குயர் விழா: சூழலியலும் குயர் மக்களும்



அனுதர்சி கபிலன்

இக்கட்டுரைத் தொடரானது, வடபுல மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றியுள்ள பிற்போக்கான கருத்தியல்கள் பால்நிலைச் சமத்துவத்திற்கு அச்சுறுத்தலாக அமைதல், குயர் மக்கள் இந்தச் சமூகத்தின் மத்தியில் வன்முறைகளையும் பாரபட்சங்களையும் எதிர்கொள்வதற்குக் கலாசாரமும் சமய அல்லது மத கட்டமைப்புக்களின் பங்கு, வடபுலத்தில் குயர் அரசியல், குயர் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய குயர் செயற்பாட்டாளர்களின் சமத்துவம் நோக்கிய முன்னெடுப்புக்கள், கல்வியலாளர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட மையக்கருத்து வெளிப்பாட்டாளர்கள் குயர் அரசியல் அல்லது அதுசார்ந்த விடயங்களில் பேணும் மௌனிப்பு என்பன பற்றி பேசவிழைகின்றது.

குயர் சமூகத்தின் பன்மைத்துவத்தையும் சமூக ஏற்பையும் நோக்கிய ஏராளமான செயற்பாடுகள் மற்றும் குயர் நிகழ்வுகள் உலகளாவிய ரீதியில் நீண்டகாலமாக இடம்பெற்றுவருகின்றன. இவ்வாறான நிகழ்வுகள் சமூக, பொருளாதார, அரசியல் போன்ற பல்வேறு தளங்களிலும் குயர் மக்கள் தமக்கான வெளிகளையும் உரிமைகளையும் வென்றெடுப்பதை நோக்கியே நகரசெய்கின்றன. குயர் மக்கள் தமது காதல் வாழ்க்கையிலும் மற்றவர்களைப் போலவே வாழ விரும்புகிறார்கள். ஆனால் அதற்காக அவர்கள் நிறையப் போராடவேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் சமூக ஏற்பு நோக்கி இது போன்ற சுயமரியாதை நிகழ்வுகளை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது.

குயர் சமூகங்களின் சுயமரியாதைக்கான போராட்டங்களில் சுயமரியாதைக் கொடியானது உலகெங்கிலும் உள்ள குயர் மக்களால் பயன்படுத்தப்படுகிறது. இக் கொடியில் குயர் சமூகங்களின் பன்மைத்தன்மையைக் காட்டுவதற்காக வானவில்லில் உள்ள நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சுயமரியாதை நிகழ்வுகள் (Pride Events), சுயமரியாதைப் போராட்டங்கள் மற்றும் ஏனைய குயர் சமூகம் சார்ந்த நிகழ்வுகளில் குயர்மக்கள் மட்டுமல்லாது ஏனைய மக்களும் பங்கெடுத்தல் என்பது சமத்துவத்துக்கான சமிக்ஞையாக அமையும். அவ்வாறான நிகழ்வுகள் இலங்கையிலும் நடைபெற்றுவருகின்றன.



இலங்கையின் முதலாவது சுயமரியாதை நிகழ்வு (Pride Event) 2005 ஆம் ஆண்டு இடம்பெற்றது. தாஜ்சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்ற இந் நிகழ்வில் 300க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். ஈகுவல் கிரவுண்ட் (Equal Ground) நிறுவனம் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் இந்த நிகழ்வை முன்னெடுத்தது. அந்தக் காலப்பகுதியில் ஈகுவல் கிரவுண்ட் (Equal Ground) நிறுவனத்தின் இயக்குநரான றோசன்னாவின் (Rosanna Flamer Caldera) செயற்பாடுகள் சவால் நிறைந்ததாக இருந்தது. அதேநேரம் குயர் சமூகத்தின் உரிமைகளை உரக்கச் சொன்ன சமூக ஏற்பை வலியுறுத்தும் ஆரம்பக் குரலாக றோசன்னாவின் செயற்பாடுகள் அமைந்தன. இதுவே குயர் உரிமைகள் கவனம்பெறாத காலகட்டத்தில் இலங்கையின் ஒட்டுமொத்த குயர் மக்களின் குரலாகவும் ஒலித்திருந்தது. அதன் பின்னரான காலப்பகுதியிலேயே குயர் உரிமைகள் குறித்த முன்னெடுப்புக்கள் இலங்கையின் பல பாகங்களிலும் இடம்பெற்றன. இன்று இலங்கையில் குயர் மக்களுக்கான உரிமைகளைப் பேசும் ஏராளமான நிறுவனங்கள் உருவாகியிருக்கின்றன. அவர்களின் சமூக ஏற்பு நோக்கிய ஏராளமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் குயர் மக்கள் பற்றிய புரிதலுள்ள, பால்நிலை சமத்துவம் மிக்க சமூகம் ஒன்றும் உருவாகி வருகின்றமையை அவதானிக்கலாம்.

**இலங்கையின் முதலாவது சுயமரியாதை நிகழ்வு (Pride Event) 2005 ஆம் ஆண்டு இடம்பெற்றது. தாஜ்சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்ற இந் நிகழ்வில் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஈகுவல் கிரவுண்ட் (Equal Ground) நிறுவனம் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் இந்த நிகழ்வை முன்னெடுத்தது.**

இந்த அடிப்படையில் கடந்த வருடம் (2021) நவம்பர் மாதம் 21ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் முதலாவது குயர் விழாவானது நேரடியாகவும் இணையவழியிலும் இடம்பெற்றது. இந்த விழாவானது உரைகள், கலந்துரையாடல்கள், கவிதை வாசிப்புகள், பயிற்சிப்பட்டறைகள், காண்பியக் கலைக்காட்சி, மற்றும் திரையிடல் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியிருந்தது.

அதன் தொடர்ச்சியாக 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த குயர் விழாவானது ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை நடந்து முடிந்திருக்கிறது. இந்த குயர் விழாவானது பல்வேறுபட்ட முக்கிய அம்சங்களை உள்ளடக்கியிருந்தது. வழமையான நிகழ்வுகள் குயர் சூழலியல் என்பதைக் கருப்பொருளாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டிருந்தன. சூழலியல் சார்ந்து செயற்படும் நிறுவனங்களும் செயற்பாட்டாளர்களும்




Pride in Sri Lanka

Image source - glreview.org

இணைந்து விதைப்பந்து சிற்பங்களை உருவாக்கல், கவிதையின் சூழலியல்கள், களப்பயணங்கள் மற்றும் கட்டுருவாக்க முயற்சிகள் போன்ற பல நிகழ்வுகளின் மூலம் இயற்கை நேயச் செயற்பாடு களை ஊக்குவித்திருந்தார்கள். சமகாலத் தில் சூழலியல் சார் விடயங்கள் அதிகம் கவனம்பெற ஆரம்பித்திருக்கின்ற வேளை யிலான இதுபோன்ற முன்னெடுப்புக்கள் வரவேற்கத்தக்கவையாக இருக்கின்றன. இந்த நிகழ்வுகள் அனைத்தும் நிகழ்வ தற்கான வெளியாக A9 வீதியில் அமைந் துள்ள 'கலம்' - பண்பாடுகளின் சந்திப்பு வெளி அமைந்திருந்தது.

யாழ்ப்பாணம் போன்ற பண்பாட்டுக் கட்டுப்பாடுகளும் தந்தையாதிக்கக் கருத் தி யல்களும் ஆழமாக வேரூன்றிய ஒரு சமூகத்தில் குயர் விழாவை முன்னெடுக் கின்றமையானது, பால்நிலை சார்ந்த மாற்றுக் கருத்துக்களுக்கான வெளி ஒன் றிருப்பதை புலப்படுத்துகின்றது. இருந் தாலும் இக்குயர் விழாவில் மக்கள் பங் கேற்பு குறிப்பிட்ட ஒரு மட்டத்திலேயே உள்ளமையையே அவதானிக்க முடிந்தது.

யாழ் குயர் விழாவானது, செயற்பாட் டாளர் கஸ்ரோ பொன்னுத்துரையால் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டுவரு கிறது. இது தொடர்பில் கஸ்ரோ குறிப் பிடுகையில் "நான் யாழ்ப்பாணச் சங்கம் மற்றும் யாழ்ப்பாண திருநர் வலைய மைப்பு இரண்டுடனும் இணைந்து செயற்பட்டுவருகிறேன், குயர் உரிமை கள் சார்ந்த சமூக ஏற்பு நோக்கிய பய ணத்தில் செயல்வாதம் சார்ந்து நான் இயங்கி வருகிறேன். எனது தனிப்பட்ட ஆர்வமான கலை, கலாசார மற்றும் இலக்கிய வடிவங்கள் மீதான ஆர்வம், இக்குயர் விழாவின் கருப்பொருளிலும் கட்டமைப்பிலும் தாக்கம் செலுத்தி யது.
ஏற்கனவே இருக்கக்கூடிய வடிவங்களை பயன்படுத்தல் மற்றும் புதிய வடிவங்க ளுக்கான தளத்தை உருவாக்குவதும் எமது நோக்கமாக இருந்தது. சமூகத்தில் கலை வடிவங்களுக்கான சுழற்சியை உருவாக்குதல். கலாசாரப் பரிவர்த்த னையை ஏனைய பிரதேசம் சார்ந்தும் உலகளாவிய ரீதியிலும் உருவாக்குதலும் எமது நோக்கமாகும்" என தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், "மிக வும் குறைந்தளவிலான நபர்களுடனான ஒழுங்கமைப்புக் குழு, அதையும் தாண்டி கடந்த வருடத்தை விட இந்த வருடம் இவ்விழாவானது ஏதோவொருவகை யில் தரமானதாகவும் முன்னேற்றகரமாக வும் இருக்கவேண்டும் என்பது எங்களது விருப்பமாக இருந்தது. அது நிறைவேறி யிருப்பதாகவே நான் கருதுகிறேன். இக் குயர் விழாவானது வருடாந்தம் இடம் பெறவேண்டும் என்பதும் இக் கலைவ டிவங்களை அடுத்த அடுத்த வருடங்க ளிலும் இடம்பெறச் செய்ய வேண்டும் என்பதும் எங்களது விருப்பமாக இருக் கிறது. இனிவரும் காலங்களில் மற்றைய சமூகங்களிடமும் இவ்விழாவைக் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டிய தேவையும் இவை சார்ந்த ஆர்வத்தை சமூகத்தில் உருவாக்கவேண்டிய தேவையும் உள் ளன. கலைகளையும் செயல்வாதத்தை யும் பிரித்துப்பார்க்க முடியாது. அரசி யல் நீக்கம் செய்யப்பட்ட கலைகள் என்று எவையும் இல்லை. இந்தக் கலை வடிவங்களுக்கூடாக குயர் மக்களு டைய ஏற்பு நோக்கிய பயணங்கள் முன் னெடுக்கப்படுகின்றன" என்றார்.

ஹரி இராஜலட்சுமி அவர்கள் யாழ்ப்பா ணக் குயர் விழாவுக்கான எடுத்தாளுன ராக இருக்கிறார். குயர் விழா தொடர் பில் அவர் குறிப்பிடுகையில் "இந்த வருடம் குயர் சூழலியல் என்ற தொனிப் பொருளில் யாழ்ப்பாணக் குயர் விழா ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது. எங்களு டைய சமூகத்தைப் பொறுத்தவரை சூழ லைப் பாதுகாப்பதற்கான தேவை ஒருபு றம் இருக்கின்ற அதேவேளை, "நீங்கள் இயற்கைக்கு மாறானவர்கள், இயற் கைக்கு விரோதமானவர்கள், இயற் கைக்கு முரணான வாழ்க்கை முறைமை, ஆசைகள், விருப்பங்களைக் கொண்டி ருக்கிறீர்கள்" என்று சொல்லப்படுகின்ற மக்கள் எப்படி இயற்கையை நேசிக்க முடியும் மற்றும் அவர்கள் எப்படித் தம்மை இயற்கையுடன் மீளிணைத்துக் கொள்ள முடியும் என்பதையும் இயற் கையில் தங்களுக்கான இடத்தைக் கண் டடைதலையும் இவ்விழா வலியுறுத்து கிறது" எனவும் குறிப்பிட்டார் .

ஹரி இராஜலட்சுமி அவர்கள் மேலும் குறிப்பிடுகையில் "இயற்கையில் மக்க ளுடைய ஊடாட்டம் எவ்வாறான முறைகளில் அமைந்திருந்தது அல்லது அமைந்திருக்கிறது என்பது மீண்டும் மீண்டும் இவ் விழாவில் நாங்கள் வலியு

**குயர் சூழலியல் என்ற தொனிப் பொருளில் யாழ் குயர் விழா பல்வேறுபட்ட அம்சங்களுடன் நடாத்தப்பட்டமை சிறப்பான முன்னெடுப்பாகும். இந் நிகழ்வில் மக்களை நிலம் சார்ந்து தொடர்புபடுத்தி யிருந்தமை, கலை, பண்பாடு மற்றும் சூழலியல்சார் விடயங்களை உள்ளடக்கி யிருந்தமை என்பன முக்கியத் துவம் பெறுகின்றன.**



**Jaffna Queer Fest Founder and Director**
**Kasro Ponnuthurai**

**Image source - www.themorning.lk**

றுத்திய விடயமாகவுள்ளது. மக்களுடைய ஊடாட்டம் சில நிலப்பகுதியில் சாதிய ரீதியில் மட்டுப்படுத்தப்படுகிறது. அது தவிர இராணுவ ஆக்கிரமிப்பும் இயற்கையில் மக்களுடைய ஊடாட்டத்தைக் கட்டுப்படுத்தும் மற்றுமொரு காரணியாக இருக்கிறது. இதைப் போலவே இயற்கைச் சூழலுடன் குயர் மக்களுடைய ஊடாட்டமும் மட்டுப்படுத்தப்படுகிறது. குயர் மக்களும் இந்த இயற்கையின் ஓர் அம்சம் என்பதையும் இயற்கையை அனுபவித்தல், நேசித்தல், மற்றும் அதில் மக்களுக்கு உள்ள மட்டுப்பாடுகள் போன்ற பல விடயங்களையும் சிந்திப்பதற்கும் நிகழ்த்திப் பார்ப்பதற்குமான களமாக இவ் விழா அமைந்தது" என்றார்.

இக்குயர் விழாவின் மற்றுமொரு முக்கிய அம்சமாக விரிவுரையாளர், செயற்பாட்டாளர் எனப் பல்பரிமாணங்களைக் கொண்ட றியாஸ் அஹமெட்(அம்ரிதா ஏயெம்) அவர்கள் சுற்றுச்சூழல் நடைமுறையில் பல்வேறுபட்ட சமூகங்களை ஈடுபடுத்தல் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்துச் சென்றிருந்தார். பால்நிலை சார் பல்பரிமாணங்களின் சூழலியல் சார் செல்வாக்கினைப் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது. அதுமட்டுமல்லாமல் விதைப்பந்து சிற்பங்களை உருவாக்குதலும் இவ் விழாவின் மற்றுமொரு அம்சமாக அமைந்தது.

இவ் விழாவில் கவிஞர், எழுத்தாளர் கிரிஷ் அவர்கள் மொழிபெயர்த்த 'காதலெனும் பெருங்கடல்' என்ற நூல் வெளியிடப்பட்டது. இந்நூல் ஆரோக்கியமான கலந்துரையாடல்களையும் கருத்துப் பகிர்வுகளையும் கொண்டு நடந்தேறியது. அது போலவே கலைஞர்களின் ஒருங்கிணைப்புடன் கூட்டிணைந்த கலையுருவாக்கம் என்ற நிகழ்வும் இடம்பெற்றது. இதில் பாவனை முடிந்த ஒப்பனைப் பொருட்கள், அழகுசாதனங்கள் போன்றவற்றைக் கொண்டு புத்தாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்வினை நிலானி ஜோசேப் மற்றும் கிருஷ்ணப்பிரியா தபேந்திரன் ஆகிய கலைஞர்கள் வழிகாட்டியிருந்தனர்.

அதுமட்டுமல்லாது திரையிடல்கள் இவ்விழாவின் மற்றுமொரு முக்கிய அம்சங்களாக அமைந்தன. ஏ.எம்.அஸ்பாக் திரையிடல் நிகழ்வுகளின் ஒருங்கிணைப்பாளராக இருந்தார். அஸ்பாக் குயர் விழா பற்றிக் குறிப்பிடுகையில் "சூழலியல், திரையிடல்கள், சமூகம் என்பவற்றுக்கிடையில் நெருக்கமான மற்றும் சிக்கலான தொடர்புகள் இருக்கின்றன. குயர் விழாவில் திரையிடல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவ்விழாவுக்கு திரைப்படங்களைத் தெரிவு செய்வது கடினமாக இருந்தது" என்றும் குறிப்பிட்டார். அத்துடன் குயர் பார்வையுடன் திரைப்படங்களை அணுகுதல் மற்றும் திரைப்படங்களுக்கும் குயர் மக்களுக்குமான தொடர்புகள் பற்றிப் பல விடயங்களை அறிந்துகொண்டேன் எனவும் இக் குயர் விழா நிறைய விடயங்களைக் கற்றுக் கொள்வதற்கான தளமாக அமைந்தது எனவும் காடு, நிலம் மற்றும் சூழலியல் சார் காத்திரமான கலந்துரையாடல்கள் இங்கு முக்கியம் பெற்றதாகவும் அஸ்பாக் குறிப்பிட்டார்.



குயர் மக்கள் சார்ந்தும் சூழலியல் மற்றும் நிலம் சார்ந்தும் திரையிடல்கள் இடம்பெற்றன. அது மட்டுமல்லாமல் சாதி, மத, பால்நிலை மற்றும் ஏனைய பல விடயங்களும் திரையிடல்களில் உள்வாங்கப்பட்டிருந்தன. இவ்விழாவில் குறும்படங்கள் மற்றும் ஆவணப்படங்கள் திரையிடப்பட்டன. 'பற' என்ற குறும்திரைப்படம் சார்ந்து காத்திரமான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் திரையிடப்பட்ட 'சாராவின் படம்' குயர் சமூகம் சார்ந்து எடுக்கப்பட்ட ஒரு படம். இது மாற்றுத்திரைப்பட உத்திகளைப் பயன்படுத்தி எடுக்கப்பட்டிருந்ததுடன் சமூகம் குயர் மக்கள் மீது திணிக்கின்ற சமூகக் கருத்தியலையும் குயர் மக்கள் எதிர்கொள்கின்ற வேறுபட்ட பிரச்சினைகளையும் பேசுகின்றது. மேலும் 'குயர் மக்களின் சுயமரியாதை நிகழ்வுகள்', 'இதுவொன்றும் புதிதில்லை', 'LGBTIQA+ தொடர்பான குறும்படங் கள்', 'கே இந்தியா மெற்றிமோனி', 'இதயத்திற்கொரு இல்லம்' எனப் பல திரையிடல்கள் இடம்பெற்றிருந்தன.
குயர் சூழலியல் என்ற தொனிப்பொருளில் யாழ் குயர் விழா பல்வேறுபட்ட அம்சங்களுடன் நடாத்தப்பட்டமை சிறப்பான முன்னெடுப்பாகும். இந் நிகழ்வில் மக்களை நிலம் சார்ந்து தொடர்புபடுத்தியிருந்தமை, கலை, பண்பாடு மற்றும் சூழலியல்சார் விடயங்களை உள்ளடக்கியிருந்தமை என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. இயற்கைக்கு விரோதமானவர்களாகச் சமூகம் பார்க்கின்ற குயர் மக்களின் இயற்கையுடனான இணைப்பை யாழ் குயர் விழா வலியுறுத்தியது.

(தொடரும்)



வாய்விளங்கம்

Image source - www.herbsquare.ir

# இரசவர்க்கம் : மூலிகை மருந்துகள்



பாலா. சிவகடாட்சம்

ஈழத்தில் தோன்றிய வைத்தியம் தொடர்பான நூல்களில் ஒன்று செகராசசேகரம். மிகத் தொன்மையான இந்த நூலின் பல பகுதிகள் அழிவடைந்த நிலையில், அதன் எஞ்சிய பகுதிகளே இப்போது நமக்கு நூலுருவில் கிடைக்கின்றது. செகராசசேகரத்தின் இந்த எஞ்சிய பகுதிகளில் 'இரசவர்க்கம்' என்பதை அடிப்படையாகக் கொண்டு அதில் சொல்லப்பட்ட நோய்களையும், அவற்றுக்கான சிகிச்சை முறைமைகளையும், மருந்து வகைகளையும் இக்காலத்துக்கேற்ற வகையில் தருவதே இந்தக் கட்டுரைத்தொடர்.

### வாய்விளங்கம்

**போய்விளங்கும் வாயுவையே போக்கும்புகல ரிய**
**வாய்விளங்கம் தனையே வகையாக்கேள்நீவிளங்க**
**எண்பது வாதம் போம் ஏந்திழையீர்கேளீர்**
**உண்பதற்கு நல்லதென்றே யோது**

**இதன் பொருள்: வாய்விளங்கம் வாய்வைப் போக்கும். எண்பது வகையான வாதங்களையும் போக்கும். உண்பதற்கும் நல்லது.**

வாய்விளங்கத்தின் மிக முக்கியமான மருத்துவப்பயன் ஒன்றை இரசவர்க்கம் குறிப்பிடத்தவறிவிட்டது. நாடாப்புழு (tapeworm), கொக்கிப்புழு போன்ற குடற்புழுக்களுக்கு வாய்விளங்கம் சிறந்த மருந்தாகக் கூறப்படுகிறது. உலகப்பிரசித்திபெற்ற மருத்துவ ஆய்விதழான 'தி லான்செற்' (The Lancet) 1887 ஆம் ஆண்டிலேயே நாடாப்புழுவுக்கு வாய்விளங்கம் சிறந்த மருந்தாகப்பயன்படக்கூடியது என்ற தகவலை வெளியிட்டுள்ளது.

வாய்விளங்கமும் கொன்றைப்பட்டையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட குடிநீரை இளஞ்சூட்டுடன் 40 தொடக்கம் 60 மில்லி லீட்டர் வரை ஒருநாளைக்கு மூன்று தடவைகள் குடிக்கக்கொடுத்தால் வயிற்றில் உள்ள பூச்சிகள் அனைத்தும் அகற்றப்படும். வாய்விளங்கமும் திரிபலையும் (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்) சேர்த்துத் தயாரிக்கப்பட்ட தூளை தேனுடன் அருந்தினால் தோல் வியாதிகள், புழுக்கள், நீரிழிவு என்பன தீரும் என்று கூறப்படுகிறது. முரசு வீக்கம், பற்சூத்தை போன்றவற்றைத் தவிர்க்கும் வாய்கழுவி (mouth wash) தயாரிக்க வாய்விளங்கம் பயன்படும்.

*False black pepper* என்பது இதன் ஆங்கிலப்பெயர். *Vidang* என்பது இதன் வர்த்தகப் பெயர். *Embelia ribes Burm.F.* என்பது இதன் லத்தீன் விஞ்ஞானப்பெயர்.

### அதிமதுரம்

**அதிமதுரம் பித்தம் அகற்றுமே அம்புவியில்**
**கொதியதொருவெட்டைதனைக்கூட்டுமேமதியாமல்**
**பித்தவெட்டைபோக்குமே பேருலகில் மானிடர்க்கு**
**சித்தர்நிலை நிறுத்தும் செப்பு**

**இதன் பொருள்: அதிமதுரம் பித்தத்தினால் ஏற்படும் வயிறெரிச்சலைக் கட்டுப்படுத்தும். இரத்தக்கொதிப்பைக்கூட்டும்.**

சுவாசக்குழாயின் சளியமென்சவ்வுகளைச் சீர்செய்து சளியச்சுரப்பை ஊக்குவிப்பதன் மூலம் வரட்டு இருமலைக்



**அதிமதுரம்**

Image source
www.sudagarkrishnanchannels.com

குணமாக்கும். வயிற்றுப்புண், நெஞ்செரிவு என்பவற்றுக்கான மருந்துகளிலும் அதிமதுரம் சேர்க்கப்படுகின்றது. வாய்ப்புண், தொண்டைப்புண் என்பவற்றைச் சீர் செய்யும்.
அதிமதுரத்தில் 24% 'கிளிசெறைஸின்' (Glycyrrhizin) என்னும் இரசாயனம் உள்ளது. இந்த இரசாயன மருந்துப்பொருள் வேறுபல பக்க விளைவுகளை ஏற்படுத்துமாதலால் இந்த 'கிளிசெறைஸின்' நீக்கப்பட்ட அதிமதுரத் தயாரிப்புகளை (de glycyrrhizinated licoriceDGL) இன்று சில மருத்துவர்கள் பயன்படுத்துகிறார்கள்.
தொண்டை நோவு, தொண்டைக்கரகரப்பு அல்லது வரட்டு இருமல் இருக்கும்போது 1 கிராம் முதல் 5 கிராம் வரையிலான அதிமதுரவேர்த்தூளில் குடிநீர் காய்ச்சிக்குடிக்கவும் அல்லது ஒருநாளைக்கு மூன்று தடவைகள் ஒரு துண்டு வேரை வாயில் போட்டும் சுவைக்கலாம்.
அதிமதுரப்பொடியை நீரில் கலந்து ஒரு இரவு முழுவதும் ஊறவைத்து ,காலையில் அரிசிக்கஞ்சியுடன் அதிமதுரம் ஊறிய நீரைக்கலந்து குடித்துவந்தால் குடல் புண் (Peptic ulcer) குணமாகும்.
குடல்புண்ணுக்கு கிளிசிறசின் நீக்கப்பட்ட அதிமதுரச்சாறு ஒருநாளைக்கு மூன்று தடவைகள் எடுக்கலாம். அதிமதுரத்தை தொடர்ந்து ஒரு கிழமைக்குமேல் பயன்படுத்தல் கூடாது. குழந்தைகளுக்கு அதிமதுரக் குடிநீர் கொடுக்கவே கூடாது.

உயர் இரத்த அழுத்தம், இரத்தத்தில் பொட்டாசியம் பற்றாக்குறை, கடுமையான ஈரல் வியாதிகள் உள்ளவர்கள் அதிமதுரத்தைப் பயன்படுத்தல் கூடாது. சிறு நீர்க் கழிவை ஊக்குவிக்கும் மருந்துகளினால் (thiazide diuretics) ஏற்படும் நீரிழப்பை அதிமதுரம் மேலும் அதிகரிக்க வைக்கும்.
Licorice (Liquorice) என்பது அதிமதுரத்தின் ஆங்கிலப் பெயர். Glycyrrhiza glabra L என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப்பெயர்
[இலங்கையிலும் தமிழகத்திலும் அதிமதுரத்துக்குப் பதிலாக வெள்ளைக் குன்றிமணி (Abrus precatorius L, white variety) என்னும் செடியின் வேரை 'நாட்டுஅதிமதுரம்' என்னும் பெயரில் ஆயுர்வேத மருந்துக்கடைகளில் விற்கின்றார்கள். இதில் ஆச்சரியம் என்னவென்றால் உண்மையான அதிமதுரத்தில் உள்ள இரசாயனமான 'கிளிசெறைஸின்' சற்றுக்குறைந்த அளவில் குன்றிமணியிலும் காணப்படுவதுதான்.]

## திப்பிலிமூலம்

**ஒப்பிலையே காயத் தொருதோஷம் கிட்டாது**
**திப்பிலிமூலம் தேயாதுஇப்புவியில்**
**வாயுவலி குன்மம் வளர்சன்னியைத் துரத்தும்**
**நீயும் அறிவாய் நிலை**

**இதன்பொருள்: உடம்பில் முத்தோஷங்களால் ஏற்படும் நோய்களைத் திப்பிலிமூலம் தவிர்க்கும். வாய்வு, குன்மம், சன்னி என்பவற்றுக்கும் இது மருந்தாகும்.**

திப்பிலிமரத்தின் வேர் திப்பிலிமூலம் என்று அறியப்படும். திப்பிலிமூலத்தை நன்றாகக் காயவைத்து இடித்து அரித்து எடுத்த தூளை ஒரு போத்தலில் அடைத்து வைத்துப் பயன்படுத்தவேண்டும். சாதாரண தலைவலிக்குத் திப்பிலிமூலம் சிறந்த மருந்தாகும். இருமல், தடுமல், நெஞ்சில் சளிக்கட்டு என்பவற்றுக்கும் திப்பிலிவேர் மருந்தாகும்.
திப்பிலிவேர்த்தூள் பெரியவர்களுக்கு 2 அல்லது 3 கிராம் என்ற அளவிலும் சிறுவர்களுக்கு 250 அல்லது 500 மில்லிகிராம் என்ற அளவிலும் ஒரு நாளைக்கு இரு தடவைகள் வெறும் வயிற்றில் 3 அல்லது 5 தேன் அல்லது நெய்யுடன் சேர்த்து எடுக்கவேண்டும். மருந்தை அருந்தியதும் இளஞ்சூடான வெந்நீர் அல்லது பால் அருந்த வேண்டும்.

## தாளீசபத்திரி

**தாளீசபத்திரிக்குத் தாபமுள்ள அத்திசுரம்**
**மாளீசல் போலே மடியுமேயாளிதையே**
**பித்தமயக்கம் பிரமேகம் வாந்திவிக்கல்**
**பத்தத்து நோய் அகலும் பார்**

**இதன் பொருள்: தாளீசபத்திரிக்கு எலும்பு மச்சையில் கோளாறு காரணமாகத் தோன்றும் காய்ச்சல் தீரும். பித்தம் காரணமாகத் தோன்றும் மயக்கம் மற்றும் நீரிழிவு வாந்தி, விக்கல் என்பனவும் சுகமாகும்.**



தாளீசபத்திரி

Image source - alchetron.com

தாளீசபத்திரி இலைச்சாறு இரத்தத்தைச் சுத்தம் செய்யும் குணம் உடையது. இதன் இலைகளைக் காய வைத்து, அரைத்து எடுத்த தூளினால் பல்துலக்கி வந்தால் பல்வலி தீரும் என்று கூறப்படுகிறது.

முட்டு, இழுவை போன்ற ஆஸ்துமாக் குறி குணங்களைக்காட்டும் சுவாசத் தொகுதி சம்பந்தப்பட்ட நோய்களுக்கு தாளீசபத்திரி மருந்தாகப் பயன்படுகிறது. இதுபற்றி இரசவர்க்கம் எதுவும் கூறாவிடினும் பதார்த்த குணசிந்தாமணி இந்தப்பயன்பாட்டை எடுத்துரைக்கின்றது.

**நாசிகளுக்குப் பிணிகள் நாட்பட்டகாசஞ்சு**
**வாசமருசி வமனங்கால்வீசிவரு**
**மேகமந்த சத்திசுரம் விட்டேகும் தாளிசத்தா**
**லாகுஞ் சுகப்பிரசவம்**

**(பதார்த்த குணசிந்தாமணி)**

தாளிசபத்திரிக்கு சுவாசக்குழாய்களை விரிவுபடுத்தும் குணம் இதற்கு இருப்பதாகக் கூறப்படுகிறது. அத்துடன் சளியைக் குறைத்து சுவாசத்தை இலகுவாக்கின்றது. குரல் கம்மலைச் சீராக்கவும் இது உதவுகிறது.
பசியின்மையைப்போக்கி உணவில் விருப்பத்தை ஏற்படுத்துகிறது. மீண்டும் மீண்டும் காக்கைவலிப்பு ஏற்படுவதைக்குறைக்கவும் தாளீசபத்திரி உதவுகிறது.
தாளீசாதிச் சூர்ணம் என்ற பெயரில் ஆயுர்வேத மருந்துக்கடைகளில் இதனைப் பெற்றுக் கொள்ளமுடியும். 125 மில்லி கிராம் தொடக்கம் 1 கிராம் வரையில் இம் மருந்தை எடுக்கலாம்.

*Himalayan fir* என்பது தாளீசபத்திரியின் ஆங்கிலப்பெயர். *Talispatra* என்பது இதன் வர்த்தகப் பெயர். *Abies webbiana LINDL* என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப் பெயர்.

## சடாமாஞ்சில்

**தேடாதொரு பித்தம் சிதறும் கிறுகிறுப்பு**
**ஆடாது உட்டணங் கண்டகலுமேசடாமாஞ்சில்**
**நல்லகுணம்மெத்த நாட்டில்இதையறியும்**
**சொல்லவும் வேணும் சுகம்**

**இதன் பொருள்: சடாமாஞ்சில் என்னும் மூலிகையினால் பித்தத்தினால் ஏற்படும் தலைச்சுற்று மாறும். உடலில் உள்ள சூடு தணியும்.**



சடாமாஞ்சில்

Image source - otoory.com

மூளைக்கு ஊட்டச்சத்தை அளிப்பதாக அறியப்படும் இந்த மூலிகை உடலுக்கும் உள்ளத்திற்கும் சாந்தியையும் அமைதியையும் கொடுக்கிறது. பதற்றம், மன உளைச்சல் என்பவற்றைக் கட்டுப்படுத்த உதவுகின்றது. மனத்தளர்ச்சியைத் தவிர்க்க உதவும் இந்த மூலிகை செரொட்டினின் (*serotonin*) என்னும் ஹோர்மோனின் அளவைக் கூட்டுகின்றது. படிப்பு, மனநிலை, தூக்கம், தலைவலி, வாந்தி, பசி போன்ற பலவிடயங்களைச் சமநிலைப்படுத்துவதில் இந்த ஹோர் மோன் முக்கியமான பங்கு வகிக்கின்றது.
*spikenard* என்பது இதன் ஆங்கிலப்பெயர். *Jatamansi* என்பது இதன் வர்த்தகப்பெயர். *Nardostachys jatamansi DC.* என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப் பெயர்.

## அக்கரகாரம்

**அக்கரகாரத்தை ஆர்அறியப்போறார்கள்**
**உக்கிரமிகும் தோசத்தையோட்டும்திக்கிரபேர்**
**கொண்டாற்சீலமுறும் கொம்பனையீர்கேளீர்**
**கண்டாலக்குணதோசமில்லைக் காண்**

**இதன் பொருள்: அக்கரகாரத்தின் பெருமையை யார் அறியப்போகிறார்கள். வெப்பத்தினால் ஏற்படும் தோஷங் களைப் போக்கும். திக்குவாய் உள்ளவர்கள் இம்ம ருந்தினால் குணம் அடைவார்கள். இதனைப்பெற்றுக் கொண்டால் திக்குவாய்க்குண தோஷம் இல்லாமல் போய்விடும்.**

**தாளிசபத்திரிக்கு சுவாசக் குழாய்களை விரிவுபடுத்தும் குணம் இதற்கு இருப்பதாகக் கூறப்படுகிறது. அத்துடன் சளியைக் குறைத்து சுவா சத்தை இலகுவாக்கின்றது.**

**சடாமஞ்சில் மூளைக்கு ஊட்டச் சத்தை அளிப்பதாக அறியப்படும் இந்த மூலிகை உடலுக்கும் உள் ளத்திற்கும் சாந்தியையும் அமை தியையும் கொடுக்கிறது.**

**சாதாரண தலைவலிக்குத் திப்பிலிமூலம் சிறந்த மருந்தாகும். இருமல், தடுமல், நெஞ்சில் சளிக்கட்டு என்பவற்றுக்கும் திப்பிலிவேர் மருந்தாகும்.**



Pellitory root (அக்கரகாரம்)

Image source - www.hindutamil.in

**அக்கரகாரம் அதன்பேர் உரைத்தக்கால்**
**உக்கிரகாலத் தோடம் ஓடுங்காண்முக்கியமாய்க்**
**கொண்டால் சலம் ஊறுங் கொம்பனையே தாகசுரம்**
**கண்டால் பயந்தோடும் காண்**

(பதார்த்தகுணசிந்தாமணி)

**இதன் பொருள்: அக்கரகாரத்தின் பெயரைக் கேட் டாலே வெப்பகாலத்துத் தோஷங்கள் போய்விடும். முக்கியமாக இதனை வாயில் போட்டுக்கொண்டால் உமிழ்நீர் அதிகரிக்கும். தாகத்தை ஏற்படுத்தும். காய்ச்சலைக் குணமாக்கும்.**

மேலதிக விபரம்: சரகம், சுஸ்ருதம், வாகடம் போன்ற புராதன ஆயுள்வேதநூல்களில் இடம்பெற்றிராத, அரபு நாட்டுக்குரிய இந்தமூலிகை 13ஆம் நூற்றா ண்ட ளவிலேயே இந்திய ஆயுள்வேத மருத்துவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

செகராசசேகர தொகுப்பின் இரசவர்க்கப்பிரிவில் இடம் பெற்றுள்ள அக்கரகாரம் பற்றிய பாடலில் இம் மூலிகை திக்குவாய்க்கு மருந்தாகும் என்ற விபரம் தரப்பட்டுள்ளது. எனினும் இவ்விடயம் பதார்த்த குண சிந்தாமணியில் இடம்பெறவில்லை என்பதை கவனிக்கலாம். மாறாக உமிழ்நீர்ச் சுரப்பை அதிகரிக் கச்செய்யும் என்ற அவதானிப்பே தரப்பட்டுள்ளது. இந்தவகையில் இரசவர்க்கத்தில் இடம்பெற்றுள்ள பாடல் முழுமையானதாக காணப்படுவதை அவதா னிக்கலாம்.

ஒருதுண்டு அக்கரகார வேரை சிறிதளவு நீருடன் கல் லில் தேய்ப்பதால் பெறப்படும் பசையில் மிகச்சிறிய அளவை தினந்தோறும் திக்குவாய் உடையவர்களின் நாக்கில் தடவிவரத் திக்குவாய் குணமாகும் என்கிறார் ஹைதராபாத்தைச் சேர்ந்த எல்சூரி (Dr. Elchuri) என் னும் ஆயுள்வேத வைத்தியர். அக்கரகார வேர்த்தூள், மிளகுத்தூள் மற்றும் தேன் சேர்ந்த கலவையில் ஒரு கிராம் எடுத்து நாக்கில் தடவிவர, நாக்கு வரட்சி நீங்கி கொன்னை தட்டுவது அல்லது திக்குவாய் குணமா கும் என்றும் கூறப்படுகிறது. தொடர்ந்து 4 முதல் 6 வாரம் வரை இதனை செய்யவேண்டும்.

அக்கரகாரமும் கற்பூரமும் சம அளவில் எடுத்துச் சேர்த்தரைத்த பற்பொடியினால் பல்துலக்கிவந்தால் சகலவிதமான பல்வலிகளும் குணமாகும் என்று கூறப் படுகிறது. *Pellitory root* அல்லது *Pyrethrum root* என்பது அக்கரகாரத்தின் ஆங்கிலப்பெயர். *Anacyclus pyrethrum* DC. என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப்பெயர்.

தொடரும்.

# எழுநா புத்தக மன்றம்

எழுநா புத்தக மன்றம் வருடாந்த சந்தாவை அடிப்படையாகக் கொண்டது. எழுநா புத்தக மன்றத்தில் இணைவதன் மூலம் எழுநாவின் முயற்சிக்கு ஆதரவளிக்க முடியும். அதேநேரம், இச்சந்தா மூலம் எழுநா புத்தக மன்றத்தின் இணைபவர்களுக்கு எழுநாவின் சகல வெளியீடுகளும் கிடைக்கப்பெறும்.

| | |
|---|---|
| ஐக்கிய இராச்சியம் | 100 GBP |
| ஐக்கிய அமெரிக்கா | 125 USD |
| கனடா | 150 CAD |
| அவுஸ்திரேலியா | 175 AUD |
| ஐரோப்பா | 125 EURO |
| நோர்வே | 1200 NOK |
| இலங்கை | 25,000 LKR |

## எழுநா விளம்பர ஆதரவு

சமூக நிறுவனங்களோ அல்லது வியாபார நிறுவனங்களோ தம்முடைய சேவையை எழுநாவின் காணொலிகள் ஊடாக விளம்பரம் செய்யலாம். எழுநாவின் சகல காணொலிகளிலும் குறிப்பிட்ட மாத காலப்பகுதிக்கு நிறுவன இலச்சினை காட்சிப்படுத்தப்படும். இப்போது எம்மிடம் 15,000 பேரை சென்றடைவதற்கான வலையமைப்பு விருத்தி செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஐக்கிய இராச்சியம் | 100 GBP I 50 GBP |
| ஐக்கிய அமேரிக்கா | 125 USD / 60 USD |
| கனடா | 150 CAD / 75 CAD |
| அவுஸ்திரேலியா | 175 AUD / 100 AUD |
| ஐரோப்பா | 125 EURO / 60 EURO |

alpha TELECOM
CHEAP AND QUALITY CALLS

# Call your loved ones from UK to anywhere in the world with affordable calling rates with Alpha Telecom

## Subscribe & get 10% bonus credit for each £30 top up

**UKயில் இருந்து இன்டர்நெட் இல்லாமல் மிகக் குறைந்த கட்டணத்தில எந்தவொரு நாட்டுக்கும் தடைகளின்றி மொபைல் மற்றும் லேண்ட்லைன் அழைப்பு வசதிகள்**

- மறைக்கப்பட்ட கட்டணங்கள் இல்லை
- இலவசமாக பதிவு செய்யும் வசதி
- மாதாந்த கட்டணம் இல்லை
- கணக்கு ரத்து கட்டணம் இல்லை



+44 20 7060 7000 | info@alphatelecom.uk

www.alphatelecom.uk

S ENTREPRENEURS
DELIVERY WITHOUT EXCUSE

CALL CENTER SOLUTION

SOCIAL MEDIA MARKETING

PROPERTY MANAGEMENT

www.s-entrepreneurs.com

No,11, Kachcheri Lane,Jaffna,Sri Lanka
Info@s-entrepreneurs.com

Contact us :
+94 21 222 59 50

ஆதிரை
வெளியீடு

தமிழிலும் சிங்களத்திலும்
நாவல்கள் . சிறுகதைகள் . கவிதைகள்

திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

SpotOn Money



# SEND MONEY to SRI LANKA

**FIRST TRANSFER FEE FREE** *

**Immediate Payment to Any Account**

***Partnership** with*

CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

**get 5% Discount* on Purchases**

**0207 341 7300**
**www.spoton.money**

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply

RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE




# RE/MAX COMMUNITY THE MOST TRUSTED REAL ESTATE AGENTS IN CANADA

- We are building a family of elite agent, become a part of the family
- We are voted as most trusted realtor by consumers
- Our Services

Real Estate Networking

Real Estate Investment

Real Estate Buying and Selling

remaxcommunity.ca    /remaxcommunityinc    /remax_community

/remaxcommunity    /UCD-3WoKApsSL2P4SqlnHVIA

Vanakkam London
www.vanakkamlondon.com




# யாதும் ஊரே யாவரும் கேளிர்

## தமிழால் இணையும்
## தமிழ் செய்திச் சஞ்சிகைத் தளம்

vanakkamlondon.com /vanakkam.london /vanakkamlondon

/Vanakkam_London /TheVanakkamLondon

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

## OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

## BUSINESS PROCESS OUTSOURCING

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

## CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

**#32 Spring Street,**
**Paddington W21JA.**
**Phone : +44 203 5001380**
**Email : contact@xebiro.com**

**Colombo**

**#7 - 3/1, Galle Road,**
**Colombo 06.**
**Phone : +94 112 559854**
**Email : contact@xebiro.com**

**Jaffna**

**#63, Sir Pon Ramanathan Road,**
**Kallady, Thirunelvelly, Jaffna**
**Phone : +94 212 212797**
**Email : contact@xebiro.com**